# ஸ்ரீரமண நூற்றிரட்டு

ஸ்ரீ அருணாசலஸ்துதிபஞ்சகம்,
உபதேசநூன்மாலை, அநுவாதநூன்மாலை (செய்யுள்),
அநுவாதநூன்மாலை (வசனம்), அருண்மொழித்திரட்டு
இவை யடங்கியது.


இரண்டாம் பதிப்பு

இது
திருவண்ணாமலை, ஸ்ரீரமணாச்ரமம், ஸர்வாதிகாரி
**நிரஞ்ஜனாநந்தசுவாமிகளால்**
பிரசுரிக்கப்பட்டது.

1934

விலை ரூபா ஒன்று

*All rights reserved by the Publisher.*



பகவான் ஸ்ரீ ரமணமஹர்ஷிகள்

ஸ்ரீ

ஓம் நமோ பகவதே ஸ்ரீ ரமணாய.

# முகவுரை.

பூமண்டலத்தின் இதயமாய், ஞானத் தபோதனரை வாவென்றழைப்பதாய், நினைக்க முக்தியருளும் தேஜோலிங்க சுயம்புவான ஸ்ரீ அருணாசலம் விளங்கும் திருவண்ணாமலை யெனும் இத்திவ்ய ஸ்தலத்தில், ஆன்மகோடிகள் பவபந்தம் நீங்கிப் பரமானந்தப் பிராப்தி பெற்று ஈடேறும்வண்ணம், ஸ்ரீ தக்ஷிணாமூர்த்திவடிவாய் ஆத்மாநுபூதிநிஷ்டரா யெழுந்தருளி, தம் அபார கருணாப்பிரவாஹத்தால் மௌன பாவத்தினின்று அருள்புரியும் பகவான் ஸ்ரீ ரமண மஹர்ஷிகளின் பிரஸாத ரூப அமிருதமாம், “ரமணநூற்றிரட்டு” என்னும் இப் பொன்னூல்.

இதன்கண்ணுள்ள ப்ரபந்தங்கள், பண்டிதர் பாமரர் அனைவரும் அவரவர் சக்திக்கேற்றபடி படித்துப் பயன்பெறுமாறு, செய்யுளாகவும், வசனமாகவும், வினாவிடையாகவும், கீர்த்தனையாகவும் அமைந்திருப்பது நம்மனோர்செய்த அரும் புண்ணியமேயாம்.

இதன்கண் முதலாவதாய் விளங்கும் ஸ்ரீ அருணாசல ஸ்துதி பஞ்சகம், ஸ்ரீ பகவான் மௌனபாவத்திருந்து பேசத் தொடங்கிய ஆதிநாட்களில் தோன்றிய ஆன்ம வெள்ளப் பெருக்காம். இதன்கண் “தானே தானே தத்துவமிதனைத்

தானே காட்டுவா யருணாசலா" வென்று மிளிர்கின்றபடி, பரம்பொருள் ஸ்ரீ ரமண மூர்த்தியின் இதயத்திலிருந்து, தானே பக்தி ஞானங்களின் இலக்கணங்களை வெளியிட்டிருக்கும் பெருமையை அன்பர்கள் கண்டுகளிக்க.

இப்புத்தகத்தில் இரண்டாவதா யமைந்திருக்கும் உபதேச நூன்மாலையின் கண்ணுள்ள 'உபதேச உந்தியார்', ஸ்ரீ பகவானின் அன்பர்களுள் ஒருவராகிய முகவைக் கண்ண முருகனார் தாம் பாடிய திருவுந்தியாரின் சார்பாய் ஸ்ரீ பகவானது உபதேசம் வேண்டி நிற்க, ஸ்ரீ பகவான் அருளிய உயர் நூலாகும். "உள்ளது நாற்பதும்" அதன் "அநுபந்தமும்" ஸ்ரீ பகவான் தம் அன்பர்கள் வேண்ட அவ்வப்போழ்து அருளியவைகளின் தொகுப்பு. ஸ்ரீ பகவானின் திருவன்னை அழகம்மையார் மைந்தனை அப்பளமிட வேண்ட, ஸ்ரீ பகவான் தன் தாய் சுவைத்து இன்புறும்படி இட்டுக்கொடுத்தது அற்புதமாம் "அப்பளப் பாட்டு." பல்லவி அநுபல்லவிகளைப் பாடிய பாரத்வாஜ-முகவைக்கண்ண முருகனார் பகவானிடம் வேண்டிப்பெற்ற சரணங்கள் கொண்டு இன்று உலகிற்கே சரணமாய்த் திகழ்வது "ஆன்மவித்தைக்கீர்த்தனம்". இப்புனிதமாம் உபதேசநூன்மாலை சுவைக்கச் சுவைக்கத் தித்திக்கும்; பாடப்பாடப் பான்மை அளிக்கும்; ஓத ஓத உள்ளொளி பெருக்கும். அன்பர்கள் அனுபவத்திற் காண்க.

இந்த ஞானவிருந்தின் பின், தெய்வத் திருவாக்கை உலகம் அடைந்து பயன்பெறுமாறு, ஈசன் தேவிக்கருளிய "தேவிகாலோத்தர ஞானசார விசார படலமும்", குமார

னுக்கருளிய, "சர்வஞானோத்தர ஆன்ம சாக்ஷாத்காரப் பிர கரணமும்" ஸ்ரீபகவான் முகம்வந்த வெண்பாக்களாக விளங்குகின்றன. ஸ்ரீ பூஜ்யபாத சங்கராசாரியர் செய்தரு ளிய ஸ்ரீதக்ஷிணாமூர்த்தி தோத்திரம், அன்னார் மாணவ ரருளிய குருஸ்துதி, அத்தாமலகம் ஆகிய அவ்வப்பெயர் கொண்ட வடமொழிநூல் அனுவாதம் இந்நூற்றிரட்டின் மூன்றும் பாகத்தில் அமைந்திருப்பதோடு, அவ்வாசிரியர் அருளிய 'விவேக சூடாமணி', 'திருக்குதிருசிய விவேகம்'* என்னும் நூல்களின் மொழிபெயர்ப்பு வசனம் நான்காம் பாகமாகச் சேர்க்கப்பட்டிருக்கிறது.

முடிவி லமைந்துள்ள அருண்மொழித்தொகுப்புப் பகுதி, 'விசாரசங்கிரகம்' என்னும் வினவிடையும், 'நானார்' என்னும் சிறுநூலுங் கொண்டதாம். இவற்றுள் முன்னது, கம்பீரம் சேஷய்யர் என்ற அன்பர் கேட்ட வினக்களுக்கு ஸ்ரீ பகவான் மௌனமா யிருந்தபோது எழுத்து மூலம் அருளிய அருமொழிகளாம்†. மஹர்ஷிகள் எப்போதும் விசாரமார்க்கத்தையே உபதேசிப்பது வழக்க மாயினும், இதில் கருமம், பக்தியாதி இதர மார்க்கங்களைக் காட்டியிருப்பதற்குக் காரணம், அக்காலத்தில் அன்பர் சேஷய்யர் அவ்வநுஷ்டானபரரா யிருந்ததேயாம். அன்

---

* திருக்கு திருசிய விவேகத்தை ஸ்ரீ வித்யாரண்ய சுவாமி கள் அருளினு ரென்பாருமுளர்.

† ஐயரவர்களின் ஸஹோதரரிடமிருந்து கிடைத்த எழுத் துப் பிரதியை நூலுருவாக்கி யுதவியவர் அன்பர் நடனுனந்த ராவர்.

ஞர் அன்று தனியே கொண்ட கனியை, இன்று உலகெலாம் கொண்டது. இதுபோன்றே "நானார்" என்னும் பகுதியும் அன்பர் சிவப்ரகாசம் பிள்ளையவர்கள் ஸ்ரீ பகவானிடம் பெற்ற வாக்கியத்தொகுப்பாம். அளவிற் சிறிதேயாயினும் இந்நூல் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் விந்தையே, விந்தை.

பகவான் ஸ்ரீ மஹர்ஷியின் வசனாமிருதமாகிய இந்நூலால், உலகத்தில் ஆஸ்திகம் பெருகி, ஜீவர்கள் ஸர்வதுக்க நிவிருத்தி பரமானந்தப் பிராப்தி வடிவாகிய பரமைசுவரியத்தை யடைவது திண்ணம்.

**பிரசுரகர்த்தா.**

# விஷய சூசிகை.

பக்கம்

## அருணாசலஸ்துதிபஞ்சகம்.


1. அருணாசல தீபதர்சன தத்துவம் .... 3
2. ௸ மாகாத்மியம் .... 5
3. ௸ அக்ஷரமணமாலை .... 6
4. ௸ நவமணிமாலை .... 17
5. ௸ பதிகம் .... .... 20
6. ௸ அஷ்டகம் ... ... 24
7. ௸ பஞ்சரத்னம் .... 27


## உபதேசநூன்மாலை


8. உபதேசவுந்தியார் .... .... 31
9. உள்ளது நாற்பது .... .... 35
10. ௸ அநுபந்தம் .... .... 42
11. அப்பளப் பாட்டு .... .... 48
12. ஆன்ம வித்தை (கீர்த்தனம்) .... 49


## அநுவாதநூன்மாலை

(செய்யுள்)


13. தேவிகாலோத்தர ஞானசாரவிசாரபடலம் 53
14. சர்வஞானோத்தர ஆன்மசாட்சாத்காரப் பிரகரணம் .... .... 69

பக்கம்

15. தக்ஷிணாமூர்த்தி தோத்திரம் ... 80

16. குரு ஸ்துதி .... .... 85

17. அத்தாமலகம் .... ... 87

அநுவாதநூன்மாலை

(வசனம்)

18. விவேகசூடாமணி ... .... 93

19. திருக்கு திருசிய விவேகம் .... 165

அருண்மொழித்தொகுப்பு.


20. விசார சங்கிரகம் .... .... 173

21. நானார்? .... .... 208

அருணாசல

# ஸ்துதி பஞ்சகம்

மாகாத்மியத்துடன்.



கருணா ணவமாய்க் கருதக் கதிநல்
கருணா சலசிவமீ தாம்.

ஸ்ரீ

## அருணாசலதத்துவம்.

புத்தியகங் காரம் புலம்பெய்த வோங்கு
மத்தியித யந்தான் மறையவனு மாலு
நத்தவறி யாது நலங்குலைய வன்னார்
மத்தியொளி ரண்ணா மலையினது மெய்யே.

## தீபதர்சனதத்துவம்.

இத்தனுவே நானா மெனுமதியை நீத்தப்
புத்தியித யத்தே பொருந்தியக நோக்கா
லத்துவித மாமெய் யகச்சுடர்காண் கையூ
மத்தியெனு மண்ணா மலைச்சுடர்காண் மெய்யே.

---

பிரஜோத்பத்தி ஸூ தீபதர்சனத்தன்று, அருணாசல தத்துவத்தை எழுதின மு. க. முருகனார் வேண்டுகோட்கிணங்க, தீபதர்சனதத்துவம் பகவானால் அருளப்பட்டது.

ஸ்ரீ

# அருணாசல மாகாத்மியம்.

## நந்திவாக்கு :—

விருத்தம்.

1. அதுவேதல மருணாசலந் தலம்யாவினு மதிக
மதுபூமியி னிதயம்மறி யதுவேசிவ னிதயப்
பதியாமொரு மருமத்தலம் பதியாமவ னதிலே
வதிவானொளி மலையாநித மருணாசல மெனவே.

## சிவவசனம் :—

வேறு.

2. அங்கியுரு வாயுமொளி மங்குகிரி யாகத்
தங்கலரு ளாலுலகந் தாங்குவதற் கன்றி
யிங்குறைவன் சித்தனென வென்றுமென துள்ளே
பொங்கியொளி ருங்குகைபல்போகமொடென் றுள்ளே.

வேறு.

3. எல்லா வுலகுந் தகையவ் வியலாற்
பொல்லா வினைகள் * ருணமாம் புகலீ
தில்லா தருவா மெதுகண் ணுறலா
லெல்லா ரருணா சலமா மிதுவே.

(*ருணத்தலால் ருணம்: ருணத்தல்—தகைதல், பந்தித்தல்.)

வேறு.

4. உருத்தெரி யெல்லை யுற்றுகண் ணுற்ருற்
கருத்தினுற் றூரக் கருதினு லும்மே
வருத்த முருது வாராதவே தாந்த
வருத்தவிஞ் ஞான மார்க்குமுண் டாமே.

5. யோசனை மூன்ரு மித்தல வாசர்க்
காசறு தீக்கை யாதியின் றியுமென்
பாசமில் சாயுச் சியம்பயக் கும்மே
யீசனு மென்ற ணுணையி னுனே.

## அருணாசல மாகாத்மியம் ஸம்பூர்ணம்.

---

ஸ்ரீ

அருணாசல

# அக்ஷரமணமாலை.

---

## பாயிரம்.

விருத்தம்.

தருணு ருணமணி கிரணு வலிநிகர்
தருமக்ஷரமண மகிழ்மாலை
தெருணு டியதிரு வடியார் தெருமரல்
தெளியப் பரவுதல் பொருளாகக்
கருணு கரமுனி ரமணு ரியனுவ
கையினுற் சொலியது கதியாக
வருணு சலமென வகமே யறிவொடு
மாழ்வார் சிவனுல காள்வாரே.

---

ஸ்ரீ

## அருணாசல

# அக்ஷரமணமாலை.

### காப்பு.

அருணாசல வரற்கேற்ற வக்ஷரமண மாலைசாற்றக்
கருணாகர கணபதியே கரமருளிக் காப்பாயே.

### நூல்.

அருணாசலசிவ, அருணாசலசிவ, அருணாசலசிவ,
அருணாசலா !

அருணாசலசிவ, அருணாசலசிவ, அருணாசலசிவ,
அருணாசலா !

1. அருணா சலமென வகமே நினைப்பவ
ரகத்தைவே ரறுப்பா யருணாசலா (அ)

2. அழகுசுந் தரம்போ லகமும் நீயுமுற்
றபின்னமா யிருப்போ மருணாசலா (அ)

3. அகம்புகுந் தீர்த்துன் னககுகை சிறையா
யமர்வித்த தென்கொ லருணாசலா (அ)

4. ஆருக் காவெனை யாண்டனை யகற்றிடி
லகிலம் பழித்திடு மருணாசலா (அ)

5. இப்பழி தப்புனை யேனினைப் பித்தா
யினியார் விடுவா ரருணாசலா (அ)

6. ஈன்றிடு மன்னையிற் பெரிதருள் புரிவோ
யிதுவோ வுனதரு ளருணாசலா (அ)

7. உனையே மாற்றி யோடா துளத்தின்மே
லுறுதியா யிருப்பா யருணாசலா (அ)

8. ஊர்சுற் றுளம்விடா துனைக்கண் டடங்கிட
வுன்னழ கைக்காட் டருணாசலா (அ)

9. எனையழித் திப்போ தெனைக்கல வாவிடி
லிதுவோ வாண்மை யருணாசலா (அ)

10. ஏனிந்த வுறக்க மெனைப்பிற ரிழுக்க
விதுவுனக் கழகோ வருணாசலா (அ)

11. ஐம்புலக் கள்வ ரகத்தினிற் புகும்போ
தகத்தினீ யிலையோ வருணாசலா (அ)

12. ஒருவனா முன்னை யொளித்தெவர் வருவா
ருன்சூ தேயிது வருணாசலா (அ)

13. ஓங்கா ரப்பொரு ளொப்புயர் வில்லோ
யுனையா ரறிவா ரருணாசலா (அ)

14. ஔவைபோ லெனக்குன் னருளைத் தந்தெனை
யாளுவ துன்கட னருணாசலா (அ)

15. கண்ணுக்குக் கண்ணாய்க் கண்ணின்றிக் காணுனைக்
காணுவ தெவர்பா ரருணாசலா (அ)

16. காந்த மிரும்புபோற் கவர்ந்தெனை விடாமற்
கலந்தெனோ டிருப்பா யருணாசலா (அ)

17. கிரியுரு வாகிய கிருபைக் கடலே
கிருபைகூர்ந் தருளுவா யருணாசலா (அ)

18\. கீழ்மே லெங்குங் கிளரொளி மணியென்
கீழ்மையைப் பாழ்செய் யருணாசலா (அ)

19\. குற்றமுற் றறுத்தெனைக் குணமாய்ப் பணித்தாள்
குருவுரு வாயொளி ரருணாசலா (அ)

20\. கூர்வாட் கண்ணியர் கொடுமையிற் படாதருள்
கூர்ந்தெனைச் சேர்ந்தரு ளருணாசலா (அ)

21\. கெஞ்சியும் வஞ்சியாய்க் கொஞ்சமு மிரங்கிலை
யஞ்சலென் றேயரு ளருணாசலா (அ)

22\. கேளா தளிக்குமுன் கேடில் புகழைக்
கேடுசெய் யாதரு ளருணாசலா (அ)

23\. கையினிற் கனியுன் மெய்ரசங் கொண்டுவ
கைவெறி கொளவரு ளருணாசலா (அ)

24\. கொடியிட் டடியரைக் கொல்லுனைக் கட்டிக்
கொண்டெங்ஙன் வாழ்வே னருணாசலா (அ)

25\. கோபமில் குணத்தோய் குறியா யெனைக்கொளக்
குறையென் செய்தே னருணாசலா (அ)

26\. கௌதமர் போற்றுங் கருணைமா மலையே
கடைக்கணித் தாள்வா யருணாசலா (அ)

27\. சகலமும் விழுங்குங் கதிரொளி யினமன
சலச மலர்த்திடி டருணாசலா (அ)

28\. சாப்பா டுன்னைச் சார்ந்துண வாயான்
சாந்தமாய்ப் போவ னருணாசலா (அ)

29\. சித்தங் குளிரக்கதி ரத்தம்வைத் தமுதவா
யைத்திற வருண்மதி யருணாசலா (அ)

30. சீரை யழித்துநிர் வாணமாச் செய்தருட்
சீரை யளித்தரு ளருணாசலா (அ)

31. சுகக்கடல் பொங்கச் சொல்லுணர் வடங்கச்
சும்மா பொருந்திடங் கருணாசலா (அ)

32. சூதுசெய் தென்னைச் சோதியா தினியுன்
சோதி யுருக்காட் டருணாசலா (அ)

33. செப்படி வித்தைகற் றிப்படி மயக்குவிட்
டுருப்படு வித்தைகாட் டருணாசலா (அ)

34. சேரா யெனின்மெய் நீரா யுருகிக்கண்
ணீராற் றழிவே னருணாசலா (அ)

35. சையெனத் தள்ளிற் செய்வினை சுடுமலா
லுய்வகை யேதுரை யருணாசலா (அ)

36. சொல்லாது சொலிநீ சொல்லற நில்லென்று
சும்மா விருந்தா யருணாசலா (அ)

37. சோம்பியாய்ச் சும்மா சுகமுண் டுறங்கிடிற்
சொல்வே றென்கதி யருணாசலா (அ)

38. சௌரியங் காட்டினை சழக்கற்ற தென்றே
சலியா திருந்தா யருணாசலா (அ)

39. ஞமலியிற் கேடா நானென் னுறுதியா
னாடிநின் னுறுவே னருணாசலா (அ)

40. ஞானமில் லாதுன் னாசையாற் றளர்வற
ஞானந் தெரித்தரு ளருணாசலா (அ)

41. ஞிமிறுபோ னீயு மலர்ந்திலை யென்றே
நேர்நின் றனையென் னருணாசலா (அ)

42. தத்துவந் தெரியா தத்தனை யுற்றாய்
தத்துவ மிதுவென் னருணாசலா (அ)

43. தானே தானே தத்துவ மிதனைத்
தானே காட்டுவா யருணாசலா (அ)

44. திரும்பி யகந்தனைத் தினமகக் கண்காண்
டெரியுமென் றனையென் னருணாசலா (அ)

45. தீரமி லகத்திற் றேடியுந் தனையான்
றிரும்பவுற் றேனரு ளருணாசலா (அ)

46. துப்பறி வில்லா விப்பிறப் பென்பய
னொப்பிட வாயே னருணாசலா (அ

47. தூய்மன மொழியர் தோயுமுன் மெய்யகந்
தோயவே யருளென் னருணாசலா (அ)

48. தெய்வமென் றுன்னைச் சாரவே யென்னைச்
சேர வொழித்தா யருணாசலா (அ)

49. தேடா துற்றநற் றிருவரு ணிதியகத்
தியக்கந் தீர்த்தரு ளருணாசலா (அ)

50. தைரிய மோடுமுன் மெய்யக நாடயான்
றட்டழிந் தேனரு ளருணாசலா (அ)

51. தொட்டருட் கைமெய் கட்டிடா யெனிலியா
னட்டமா வேனரு ளருணாசலா (அ)

52. தோடமி னீயகத் தோடொன்றி யென்றுஞ்சந்
தோடமொன் றிடவரு ளருணாசலா (அ)

53. நகைக்கிட மிலைநின் னாடிய வெனையரு
ணகையிட்டுப் பார்நீ யருணாசலா (அ)

54. நாணிலை நாடிட நாணு மொன்றிநீ
தாணுவா நின்றனை யருணாசலா (அ)

55. நின்னெரி யெரித்தெனை நீறாக் கிடுமுன்
னின்னருண் மழைபொழி யருணாசலா (அ)

56. நீநா னறப்புலி நிதங்களி மயமா
நின்றிடு நிலையரு ளருணாசலா (அ)

57. நுண்ணுரு வுனையான் விண்ணுரு நண்ணிட
வெண்ணலை யிறுமென் றருணாசலா (அ)

58. நூலறி வறியாப் பேதைய னென்றன்
மாலறி வறுத்தரு ளருணாசலா (அ)

59. நெக்குநெக் குருகியான் புக்கிட வுனைப்புக
னக்கனா நின்றனை யருணாசலா (அ)

60. நேசமி லெனக்குன் னாசையைக் காட்டிநீ
மோசஞ் செயாதரு ளருணாசலா (அ)

61. நைந்தழி கனியா னலனிலை பதத்தி
னுடியுட் கொள்நல மருணாசலா (அ)

62. நொந்திடா துன்றனைத் தந்தெனைக் கொண்டிலை
யந்தக னீயெனக் கருணாசலா (அ)

63. நோக்கியே கருதிமெய் தாக்கியே பக்குவ
மாக்கிநீ யாண்டரு ளருணாசலா (அ)

64. பற்றிமால் விடந்தலை யுற்றிறு முனமருள்
பற்றிட வருள்புரி யருணாசலா (அ)

65. பார்த்தருண் மாலறப் பார்த்திலை யெனினருள்
பாருனக் கார்சொல்வ ரருணாசலா (அ)

66. பித்துவிட் டுனைநேர் பித்தனாக் கினையருள்
பித்தந் தெளிமருந் தருணாசலா (அ)

67. பீதியி லுனைச்சார் பீதியி லெனைச்சேர்
பீதியுன் றனக்கே னருணாசலா (அ)

68. புல்லறி வேதுரை நல்லறி வேதுரை
புல்லிட வேயரு ளருணாசலா (அ)

69. பூமண மாமனம் பூரண மணங்கொளப்
பூரண மணமரு ளருணாசலா (அ)

70. பெயர்நினைத் திடவே பிடித்திழுத் தனையுன்
பெருமையா ரறிவா ரருணாசலா (அ)

71. பேய்த்தனம் விடவிடாப் பேயாப் பிடித்தெனைப்
பேயனாக் கினையென் னருணாசலா (அ)

72. பைங்கொடி யாநான் பற்றின்றி வாடாமற்
பற்றுக்கோ டாய்க்கா வருணாசலா (அ)

73. பொடியான் மயக்கியென் போதத்தைப் பறித்துன்
போதத்தைக் காட்டினை யருணாசலா (அ)

74. போக்கும் வரவுமில் பொதுவெளி யினிலருட்
போராட் டங்காட் டருணாசலா (அ)

75. பௌதிக மாமுடற் பற்றற்று நாளுமுன்
பவிசுகண் டுறவரு ளருணாசலா (அ)

76. மலைமருந் திடநீ மலைத்திட வோவருண்
மலைமருந் தாயொளி ரருணாசலா (அ)

77. மானங்கொண் டுறுபவர் மானத்தை யழித்தபி
மானமில் லாதொளி ரருணாசலா (அ)

78. மிஞ்சிடிற் கெஞ்சிடுங் கொஞ்ச வறிவனியான்
வஞ்சியா தருளெனை யருணாசலா (அ)

79. மீகாம னில்லாமன் மாகாற் றலைகல
மாகாமற் காத்தரு ளருணாசலா (அ)

80. முடியடி காணா முடிவிடுத் தனைநேர்
முடிவிடக் கடனிலை யருணாசலா (அ)

81. மூக்கிலன் முன்காட்டு முகுரமா காதெனைத்
தூக்கி யணைந்தரு ளருணாசலா (அ)

82. மெய்யகத் தின்மன மென்மல ரணையினா
மெய்கலந் திடவரு ளருணாசலா (அ)

83. மேன்மேற் றாழ்ந்திடு மெல்லியர்ச் சேர்ந்துநீ
மேன்மையுற் றனையென் னருணாசலா (அ)

84. மைமய னீத்தருண் மையினா லுனதுண்
மைவச மாக்கினை யருணாசலா (அ)

85. மொட்டை *யடித்தெனை வெட்ட வெளியினீ
நட்டமா டினையென் னருணாசலா (அ)

86. மோகந் தவிர்த்துன் மோகமா வைத்துமென்
மோகந்தீ ராயென் னருணாசலா (அ)

87. மௌனியாய்க் கற்போன் மலரா திருந்தான்
மௌனமி தாமோ வருணாசலா (அ)

88. யவனென் வாயின் மண்ணினை யட்டி
யென்பிழைப் பொழித்த தருணாசலா (அ)

---

*' யழித் ' தெனவும் பாடம்.

89. யாருமறி யாதென் மதியினை மருட்டி
யெவர்கொளை கொண்ட தருணுசலா (அ)

90. ரமணனென் றுரைத்தேன் ரோசங் கொளாதெனை
ரமித்திடச் செயவா வருணுசலா (அ)

91. ராப்பக லில்லா வெறுவெளி வீட்டில்
ரமித்திடு வோம்வா வருணுசலா (அ)

92. லட்சியம் வைத்தரு ளஸ்திரம் விட்டெனைப்
பட்சித்தாய் பிராணனோ டருணுசலா (அ)

93. லாபநீ யிகபர லாபமி லெனையுற்று
லாபமென் னுற்றனை யருணுசலா (அ)

94. வரும்படி சொலிலை வந்தென் படியளா
வருந்திடுன் றலைவிதி யருணுசலா (அ)

95. வாவென் றகம்புக்குன் வாழ்வரு ளன்றேயென்
வாழ்விழந் தேனரு ளருணுசலா (அ)

96. விட்டிடிற் கட்டமாம் விட்டிடா துனையுயிர்
விட்டிட வருள்புரி யருணுசலா (அ)

97. வீடுவிட் டீர்த்துள வீடுபுக்குப் பையவுன்
வீடுகாட் டினையரு ளருணுசலா (அ)

98. வெளிவிட்டே னுன்செயல் வெறுத்திடா துன்னருள்
வெளிவிட் டெனைக்கா வருணுசலா (அ)

99. வேதாந் தத்தே வேறற விளங்கும்
வேதப் பொருளரு ளருணுசலா (அ)

100. வைதலை வாழ்த்தா வைத்தருட் குடியா
வைத்தெனை விடாதரு ளருணுசலா (அ)

101. அம்புவி லாலிபோ லன்புரு வுனிலெனை
யன்பாக் கரைத்தரு ளருணாசலா (அ)

102. அருணையென் றெண்ணயா னருட்கண்ணி பட்டே
னருள்வலை தப்புமோ வருணாசலா [னுன் (அ)

103. சிந்தித் தருட்படச் சிலந்திபோற் கட்டிச்
சிறையிட் டுண்டனை யருணாசலா (அ)

104. அன்பொடுன் னாமங்கே ளன்பர்த மன்பருக்
கன்பனா யிடவருள் ளருணாசலா (அ)

105. என்போலுந் தீனரை யின்புறக் காத்துநீ
யெந்நாளும் வாழ்ந்தருள் ளருணாசலா (அ)

106. என்புரு கன்பர்த மின்சொற்கொள் செவியுமென்
புன்மொழி கொளவருள் ளருணாசலா (அ)

107. பொறுமையாம் பூதர புன்சொலை நன்சொலாப்
பொறுத்தருள் ளிஷ்டம்பின் னருணாசலா (அ)

108. மாலை யளித்தரு ணாசல ரமணவென்
மாலை யணிந்தருள் ளருணாசலா (அ)

அருணாசலசிவ, அருணாசலசிவ, அருணாசலசிவ,
அருணாசலா!
அருணாசலசிவ, அருணாசலசிவ, அருணாசலசிவ,
அருணாசலா!

அருணா சலம்வாழி யன்பர்களும் வாழி

அக்ஷர மணமாலை வாழி.

ஸ்ரீ

# அருணாசல நவமணிமாலை.

## வெண்பா.

1. அசலனே யாயினு மச்சவை தன்னி
லசலையா மம்மையெதி ராடு—மசல
வுருவிலச் சத்தி யொடுங்கிட வோங்கு
மருணா சலமென் றறி.

## கட்டளைக்கலித்துறை.

2. சத்திய சிற்சுக மன்றிப் பரவுயிர் சாரயிக்க
மர்த்தவத் தத்வ மசியரு ணப்பொரு ளாமசலத்
தர்த்தங் கணமது * வாகுஞ்செவ் வாடக வாரொளியா
முத்தி நினைக்க வருளரு ணாசல முன்னிடவே.

## வி ரு த் த ம்.

3. அருணா சலத்திலுறு கருணா கரப்பரம
னருணார விந்த பதமே
பொருணாடு சுற்றமொடு வருணாதி பற்றியுள
மருணாட லற்று நிதமுந்
தெருணா டுளத்தினின லருணாடி நிற்குமவ
ரிருணாச முற்று புவிமேற்
றருணா ருணக்கதிரி னருணாளு முற்றுசுக
வருணால யத்தி விழிவார்.

---

* 'வாகு மிரண்மய' எனவும் பாடம்.

வேறு.

4. அண்ணா மலையுனை யெண்ணா னெனவெனை
யண்ணாந் தேங்கிட வெண்ணாதே
மண்ணா மலவுட லெண்ணா வகமென
மண்ணா மாய்ந்திட வொண்ணாதே
தண்ணா ரளிசெறி கண்ணா டொருகிறி
பண்ணா தென்னிரு கண்ணாளா
பெண்ணா ணலியுரு நண்ணா வொளியுரு
வண்ணா லென்னக நண்ணாயே.

வேறு.

5. சீரான சோணகிரி சிறக்க வாழுஞ்
சிற்சொருப ஞமிறையே சிறிய னேன்றன்
பேரான பிழையெல்லாம் பொறுத்துக் காத்துப்
பின்னுமிவன் பாழிதனில் வீழா வண்ணங்
காரான கருணைவிழி கொடுப்பா யின்றேற்
கடும்பவத்தி னின்றுகரை யேற மாட்டே
னேரான துண்டோதாய் சிசுவுக் காற்று
நிகரற்ற நலனுக்கு நிகழ்த்து வாயே.

வேறு.

6. காமாரி யென்றுநீ யன்பரா லென்றுமே
கதித்திடப் படுகின்று
யாமாமெ யுனக்கிது வாமாவென் றையுறு
மருணாச லேச்சுரனே
யாமாயி னெங்ஙனந் தீரனே சூரனே
யாயினும் வல்லனங்கன்
காமாரி யாகுமுன் காலரண் சரண்புகு
கருத்தினுட் புகவலனே.

வேறு.

7. அண்ணா மலையா யடியேனை
யாண்ட வன்றே யாவியுடற்
கொண்டா யெனக்கோர் குறையுண்டோ
குறையுங் குணமு நீயல்லா
லெண்ணே னிவற்றை யென்னுயிரே
யெண்ண மெதுவோ வதுசெய்வாய்
கண்ணே யுன்றன் கழலிணையிற்
காதற் பெருக்கே தருவாயே.

வேறு.

8. புவிக்குட் பொங்கிடும் புவிச்சொற் புங்கவன்
புரிக்குட் புண்ணியன் சுழிக்குட் **சுந்தரன்**
றவற்குச் **சுந்தரந்** தனக்குற் பன்னனந்
தலத்திற புன்புலன் சழக்கிற் றன்புறந்
தவிக்குத் துஞ்சிடும் படிக்குத் தன்னுளந்
தழைக்கத தன்பதம் மெனக்குத் தந்தனன்
சிவக்கச் சின்மயஞ் செழிக்கத் தன்மயஞ்
செகத்திற் றன்னுசெம் பொருப்புச் செமமலே.

கட்டளைக்கலித்துறை.

9. அம்மையு மப்பனு மாயெனைப் பூமியி லாக்கியளித்
தம்மசி மாயையெ னாழ்கடல் வீழ்ந்துயா னாழ்ந்திடு
[முன்
னென்மன மன்னி யிழுத்துன் பதத்தி லிருத்தினை
[யால்
சின்மய னாமரு ணாசல நின்னருட் சித்ரமென்னே.

ஸ்ரீ

# அருணாசல பதிகம்.

---

## எழுசீர்விருத்தம்.

1. கருணையா லென்னை யாண்டநீ யெனக்குன்
காட்சிதந் தருளிலை யென்றா
லிருணலி யுலகி லேங்கியே பதைத்திவ்
வுடல்விடி லென்கதி யென்னா
மருணனைக் காணா தலருமோ கமல
மருணனுக் கருணா மன்னி
யருணனி சுரந்தங் கருவியாய்ப் பெருகு
மருணமா மலையெனு மன்பே.

2. அன்புரு வருணா சலவழன் மெழுகா
யகத்துனை நினைந்துநைந் துருகு
மன்பிலி யெனக்குன் னன்பினை யருளா
தாண்டெனை யழித்திட லழகோ
வன்பினில் விளையு மின்பமே யன்ப
ரகத்தினி லூறுமா ரமுதே
யென்புக லிடநின் னிட்டமென் னிட்ட
மின்பதெற் கென்னுயி ரிறையே.

3. இறையுனை நினையு மெண்ணமே நண்ணா
வெனையுன தருட்கயிற் றாலீர்த்
திறையுயி ரின்றிக் கொன்றிட நின்றா
யென்குறை யியற்றினே னேழை

பிறையினிக் குறையென் குற்றுயி ராக்கி
யெனைவதைத்த திடலெதற் கிங்கு
னிறைவனு மருணா சலவெனா முடித்தே
யேகனா வாழிநீ டூழி.

4. ஊழியில் வாழு மாக்களி லென்பா
லூதியம் யாதுநீ பெற்றாய்
பாழினில் வீழா தேழையைக் காத்துன்
பதத்தினி லிருத்திவைத் தனையே
யாழியாங் கருணை யண்ணலே யென்னை
வகமிக நாணநண் ணிடுமால்
வாழிநீ யருணா சலவனை வழுத்தி
வாழ்த்திடத் தாழ்க்குமென் றலையோ.

5. தலைவநீ யென்னைக் களவினிற் கொணர்ந்துன்
றாளிலிந நாள்வரை வைத்தாய்
தலைவநின் றன்மை யென்னவென் பார்க்குத்
தலைகுனி சிலையென வைத்தாய்
தலைவநான் வலைமான் றனைநிக ராதென்
றளர்வினுக் கழிவுநா டிடுவாய்
தலைவனா மருணா சலவுள மேதோ
தமியனார் தனையுணர் தற்கே.

6. தற்பர நாளுந் தாளினிற் றங்கித்
தண்டலர் மண்டுக மானேன்
சிற்பத நற்றே னுண்மல ரளியாச்
செய்திடி லுய்தியுண் டன்ற

னறபதப் போதி னுயிர் விட்டா
னட்டதா ருமுன் பழியே
வெற்புரு வருண விரிகதி ரொளியே
விண்ணினு நுண்ணருள் வெளியே.

7. வெளிவளி தீநீர் மண்பல வுயிரா
விரிவுறு பூதபௌ திகங்கள்
வெளியொளி யுன்னை யன்றியின் றென்னின்
வேறுயா ருளன் விமலா
வெளியதா யுளத்து வேறற விளங்கின்
வேறென வெளிவரு வேனார்
வெளிவரா யருணா சலவவன் றலையில்
விரிமலர்ப் பதத்தினை வைத்தே.

8. வைத்தனை வாளா வையகத் துய்யும்
வழியறி மதியழித் திங்ஙன்
வைத்திடு லார்க்கு மின்பிலை துன்பே
வாழ்விதிற் சாவதே மாண்பாம்
பைத்தியம் பற்றிப் பயனறு மெனக்குன்
பதமுறு மருமருந் தருள்வாய்
பைத்திய மருந்தாப் பாரொளி ரருண
பருப்பத வுருப்பெறு பரனே.

9. பரமநின் பாதம் பற்றறப் பற்றும்
பரவறி வறியரிற் பரமன்
பரமுனக் கெனவென் பணியறப் பணியாய்ப்
பரித்திடு முனக்கெது பாரம்

பரமநிற் பிரிந்திவ் வுலகினைத் தலையிற்
பற்றியான் பெற்றது போதும்
பரமனு மருணு சலவெனை யினியுன்
பதத்தினின் றொதுக்குறப் பாரேல்.

10. பார்த்தனன் புதுமை யுயிர்வலி காந்த
பருவத மொருதர மிதனை
யோர்த்திடு முயிரின் சேட்டையை யொடுக்கி
யொருதன தபிமுக மாக
வீர்த்ததைத் தன்போ லசலமாச் செய்தவ்
வின்னுயிர் பலிகொளு மிஃதென்
ஞேர்த்துய்மி னுயிர்கா ளுளமதி லொளிரிவ்
வுயிர்க்கொலி யருணமா கிரியே.

11. கிரியிது பரமாக் கருதிய வென்போற்
கெட்டவ ரெத்தனை கொல்லோ
விரிதுய ராலிப் பிழைப்பினில் விழைவு
விட்டுடல் விட்டிட விரகு
கருதியே திரிவீர் கருத்தினு ளொருகாற்
கருதிடக் கொலாமலே கொல்லு
மருமருந் தொன்றுண் டவனியி லதுதா
னருணமா திரமென வறிவீர்.

ஸ்ரீ

# அருணாசல அஷ்டகம்.

எண்சீர்விருத்தம்

1. அறிவறு கிரியென வமர்தரு மம்மா
வதிசய மிதன்செய லறிவரி தார்க்கு
மறிவறு சிறுவய ததுமுத லருணா
சலமிகப் பெரிதென வறிவினி லங்க
வறிகில னதன்பொரு ளதுதிரு வண்ணா
மலையென வொருவரா லறிவுறப் பெற்று
மறிவினை மருளுறுத் தருகினி லீர்க்க
வருகுறு மமயமி தசலமாக் கண்டேன்.

2. கண்டவ னெவனெனக் கருத்தினு ணாடக்
கண்டவ னின்றிட நின்றது கண்டேன்
கண்டன னென்றிடக் கருத்தெழ வில்லை
கண்டில னென்றிடக் கருத்தெழு மாறென்
விண்டிது விளக்கிடு விறலுறு வோனார்
விண்டிலை பண்டுநீ விளக்கினை யென்றால்
விண்டிடா துன்னிலை விளக்கிட வென்றே
விண்டல மசலமா விளங்கிட நின்றாய்.

3. நின்னையா னுருவென வெண்ணியே நண்ணா
நிலமிசை மலையெனு நிலையினை நீதா
னுன்னுரு வருவென வுன்னிடின் விண்ணோக்
குறவுல கலைதரு மொருவனை யொக்கு

முன்னுரு வுனலற வுன்னிட முந்நீ
ருறுசருக் கரையுரு வெனவுரு வோவு
மென்னையா னறிவுற வென்னுரு வேறே
திருந்தனை யருணவான் கிரியென விருந்தோய்.

4. இருந்தொளி ருனைவிடுத் தடுத்திட றெய்வ
மிருட்டினை விளக்கெடுத் தடுத்திட லேகா
ணிருந்தொளி ருனையறி வுறுத்திடற் கென்றே
யிருந்தனை மதந்தொறும் விதவித வுருவா
யிருந்தொளி ருனையறி கிலரெனி லன்னோ
ரிரவியி னறிவறு குருடரே யாவா
ரிருந்தொளி ரிரண்டற வெனதுளத் தொன்று
மிணையறு மருணமா மலையெனு மணியே.

5. மணிகளிற் சரடென வுயிர்தொறு நானு
மதந்தொறு மொருவனு மருவினை நீதான்
மணிகடைந் தெனமன மனமெனுங் கல்லின்
மறுவறக் கடையநின் னருளொளி மேவும்
மணியொளி யெனப்பிறி தொருபொருட் பற்று
மருவுற விலைநிழற் படிதகட் டின்விண்
மணியொளி படநிழல் பதியுமோ வுன்னின்
மறுபொரு ளருணநல் லொளிமலை யுண்டோ.

6. உண்டொரு பொருளறி வொளியுள மேநீ
யுளதுனி லலதிலா வதிசய சத்தி
நின்றணு நிழனிரை நினைவறி வோடே
நிழ்விணைச் சுழலிலந் நினைவொளி யாடி

கண்டன நிழற்சக விசித்திர முள்ளுங்
கண்முதற் பொறிவழி புறத்துமொர் சில்லா
னின்றிடு நிழல்பட நிகரருட் குன்றே
நின்றிட சென்றிட நினைவிட வின்றே.

7. இன்றக மெனுநினை வெனிற்பிற வொன்று
மின்றது வரைபிற நினைவெழி லார்க்கெற்
கொன்றக முதிதல மெதுவென வுள்ளாழ்ந்
துளத்தவி சுறிலொரு குடைநிழற் கோவே
யின்றகம் புறமிரு வினையிறல் சன்ம
மின்புதுன் பிருளொளி யெனுங்கன விதய
மன்றக மசலமா நடமிடு மருணா
மலையெனு மெலையறு மருளொளிக் கடலே.

8. கடலெழு மெழிலியாற் பொழிதரு நீர்தான்
கடனிலை யடைவரை தடைசெயி னில்லா
துடலுயி ருனிலெழு முனைபுறு வரையி
லுறுபல வழிகளி லுழலினு நில்லா
திடவெளி யலையினு நிலையிலை புள்ளுக்
கிடநில மலதிலை வருவழி செல்லக்
கடனுயிர் வருவழி சென்றிட வின்பக்
கடலுனை மருவிடு மருணாசலனே.

ஸ்ரீ

# அருணாசல பஞ்சரத்நம்.

வெண்பா.

1. அருணிறை வான வமுதக் கடலே
விரிகதிரால் யாவும் விழுங்கு—மருண
கிரிபரமான் மாவே கிளருளப்பூ நன்றாய்
விரிபரிதி யாக விளங்கு.

2. சித்திரமா மிஃதெல்லாஞ் செம்மலையே நின்பாலே
யுத்திதமாய் நின்றே யொடுங்கிடுமா—னித்தியமு
நானென் றிதய நடித்திடுவை யாலுன்பேர்
தானிதய மென்றிடுவர் தாம்.

3. அகமுகமா ரந்த வமலமதி தன்னா
லகமிது தா னெங்கெழுமென் றாய்ந்தே—யகவுருவை
நன்கறிந்து முந்நீர் நதிபோலு மோயுமே
யுன்கணரு ணாசலனே யோர்.

4. வெளிவிடயம் விட்டு விளங்குமரு ணேசா
வளியடக்க நிறகு மனத்தா—லுளமதனி
லுன்னைத் தியானித்து யோகி யொளிகாணு
முன்னி லுயர்வுறுமீ துன்.

5. உன்னிடத்தி லொப்புவித்த வுள்ளத்தா லெப்பொழுது
முன்னைக்கண் டெல்லாமு முன்னுருவா—யன்னியமி
லன்புசெயு மன்னோ னருணாச லாவெல்கு
மின்புருவா முன்னிலாழ்ந் தே.

அருண கிரிரமண ஞரியத்திற் கண்ட
வருமறையந் தக்கருத்தே யாகு—மருணா
சலபஞ் சகமணியைத் தண்டமிழ்வெண் பாவா
லுலகுக் களித்தா னுவந்து.

---

தனி.

விருத்தம்.

அரியாதிபி தரசிவர தகவாரிச குகையில்
லறிவாய்ரமி பரமாத்தும னருணாசல ரமணன்
பரிவாலுள முருகாநல பரனூர்ந்திடு குகையார்ந்
தறிவாம்விழி திறவாநிச மறிவாயது வெளியாம்.

வாழ்த்து.

வாழ்க வானரு ணாசல வண்பெயர்
வாழ்க வப்பெயர் வாய்துதி பஞ்சகம்
வாழ்க வாய்மலர் மாரம ணன்பதம்
வாழ்க வப்பத மன்னுநல் லன்பரே.

ஓம் தத் ஸத்.

ஸ்ரீ

அருணாசல ஸ்துதிபஞ்சகம்

ஸம்பூர்ணம்.

# உபதேசநூன்மாலை

# உபதேசவுந்தியார்.

1. கன்மம் பயன்றரல் கர்த்தன தாணையாற்
கன்மங் கடவுளோ வுந்தீபற
கன்மஞ் சடமதா லுந்தீபற.

2. வினையின் விளைவு விளிவுற்று வித்தாய்
வினைக்கடல் வீழ்த்திடு முந்தீபற
வீடு தரலிலை யுந்தீபற.

3. கருத்தனுக் காக்குநிட் காமிய கன்மங்
கருத்தைத் திருத்தியஃ துந்தீபற
கதிவழி காண்பிக்கு முந்தீபற.

4. திடமிது பூசை செபமுந் தியான
முடல்வாக் குளத்தொழி லுந்தீபற
வுயர்வாகு மொன்றிலொன் றுந்தீபற.

5. எண்ணுரு யாவு மிறையுரு வாமென
வெண்ணி வழிபட லுந்தீபற
வீசனற் பூசனை யுந்தீபற.

6. வழுத்தலில் வாக்குச்ச வாய்க்குட் செபத்தில்
விழுப்பமா மானத முந்தீபற
விளம்புந் தியானமி துந்தீபற.

7. விட்டுக் கருதலி னுறுநெய் வீழ்ச்சிபோல்
விட்டிடா துன்னலே யுந்தீபற
விசேடமா முன்னவே யுந்தீபற.

8. அனியபா வத்தி னவனக மாகு
மனனிய பாவமே யுந்தீபற
வனைத்தினு முத்தம முந்தீபற.

9. பாவ பலத்தினாற் பாவனா தீதசற்
பாவத் திருத்தலே யுந்தீபற
பரபத்தி தத்துவ முந்தீபற.

10. உதித்த விடத்தி லொடுங்கி யிருத்த
லதுகன்மம் பத்தியு முந்தீபற
வதுயோக ஞானமு முந்தீபற.

11. வளியுள் ளடக்க வலைபடு புட்போ
லுளமு மொடுங்குறு முந்தீபற
லொடுக்க வுபாயமி துந்தீபற.

12. உளமு முயிரு முணர்வுஞ் செயலு
முளவாங் கிளையிரண் டுந்தீபற
லொன்றவற் றின்மூல முந்தீபற.

13. இலயமு நாச மிரண்டா மொடுக்க
மிலயித் துளதெழு முந்தீபற
வெழாதுரு மாய்ந்ததே லுந்தீபற.

14. ஒடுக்க வளியை யொடுங்கு முளத்தை
விடுக்கவே யோர்வழி யுந்தீபற
வீயு மதனுரு வுந்தீபற.

15. **ம**னவுரு மாயமெய்ம் மன்னுமா யோகி
தனக்கோர் செயலிலை யுந்தீபற
தன்னியல் சார்ந்தன னுந்தீபற.

16. **வெ**ளிவிட யங்களை விட்டு மனந்தன்
ஞெளியுரு வோர்தலே யுந்தீபற
வுண்மை யுணர்ச்சியா முந்தீபற.

17. **ம**னத்தி னுருவை மறவா துசாவ
மனமென வொன்றிலை யுந்தீபற
மார்க்கநே ரார்க்குமி துந்தீபற.

18. **எ**ண்ணங்க ளேமனம் யாவினு நானெனு
மெண்ணமே மூலமா முந்தீபற
யானு மனமென லுந்தீபற.

19. **நா**னென் றெழுமிட மேதென நாடவுண்
ஞான்றலை சாய்ந்திடு முந்தீபற
ஞான விசாரமி துந்தீபற.

20. **நா**ஞென்று தானத்து நானுனென் ருென்றது
தானுகத் தோன்றுமே யுந்தீபற
தானது பூன்றமா முந்தீபற.

21. **நா**னென்னுஞ் சொற்பொரு ளாமது நாளுமே
நானற்ற தூக்கத்து முந்தீபற
நமதின்மை நீக்கத்தா லுந்தீபற.

22. **உ**டல்பொறி யுள்ள முயிரிரு ளெல்லாஞ்
சடமசத் தானதா லுந்தீபற
சத்தான நானல்ல வுந்தீபற.

23. உள்ள துணர வுணர்வுவே றின்மையி
னுள்ள துணர்வாகு முந்தீபற
வுணர்வேநா மாயுள முந்தீபற.

24. இருக்கு மியற்கையா லீசசீ வர்க
ளொருபொரு ளேயாவ ருந்தீபற
வுபாதி யுணர்வேவே றுந்தீபற.

25. தன்னை யுபாதிவிட் டோர்வது தானீசன்
றன்னை யுணர்வதா முந்தீபற
தானா யொளிர்வதா லுந்தீபற.

26. தானா யிருத்தலே தன்னை யறிதலாந்
தானிரண் டற்றதா லுந்தீபற
தன்மய நிட்டையீ துந்தீபற.

27. அறிவறி யாமையு மற்ற வறிவே
யறிவாகு முண்மையீ துந்தீபற
வறிவதற் கொன்றிலை யுந்தீபற.

28. தனாதியல் யாதெனத் தான்றெரி கிற்பின்
னனாதி யனந்தசத் துந்தீபற
வகண்ட சிதானந்த முந்தீபற.

29. பந்தவீ டற்ற பரசுக முற்றவா
றிந்த நிலைநிற்ற லுந்தீபற
விறைபணி நிற்றலா முந்தீபற.

30. யானற் றியல்வது தேரி னெதுவது
தானற் றவமென்றா னுந்தீபற
தானாம் ரமணேச னுந்தீபற.

**உபதேச வுந்தியார் முற்றிற்று.**

# உள்ளது நாற்பது.

## மங்கலம்.

வெண்பா.

உள்ளதல துள்ளவுணர் வுள்ளதோ வுள்ளபொரு
ளுள்ளலற வுள்ளத்தே யுள்ளதா—லுள்ளமெனு
முள்ளபொரு ளுள்ளலெவ னுள்ளத்தே யுள்ளபடி
யுள்ளதே யுள்ள லுணர்.

மரணபய மிக்குளவம் மக்களர ணாக
மரணபவ மில்லா மகேசன்—சரணமே
சார்வர்தஞ் சார்வொடுதாஞ் சாவுற்றார் சாவெண்ணஞ்
சார்வரோ சாவா தவர்.

## நூல்.

1. நாமுலகங் காண்டலா னானாஞ் சத்தியுள
வோர்முதலை யொப்ப லொருதலையே—நாமவுருச்
சித்திரமும் பார்ப்பானுஞ் சேர்படமு மாரொளியு
மத்தனையுந் தானா மவன்.

2. மும்முதலை யெம்மதமு முற்கொள்ளு மோர்முதலே
மும்முதலாய் நிற்குமென்று மும்முதலு—மும்முதலே
யென்னலகங் கார மிருக்குமட்டே யான்கெட்டுத்
தன்னிலையி னிற்ற றலை.

3. உலகுமெய்பொய்த் தோற்ற முலகறிவா மன்றென்
றுலகுசுக மன்றென் றுரைத்தே—னுலகுவிட்டுத்
தன்னையோர்ந் தொன்றிரண்டு தானற்று நானற்ற
வந்நிலையெல் லார்க்குமொப் பாம்.

4. உருவந்தா னாயி னுலகுபர மற்று
முருவந்தா னன்றே லுவற்றி—னுருவத்தைக் [டோ
கண்ணுறுதல் யாவனெவன் கண்ணலாற் காட்சியுண்
கண்ணது தா னந்தமிலாக் கண்.

5. உடல்பஞ்ச கோச வுருவதனு லைந்து
முடலென்னுஞ் சொல்லி லொடுங்கு—முடலன்றி
யுண்டோ வுலக முடல்விட் டுலகத்தைக்
கண்டா ருளரோ கழறு.

6. உலகைம் புலன்க ளுருவேறன் றவ்வைம்
புலனைம் பொறிக்குப் புலனு—முலகைமன [தை
மொன்றைம் பொறிவாயா லோர்ந்திடுத லான்மனத் -
யன்றியுல குண்டோ வறை.

7. உலகறிவு மொன்று யுதித்தொடுங்கு மேனு
முலகறிவு தன்னு லொளிரு—முலகறிவு
தோன்றிமறை தற்கிடனாய்த் தோன்றிமறை யாதொ-
பூன்றமா மஃதே பொருள். [ளிரும்

8. எப்பெயரிட் டெவ்வுருவி லேத்தினுமார் பேருருவி
லப்பொருளைக் காண்வழிய தாயினுமம்-மெய்ப்பொருளி
னுண்மையிற்ற னுண்மையினை யோர்ந்தொடுங்கி யொ-
யுண்மையிற் காண லுணர். [ன்றுதலே

9 இரட்டைகண் முப்புடிக ளென்றுமொன்று பற்றி
யிருப்பவா மவ்வொன்றே தென்று—கருத்தினுட்
கண்டாற் கழலுமவை கண்டவ ரேயுண்மை
கண்டார் கலங்காரே காண்.

10. அறியாமை விட்டறிவின் றுமறிவு விட்டவ்
வறியாமை யின்றாகு மந்த—வறிவு
மறியா மையுமார்க்கென் றம்முதலாந் தன்னை
யறியு மறிவே யறிவு.

11. அறிவுறுந் தன்னை யறியா தயலை
யறிவ தறியாமை யன்றி—யறிவோ
வறிவயற் காதாரத் தன்னை யறிய
வறிவறி யாமை யறும்.

12. அறிவறி யாமையு மற்றதறி வாமே
யறியும துண்மையறி வாகா—தறிதற்
கறிவித்தற் கன்னியமின் றுயவிர்வ தாற்றா
னறிவாகும் பாழன் றறி.

13. ஞானமாந் தானேமெய் நானாவா ஞானமஞ்
ஞானமாம் பொய்யாமஞ் ஞானமுமே—ஞானமாந்
தன்னையன்றி யின்றணிக டாம்பலவும் பொய்மெய்யாம்
பொன்னையன்றி யுண்டோ புகல்.

14. தன்மையுண்டேன் முன்னிலைப டர்க்கைக டாமுளவாந்
தன்மையி னுண்மையைத் தாணய்ந்து—தன்மையறின்
முன்னிலைப டர்க்கை முடிவுற்றொன் றுயொளிருந்
தன்மையே தன்னிலைமை தான்.

15. நிகழ்வினைப் பற்றி யிறப்பெதிர்வு நிற்ப
நிகழ்கா லவையு நிகழ்வே—நிகழ்வொன்றே

யின்றுண்மை தேரா திறப்பெதிர்வு தேரவுன
லொன்றின்றி யெண்ண வுனல்.

16. நாமன்றி நாளேது நாடேது நாடுங்கா
லுமுடம்பே னுட்டு னும்படுவ—நாமுடம்போ
நாமின்றன் றென்றுமொன்று நாடிங்கங் கெங்குமொன்
னுமுண்டு நானுடி னும். [ரு

17. உடனே தன்னை யுணரார்க் குணர்ந்தார்க்
குடலளவே நான்ற னுணரார்க்—குடலுள்ளே
தன்னுணர்ந்தார்க் கெல்லையறத் தானொளிரு நானிதுவே
யின்னவர்தம் பேதமென வெண்.

18. உலகுண்மை யாகு முணர்வில்லார்க் குள்ளார்க்
குலகளவா முண்மை யுணரார்க்—குலகினுக்
காதார மாயுருவற் றுருமுணர்ந் தாருண்மை
யீதாகும் பேதமிவர்க் கெண்.

19. விதிமதி மூல விவேக மிலார்க்கே
விதிமதி வெல்லும் விவாதம்—விதிமதிகட்
கோர்முதலாந் தன்னை யுணர்ந்தா ரவைதணந்தார்
சார்வரோ பின்னுமவை சாற்று.

20. காணுந் தனைவிட்டுத் தான்கடவு ளைக்காணல்
காணு மனோமயமாங் காட்சிதனைக்—காணுமவன்
றன்கடவுள் கண்டானுந் தன்முதலைத் தான்முதல்போ
தான்கடவு ளன்றியில தால். [யத்

21. தன்னைத்தான் காண றலைவன் றனைக்காண [னைத்தான்
லென்னும்பன் னூலுண்மை யென்னெனின்—றன்-
காணலெவன் றொன்றாற் காணவொணு தேற்றலைவற்
காணலெவ னூணுதல் காண்.

22. மதிக்கொளி தந்தம் மதிக்கு ளொளிரு
மதியினை யுள்ளே மடக்கிப்—பதியிற்
பதித்திடுத லன்றிப் பதியை மதியான்
மதித்திடுத லெங்ஙன் மதி.

23. நானென்றித் தேக நவிலா துறக்கத்து
நானின்றென் றாரு நவில்வதிலை—நானொன்
றெழுந்தபி னெல்லா மெழுமிந்த நானெங்
கெழுமென்று நுண்மதியா லெண்.

24. சடவுடனா னென்னாது சச்சித் துதியா
துடலளவா நானொன் றுதிக்கு—மிடையிலிது
சிச்சடக்கி ரந்திபந்தஞ் சீவனுட்ப மெய்யகந்தை
யிச்சமு சாரமன மெண்.

25. உருப்பற்றி யுண்டா முருப்பற்றி நிற்கு
முருப்பற்றி யுண்டுமிக வோங்கு—முருவிட்
டுருப்பற்றுந் தேடினா லோட்டம் பிடிக்கு
முருவற்ற பேயகந்தை யோர்.

26. அகந்தையுண் டாயி னனைத்துமுண் டாகு
மகந்தையின் றேலின் றனைத்து—மகந்தையே
யாவுமா மாதலால் யாதிதென்று நாடலே
யோவுதல் யாவுமென வோர்.

27. நானுதியா துள்ளநிலை நாமதுவா யுள்ளநிலை
நானுதிக்குந் தானமதை நாடாம—னானுதியாத்
தன்னிழப்பைச் சார்வதெவன் சாராமற் றானதுவாந்
தன்னிலையி னிற்பதெவன் சாற்று.

28. எழும்பு மகந்தை யெழுமிடத்தை நீரில்
விழுந்த பொருள்காண வேண்டி—முழுகுதல்போற்

கூர்ந்தமதி யாற்பேச்சு மூச்சடக்கிக் கொண்டுள்ளே
யாழ்ந்தறிய வேண்டு மறி.

29. **நா**னென்று வாயா னவிலாதுள் ளாழ்மனத்தா
னென்றெங் குந்துமென நாடுதலே—ஞானநெறி
யாமன்றி யன்றிதுநா னமதுவென் றுன்னறுணை
யாமதுவி சாரமா மா?

30. **நா**னா ரெனமனமுண் ணாடியுள நண்ணவே
நானு மவன்றலை நாணமுற—நானானத்
தோன்றுமொன்று தானாகத் தோன்றினுநா னன்று-
பூன்றமது தானும் பொருள். [பொருள்

31. **த**ன்னை யழித்தெழுந்த தன்மயா னந்தருக்
கென்னை யுளதொன் றியற்றுதற்குத்—தன்னையலா
தன்னிய மொன்று மறியா ரவர்நிலைமை
யின்னதென் றுன்ன லெவன்.

32. **அ**துநீயென் றம்மறைகள் ளார்த்திடவுந் தன்னை
யெதுவென்று தான்றேர்ந் திராஅ—ததுநா
னிதுவன்றென் றெண்ணலுர னின்மையினா லென்று
மதுவேதா னாயமர்வ தால்.

33. **எ**ன்னை யறியேனா னென்னை யறிந்தேனா
னென்ன னகைப்புக் கிடனாகு—மென்னை
தனைவிடய மாக்கவிரு தானுண்டோ வொன்றா
யனைவரனு பூதியுண்மை யால்.

34. **எ**ன்று மெவர்க்கு மியல்பா யுளபொருளை
யொன்று முளத்து ளுணர்ந்துநிலை—நின்றிடா
துண்டின் றுருவருவென் றொன்றிரண் டன்றென்றே
சண்டையிடன் மாயைச் சழக்கு.

35. **சி**த்தமா யுள்பொருளைத் தேர்ந்திருத்தல் சித்திபிற
சித்தியெலாஞ் சொப்பனமார் சித்திகளே—நித்திரைவிட்
டோர்ந்தா லவைமெய்யோ வுண்மைநிலை நின்றுபொ -
தீர்ந்தார் தியங்குவரோ தேர். [ய்ம்மை

36. **நா**முடலென் றெண்ணினல நாமதுவென் றெண்ணு-
நாமதுவா நிற்பதற்கு நற்றுணையே—யாமென்று [மது
நாமதுவென் றெண்ணுவதே னான்மனித னென்றெ—
நாமதுவா நிற்குமத னால். [ணுமோ

37. **சா**தகத்தி லேதுவிதஞ் சாத்தியத்தி லத்துவித
மோதுகின்ற வாதமது முண்மையல—வாதரவாய்த்
தான்றேடுங் காலுந் தனையடைந்த காலத்துந்
தான்றசம னன்றியார் தான்.

38. **வி**னைமுதனா மாயின் விளைபயன் றுய்ப்போம்
வினைமுதலா ரென்று வினவித்—தனையறியக்
கர்த்தத் துவம்போய்க் கருமமூன் றுங்கழலு
நித்தமா முத்தி நிலை.

39. **ப**த்தனா னென்னுமட்டே பந்தமுத்தி சிந்தனைகள்
பத்தனா ரென்றுதன்னைப் பார்க்குங்காற்—சித்தமாய்
நித்தமுத்தன் றானிற்க நிற்காதேற் பந்தசிந்தை
முத்திசிந்தை முன்னிற்கு மோ.

40. **உ**ருவ மருவ முருவருவ மூன்று
முறுமுத்தி யென்னி லுரைப்ப—னுருவ
மருவ முருவருவ மாயு மகந்தை
யுருவழிதன் முத்தி யுணர்.

**உள்ளது நாற்பது முற்றிற்று.**

# உள்ளதுநாற்பது அனுபந்தம்.

### விருத்தம்.

1. எதன்கண்ணே நிலையாகி யிருந்திடுமிவ் வுலகமெலா
 மெதன தெல்லா
மெதனின்றிவ் வனைத்துலகு மெழுமோமற் றிவையாவு
 மெதன்பொ ருட்டா
மெதனாலிவ் வையமெலா மெழுந்திடுமிவ் வெல்லாமு
 மெதுவே யாகு
மதுதானே யுளபொருளாஞ் சத்தியமா மச்சொருப
 மகத்தில் வைப்பாம்.

### வெண்பா.

2. சத்திணக் கத்தினாற் சார்பகலுஞ் சார்பகலச்
சித்தத்தின் சார்பு சிதையுமே—சித்தச்சார்
பற்றா ரசலவிலதி லற்றார்சீ வன்முத்தி
பெற்றா ரவரிணக்கம் பேண்.

3. சா துறவு சாரவுளஞ் சார்தெளிவி சாரத்தா
லேதுபர மாம்பதமிங் கெய்துமோ—வோதுமது
போதகனு னூற்பொருளாற் புண்ணியத்தாற் பின்னு-
சாதகத்தாற் சாரவொணு தால். [மொரு

4. சா துக்க ளாவார் சகவாச நண்ணின்
லேதுக்கா மிந்நியம மெல்லாமு—மேதக்க
தண்டென்றன் மாருதந் தான்வீச வேவிசிறி
கொண்டென்ன காரியநீ கூறு.

5. தாபந்தண் சந்திரனாற் றைனியநற் கற்பகத்தாற்
பாபந்தான் கங்கையாற் பாறுமே—தாபமுத
லிம்மூன்று மேகு மிணையில்லா சாதுக்க
டம்மா தரிசனத்தாற் றூன்.

6. கம்மயமாந் தீர்த்தங்கள் கன்மண்ணாந் தெய்வங்க
ளம்மகத்துக் கட்கிணையே யாகாவா—மம்மவவை
யெண்ணினு ளாற்றாய்மை யேய்விப்ப சாதுக்கள்
கண்ணினாற் கண்டிடவே காண்.

7. தேவனு ரார்மனந் தேருவ னென்மன
மாவியா மென்னு லறிபடுமே—தேவனீ
யாகுமே யாகையா லார்க்குஞ் சுருதியா
லேகனுந் தேவனே யென்று.

விருத்தம்.

8. ஒளியுனக் கெதுபக லினனெனக் கிருள்விளக்
கொளியுண ரொளியெது கணதுண ரொளியெது
வொளிமதி மதியுண ரொளியெது வதுவக
மொளிதனி லொளியுநீ யெனகுரு வகமதே.

வேறு.

9. இதடமாங் குகையி னுப்ப ணேகமாம் பிரம்ம மாத்ர
மதுவக மகமா நேரே யவிர்ந்திடு மான்மா வாக
விதயமே சார்வாய் தன்னை யெண்ணியா மூலது வாயு
வதனுட னாழ்ம னத்தா லான்மாவி னிட்ட னுவாய்.

வெண்பா.

10. அகக்கம லத்தே யமல வசல
வகமுருவ மாகு மறிவே—தகத்தை

யகற்றிடுவ தாலவ் வகமா மறிவே
யகவீ டளிப்ப தறி.

## விருத்தம்.

11. **தே**கங் கடநிகர் சடமிதற் ககமெனுந் திகழ்விலதா
ஞகஞ் சடலமி றுயிலினி றினமுறு நமதியலாற் [ளே
கோகங் கரனெவ னுளனுணர்ந் துளருளக் குகையுள்
சோகம் புரணவ ருணகிரி சிவவிபு சுயமொளிர்வான்.

## வெண்பா.

12. **பி**றந்த தெவன்றன் பிரமமூ லத்தே
பிறந்ததெவ ஞென்று பேணிப்—பிறந்தா
னவனே பிறந்தா னவனிதமு னீச
னவநவன வன்றினமு நாடு.

13. **இ**ழிவுடல்யா னென்ன விகந்திடுக வென்று
மொழிவிலின் பாந்தன்னை யோர்க—வழியு
முடலோம்ப லோடுதனை யோரவுனல் யாறு
கடக்கக் கராப்புணைகொண் டற்று.

14. **தா**னந் தவம்வேள்வி தன்மம்யோ கம்பத்தி
வானம் பொருள்சாந்தி வாய்மையருள்—மோனநிலை
சாகாமற் சாவறிவு சார்துறவு வீடின்பந்
தேகான்ம பாவமற றோர்.

15. **ச**த்தியினுற் ருமியங்குந் தன்மையுண ராதகில
சித்திகளுஞ் சேர்வமெனச் சேட்டிக்கும்—பித்தர்கூத்
தென்னை யெழுப்பிவிடி னெம்மட்டித் தெவ்வரெனச்
சொன்னமுட வன்கதையின் சோடு.

16. பூபரந் தாங்கவிறை போலியுயிர் தாங்கலது
கோபுரந் தாங்கியுருக் கோரணிகாண்—மாபரங்கொள்
வண்டிசெலு வான்சுமையை வண்டிவை யாதுதலை
கொண்டுநலி கொண்டதெவர் கோது.

விருத்தம்.

17. இருமுலை நடுமார் படிவயி றிதன்மே
லிருமுப் பொருளுள நிறம்பல விவற்று
ளொருபொரு ளாம்பல ரும்பென வுள்ளே
யிருவிரல் வலத்தே யிருப்பது மிதயம்.

வேறு.

18. அதன்முக மிகலுள தகமுள சிறுதுளை
யதனிலா சாதியொ டமர்ந்துள திருந்தம
மதனையா சிரித்துள வகிலமா நாடிக
ளதுவளி யனதொளி யவற்றின திருப்பிடம்.

வேறு.

19. இதயமலர்க் குகையகமா யிலகிறையே குகேசனென வேத்தப் பட்டோ
னிதமனைய குகேசன்யா னெனுஞ்சோகம் பாவனைதா னின்னு டம்பிற்
றிதமுறுநா னெனுந்திடம்போ லப்பியாச பலத்தாலத் தேவாய் நிற்கிற்
சிதையுட-று னெனுமவித்தை செங்கதிரோ னெதிரிருள்போற் சிதையு மன்றே.

### வெண்பா.

20. அகில வுபாதி யகன்ற வறிவே
தகமச் சிவமென் றனிச—மகத்தே
யகலாத் தியான மதனு லகத்தி
னகிலவா சத்தி யகற்று.

21. அறிவுண்மை நிட்டனு மான்மவித் தாவா
னறிவாற் புலன்செற்று ஞர்தா—னறிவங்கி
யாவனறி வாங்குலிசத் தான்கால காலனவன்
சாவினைமாய் வீரனெனச் சாற்று.

22. சேய்மையுளஞ் சென்றுகதை கேட்பார்போல் வாதனைக
டேய்மனஞ்செய் துஞ்செய்யா தேயவைக—டோய்-
[மனஞ்செய்
தின்றேனுஞ் செய்ததே யிங்கசைவற் றுங்கனவிற்
குன்றேறி வீழ்வார் குழி.

23. வண்டிதுயில் வானுக்கவ் வண்டிசெல னிற்றலொடு
வண்டிதனி யுற்றிடுதன் மானுமே—வண்டியா
மூனவுட லுள்ளே யுறங்குமெய்ஞ் ஞானிக்கு
மானதொழி னிட்டையுறக் கம்.

24. நனவு கனவுதுயி னுடுவார்க் கப்பா
னனவு துயிற்றுரிய நாமத்—தெனுமத்
துரிய மதேயுளதாற் றோன்றுமூன் றின்றாற்
றுரிய வதீதந் துணி.

25. மக்கண் மனைவிமுதன் மற்றவர்க ளற்பமதி
மக்கட் கொருகுடும்ப மானவே—மிக்ககல்வி
யுள்ளவர்த முள்ளத்தே யொன்றலபன் னூற்குடும்ப
முள்ளதுயோ கத்தடையா யோர்.

26. எழுத்தறிந்த தாம்பிறந்த தெங்கேயென் றெண்ணி
யெழுத்தைத் தொலைக்க வெணுதோ—ரெழுத்தறிந்-
[தென்
சத்தங்கொ ளெந்திரத்தின் சால்புற்றார் சோணகிரி
வித்தகனே வேறார் விளம்பு.

27. கற்று மடங்காரிற் கல்லாதா ரேயுய்ந்தார்
பற்று மதப்பேயின் பாலுய்ந்தார்—சுற்றுபல
சிந்தைவாய் நோயுய்ந்தார் சீர்தேடி யோடலுய்ந்தா
ருய்ந்ததொன் றன்றென் றுணர்.

28. எல்லா வுலகுந் துரும்பா யினுமறைக
ளெல்லாமே கைக்கு ளிருந்தாலும்—பொல்லாப்
புகழ்ச்சியாம் வேசிவசம் புக்கா ரடிமை
யகலவிட லம்மா வரிது.

29. தானன்றி யாருண்டு தன்னையா ரென்சொலினென்
றன்றன்னை வாழ்த்துகினுந் தாழ்த்துகினும்— தா
[னென்ன
தான்பிறரென் றோராமற் றன்னிலையிற் பேராமற்
றானென்று நின்றிடவே தான்.

30. அகிலவே தாந்தசித் தாந்தசா ரத்தை
யகமுண்மை யாக வறைவ—னகஞ்செத்
தகமது வாகி லறிவுரு வாமவ்
வகமதே மிச்ச மறி.

**உள்ளதுநாற்பதுஅநுபந்தம்**

**முற்றிற்று.**

# அப்பளப்பாட்டு.

## பல்லவி.

அப்பள மிட்டுப் பாரு— அத்தைச்
சாப்பிட்டுன் னாசையைத் தீரு.

## அனுபல்லவி.

இப்புவி தன்னி லேங்கித் திரியாமற்
சற்போ தசுக சற்குரு வானவர்
செப்பாது சொன்ன தத்துவ மாகிற
வொப்புயர் வில்லா வோர்மொழி யின்படி— அப்

## சரணங்கள்.

1. தானல்லா வைங்கோச க்ஷேத்ர மிதில்வளர்
தானென்னு மானமாந் தான்ய வுளுந்தை
நானுமென் ஞான விசாரத் திரிகையி
னானல்ல வென்றே யுடைத்துப் பொடித்து— அப்

2. சத்சங்க மாரும் பிரண்டை ரசத்தொடு
சமதம மாகின்ற ஜீரக மிளகுட
னுபரதி யாகுமவ் வுப்போ டுள்ளநல்
வாசனை யாம்பெருங் காயமுஞ் சேர்த்து— அப்

3. கன்னெஞ்சி னான்று னென்று கலங்காம
லுண்முக வுலக்கையா லோயா திடித்து
சாந்தமாங் குழவியாற் சமமான பலகையிற்
சந்ததஞ் சலிப்பற சந்தோஷ மாகவே— அப்

4. மோனமுத் ரையாகு முடிவில்லாப் பாத்ரத்தில்
ஞானக்னி யாற்காயு நற்பிரம்ம நெய்யதி
னாது வாகவே நாளும் பொரித்துத்
தானே தானாக புஜிக்கத் தன்மய— அப்

---

# ஆன்மவித்தை.

### பல்லவி.

ஐயே! யதிசுலபம்—ஆன்மவித்தை
ஐயே! யதிசுலபம்.

### அநுபல்லவி.

நொய்யார் தமக்குமுளங் கையா மலகக்கனி
பொய்யா மொழியமிரு மெய்யா யுளதான்மா. (ஐயே)

### சரணங்கள்.

1. மெய்யாய் நிரந்தரந்தா னையா திருந்திடவும்
பொய்யா முடம்புலக மெய்யா முளைத்தெழும்போய்
மையார் நினைவணுவு முய்யா தொடுக்கிடவே
மெய்யா ரிதயவெளி வெய்யோன் சுயமான்மா—
விளங்குமே; இரு ளடங்குமே; இட ரொடுங்குமே;
இன்பம் பொங்குமே. (ஐயே)

2. உளனு ருடலிதுவே நானு மெனுநினைவே
நானு நினைவுகள்சே ரோர்நா ரெனுமதனு
ளுனு ரிடமெதென் றுட் போனு னினைவுகள்போய்
நானு னெனக்குகையுட் டானய்த் திகழுமான்ம—
ஞானமே; இதுவே மோனமே; ஏக வானமே;
இன்பத் தானமே. (ஐயே)

3. தன்னை யறிதலின்றிப் பின்னை யெதறிகிலென்?
றன்னை யறிந்திடிற்பின் னென்னை யுளதறிய?

பின்ன வுயிர்களில பின்ன விளக்கெனுமத்
தன்னைத் தனிலுணர மின்னுந் தனுளான்ம—
ப்ரகாசமே; அருள் விலாசமே; அக விநாசமே;
இன்ப விகாசமே. (ஐயே)

4. கன்மா திகட்டவிழ சென்மா திநட்டமெழ
வெம்மார்க் கமதனினு மிம்மார்க் கமிக்கெளிது
சொன்மா னததனுவின் கன்மா திசிறிதின்றிச்
சும்மா வமர்ந்திருக்க வம்மா வகத்திலான்ம—
சோதியே; நிதானுபூதியே; இராது பீதியே;
இன்பாம் போதியே. (ஐயே)

5. விண்ணா தியவிளக்குங் கண்ணா தியபொறிக்குங்
கண்ணா மனக்கணுக்குங் கண்ணாய் மனவிணுக்கும்
விண்ணா யொருபொருள்வே றெண்ணா திருந்தபடி
யுண்ணா டுளத்தொளிரு மண்ணா மலையெனுன்மா—
காணுமே; அருளும் வேணுமே; அன்பு பூணுமே;
இன்பு தோணுமே. (ஐயே)

ஓம் தத் ஸத்

## உபதேச நூன்மாலை
## ஸம்பூர்ணம்.

# அநுவாத நூன்மாலை

(I. செய்யுள்)

ஶ்ரீ

# தேவிகாலோத்தர

# ஞானசாரவிசாரபடலம்

## அவதாரிகை.

உபாகமங்களு ளொன்றாய 'ஸ்ரீ தேவிகாலோத்தர'த்தின் கண் சகலாகம சாரத்தின் சாரமாய்ப் பக்குவான்மாக்கள் பரிபாக காலாநந்தர மடையத் தகுந்த ஞானத்தையும் ஆசாரத்தையும் விவரித்துப் பரமசிவன் பரமசிவைக் கருளிச்செய்த இந்த ஞானசார விசார படலக் கிரந்தமானது, சனன மரண ரூப சம்சார துக்க சமுத்திரத்தில் வீழ்ந்து முங்கிப் பொங்கித் தத்தளிக்குஞ் சீவர்களைத் தாங்கி நேர்வழி கொடுபோய் முத்தியெனு மக்கரையிற் சேர்க்கும் அரும் பெருந் தோணியா யிருத்தலின், முமுட்சுக்க ளனைவருந் திகைத்து வழிதப்பி யலையாம லிதன்றுணையால் நேர்மார்க்கமே சென்று அச்சாந்தானந்த பரமபத மடைவாராக.

### மங்கலம்.

வெண்பா.

தேவன் றிருவாயாற் றேவி செவிபுகட்டுந்
தேவிகா லோத்தரந் தேர்ஞான—மாவிளைவா
மானந்தி வானமுத மானவரு ளத்துவித
மோனக் கரியகமே முன்.

## நூல்.

### தேவி.

1. அனைவர்க்கு மேமுத்திக் காகவம் முத்தி
தனையுறுமார்க் கக்காட்சி தானு—மனையபர
ஞானமா சாரமே நாடுமெனக் குன்னருளால்
வானவ ரீசா வழுத்து.

### ஈசன்.

2. யாதினுன் ஞானியர்கள் யாதோர் களங்கமுமி
லோதரிய முத்திதனை யுற்றிடுவார்—மாதரசே
ஞானவா சாரங்க ளுனுனக் கின்றுரைப்பன்
ஞானமுற யாவருமே நன்கு.

3. ஞானந்தான் யாவர்க்கு நன்முகத்தோ யிக்கால
ஞானத்தா லுள்ளி னணுகாதோ—வான
கணக்கிலாக் கோடிநூல் கற்றாலு மன்னோர்க்
குணர்வுதியா தென்றே யுணர்.

4. அதனாலே நிர்ப்பயனு யையமென வின்றி
யெதனிலுமே யிச்சை யிலனு—யிதயத்தி
னற்சிரத்தை யோடு நிராகுலனுய் ஞானத்தி
லுற்சாக முள்ளோனு யுற்று.

5. மமதையின் றிக்கருணை மன்னிப்பூ தங்க
டமக்கெல்லா மேயபயந் தந்து—முமுட்சுவா
யோகத்திற் றற்பரனு யோதிக்கா லோத்தரத்தி
னேகவழி நிற்க விசைந்து.

6. அவன்றனே நான்முகனு மச்சிவனு மாலு
மவன்றேவர் கோன்குகனு மாவ—னவன்று
னகில சுரர்குருவு மாவன்மா யோகி
யகில தபோதனனு மாம்.

7. பண்டிதனு மாபுருடன் பாரமார்த் தப்பேறு
கொண்டவனு மன்னவனே கூறுங்கான்—மண்டியுழல்
வாயுசமஞ் சித்தம் வலித்தெவனு னிச்சலன
மாயிருத்தப் பெற்றிடு மாம்.

8. அதுதானே முத்திக் குபாய மதுவே
சதுபாயர் சார்குணந் தானு—மதுவே
பிரஞ்ஞை திரத்தன்மை பின்னு மதுவே
தருமம் விவேகியர்க்குத் தான்.

9. அதுவேநற் றீர்த்த மதுவேயாந் தான
மதுவே தவமாகு மைய—மிதிலில்லை
யெவ்வுபா யத்தினு லேவாயு விற்சலன
விவ்வுளங்கட் டப்படுமோ வெண்.

10. சித்தஞ் சிறிதசையச் சம்சார நிச்சலமாச்
சித்தநிலை நிற்கமுத்தி சித்தமிது—சித்தந்
திரமாக்க வேவேண்டு மாதலினுற் றீமான்
பரமாம் பிரஞ்ஞையினுற் பார்.

11. அந்தவே காந்தத் தடையுஞ் சுகமதுவே
யந்தமிலா வத்தியந்த வானந்த—மெந்தக்
கருமமுயி லப்பரத்திற் கற்றவனு மார்தா
னிரமித் திடானீ யிசை.

12. விடயஞா னம்போய் விரிநிட் களமாய்
விடயமின் ஞானபரன் வீடு—மடைய
வவாவிலனே னுந்தீர னட்சயமா மோட்சந்
தவாதுற் றிடுவனே தான்.

13. இருக்கின்றே னென்கலையோ டேய்ந்தசை தன்ய
வுருசத்தி யத்தா லொளிரும்—பிரபஞ்சஞ்
சர்வஞ்சத் தித்யானஞ் சார்நிட் களஞானஞ்
சர்வ நிராலம்பந் தான்.

14. அத்துவித மாகி யறிவொளி மாத்திரமா
யெத்து மகமிசத் தெச்சூன்ய—முத்திக்கு
வித்ததுவே யென்று விளம்பும் பரயோகத்
துய்த்திடுவ தாகத்தா னுற்று.

15. சக்கரங்க ணாடிகள் சார்பதும தேவதை
யக்கரங்கண் மண்டலமூர்த் தாதியா—மிக்கவிவை
யோர்போது மற்பமுமே யுன்னி யிடத்தகா
நேர்மார்க்க மாமிதனை நீத்து.

16. கும்பகமு மந்திரக் கூட்ட முயிர்ச்சலனத்
தம்பனமுன் னுயவாந் தாரணைதா—மென்பவைக
ளத்தனையு மாசரிக்க வேண்டாவா மட்சயமா
முத்தியிச்சை யுள்ளோர் முயன்று.

17. பூசை வணக்கம் புரிசெபஞ் சிந்தன
மாசரிப்ப தேதுமே யங்கில்லை—பேசுமது
கேவலம் ஞேயமென்று கேளினிக் கிஞ்சில்ன்ய
மாவறிய வேண்டுவதின் றும்.

18. வெளிவிடயம் பற்றும் விரிமனத்தார்க் கென்றும்
விளையும் வெகுபந்த வேது — வெளியே
திரியுஞ்சித் தத்தைத் திருப்பநிலை யுற்றே
யொருதுனிமே வாருலகி லோர்.

19. உள்வெளிமேல் கீழ்நடுதிக் கோர்சிறிது மின்றியே
யுள்ளவுரு வெல்லாமா யோருருவு—மில்லதாய்த்
தான்றனக்கே வேத்தியமாய்த் தானே யிலங்கிடுமாற்
பூன்றமா மொன்று புணர்.

20. எவ்வெதன் றிட்டியா லெவ்வுயிர்செய் யுந்தொழில்க
ளவ்வுயிர்க் கக்கதியுண் டாதலா—லெவ்வ
மறுவவை சாரா தயற்றிட்டி யற்று
ணிராலோகந் தானே நினை.

21. ஏது பலங்கரும மில்லை சுபாவத்தி
லோது மிவையாவு முண்மையல—பேத
வுலகமு மில்லை யுலகப்பற் றுள்ள
விலவுகிகன் றானு மிலை.

22. நிராலம்ப மிந்த நிகிலமு மன்றி
நிராலம்பத் தாலொளிரா நிற்ப—நிராலம்ப
மாகச்செய் திந்த வனைத்து நிராலம்ப
மாகிடுவ னென்றே யறி.

23. வியோமவடி வாகும் வியாபகமா சூன்ய
மியாதொருவன் பாவித் திடானே—வியாண்டுமவன்
பீசகோ சக்கிருமி போலப் பிரபஞ்ச
பாசசமு சாரியாம் பார்.

24. அகிலமாம் யோனியிலு மாருயிர்யா விற்கு
மிகக்கிலே சம்பொருந்து மேன்மே—லகிலக்
கிலேசமுமே நீக்குதற்குக் கேண்மாகூன் யத்தை
யிலேசமறுச் சிந்தை யியற்று.

25. ஞானவுத யப்பொருட்டே நற்கிரியை சற்சரியை
தாநவிலப் பட்டதாற் றுன்னென்றை—மானதத்தி
னுட்கருதுஞ் சாலம்ப யோகந் தனையுமொரீ
நிட்பிரபஞ் சத்தே நிலை.

26. பாதலமுன் பாகப் பகர்சத்தி யந்தமா
யாதரப் பட்டவிவை யத்தனையும்—வீதலுறுஞ்
சூனியமா மத்திரங்கொண் டாராலே சூரரவர்
சூனிய ஞானியராச் சுட்டு.

27. விடயத்தி லாசை விடாதே குரங்கை
விடச்சலிசித் தத்தை விடாது—மடக்கிச்
சருவகூன் யப்பதத்திற் றபிக்க வத்தா
னிருவாண முற்றிடுவ னோர்.

28. அகிலதத்து வத்து மபின்னமா யாக
மகமென் பதற்கனிய மாகி—யகமெய்ப்
பொருளுக் கபின்னமாம் பூரணசித் தெங்கும்
பொருந்துமுக முள்ள பொருள்.

29. ஆகாயம் போல வகிலத் தகம்புறமு
மேகாங்க மாயுருவ மின்றியதா—மாகா
பரமானந் தத்துட் படிந்தவரன் பேயப்
பரமானந் தப்படிவர் பார்.

30. இந்தனமில் லாவெரிதா னெவ்வண்ணந் தான்றனே
மந்தமாய்ச் சாந்தியினை மன்னுமோ—வந்தவிதம்
பற்றுபொரு ளற்றாற் பரந்தமன முஞ்சாந்தி
யுற்றுவிடுந் தானுகை வோய்ந்து.

31. மோகிகை மாயையே மூர்ச்சிகை சொப்பன
மாகிய விந்நான் கவத்தைகளு—மேக
சுழுத்தியொடு சாக்கிரஞ் சொல்லுமிவை யெல்லா
மொழித்துவிட வேண்டு முணர்.

32. தேகமிதிற் சூக்குமமாச் சேருமுயிர் சித்தபுத்தி
யாகுமகங் காரமிவை யாவுக்கு—மேகசித்
தன்னியமே யென்றுசிந்தை யாற்றவே யச்சித்தை
மன்னிடுவா னென்று மதி.

33. நித்திரையி னுலு நினைவாதி யாலுநிதஞ்
சித்தந்தான் மூடமிகச் சேரழியுஞ்—சித்தமிதை
யெத்தனத்தா லேயுணர்த்தி யேகாமற் றன்னிலையில்
வைத்திடுவாய் மேன்மேலும் வை.

34. சித்தமெப் போது திரமாகு மெவ்விதத்து
மத்தைச் சலிப்பித்த லாகாதே—யித்தனையுஞ்
சிந்திக்க வேண்டுவதின் றங்கேயச் சித்தத்தைப்
பந்தித்து நிச்சலமே பண்ணு.

35. ஆசிரயம் பற்றியதா மச்சித்த மங்ஙனமே
யாசிரய மின்றியதா யாக்கிடுக—வாசிரயம்
பற்றுசல நிச்சலமாப் பண்ணியந் நிச்சலத்தைச்
சற்றுஞ் சலிப்பியா தை.

36. இவ்வெல்லாப் பூத விலயமுண் டாகிலிவற்
றெவ்வெவ்விண் ணும்விமல மேபோல—வவ்வவ்
வுருவம் வியாபித்து மோர்மலமி றன்னைப்
பொருவி றியானம் புரி.

37. அதுவே சனன மடைந்ததன் பேறு
மதுதானே பாண்டித்ய மாகு—மெதுதான்
சலனமுறும் வாயு சமஞ்சித்த மென்றுஞ்
சலனமறச் செய்சா தனம்.

38. சித்தத்தை மேலேயுந் தாரணஞ் செய்யற்க
மத்தியிலுங் கீழிலு மற்றெங்குஞ்—சித்தமீ
தந்தரங்க பாவனைவிட் டாசிரய மின்றியதாச்
சந்ததமுஞ் செய்திடவே தான்.

39. உறக்கத்தி னின்று முணர்த்திடுக சித்த
முறிற்சலனம் பின்ன ரொடுக்கா—யுறக்க
மலைவென்னு மிவ்விரண்டு மற்றநிலை யுற்று
னிலையிதனி னிச்சலமா நில்.

40. ஆசிரய மின்றியதா யச்சித்தந் தானென்று
மாசறவா லம்பமெலா மற்றதாய்ப்—பாச
மனவவத்தை மன்னிடா மைஞேய முத்தி
தனதிலக்க ணந்தான் றரி.

41. ஆலம்ப மெல்லா மறவிட்டே யம்மனத்தை
யேலத் தரிப்பித் திதயத்தே—சாலத்
துலக்கமா யெவ்வறிவு தோன்றுமோ வஃது
பலக்கவே யென்றும் பழகு.

42. அப்பரமாஞ் சூனியத்தை யார்தியா னித்தேயவ்
வப்யாச தற்பரரா யாவரோ—தப்பார்
பிறப்பிறப்பில் லாத பெருமையுறுந் தான
முறப்பெறுவ ரேயவரென் றோர்.

43. தேவருந் தேவியரு மங்ஙனமே யன்னியமாம்
பாவமற முந்தற் பலன்களுந்—மேவியிடு
மாசிரய மாசிரய ஞானமுமே யானவிவை
மாசமு சாரபந்த மால்.

44. தொந்தமென் றாசிரயஞ் சொல்லப் படுமாமத்
தொந்தம் விடப்பரந் தோன்றுமே—பந்தமில்
சீவன்முத் தன்யோகி தேகத் தியாகத்தா
லாவன் விதேகமுத்த னன்று.

45. உடலை விராகத் தொழித்திடுகை புத்தி
யுடையவராற் செய்ய வொண்ணாதே—வுடலிதனை
யாரம்பித் துள்ளவினை யற்றவுட னிவ்வுடல
பாரந்தா னேயகலும் பார்.

46. இதயகம லத்தே யகமுருவா மெச்சித்
ததுநிமல நிச்சலமே யாகு—முதிக்கு
மகங்கார நீக்குதலா லச்சித்தே முத்தி
சுகங்கொடுப்ப தென்று துணி.

47. சருவ வுபாதியுஞ் சாரா துளசித்
துருவ மெதுவொன் றுளது—நிரந்தர
மந்தச் சிவமகமென் றன்பாற் றியானித்தே
யெந்தவா சத்தியுநீ யெற்று.

48. தேசமுஞ் சாதிமுத லாமிவற்றைச் சேர்ந்தனவு
மாசகல்வர் ணாசிரம மன்னினவும்—பேசுமிப்
பாவனைக ளையகற்றிப் பற்றியே தன்னிலையின்
பாவனையே யென்றும் பழகு.

49. ஒருவனு னெற்குரிய னேயொருவ னில்மற்
றொருவற்கில் யானு முரிய—னொருவ
னெவற்குரியன் யானவனைக் கண்டிலேன் யானெற்
கெவனுரியன் கண்டிலேன் யான்.

50. நானே பரப்பிரம நாதனுல குக்கீச
னுனவிந் நிச்சய மார்புருடன்—றானேநன்
முத்தனு மன்றி முரண்வழியிற் செல்புருடன்
பெத்தனு மென்றுநீ பேண்.

51. என்றொருவன் றேக மிலனுக வேதன்னைத்
தன்ஞானக் கண்ணினுற் றன்காண்ப—னன்றே
யனைத்தினு மாசை யறவிட்டுச் சாந்தி
தனைத்துன்னி யோனுவன் றன்.

52. அசனீச னென்றெல்லா நூற்களிலு மார்தா
னிசைக்கப் படுவானே வென்று—மசரீர
னுங்குணமில் லானுன்மா வாமவனே யான்சிறிது
மீங்கிதனி லைய மிலை.

53. விஞ்ஞான மாத்ரன் விசுத்தன் விமுத்தனு
னெஞ்ஞான்று மெங்கு மிருப்பனு—னஞ்ஞாயத்
தொன்றலனுன் பற்றவிட வொண்ணுனுன் றுக்கமிலா
னென்றும் பிரமமயன் யான.

54. உச்சி முதலுள்ளங் காலளவா யுட்புறம்
பிச்சருமப் போர்வை யிறுதியா—மிச்சடத்துக்
கன்னியசித் தாய்முழுது மாயமுத மாய்த்தானே
மன்னியவான் மாநான் மதி.

55. இந்தச் சராசரங்கட் கீசனுன் றாயுடனே
தந்தையுந் தந்தைக்குத் தந்தையுஞ்—சிந்தனங்கொண்
டத்துரிய நற்பத மாமெனையே சிந்திப்பார்
முத்தி விருப்பர் முனைந்து.

56. பிரமன்முன் ஞந்தேவர் பேணுமர மாதர்
நரரியக்கர் கந்தருவர் நாகர்—நிரையாலு
மெச்சம் பலவாலும் யான்பூச் சியனெனையே
யர்ச்சிப்ப ராரு மறி.

57. அருந்தவங்க ளான மனேகவிதத் தாலு
மருச்சிப்ப ரென்னையே யாரும்—பரந்த
சரவசர பூதங்கள் சார்ந்துளமற் றெல்லா
மொருவனும் யானே யுணர்.

58. தூலனுஞ் சூக்குமனுஞ் சூனியனு மல்லனுன்
ஞாலத்தின் பந்தான் ஞான்மயன்—மேலு
நிரந்தரனீ சன்விமல னீட்டவத்தை யில்லோன்
பிரபஞ்ச மில்லோனுன் பின்.

59. அறிவிஞ் ஞான மசன்மம் புராணந்
தறுகித யக்குகையிற் றங்கி—யொருரு
முருவமுல கங்களங்க மொப்புப்பற் றின்றிக்
கருதக்கா ணக்கொளப்போ காது.

60. சனாதனமா யந்தரமில் சற்பிரமஞ் சோக
மெனாநீ யடிக்கடியா ரேகம்—பனாதிமெவன்
பாவித்து நிச்சலனா நிற்பன் பரப்பிரம
மாவனமு தத்தன்மை யார்ந்து.

61. ஞானமிவ் வாறு நவின்றிடப் பட்டதா
லானமுத்தி யாரு மடைதற்கு—மாணிணியின்
றுசார மென்னா லருளப் படுமிதுகே
ணீசாவ தானமா நின்று.

62. நீராட லுஞ்செபமு நித்தியவோ மம்பூசை
யாரழலின் காரிய மாதியாத்—தேருமோர்
சாதனமு மன்னோன் றனக்கென்று மின்றுமான்
மாதரசி யேநீ மதி.

63. நேமமுங் க்ஷேத்திரபீ டத்தி னிகழ்சேவை
நாமவர்ச்ச னம்பிதிரர் நற்கருமம்—பூமருவு
தீர்த்தநல் யாத்திரை தேசார் விரதங்க
ளோர்த்திடவற் கில்லையா மொன்று.

64. தருமா தருமந் தருபல னில்லை
மருவு திதியுலக மன்னுங்—கருமமிலை
யெல்லாக் கரும மிகந்திடுல காசார
மெல்லா விதத்து மிக.

65. சமயவா சாரமே சற்றுமின்றித் தள்ளாய்
சமத்தமாங் கன்மந் தளையா—யமையுமாற்
சங்கற்ப மும்விகற்பஞ் சாதிதரு மஞ்சார்ந்த
சங்கத்தை யுந்தூரத் தள்ளு.

66. பலவிதமாஞ் சித்திகளும் பாதாள முன்பா
யிலகுமிர சாயனமு மென்ப—வுலகிற்
பிரத்தியட்ச மாகவே பெற்றாலும் பற்ற
லொருவுகவே சாதக னுள்.

67. இவையாவும் பந்தகமா மிச்சீவ னுக்கே
யிவைமேலுந் தாழ்ந்தநெறி யீவ—விவைக
ளியாவையினு மப்பரம முத்திசுக மில்லை
வியாபகமாஞ் சித்துருவம் விட்டு.

68. எவ்விசே டத்தானு மெல்லா வவத்தையினுந்
தவ்வலற யோகந் தரித்தோனு—மெவ்விதத்து
மையத்தாற் கேத்திரபீ டத்திற் குதூகலமா
மையலெழின் மற்றதனை மாற்று.

69. கிருமிகீ டம்பறவை கேள்சதியே தாரு
வுருமுதலா மெல்லா வுயிரு—மொருபோது
நாசமுறச் செய்யவொணு நல்லறிஞ னுண்மையறி
வாசிரயித் தோனு யறி.

70. வேறெதுவுந் தான்பிடுங்க வேண்டா மிலையினையும்
வேறுபடுத் துஞ்செயலும் வேண்டாமே—சீறி
யினுதை செயவேண்டா மெவ்வுயிர்க்கும் பூவு
மனுதரவாய்க் கிள்ளவேண் டாம்.

71. சுயமாக வேயுதிர்ந்த தூமலர்கள் கொண்டே
செயக்கடவன் பூசை சிவனுக்—கியற்றியிடு
மாரணமுச் சாடனமுன் மற்றவித்து வேடணமும்
பேருற்ற தம்பனமும் பின்.

72. சுரமொடு பூதங்கோ டுன்னுமா வேச
முரண்வசிய மாகருட மோக—முறைத்தவிக்
குத்திரகன் மங்கள் குயிற்றற்க கற்கட்டை
யொத்தவற்றிற் பூசை யொழி.

73. கேத்திரபீ டத்திற் கிளர்தேவ தைப்பொருட்டாச்
சேர்த்திடுமா முத்திரையுஞ் செய்மகமு—நீத்துமுன்
செய்யவற்றின் வாதனைக டீர்த்தே வியாபகமா
மெய்யறிவு தன்னையே மேவு.

74. சமத்துவமே யுற்றுச் சருவாம லாசை
சமனாய்ச் சுகதுக்கச் சார்விற்—சமனாகி
மித்திரர்க ளல்லாதார் மேலுமோட் டிற்பொன்னி
லொத்தகருத் தோனாகி யுற்று.

75. பொறிவிட யத்திலொரு போதும் விருப்ப
முறவிடா துண்மமதை யோட்டி—யறிவுரமுற்
றுசைபய மற்றென்று மான்மாவி லோமிப்பன்
மாசிலா யோகி மதி.

76. சமனாகி நிந்தையிற் சாற்றுதுதி யிற்பின்
சமனாகிச் சர்வபூ தத்துஞ்—சமதிட்டி
மன்னிடவே வேண்டுமான் மாறும லெந்நாளுந்
தன்னுயிர்போல் மன்னுயிரிற் றூன்.

77. ஒருவுகவீண் வாத முடனுலக கோட்டி
யொருவுக பாழ்ங்கலக மும்பின்—னொருவுக
சாத்திர கோட்டியைச் சாராதே தீச்செரல்லோ
டேத்துநற் சொல்லு மிக.

78. ஈரிடையுங் கோளு மிடம்ப மிராகமுஞ்
சாருமம் மாச்சரியந் தானும்பின்—னேரிடு
மாசையுங் கோபமு மச்சமுஞ் சோகமு
நீசருவ மெல்லமெல்ல நீக்கு.

79. தொந்த மனைத்துந் தொடரா தகற்றியே
சந்ததமுந் தான்சனத்தைச் சாராதா—னிந்த
வுடம்புடனே யெல்லா முணர்ந்திடுவா ளுகித்
திடம்பெறுதே சார்ந்தொளிர்வன் றேர்.

80. ஞானத்தி னாலேயே நன்முத்தி யவ்வண்ண
மேனைய சித்திபய னின்றேனு—மூனமாம்
போகத்துஞ் சித்தியினும் பூண்டுமயல் வேண்டிடுவர்
சாதகரா யுள்ளவர்க டாம்.

81. அணிமாதி யானகுண மார்ந்திடுக வன்றி
யணுகாம லேயஃ தகல்க—வுணர்ந்தே
விமலமா மப்பதியை வீடுறுத றப்பா
னமலமாந் தேகி யறி.

82. ஆகந்தா னைம்பூத வாகார மங்கேயே
யேகசிவன் றானு மினிதமர்வன்—பாகமிலா
தெங்கு முறுசிவமுன் னித்தரையி ரூமுலகஞ்
சங்கரன் றன்னுருவந் தான்.

83. இவ்வறிஞ னைக்கண் டிசைகரண மூன்றானுஞ்
செவ்வியகந் தங்கனிபூத் தீம்புகையுந்—திவ்வியமா
நீராட லாடையூ ணைஞ்சுருகு மன்பாலீந்
தாராரா தித்திடு வார்.

84. அப்படியே வீடுறுவ ராருயிரே யம்முத்தி
மெய்ப்படியு மார்க்க விருப்பமுளா—ரப்புருடற்
பூசைபுரி வாரன்னேன் புண்ணியத்தைப் பாவத்தை
யேசுபவ ரெய்திடுவா ரெண்.

85. அறிவுடனு சாரமெவை யாசிக்கப் பட்ட
தறிவிக்கப் பட்டதெனு லந்த—நெறியாவுங்
காலஞா னந்தான் கருத்தில்லே வேறேவினவற்
பாலதெது மாதே பகர்.

இங்ஙன மிருபத்துநான்காயிரங் கிரந்த மிசைந்த
ஸ்ரீதேவிகாலோத்தர மென்னும் ஞானகாண்
டத்தின்கண் நைட்டிகர்க்கு ஞானசார
விசார மென்னும் அறுபத்தைந்தாம்
படலம் சம்பூர்ணம்.

ஸ்ரீ

## சர்வஞானோத்தரம்

# ஆன்மசாட்சாத்காரப்பிரகரணம்

---

### மங்கலம்

நேரிசை வெண்பா

ஆன்மாவா மீசன் குகனுக் கருள்செய்த
வான்மசாட் சாத்கார மாகுமீ—தான்மாவா
யென்னகத் தேயிருந் தின்றுதமிழ் சொல்வானம்
முன்னவ னுய முதல்.

### நூல்

1. அன்னசிவன் பின்னு மருள்வான் குகனேநிற்
கன்னியஞ் சூட்சி யறைவன்மெய்—மன்னவே
நிட்களமா யாவுனுமே நிற்பதாய் நுட்பமதா
யுட்கொள்ளப் போகாதே னும்.

2. ஏதனு லனுபவமா ஞானநன் கெய்து
மெதனையறிந் தோன்சிவ னேயா—மெதேவர்க்கு
மென்னுற் சொலப்பட்ட தின்றவ்விஞ் ஞானத்தை
யென்னிடத்தி னின்றுகே ளின்று.

3. ஈதுகுரு பாரம் பரியத்துப் போந்ததாம்
வாதிகளெல் லாங்காண வாய்க்காதா—மீதுபவ
பந்தமுத் திப்பொருட் டாம்பரம மாமுகமோ
வெந்தத் தலத்துமுள தே.

4. எவனெல்லா வற்று மிருக்குமித் தேவ
னெவனெல்லா மாகி யிருப்ப—னெவன்முக [தானுய்த்
மெங்குமுளா னெண்ணவொணுன் றத்துவமெல் லாந்
தங்கியெலா மிஞ்சியுளன் முன்.

5. தத்துவங்க ளெல்லாமுந் தான்கடந்தோன் வாக்கோடு
சித்தமு நாமமுஞ் சேராதா—னத்த
னவனு னெனவிகற்ப மற்றசித் தத்தாற்
சிவசிந் தனையேநீ செய்.

6. என்றுமுள தாய்நிலையா யவ்வயமா யெவ்விகற்பு [யுள
மின்றியதா யின்னதென வெண்ணவொணு—தொன்றி
நிட்களமா ஞான மெதுதா னிகழுமுத
றிட்டாந்த மின்றியதாய்த் தேர்.

7. அடையாள மற்றழிவற் றுருமுப சாந்தம்
விடயங் கடந்தொளிர் வேத்ய—மடுக்காது
பாவனைக் கையம் படரா ததுவேநா
னுவனிதி லைய மிலை.

8. அந்தப் பரதெய்வ மாகுஞ் சிவனுனே
மந்திரங்கள் யாவின் மயனுமம்—மந்திரங்க
ளெல்லாங் கடந்தே யிலய சிருட்டிக
ளில்லா தவனுமா மே.

9. திருசியஞ் சூன்யந் திரஞ்சரமு மென்றுற்
பரவிடப் பட்டன வாமிச்—சருவமு
நானே யுலகத்தி னுதனெல் லாமென்றுற்
றுனே யிலகுவன தாம்.

10. விவித வுருவத்தால் வேறுவே றாய
புவன நிரைகள் பொருந்திச்—சிவமுத
லிவ்வுலக மீறா யிலகும் பிரபஞ்ச
மவ்வளவு மென்னினிற்ப வாம்.

11. எவ்வளவு காணப் படுபவோ விவ்வுலகி
லெவ்வளவு கேட்க வியைபவோ—வுள்வெளி
பற்றியொளிர் யாவும் பராவுமென் னாற்பரவ
லுற்றவை யாமவையென் றோர்.

12. ஆன்மாயா னென்னினு மப்பர மான்மாவாய்த்
தான்மேவ வுன்னுசிவன் றான்வேறு—மான்மேவி
யிவ்வா றுபாசிப்போ னெய்தான் சிவத்துவ
மவ்வாற்ற லாலென் றறி.

13. அன்னிய னாஞ்சிவ னன்னியனா னேயென்னும்
பின்னபா வத்தைப் பெயர்த்திடுக—வன்னசிவ
னாவன்யா னேயென்னு மத்துவித மாகுமிப்
பாவனையே யென்றும் பழகு.

14. அத்துவித பாவனையே யார்ந்தோனா யெவ்விடத்து
நித்தமு மான்மாவி னிற்குமவ—னத்தனையே
யெல்லாவற் றுந்தனுக்குள் யாவினுள் ளுங்காண்ப
னில்லைசந் தேக மிதில்.

15. ஏகமா மிவ்வான்ம பாவனையோ டென்றுமுளான்
மோக விகற்ப முனிந்தோனாம்—யோகிக்குச்
செவ்வேயெல் லாமுணர்தல் செப்பப்பட் டுள்ளதா
மவ்வேதந் தன்னி லறி.

16. சாத்திரங்கள் யாவற்றுஞ் சன்மமில னீசனென
வேத்திடப் பட்டா னெவனோவக்—காத்திரமில்
லான்குணமில் லானான்மா வாமவனே யாவேனே
யான்சிறிது மைய மிலை.

17. தன்மெய் யறியா தவனே சிருட்டிமுதற்
றன்ம முறுபசு தானவன்—றன்மெய்
யெவனறிவ னென்று மிருப்பான் விசுத்தன்
சிவனவனே யையமிலை தேர்.

18. அதனால் விவேகிக ளானோர்நன் காய்ந்து
நிதமறியத் தக்கதான் மாறே—ரதுவே
பரவபர பேதம் பருமையணு பேத
மிருவிதமு மாயிலகு மே.

19. பரமநிர் வாணம் பரமா மபரஞ்
சிருட்டி வகையாற் றிகழும்—பருமையா
மந்திரரூ பம்பகர்வர் சூக்கும மாரூத
சிந்தையி னின்றதாத் தேர்.

20. அஃதின்றி யாறு முகனே யனந்தவித
மெஃதுரைத்து மென்ன வியம்புதி—யஃது
வியக்கத் தகுஞ்சொல் விசித்திரமே புத்தி
மயக்கத்திற் கேது மதி.

21. தருமங்கள் யாவுமான் மாவின்கட் டங்கு
திருமிப்பன் யாது நினைப்பா—லொருமையா
புன்னிபுன்னி யென்றுமதை யுற்றிடுவ னஃததனை
யென்னுமிதி லைய மிலை.

22. இப்படி யான்மவிஞ் ஞானமென் றென்னுலே
செப்பிடப் பட்டது சேர்த்துருட்டி—யெப்படியு
மெல்லாமு மான்மமய மென்றோர்ந்தே யான்மசிந்தை
வல்லாறு யென்றுமே வாழ்.

23. தெய்வமோ வேதமோ தீயிற்செய் வேள்வியோ
செய்வகையிற் சேர்பலவாந் தட்சிணையோ—வெவ்வ
மங்கில்லை நின்மலமா யெங்குமுக மார்ந்ததாய்த் [கையு
தங்கான்ம விஞ்ஞானஞ் சார்.

24. மரணபவ சம்சார மாக்கடன் மூழ்கிச்
சரணநா டிச்சா ருயிர்க்குச்—சரண
மருள்வதவ் வான்மவிஞ் ஞானத்தை யன்றி
யொருபொருள்வே றின்றெனவே யோர்.

25. பரமாகி யப்பர மான்மாவை யாவ
னுரமாக வுள் ளபடி யோர்வ—னொருமுபல்வு
மின்றியவன் வீடுறுவ னெல்லா வவத்தைகளு
மொன்றிடுவ னேனு முணர்.

26. ஆன்மலா பத்தினு மன்னிய மாம்பேறு
தான்மற்றொன் றெங்குமே தானில்லை—யான்மாவை
யென்றுமுபா சித்திடுக விவ்வான்மா யாவனவ
னென்றுபர மான்மாவா மோர்.

27. அல்லி பிராண னபானனுமே யன்றவ்வா
றல்ல வவற்றின்மே லாங்கரண—மெல்லா
முணர்வதுவா யுள்ளபரி பூரணமா மான்ம
வெணநிதமு மெய்துவா யே.

28. அகத்தும் புறத்திலு மேயில்லை யஃது
மிகத்தூரத் தண்மையிலு மேவா—தகளமா
மந்தப் பரந்தாம மார்ந்தொளிரு மாங்கேநீ
சிந்தையை யென்றுஞ் செலுத்து.

29. குறுக்கொடுமேல் கீழிலுமே கூறுபடு முள்ளும்
புறத்திலு மெங்குமெப் போது—முறப்பெறுஞ்
சூனியமாய்த் தானே சொலிக்குமான் மாவையே
மேனிதமும் பாவனைசெய் மேல்

30. சூனியமு மல்ல வசூனியமு மலலதாஞ்
சூனிய மல்லதுமாஞ் சூனியமாந்—தானெங்கும்
பக்கபா தஞ்சற்றும் பற்றாத வான்மாவை
யெக்காலுஞ் சிந்தை யியற்று.

31. ஆமயமோ டாதார மற்றதாய் வர்ணமொடு
நாமரூ பங்களு நண்ணிடா—தாமந்
நிரஞ்சன நிர்க்குண வான்மாவை நீயு
நிரந்தர மாக நினை.

32. ஆசிரய மாலம்ப மற்றதாய் மானத்தாற்
கோசரமா காதுவமை கூறரிதாய்—மாசிலியல்
மன்னியதாய் நித்தியமாய் மன்னிய வான்மாவை
யுன்னிடுக நாளு முவந்து.

33. வினைகளெல் லாமுமெ விட்டு நிராசை
தனையுற்றுச் சங்கந் தணந்து—பினையென்றுந்
தன்னிலே தன்னாலே தன்னிலமர் தன்னையே
யுன்னிட வேண்டு முணர்.

34. தேயமொடு சாதி திகழ்வர்ண மாசிரம
மாய விவற்றை யனுசரித்து—மேயபல
சிந்தனைக ளெல்லாஞ் சிதைத்தறிஞன் றன்னுருவின்
சிந்தனையே செய்க தினம்.

35. இதுமந் திரமா மிதுவே தவதையா
மிதுவே தியான மெனலு—மிதுவே
தவமாகு மெண்ணங்க ளெல்லாந் தணந்து
சுவரூப சிந்தை துணி.

36. எண்ண மிலனுந்தா னெண்ணமோ டொன்றியதை
யெண்ணற் கிடனிலதாய்ச் செய்திடுக—வெண்ணு
மனதையான் மாவிலே மன்னச்செய் தொன்று
மனதா னினையற்க மற்று.

37. சிந்திக்கத் தக்கதல சிந்திக்கொண் ணாதல்ல
சிந்தை யலததுவே சிந்தையுமா—மெந்தவோர்
பக்கமுஞ் சாயாப் பரமான வான்மாவை
யெக்காலுஞ் சிந்தைசெய் யே.

38. சிந்தைசெய் வாய்தினமுஞ் சிந்தைக்கெட் டாததையே
சிந்தை நிராசிரயஞ் செய்தேநீ—யெந்தசுக
மத்தத்து வாதீத நிட்களா வான்மாவிற்
சித்தித் திடுமோ செறிந்து.

39. நிருவிகற்ப மாகி நினைக்கவொண் ணாதா
யொருமுதறிட் டாந்த முருதா—யொருவுவமை
யற்றத்தி யந்தமா மஃதுபரா னந்தமாய்ச்
சொற்றிடப் பெற்றததிற் றோய்.

40. விடயப்பற் றெல்லாமே விட்டு மனத்திற்
படரும் விருத்தி படுப்பா—யடையுமென்
றுன்மனி பாவமன் ருென்றும தேபரம
வின்ப மெனலாவ தே.

41. எத்திக்கு தேயமு மெல்லாக்கா லங்களுமே
யொத்ததுயோ கத்திற்கென் ருேதுநூ—லித்தனையு
ஞானத்திற் பேதமே நண்ணுவர் ணுசிரம
மானவிவற் ருலென் றறி.

42. பால்வண்ண மொன்று பசுக்கள் பலநிறங்கள்
பால்போலு ஞானமெனப் பார்த்திடுவர்—சால்புபல
லிங்கமுள வெல்லாம் பசுக்களை யேய்ந்தவே
யிங்கறிதிட் டாந்த மிது.

43. யாவினுமுற் றுப்பரவி யப்பிரம மெங்குமுக
மேவிய தாக மிளிர்வதா—லோவலற
வுன்மனத்தை யப்பிரமத் தூன்றியே தேயந்திக்
கென்னுமிவை யெண்ணிடா தே.

44. இப்புவியி லோர்குறியின் ருசிரமா சாரமிலை
யப்பரமான் மாவினிலை யார்க்கோனுக்—கப்புருடன்
செய்ததனு லொன்றில்லை செய்திடவு மொன்றில்லை
செய்யென் விதியுமிலை தேர்.

45. செல்லினு நிற்கினு நித்திரை செய்யினும்
புல்லினுஞ் சாக்கிரம் போசனநீர்—கொள்ளினுங்
காற்றுகுளிர் வெய்யிற் கலந்திடுங் காலுமெவ்
வாற்றினுமெக் காலத்து மற்று.

46. பயமும் வறுமைநோய் பற்றுசுர மந்த
மியைந்திடுங் காலத்து மேதுந்—தியங்கானே
யான்மநிட் டன்சாந்த ணர்நிட் களனாகி
யான்ம திருத்தன வான்.

47. போனாலும் வந்தாலும் போனவன் வந்தவனு
நானேகேன் போக்குவர னடினிலை—நானப்
பிரகிருதி தன்மாறப் பெற்றதரு மந்தோய்ந்
திருந்தோ னிருப்போ னலன்.

48. பிரகிருதி காரியமாங் கன்மங்கள் பேசும்
பிரகிருதி கன்மப் பிறப்பே—நிருமலன்
யானோர் செயலிலனென் றேயுக்த தத்துவவித்
தானே னனுசந்திப் பான்.

49. அவற்குப் பிரகிருதி யாற்பந்த மில்லை
யவன்முக்த னும மடைந்தா—னவன்முன்
பிரகிருதி காரியமாப் பேசுந்தோ டத்தா
லொருபொழுது மொட்ட லுறான்.

50. ஒளியா லிருளி னுருவ மொழித்து
விளக்கெவ் விதந்தான் விளங்கும்—விளக்கமி
லஞ்ஞானத் துண்டாகி யாரிருளை மாய்த்தொளிருஞ்
சுஞ்ஞான சோதியான் மா.

51. நெய்தீர்ந்த தீபந்தா னிர்வாண முற்றிடல்போன்
மெய்யான்ம சிந்தை விடாமலே—செய்யோகி
யான்மாவின் கண்ணேயே யார்ந்திருப்ப னான்மாவின்
மேன்மேவ வொன்றின்று மெய்.

52. குடங்கொண்டு போங்காற் குடத்துளா காய
முடன்செல்வ தாக வுணர்ந்துங்—குடந்தானே
சென்றிடுவ தாகாயஞ் செல்வதிலை யான்மாவு
நின்றிடுமே யாகாய நேர்.

53. குடமுடை யுங்காற் குடத்துளவா காய
முடன்மகா காயமோ டொன்றுஞ்—சடமா
முடலக லுங்கா லுடலுளவான் மாவு
முடன்பரமான் மாவா யுறும்.

54. என்றதி காரியா யெல்லா முணரீச
னன்றதிகா ரத்தொடிவ் வாறறைந்தான்—வென்றெல்லாப்
பந்தங்க ளின்வீடு பற்றினோன் முற்றுணர்வோ
டந்தமிலா தெங்குமுள னாம்.

55. ஆகமங்க ளெல்லா மறவிட் டமலான்ம
யோக சமாதியே யுற்றிதன்மே—லாகவய
லொன்றுமே யின்றெனு வோர்ந்தே மனவிகற்ப
மொன்று முறும லொழித்து.

56. விஞ்ஞான மிங்ஙன் விடாதுன்னி யோகிதா
னெஞ்ஞான்று மெய்துமுட லின்மையச்—சுஞ்ஞானி
யத்தரும தர்மி யகம்புறமு மார்முத்த
னைத்தலமு மேகுவனு மே.

57. முற்றுணர் வின்பமொடு மூதறிவு தன்வயம்
வற்றல் வரம்பில் வலியுமிவை—யுற்றென்று
மாறு நிராமய வான்மா வவன்சிவமே
சேரும் விசுத்தவுடல் சேர்ந்து.

58. நாமசெப மர்ச்சனை நன்னீரி லாடலு
மோமமுஞ் சாதனமற் றொன்றுமின்—றாமே
தருமாதர் மப்பலன்கள் பிண்டமொடு தண்ணீர்க்
கிரியைகளு மில்லையாங் கேள்.

59. இல்லை நியமங்க ளில்லையுப வாசமு
மில்லை பிரவிருத்தி யெவ்வகையு—மில்லை
நிவிருத்தி நேர்பிரம சாரி விரத
மவற்கில்லை யென்றே யறி.

60. அங்கிநீர் வீழ்வசல நின்றுவிழ லற்றுசிவ
துங்கனா ளமுதந் துய்த்துசிவ—அங்கனாய்
நித்தியனாய் நின்மலனாய் விட்டுச் சிருட்டிதன்மஞ்
சித்தம்போற் சஞ்சாரஞ் செய்.

61. சத்தியஞ் சத்தியஞ் சத்தியமென் றேமூன்று
சத்திய மிப்போது சாற்றினே—னுத்தமம்
மிக்க திதிலெங்கும் வேறெதுவு மேதெரியத்
தக்க திலேகுகனே தான்.

62. அமலனு மூடமதி யல்லனாய்ப் புத்தி
நிமலனாய் நின்மலான் மாவாய்—விமலமாம்
பாவத்தி னால்விமலம் பார்ப்பவெலா மென்றமலம்
பாவித்துப் பார்த்திடுவன் பார்.

**சர்வஞானோத்தாம்**

**ஆன்மசாட்சாத்காரப்பிரகரணம் முற்றிற்று.**



# தக்ஷிணாமூர்த்தி தோத்திரம்

## தாத்பர்யத்துடன்

### அவதாரிகை

உலக சிருஷ்டிகர்த்தரான பிரமதேவரின் மானசிக புத்திரரான சனகர், சனந்தனர், சனத்சுஜாதர், சனத்குமாரர் என்னும் நால்வரும் சகசிருட்டியாதி காரியங்கட்காகத் தாம் பிறப்பிக்கப்பட்டமையைப் பிதாவாற் கேட்டு அதில் விரக்தியுற்றவராய் உபசாந்தியையே நாடி, அதனைத் தெளிவிப்பாரைத் தேடி வரும் அதி தீவிர பக்குவர்களின் பொருட்டுப் பரம காருணிகஞன சாக்ஷாத் பரமேசுவரன் ஆலின் கீழ் தக்ஷிணாமூர்த்தமாக மௌனமாய்த் தன்னிலையிற் சின்முத்திரையோடிருக்கக் கண்டதும் காந்தங்கண்ட இரும்புபோற் கவரப்பட்டவரா யவ்வாறே யவரருகிற் றம் முண்மைநிலையி லமர்ந்தனர். அம்மோனமாந் தன்னிலை யுண்மையை யுணருஞ் சக்தியில்லா வுத்தம வதிகாரிகட்குத் தடையாய்க் காணப்படு முலகமாய், காண்பானாய், காட்டு மொளியாய் விரிந்தொடுங்குஞ் சக்தி தன்னையன்றி யின்மையின் 'எல்லாந் தன்மய' மென்னுஞ் சர்வாத்மத்துவத்தைத் தொகுத்து இத்தோத்திரத்தால் ஆசாரிய சங்கரர் அறிவிக்கலாயினர் :—

### மங்கலம்

மன்னுமா முனிவரர் சாந்தி மன்னவே
தென்முக மூர்த்தியாய்த் திகழ்ந்து மோனமாந்
தன்னிலை திகழ்த்தியித் துதியிற் றன்மயஞ்
சொன்னவச் சங்கரன் றுன்னு மென்னுளே.

## நூல்

### அறுசீராசிரிய விருத்தம்

மவுனமா முரையாற் காட்டு மாப்பிரம வத்து வாலன்
சிவநிலைத் தவர்சற் சீடர் செறிகுரு வரன்சிற் கைய
னுவகையோ ருருவன் றன்னு ளுவப்பவன் களிமு கத்த
னவனையாந் தென்பான் மூர்த்தி யப்பனை யேத்து வோமே.

(தாத்பர்யம்.) மௌனமாகிய வியாக்யானத்தாற்றெரிவித்த பரப்பிரம சொரூபனும், பாலனும், பிரம நிஷ்ட முனிகளான உத்தம சிஷ்யர்கள் சூழவிருக்கும் குரு சிரேஷ்டனும், சின்முத்திரைக் கையனும், ஆனந்த மூர்த்தியும், தன்னிலேயே ரமிப்பவனும், சந்தோஷ முகனும், ஆகிய பரமபிதாவான அந்த தக்ஷிணாமூர்த்தியை நாம் துதிப்போம்.

உலகுகண் ணாடி யூர்நே ருறத்தனு ளஞ்ஞா னத்தால்
வெளியினிற் றுயிற்க னப்போல் விளங்கிடக் கண்டு ஞான
நிலையுறு நேரந் தன்னை யொருவனு யெவனேர் காண்பன்
றலையுறு குருவா மந்த தக்ஷிணா மூர்த்தி போற்றி. 2

(தா-ம்.) உலகமானது கண்ணாடியிற் காணப்படும் பட்டணம்போலத் தனக்குள்ளாகவேயிருந்தும் தன் அறியாமையால், நித்திரையாற் கனவுபோல வெளியிலிருப்பதாகப் பார்த்து (விழித்ததும் தன்னையே காண்பதுபோலத்) தன்னை யறியும் போது தானொருவனே யிருப்பதாக யார் பார்க்கின்றானோ, ஆதிகுருவான அந்த தக்ஷிணாமூர்த்திக்கு நமஸ்காரம்.

வித்துளே முளைபோன் முன்னம் விகற்பமி லிச்ச கம்பின்
கற்பித மாயா தேய காலகர் மத்தாற் பற்பல்
சித்திரம் விரிப்பன் யாவன் சித்தனு மாயி கன்போற்
சத்தியாற் குருவா மந்த தக்ஷிணா மூர்த்தி போற்றி. 3

(தா-ம்.) முன்பு விதைக்குள் முளைபோலத் தனக்குள் வேற்றுமையின்றி யிருந்த விவ்வுலகத்தைப் பின்பு, மாயையாற்

பொய்யாய்த் தோற்றும் தேச கால கர்மவசத்தா லனேக விசித்திரமாக சித்தனையும், ஜாலக்காரனையும் போலத் தன் இச்சை (சக்தி) யால் எவன் வெளியில் விரிக்கின்றானோ, அந்த தக்ஷிணாமூர்த்தி குருவுக்கு நமஸ்காரம்.

எவனொளி யுண்மை யின்மை யினையபொரு ளிலங்கு நேரே
யெவனது நீயா னாயென் றிசைத்துணர்த் துவன்சேர்ந் தோரை
யெவனைநேர் காணின் மீண்டு மிப்பவக் கடல்வீழ் வில்லை
தவருறு குருவா மந்த தக்ஷிணா மூர்த்தி போற்றி. 4

(தா-ம்.) எவனது உண்மைப் பிரகாசமே பொய்யாய்த் தோற்றும் பொருள்களில் விளங்குகிறதோ, எவன் தன்னை யடுத்தவர்களை 'தத்துவமஸி' (தத்—அது, துவம்—நீ, அஸி—ஆனாய்) என்னும் வேதவாக்கால் நேராக அறிவிக்கின்றானோ, எவனைப் பிரத்தியட்சமாய்க் கண்டாற் பின்னுமிச் சம்சார சாகரத்திற் படிவதில்லையோ, தவத்தினரடையும் அந்த குரு தக்ஷிணாமூர்த்திக்கு நமஸ்காரம்.

பலதுளைக் குடத்துட் டீபப் பாய்கதிர் போல்யார் ஞானம்
விழிமுதற் பொறிவாய்ப் பாய்ந்து வெளிசரித் தறிந்தேனென்ன
விளங்கிடு மெவனைச் சார்ந்து விளங்குமிவ் வவனி யாவுஞ்
சலமறு குருவா மந்த தக்ஷிணா மூர்த்தி போற்றி. 5

(தா-ம்.) அனேக துவாரமுள்ள குடத்தினுள்ளிருக்கும் தீபப்பிரகாசம் போல எவனது ஞானம் கண் முதலான இந்திரிய வழியாய் வெளிப்பட்டு விளக்க, 'நான் அறிகிறே' னென்பதாக சுயம்பிரகாசனான எவனை அனுசரித்தே இந்த ஜகமெல்லாம் பிரகாசிக்கின்றதோ, அந்த சலன மில்லாத தக்ஷிணாமூர்த்தி குருவுக்கு நமஸ்காரம்.

உடலுயிர் பொறிகள் புந்தி யொன்றுபா ழுகமாத் தேர்வார்
மடந்தையர் பால ரந்தர் மடையரேய் மூட வாதி
மடமையால் விளையு மம்மா மயக்கமே மாய்க்கு ஞானத்
தடையறு குருவா மந்த தக்ஷிணா மூர்த்தி போற்றி. 6

(தா-ம்.) தேகம், பிராணன், இந்திரியங்கள், புத்தி, இவை யொடுங்கின சூன்யம், இவற்றையே தானாக, பெண்டுகள், குழந்தைகள், குருடர் சடர்போல வுணரும் மூடவாதிகளது உண்மை யறிவின்மையா லுண்டான அப்பெரு மயக்கத்தைப் போக்கும் மயக்கமில் ஞான குருவான அந்த தக்ஷிணா மூர்த்திக்கு நமஸ்காரம்.

இராகுபற் றிரவி திங்க ளெனவுளன் மாயை மூடப்
பராவுள மொடுங்கத் தூங்கிப் பரவிட வுணருங் காலம்
புராவுறங் கினனா னென்று போதனா மெவன்பு மானாய்ச்
சராசர குருவா மந்த தக்ஷிணா மூர்த்தி போற்றி. 7

(தா-ம்.) ராகுவாற் பிடிபட்ட சூரிய சந்திரர்போல் எப்பொழுதுமுள்ள எவன், மாயையின் மறைப்பாற் புருட (ஜீவ) னாய், விரிந்தமன மொடுங்கும்போது தூங்கி, மனம் விரிந்து விழிக்கும்போது முன் தூங்கினேனென்று தனது இருப்பை யுணர்கின்றானோ, அந்த சராசர சற்குருவான தக்ஷிணா மூர்த்திக்கு நமஸ்காரம்.

குழவிமுன் னனவு முன்னாக் கூறுபல் லவத்தை யெல்லாஞ்
சுழலினுங் கலந்தி ருந்தே சொலிக்குமுள் ளகமா நாளுங்
கழல்விழு வோர்க்கார் தன்னைக் காட்டுவன் சிற்கு றிப்பாற்
றழல்விழிக் குருவா மந்த தக்ஷிணா மூர்த்தி போற்றி. 8

(தா-ம்.) குழந்தைப்பருவ முதலனவும், நனவு முதலனவும், மற்றும் எல்லா வவத்தைகளும் மாறி மாறி வரினும், மாறாமற் கலந்திருந்து உள்ளே 'நான்' என்பதாக எப்போதும் பிரகாசிக்குந் தன்னை, சரணமடைந்தவர்கட்குச் சின்முத்திரையா லெவன் விளக்குகின்றானோ, ஞானக்கினி நேத்திரனான அந்த தக்ஷிணா மூர்த்தி குருவுக்கு நமஸ்காரம்.

உலகையா ரிப்பு மானோக் குறும்பல நனக்க னாவிற்
கலங்கியே மாயை யாலே காரிய கார ணம்பின்

றலைவனுந் தாசன் சீடன் குருமகன் றந்தை யாதி
தலமுறு குருவா மந்த தக்ஷிணா மூர்த்தி போற்றி. 9

(தா-ம்.) உலகத்தை, காரியம் காரணம், தலைவன் (உரியவன்) தாஸன் (உரிமை), சீடன் குரு, மகன் பிதா முதலிய பேதங்களாக மாயையால் மயங்கி, நனவிலும் கனவிலும் காண்கின்ற இப்புருடனெவனோ, உலக குருவான அந்த தக்ஷிணாமூர்த்திக்கு நமஸ்காரம்.

மண்புன லனல்கால் வான மதிகதி ரோன்பு மானு
மென்றொளிர் சராச ரஞ்சே ரிதுவெவ னெட்டு மூர்த்த
மெண்ணுவார்க் கிறைநி றைந்தோ னெவனினன் னியஞ்சற்
[றின்றாந்
தண்ணருட் குருவா மந்த தக்ஷிணா மூர்த்தி போற்றி. 10

(தா-ம்.) பூமி, ஜலம், நெருப்பு, காற்று, ஆகாசம், சூரியன், சந்திரன், புருடன் என்று சராசரமாய்த் தோற்றுமிது எவனது அஷ்டமூர்த்தமோ, விசாரிப்பார்க்கு பரனாய் எங்கும் நிறைந்த எவனைக்காட்டிலும் அன்னியஞ்சிறிதுமில்லையோ, அவ்வதிசாந்த கிருபா மூர்த்தியான தக்ஷிணாமூர்த்தி குருவுக்கு நமஸ்காரம்.

சருவமுந் தானா நன்றாய்ச் சாற்றுமித் தோத்தி ரத்தின்
சிரவணந் தன்னா லர்த்த சிந்தனந் தியானங் கானம்
புரிவதா லெல்லாந் தானும் பூதிசே ரீசன் றன்மை
மருவிடு மற்று மெட்டா மடிவறு செல்வந் தானே. 11

(தா-ம்.) சர்வாத்மத்வத்தை (எல்லாம் தானாதலை)த் தெளிவாய்த் தெரிவித்த இத்துதியைக் கேட்டல், பொருளை விசாரித்தல், அப்பொருளைத் தியானித்தல், துதித்தல் செய்தலால் சர்வாத்மத்வ மஹா சம்பத்துள்ள ஈச்வரத்வம் சித்தியாவதோடு சாசுவதமான அணிமாதி அஷ்டைச்வரியமும் தானே சித்திக்கும்.

தக்ஷிணாமூர்த்திஸ்தோத்திரம்
முற்றும்.

ஸ்ரீ

# குருஸ்துதி

---

## அவதாரிகை

ஸ்ரீ ஜகத்குரு சங்கரர் திக்விஜயஞ் செய்யத் தொடங்கி வட திசைக்கண் விளங்கும் மாகிஷ்மதி நகரத்து வசிக்கும் கர்ம காண்டப் பிரவர்த்தகரான மண்டனபண்டிதரை வாதத்தில் ஜயிக்க, அவரது பார்யை 'என்னையும் ஜயிக்கினன்றி ஜயம் முற்றுறாது' என்றுரைத்து அவருடன் வாதித்துத் தோற்றுப் பின் காம சாஸ்திரத்தில் வாதிக்க, அதற்கவர் ஒருமாத காலவரையறை கூறி யோர் மலைக்குகையில் சீடர் காவலில் தம்சரீரத்தை வைத்து, மரித்த அமருகராசனுடற் புகுந்து அவனது மனைவியரான நூற்றுவருடன் கலந்து காமபோக மனுபவித்துக் கொண்டிருக்கையில், குரு கூறிப்போன காலங் கடந்தமையாற் கவலையுற்றுச் சீடரிற் சிலர் பாடகவேடந் தரித்துச்சென் றவ்வரசன் முன்னின் றித்தோத்திரத்தா லேத்தலாயினர்.

1. நேதிநே தியாதி வாக்கா னிடேதித்து மூர்த்தா மூர்த்த
மேதுமே தள்ளற் கில்லா வெதைச்சுவ சொரூப மாக
வோதருஞ் சாது வானோ ருள்ளத்திற் கொள்ளு வார்க
ளாதிமெய் யறிவா னந்த வவ்வத்து வன்றோ நீதான்.

2. உத்தியாங் குத்தி ஞலே யுமியெனு மைந்து கோசம்
புத்தியாற் பிரித்துப் பின்னர்ப் பொருந்திடு மரிசி போலு
மெத்தினைச் சத்துக் கள்கண் டிதயத்தி லனுப விப்ப
ரத்தமி ளித்த சித்த வவ்வத்து வன்றோ நீதான்.

3. பொறிகளாம் பரிக டம்மைப் புலன்களில் விளங்குந் தோட
வறிவெனுங் கசைய டித்தே யகமுகக் கயிற்றா லீர்த்தவ்
வறிவறி யறிஞ ரெத்தி லணைத்தொன்றாப் பிணித்தி ருப்ப
ரறிபொருட் கதீத மான வவ்வத்து வன்றோ நீதான்.

4. பூக்களி னின்று வேருய்ப் பொருந்திடுஞ் சூத்தி ரம்போற்
சாக்கிர மாதி யான சருவத்தும் வேற தான
சாக்கியா நோக்கி யாதைச் சத்துக்க ளகத்த ணைவ
ராக்கமு நீக்க மில்லா வவ்வத்து வன்றோ நீதான்.

5. கடகமகு டாதி யாவுங் கனகமே யாகு மாபோற்
சடசித்தா முலகம் யாவுஞ் சற்றுமே பின்ன மின்றிச்
சுடருமவ் வடிவா யென்று சொற்றிடும் வேதம் யாதை
யடிநடு முடிவில் லாத வவ்வத்து வன்றோ நீதான்.

6. இனனிலித் தனுவில் யானு யிலங்குவ னேக னேயென்
றனிசமும் வேத வாதி யாயினோர் முயற்சி யோடு
மினிமையா யெடுத்து ரைப்ப ரெத்தத்து வத்தை நன்று
யனர்த்தமி லெதார்த்த மான வவ்வத்து வன்றோ நீதான்.

7. அருமறை வாக்கி னுலே யகத்தினிற் சிரத்தை யோடு
மருந்தவம் யாகந் தான மாதிநல் லறங்க ளாலே
யருமறை யவர்க ளெத்தை யறிந்திட வவாவு கின்று
ரருமறைப் பொருளாய் நின்ற வவ்வத்து வன்றோ நீதான்.

8. சாந்திமுத லான வுற்றுச் சந்ததந் தன்னுற் றன்னி
லாய்ந்தெதை யறிஞர் கண்டவ் வறிவின்ப மெய்யா யென்று
மீந்தெலா முடித்தொ ளிர்வர் மிகுபவக் கேத நீத்தே
யாழ்ந்தறி தத்வ மான வவ்வத்து வன்றோ நீதான்.

இதனைக்கேட் டாசார்ய ரவர்க் குத்தரவுகொடுத் தனுப்பி விட் டெனவ் வரசனுடல் விட்டுத் தம்முடற் புக்குச் சென் றவ் வம்மையை வென்று அவ்விருவரையுந் தமக்குள்ளாக்கி யிக்குவ லய முற்றும் விளக்க முற்றனர்.

குருஸ்துதி ஸம்பூர்ணம்.

ஸ்ரீ

# அத்தாமலகம்

---

## அவதாரிகை

ஸ்ரீ சங்கர ஜகத்குரு மேற்கு திக்கில் விஜயஞ் செய்யுங்கால், அங்குள்ள ஸ்ரீவலியென்னுங் கிராமத்து வசிக்கும் பிரபாகரர் என்னு மந்தணர் ஆசார்யரது வரவை யறிந்து தம் பதின்மூன்று வயதுள்ள புத்திரனை யழைத்துச் சென்று குரு சந்நிதியில் நமஸ்கரித்து எழுந்து நின்று தநயனையும் நமஸ்கரிப்பித்து சிறுவயது முதல் மூகனாய் ஒன்றிலும் பிரவிருத்தியற்று விருப்பு வெறுப்பு, மானவமான மின்றி யிருக்குமவன் வரலாற்றைச் சொல்ல, கிடந்தவண்ணமிருந்த பாலனைத் தேசிகர் கரங்களாலெடுத்துப் பார்த்துக் களிமீக்கூர இவ்வாறு வினவலாயினர் :—

1. இங்குறு நீயார் பிள்ளாய் யாருடை மைந்த னீதா
னெங்குசெல் கின்ற யுன்பே ரென்னநீ யெங்கி ருந்து
மிங்குவந் தனையென் னுள்ள மின்புற விசைப்பா யென்று
சங்கர னவிலப் பாலன் சாற்றிட வாய்தி றந்தான்.

## அத்தாமலக னுத்தரம் :—

2. நரனலன் சுரனி யக்க னலனந்த ணன்மற்
றரசனும் வணிகன் சூத்ர னல்லனற் பிரம சாரி
கிரகியும் வானப் ரத்தன் கேடகல் சந்நி யாசி
நிரையினி லாரு மல்லே னிசபோத வடிவ னாமே.

3. சூரியன் சகத்தொ ழிற்குச் சொற்றிடு நிமித்த மென்ன
வாருளஞ் சட்சு வாதி யாட்டத்திற் கேது வாவ
னூரெலா வுபாதி யும்விட் டாகாயம் போலி ருப்ப
னோரிய னித்த சித்த வுருவனா மவ்வான் மாநான்.

4. எரியது வெம்மை போல வெவனித்த போத ரூப
னொருவனுய்க்கம்ப மின்றி யொளிர்தரு மெவனைச்சார்ந்தே
மறிவிலாக் கரண மிந்தி யாதிதந் தொழின்மேற் செல்லு
மறிவுரு நித்த சித்த ஞயுள வவ்வான் மாநான்.

5. அத்தத்திற் பதிப லித்த வம்முக முகத்தின் வேறோர்
வத்துவன் றதுபோற் புத்தி வருசிதா பாச சீவன்
சித்துரு வெவன்வே றூகச் சிறிதுமோர் வத்து வாகா
னத்வய நித்த சித்த ஞயுள வவ்வான் மாநான்.

6. அத்தமே யில்லை யாகி லம்முகா பாச மின்று
வத்துவா யுற்ற தேக வதனமே விகற்ப மின்றி
புத்தியற் றிடவே யாவன் பொலிவனு பாச மின்றி
யத்திற நித்த சித்த ஞயுள வவ்வான் மாநான்.

7. மனச்சட்சு வாதி யோடு மருவிடா திருப்பன் யாவன்
மனச்சட்சு வாதி கட்கு மனச்சட்சு வாதி யாவன்
மனச்சட்சு வாதி யாலே மருவிடப் படாதான் யாவ
னனித்தமி னித்த சித்த ஞயுள வவ்வான் மாநான்.

8. கடசலந் தோறுந் தோன்றுங் கதிரவ னொருவ னேபோ
லுடலுறு முள்ளந் தோறு மொளிரினு நானு வாகச்
சுடருவ னொருவன் றூனே சுத்தசே தனனு யாவ
னடைதலி னித்த சித்த ஞயுள வவ்வான் மாநான்.

9. ஒளியதா மனேகங் கண்கட் கொருரவி யொருகா லத்தே
யொளிசெயு முலகத் தைப்போ லொருஞான வுருவன் யாவ
னொளியதா யனேகம் புத்திக் கொளிர்ப்பனிவ் வுலகந் தன்
யளவிலா நித்த சித்த ஞயுள வவ்வான் மாநான். [-னோ

10. இரவியா லொளிருங் கண்ணே யெதிருறு முருவம் பற்று
மிரவியா லொளிரா தின்று மிதுபோலவ் விரவி தானு
மொருவனு ரொளியி னாலே யொளிர்ப்பனோ நேத்தி ராதி
யருவனாய் நித்த சித்த னுயுள வவ்வான் மாநான்.

11. சலசலத் தனேகன் போலச் சாருவ னேக பானு
சலனமில் சலத்திற் றனே சாருவ னேக னாக
சலமதி யனேகன் போலச் சாரினு மேகன் யாவ
னலைதலி னித்த சித்த னுயுள வவ்வான் மாநான்.

12. மூடன்றன் விழியி னைக்கார் மூடிட வதால ருக்கன்
மூடுபட் டொளியற் றானு முன்னுதல் போல யாவன்
மூடனின் பார்வை யாலே முற்றுமே பெத்தன் போல்வ
னுடலி னித்த சித்த னுயுள வவ்வான் மாநான்.

13. அகிலவத் துக்க டம்மி லனுகூத னேக னுகி
யகிலவத் துக்க டம்மி லசங்கனு யிருப்பன் யாவன்
ககனநேர் நித்த சித்த களங்கமி லுருவன் யாவ
னகமிலா நித்த சித்த னுயுள வவ்வான் மாநான்.

14. பலவித வுபாதி யாலே பலவிதம் படிகந் தோன்றும்
பலவித புத்தி யாலே பலவித முனக்கு மாகுஞ்
சலமதி னிலவி னுட்டஞ் சான்றுகப் பூன்ற னேயச்
சலமுறு புத்தி யாலே சஞ்சல நினக்கு மாமே,

15. அத்தத்தி னெல்லி போல வான்மாவைக் காட்ட லாலி
தத்தா மலகத் தோத்ர மாகும்பேர் பெற்ற தன்றி
யத்தா மலக னென்றவ் வறிவினிற் பெரிய பால
னித்தரை யாவ ராலு மேத்திடப் பட்டா னம்மா.

இதனைக்கேட் டாச்சரியத்தாற் றம்மை மறந்து நிற்கும் பிதாவை யாசாரியர்நோக்கி, 'இவன் முற்றவக் குறையாலுமக்கு மகனுன துமது பாக்கியமே. இகத்தில் இவனு லுமக்கோர் பிரயோசனமுமிராது. நம்பாலிருக்கட்டும்' என்றுரைத் தவரை யனுப்பிவிட்டுத் தம்முடன் பாலனைக் கூட்டிச்சென்றனர். பின்னர் குருவைப் பார்த்து, 'இச்சிறுவன் சிரவணதிசாதன மின்றி யிப்பிரஹ்ம நிஷ்டையடையக் காரணம்யா'தென்று சீடர் வினவ, குரு, 'இவன் தாய் முன் யமுநாதீரத்திற் றவஞ்செய்யும் சர்வைசுவரிய சம்பந்ந சாதுவான சித்தயோகியிடம் தன்னிருவயதுள்ள குழந்தையை விட்டு மற்ற ஸதிரீகளுடன் ஸ்நானஞ்செய்கையில் சிசு மெல்ல நடந்துபோ யந்நதியில் வீழ்ந்திறக்க அதற்காற்ருது துக்கிக்கு மவரைத் தேற்றக் கருணைமிகுதியா லச்சாது தம்முடலை விட்டச் சிசுவுடலிற் புக வதனுலேயே இப்பெரும்பேறு பெற்றனன்' என்று புகன்றனர்.

அத்தாமலகம் ஸம்பூர்ணம்.

# அநுவாத நூன்மாலை

## II. வசனம்.



ஸ்ரீ சங்கராசாரிய ஸ்வாமிகள்

ஓம்

பரப்பிரஹ்மணேநம :

ஸ்ரீ

பகவத்பூஜ்யபாத சங்கரஜகத்குரு அருளிய

# விவேகசூடாமணி

## அவதாரிகை

உலகத்தில் எல்லா ஜீவர்களும் துக்கமென்ப தின்றி எப்போதும் சுகமா யிருக்கவேண்டுமென, தன் சுபாவமல்லாத ரோகாதிகளை நீக்கி எப்போதும்போற் சுகமாயிருக்க வேண்டு மென்பதுபோலக் கோருதலானும், யாவர்க்கும் தன்னிடத்திலேயே அத்தியந்தம் பிரீதி யிருப்பதானும், பிரியம் சுகத்திலன்றி யுண்டாகாததாலும், நித்திரையில் ஒன்று மின்றியே சுகமாயிருக்கு மனுபவத்தாலும் சுகமென்பது தானகவே யிருக்க, தன்னையறியாத அஞ்ஞானத்தாலேயே அபாரசம்சாரத்தி லுழன்று, சுகந்தரும் மார்க்கம் விட்டு, இகபர போகமடைதலே சுகவழியெனப் பிரவிருத்திக்கின்றனர். ஆனுல் துக்கமற்றசுகங் கிடைக்கிறதில்லை. இதன் நேர்வழி காட்டவே சாக்ஷாத் ஸ்ரீ சங்கரர் சங்கர வேஷம் பூண்டு இச்சகத்தின் பெருமையைக்கீர்த்திக்கும் வேதாந்தத்தின் பிரஸ்தானத் திரயத்திற்கும் பாஷ்யஞ்செய்து வழி காட்டி நடந்துங்காட்டினர். அவற்றைப் பார்த்தலி லசமர்த்தராய் அதி தீவிர சுகேச்சுக்களான முமுக்ஷுக்களுக் கவை பயன்படாமையின், அவற்றினந்தரங்கத்தை இந்த விவேக

சூடாமணிக் கிரந்தத்தால் வெளிப்படுத்தி முமுக்ஷுக்களுக்கு வேண்டிய விஷயங்களை விஸ்தாரமாய்க் கூறி நேர்மார்க்கங் காட்டி யிருக்கின்றனர்.

இதில், மனுஷ்ய ஜன்மங் கிடைப்பது துர்லப மென்றும், அதனால் தன் சுபாவ மோக்ஷானந்த மடையப் பிரயத்தனஞ் செய்யவேண்டு மென்றும், ஞானத்தாலேயே மோக்ஷ மென்றும், ஞானம் விசாரத்தாலேயே வரு மென்றும், அதற்குக் குருவை யடையவேண்டு மென்று குரு லக்ஷணம், சிஷ்யலக்ஷணம், குருசேவையையுங் கூறிப் பின்னும், சுகமடையத் தன் பிரயத்தனமே முக்கியமென்றும், வாங்மாத்திர ஞானத்தாற் சுகங் கிடையாதென்றும், சிரவணாதி விசாரமே மோக்ஷசாதன மென்று மாரம்பித்து, சரீரத் திரயமும் அநாத்மா, அசத்தியம்; 'அகம்' எனும் ஆத்மா அவைக்கு விலக்ஷணம். அநாத்மாவில் ஆத்ம புத்தி பந்தம், அஞ்ஞானத்தால் வந்தது, ஞானத்தால் நாசமாம் என்று சிரவணத்தையும்; நானார்? என அகத்திற் செய்யும் சூக்ஷ்ம விசாரத்தால் அச்சரீரத்திரயமான பஞ்ச கோசங்களையும் நானன் றெனத்தள்ளி இவைகட்கு விலக்ஷணமாய் ஏகமாய், ஹிருதயத்தில் 'அஹம்' என்றிருக்கும் த்வம் பதார்த்தமான ஆத்மாவை, முஞ்சம்புல்லினுள் ளாணியைப் போலப் பிரித்துக்காணும் மனனத்தையும்; 'தத்' பத உபாதியான நாம ரூபப் பிரபஞ்சம் பிரஹ்ம மாத்ரமென அவ்வுபாதி நீக்கத்தையும்; 'தத்' பதார்த்தத்தையும்; அவ்விரு பதார்த்தங்களான ஆத்ம பர ஐக்கியத்தைத் தெரிவிக்கும் "தத்துவமஸி" மஹா வாக்கிய உபதேசத்தையும்; இந்த 'அகம் பிரஹ்ம' மா யிருக்கவேண்டு மென்பதையும்; அங்ஙனமிருக்கினும் பூர்வ வாசனைகள்

அதிஷ்டானமா யுதித்துத் தடைசெய்யு மென்று, வாசனாத்திரயம், மூலமான அகங்காரவாசனை, இதன் விருத்திக் கேதுவான பேதபாஹ்ய வாசனை, இவற்றிற் கேதுவான விக்ஷேப ஆவரண சக்திகளையும்; இவை நீங்கும்வரை மனதை யிதயத்திருத்தி நிரந்தரம் பிரமாதமின்றிச் செய்யும் 'அஹம் பிரஹ்மம்' 'பிரஹ்மமே அஹம்' என்னும் சஜாதீய சத்திய ஆன்மாகார விருத்தியைக் கிளப்புதலாகிய பக்தி, யோகம், தியான மென்னப்பட்ட ஆத்மானு சந்தானமாகிற நிதித்யாசனத்தையும்; இங்ஙனம் ஹிருதயத்தில் மனம் எனும் மத்தை நட்டு, அரணி தயிரிவற்றில், அக்கினி வெண்ணெய்களை வெளிப்படுத்துவது போலப் பிரமாத மின்றித் தைலதாரைபோல் நிரந்தரஞ்செய்யும் பிரஹ்மாப்யாச மதன பலத்தா லாவிர்ப்பவிக்கும் சஹஜ நிர்விகற்ப சமாதியால் பிரயத்தன மின்றியே அகம் புறமெங்கும் எல்லாக் காலமும் ஏகமாய்ப் பிரகாசிக்கும் அப்பிரதிபந்த அபரோக்ஷப் பிரஹ்மசாக்ஷாத்கார ஞானனுபவம் ஸித்தியாகும். அதனால் அஞ்ஞான வாசனா ஹிருதயக் கிரந்தியும், ஸம்சயங்களும், கர்மங்களும் நாசமடையும். அகண்டானந்த முத்தி சித்தியாம் என்று சாதனத்தோடு சமாதியையும்; இதில் பேத விகற்பங்க ளணுவுமில்லை யென்பதையும்; இதனை யடைதலே புருஷார்த்தம்; இதனை யடைந்தவனே ஜீவன் முக்தன் பரோக்ஷ ஞானியன்று என்று ஜீவன் முக்தன் லக்ஷணம், அவனது கர்மத்திரய நிவிருத்தி, இந்நிலை யடைந்த சிஷ்யனது ஸ்வானுபவம், ஜீவன்முக்தனது யதேச்சாசரணம், அவனடையும் விதேக கைவல்யம், புனராவிருத்தியின்மை என்பவற்றால் இருவித முக்தியான சாக்ஷாத்காரத்தையும்; இவற்றை யனுசரித்த அனேக விஷயங்களையும் குரு சிஷ்ய

சம்வாதமாய்க் கூறியிருக்கின்றனர். இஃது பிரஹ்மஸ்ரீ பிக்ஷு சாஸ்திரிகளால் தமிழ்க்கவிகளாக முன்னமே மொழி பெயர்க்கப்பட்டிருக்கின்றது. நானு வர்ணத்தோ டனேக ரூபங்களாகச் செய்து வைத்திருக்கும் ஒரே மிட்டாயில் அவ ரவர்க் கிஷ்டமானதை வாங்கிக் குணதோஷம் பாராதுண்டு அவ்வொரே மிட்டாயின் ரஸத்தை விவேகிக ளனுபவித்து சுகிக்கின்றனரல்லவா !

## மங்கலம்

அகமெனு மூல வவித்தை யகன்றிட
வகமக மாக வல்லும் பகலற
வகமொளி ராத்ம தேவன் பதத்தினி
லகமகிழ் வாக வணிசம் ரமிக்கவே.

## குருஸ்துதி

அதி தீவிர மோக்ஷாதிகாரிகள் கஷ்டப்படாமல் சுலப மாகத்தானே யறிந்து அமிர்தத்வத்தை யடையத் தயை யினுல் வேதாந்தார்த்தங்களின் ஹிருதயத்தை விஸ்தாரமா யிவ் விவேகசூடாமணி கிரந்தத்தால் வெளிப்படுத்தி சிவ சொரூபமாய்ப் பிரகாசிக்கும் ஜகத்குரு ஸ்ரீமத் சங்கரபகவத் பாத சரணாரவிந்தங்களில் என் ஹிருதயாரவிந்தத்தை யென்றும் ஸமர்ப்பிக்கின்றேன்.

## நூல்

ஸகல வேதாந்த ஸித்தாந்தத்திற்கே கோசரராயும் இத ரப் பிரமாணங்களா லறியப்படாதவராயும் விளங்கும் பரமா னந்தமய ஸ்ரீ கோவிந்த சத்குருவுக்கு நமஸ்காரம்.

ஜீவர்களுக்கு மனுஷ்ய ஜன்மங் கிடைப்பதே வெகு துர் லபம். அதில் புருஷனாய்ப் பிறத்தலும், அதிலும் பிராஹ்மணனாதலும், அதனில் வேதமோதும் வைதிகதர்ம மார்க்கத்தில் நடத்தலும், அதனிலும் வித்வானாதலும், அதனில் ஆத்மானாத்ம விசாரம் பிறத்தலும், அதனிலும் ஸ்வானுபவ ஜ்ஞானமடைதலும் மிகவருமை. அந்த ஞானத்தால் பிரஹ்மாகாரமாக விருக்கும் மோக்ஷமானது அனந்தகோடி ஜன்மாந்தரங்களிற் செய்த சுகிர்தங்களா லன்றிக் கிடையாது. இவைக ளெல்லாவற்றையுங் கிரமமா யடையாவிடினும் ஈசுவரானுக்கிரக காரணமாய் அருமையான மனுஷ்யத்வம், முமுக்ஷுத்வம், மகாத்மாக்களின் சங்கம் என்னும் இம்மூன்றுங் கிடைக்கின் மோக்ஷமடைய இதுவே போதும்.

எத்தவத்தாலோ! கிடைத்தற்கரிய மனுஷ்ய தேகம் பெற்று சுருதியி னர்த்தங்களை யறிவதற் கேதுவான புருஷத்துவ மடைந்தும் அசத்தான தேகாதிகளி லபிமானத்தால் தன்மயமான சாசுவத மோக்ஷத்தை யடைதற்கு எத்தனஞ் செய்யாத மூடன் ஆத்மஹத்தி (தற்கொலை) செய்தவனாவான். தன்னிதத்தை நாடாத அவனினும் மூடாத்மா எவனிருக்கின்றனன்.

சாஸ்திரங்கள் படித்தாலும், தேவபூஜை பண்ணினாலும், கர்மங்கள் அனுஷ்டித்தாலும், தேவதைகளை யுபாசித்தாலும், இன்னு மென்ன செய்தாலும் பிரஹ்மாத்மைக்கியஞானத்தாலன்றி எத்தனை கோடி கற்பங்களாயினும் முக்தி சித்தியாது. 'தனத்தினால் (தனத்தாற் செய்யப்படுங் கர்மத்தால்) மோக்ஷ ஆசையே யில்லை' என்னுஞ் சுருதி கர்மங்கள் மோக்ஷகாரண மன்று என்று நன்றாய்க் கூறியிருத்தலால், மோக்ஷமடைய விச்சிக்குந் தீரன் பாஹ்ய விஷயசுகங்களி

லாசையை முற்றுந் துறந்து, மகாத்மாவாய் சாந்தரா யுள்ள ஸத்குருவை யடைந்து அவருபதேசித்த பொருளில் மனதை நிறுத்திச் சந்ததம் தியானிக்கும் யோகத்தா லடைந்த அனுபவஜ்ஞான நிஷ்டையாகும் கப்பலால் சம்சார சமுத்திரத்தில் மூழ்கிக் கிடக்குந் தன்னைத் தான்றானே மோக்ஷமாகின்ற கரையின்மே லேற்றிக்கொள்ள வேண்டும். ஆதலால் தைரிய சாலியாயுள்ளவன் தார புத்திர தன மென்னு மீஷணாத்திரயத்தை நீக்கி, கர்மங்க ளனைத்தையுந் தூரத் தள்ளி, ஜனன மரண சம்சாரபந்தம் நீங்கி மோக்ஷமடைதற்கே பிரயத்தனம் பண்ணவேண்டும். கர்மங்கள் சித்தசுத்திக்காக ஏற்பட்டனவே யன்றி வஸ்துவை யறிதற்கன்று. வஸ்துஞானம் விசாரத்தால் வருமேயன்றிக் கோடி கர்மங்களாலும் சித்திக்காது. ரஜ்ஜுவில் ஸர்ப்பத்தைக் கண்டு பிரமித்தோனுக்கு அப்பிராந்தியா லுண்டான சர்ப்ப பயத்தையும், அதனால் வந்த துன்பத்தையும் நிவிருத்திக்கும்படியான 'இது ரஜ்ஜுதான்' என்னும் ரஜ்ஜுஞானம் எங்ஙனம், அறிந்த ஆப்தன் சொல்லினாலும், நன்றாய் விசாரித்தலாலும் வருகின்றதோ, மற்ற எதனாலும் வரவில்லையோ, அங்ஙனமே குரு உபதேசத்தாலும், வஸ்து விசாரத்தாலும் பிரஹ்ம ஞானம் வரவேண்டுமேயன்றி, ஸ்நான தான பிராணாயாமாதிகளால் ஒருக்காலும் அவ்வஸ்துவை யுணர்தல் கூடாது. ஆதலால் ஆத்மவஸ்துவை யறியவேண்டிய முமுக்ஷு, நிராசை யுற்ற பிரஹ்மவித்தாய்க் கிருபாசாகரரா யுள்ள உத்தமகுருவை யடைந்து ஆத்ம விசாரமே செய்யவேண்டும். முக்கியமாய் விசாரத்தாலேயே அதிகாரிக்கு ஞானசித்தி யுண்டாம். தேசம், காலம், ஈசுவரானுக்கிரக மிவை ஞானம் பெற ஸஹாயமாம்.

மேதாவியாய், சாரத்தைக் கிரகித்து அசாரத்தைத் தள்ளக்கூடிய சாமர்த்தியவானாய், சாஸ்திரங்களிற் கூறியுள்ள லக்ஷணங்கள் யாவும் தன்பா லமையப் பெற்றோன் ஆத்ம விசாரத்தில் அதிகாரி யாவன். என்னை? விவேகியாய், விரக்தனாய், சமதமாதி சத்குண சகிதனாய், தீவிர முமுக்ஷுவா யுள்ள சாதன யுக்த அவ் வதிகாரிக்கே பிரஹ்மவிசாரம் செய்ய யோக்கியதை யுண்டாகும். சாதனங்கள்: (1) நித்தியாநித்திய வஸ்து விவேகம், (2) இஹாமுத்திரார்த்த பல போக விராகம், (3) சமாதிஷட்க சம்பத்தி, (4) முமுக்ஷுத்வம் என நான்கு விதமாக மகான்களாற் சொல்லப்பட்டிருக்கின்றன. அவ்வதிகாரிக் கிவையிருந்தாலே பிரஹ்ம நிஷ்டை கிடைக்குமன்றி யின்றேற் சித்தியாது. இவற்றுள்: (1) பிரஹ்மமே சத்தியம்; ஜகத்துமித்யை யென்னும் நிச்சயமே நித்யாநித்ய வஸ்து விவேகம். (2) தேகாதி பிரஹ்மா பரியந்த முள்ள அநித்திய போக்கிய வஸ்துக்களின் அநித்திய துக்க தோஷங்களைப் பிரத்தியக்ஷமாய் பார்ப்பதாலும், சாஸ்திரங்களாற் கேட்பதாலும் அவைகளிலுண்டாகும் வைராக்கியமே இஹாமுத்திரார்த்த பலபோக விராகம். (3) க. விஷயங்களிலுள்ள தோஷங்களை யடிக்கடி நினைத்துப் பார்த்தலால் அவைகளில் விரக்தியடைந்து மனத்தைத் தன் லக்ஷ்யத்திலிருத்துவது சமம்; உ. விஷயங்களிற் செல்லும், ஞான, கர்ம இந்திரியங்களைத் திருப்பி அதனதன் கோளக (ஸ்தான) த்திலேயே யிருக்கச் செய்வது தமம்; ங. மனது பூர்வ வாசனையால் மீண்டும் பாஹ்ய விஷயங்களை நினையாது தன் லக்ஷ்யத்திலேயே ஸ்திரமாய் நிறுத்தி இதர கர்மங்களை விட்டுவிடல் உபரதி; ச. எவ்வளவு துக்கங்கள் வரினும் தடைசெய்யாமலும், அவற்றிற்கா யேங்கி யழாம

னும் தைரியத்தா லவைகளைச் சகித்தல் திதிக்ஷை; ரு. வேதாந்த சாஸ்திரமும், குரு வாக்கியமும் சத்தியம் எனக்கொள்ளும் நிச்சயம் பிரஹ்மசாக்ஷாத்காரத்திற் கேதுவான சிரத்தை; கூ. சர்வ யத்தனங்களாலும், சஞ்சல சுபாவமாயுள்ள சித்தத்தைப் பரிசுத்தப் பிரஹ்மத்திலேயே ஸ்திரமாயிருத்துதல் சமாதானம்; அஃதன்றி மனம்போனபடி போகவிடுதல் ஸமாதி யன்று. இவ்வாறுங் கூடி சமாதி ஷட்க சம்பத்தியெனப்படும். (4) அஞ்ஞதி யஞ்ஞானத்தால் வந்த அகங்காராதி தேகாந்தமா யுள்ள பந்தத்தை ஸ்வாத்ம ஞானத்தால் தொலைப்பதற்குள்ள இச்சையே முமுக்ஷுத்வம். அம் முமுக்ஷுத்வம் மந்தம் மத்திமமாயிருந்தாலும், வைராக்கியத்தாலும், சமதமாதிகளாலும், குரு வனுக்கிரகத்தாலும் கிரமமாய் வளர்ந்து பருவமுற்றுக் காலாந்தரத்திற் பலனைக் கொடுக்கும். வைராக்கியத்தோடுங் கூடின முமுக்ஷுத்வம் எவனிடத்தில் தீவிரமா யிருக்கின்றதோ, அவனிடத்திற் கூடிய சமதமாதி சமீபத்திலேயே பலனைத் தரும். ஆனல் எவனிடத்தில் மந்தமாயிருக்கின்றதோ அவனிடத்தில் சமதமாதி மருபூமியில் ஜலம்போல ஆபாசமாகவே பொருந்தும்.

மோக்ஷமடைதற் கேதுவா யுள்ள சாமக்கிரி (சாதனங்) களில் பக்தியே மிகவும் சிரேஷ்டம். ஸ்வ (ஆத்ம) ஸ்வரூபத்தின் அனுசந்தானமே பக்தி என்று மகாத்மாக்கள் சொல்லுகின்றனர்.

முன் சொன்ன சாதன ஸம்பந்நனை ஆத்ம தத்துவமடைய விச்சிக்கும் அதிகாரி, தன்னை யாசிரயித்தவர் பவ பந்தத்தை நிவிருத்திப்பவராய், பிரஜ்ஞாவந்தராய்,

சர்வமு மறிந்தவராய், நிர்மலராய், காமத்தை வென்றவராய், பிரஹ்மவித் சிரேஷ்டராய், விறகற்ற அக்னிபோலப் பிரஹ்மத்தில் விசிராந்தி யடைந்தவராய், எக்காரணமு மின்றியே கிருபாசாகரராய், தன்னை யடுத்த சாதுக்களுக்குப் பரம பந்துவாய் உள்ள ஸத்குருவை யடைந்து அன்போடும் நமஸ்கரித்துப் பய பக்தியோடு செய்துவந்த நாநாவித சிசுருஷைகளாற் பிரசன்னரான (சந்தோஷமுற்ற) குருவிடம் தானறிய வேண்டுவதை வினவலுற்றான் :—“ ஸ்வாமின் ! தீனபந்தோ! நமஸ்காரம். பயங்கரமான பவசாகரத்தில் வீழ்ந்து தவிக்கும் என்னைத் தங்கள் கருணாகடாக்ஷமாகிற கப்பலாற் கரையேற்றி வைக்க வேண்டுகின்றேன். கருணாவாரிதே ! துரதிருஷ்ட (பாப)க் காற்றால் வற்றித் தப்பிப்போக வழியின்றிச் சூழ்ந்தெரியும் சம்சார தாவாக்கினி (காட்டுத்தீ) யால் தபிக்கப்பட்ட என்னைக் காருண்யாமிருத வர்ஷத்தால் சாந்தப்படுத்தத் தங்களைப் பன்முறை பிரார்த்திக்கின்றேன். சாந்தராய், மகாத்மாக்களாய், வசந்தகாலம் போல லோகத்திற்கு ஹிதமே செய்பவர்களாய், பவசாகர பயத்தைக் கடந்து மற்றவர் பயத்தையும் நீக்கிவைப்பவரா யிருக்கும் தங்களை யொத்த சாதுக்களுக்கு, சூரியனது உஷ்ண கிரணத்தால் தபிக்கப்பட்ட ஜகத்தைச் சந்திரன் சீதள கிரணத்தால் தானே ரக்ஷிக்கின்றதுபோலப் பவத்திற் கஞ்சிச் சரணாகதரான எம்போலிகளை நிர்ஹேதுகமாய்க் காத்துரக்ஷித்தல் சுபாவமே யாதலால், சம்சார தாபத்தாற் பீதியடைந்து வேறு கதியின்றி தீனனாய்ச் சரணாகதனான என்னையும், இஜ்ஜனன மரண சம்சாரத்தினின்றும் ரக்ஷிக்கத் தங்களுக்கே பாரம். ஸ்வாமீ ! பவதுக்க மென்னுங் காட்டுத்தீச் சுவாலைகளால் தாபமடைந்த என்னை, பிரஹ்மானந்தானுபூதியால் பரம

சீதளமாய், பரிசுத்தமான தங்கள் முகமென்னுங் கலசத்தி னின்று வெளிப்படும் வாக்கியமாகின்ற அமிருத தாரை யால் சீக்கிரம் நனைப்பீர்களாக. தங்கள் கடாக்ஷ வீக்ஷண்ய லேசத்துக்குப் பாத்திரராய் ஸ்வீகரிக்கப்பட்டவர்கள் தன் னியராகின்றனரன்றோ? இப்பவசாகரத்தை யெப்படி நான் கடப்பேன்? இதற்கென்ன உபாயம்? எனக்கென்னதான் கதி? என்றொன்றுந் தெரியவில்லை. தாங்கள்தான் இந்தச் சம்சார துக்கத்தை யகற்றி ரக்ஷிக்கவேண்டும்." சம்சார தாவானலத்துக் காற்றாம லிவ்வாறு பிரலாபித்து, தன்னை விதிப்படி சரணம் பிராபித்தவனாய் சொன்னபடி செய்யும் சாந்த சித்தனான சிஷ்யனை பிரஹ்மஞானியா யுள்ள வாசாரி யர் கருணை நிறைந்த சீதள திருஷ்டியால் வீக்ஷித்து அப யந் தந்து தயையினாற்றானே தத்துவோபதேசஞ் செய்கின் றார் :—

"வித்வானான சிஷ்யனே! பயப்படாதே. இனி யுனக் கபாயமே யில்லை. அபாரமாய், பயங்கரமாயுள்ள சம் சார சாகரத்தைத் தாண்டக்கூடிய மகத்தான ஒருபாயமிருக் கின்றதைத் தெரிவிக்கின்றேன். சாதுக்களா யுள்ள யதிகள் எதனா லிப்பவத்தைக் கடந்தார்களோ அவ்வுபாயத்தால் நீயும் எவரானுங் கடத்தற்கரிய விப்பவசாகர பீதியைக் கடந்து பரமானந்தம் பெறுவாய். வேதாந்தார்த்த விசாரத் தால் உத்தமமான தத்துவஞான முண்டாம். அதனால் இவ் விடத்திலேயே சம்சார பந்தம் அத்தியந்தம் நாசமாகும். 'முமுக்ஷுவுக்குச் சிரத்தை பக்தி தியான யோகம் இவை மோக்ஷ ஹேது' வென்று சுருதியே கூறலால், இவ்வுத்தம சாதனத்தைப் பெற்று நிரந்தரம் சாதித்துவரின் அஞ்ஞானத்தால் வந்த தேகபந்தம் நீங்கிப்போகும். எப்

போதும் பரமாத்ம ஸ்வரூபமாகவே யிருக்கும் உனக்கு அஞ்ஞானத்தாலேயே இவ்வனாத்ம சம்சார பந்தம் வந்தது. ஆதலால், ஆத்மானாத்ம விசாரத்தாற் பிறந்த ஞானமாகிற அக்கினி, அஞ்ஞான காரிய சம்சாரபந்த துக்கத்தை சமூலமாக (காரண வஞ்ஞானத்தோடுகூட) எரித்துவிடும்'' என்றுரைத்த குருவைப் பார்த்து, "ஸ்வாமீ! பந்தமாவது எது? எப்படி வந்தது? இருப்ப தெங்ஙனம்? நசிப்பதெப்படி? அவ்வனாத்மா எது? ஆத்மாதான் எது? ஆத்மானாத்ம விவேகமெது? தங்கள் முகத்தினின்று முத்தரங்கேட்டு யான் கிருதார்த்தனாகும் பொருட்டுக் கிருபையா லிப்பிரசினைகளைக் கேட்டனுக்கிரகிப்பீராக'' என்று கேட்ட சிஷ்யனை நோக்கிக் குருவானவர்,

"சிஷ்யனே! அஞ்ஞானத்தால் வந்த பந்தம நீங்கி பிரஹ்மமா யிருத்தற் காசை கொண்டனை யாதலின், நீயே தன்யன், கிருதகிருத்தியன், உன் குல முன்னூற் பவித்திரமாயிற்று. பிதாவின் ருணத்தை (கடனை) நீக்கப் புத்திராதி பந்துக்களுண்டு; அங்ஙனமே ஒருவனுக்குத் தலைபாரத்தா லுண்டான சிரமத்தை நிவிருத்திக்க அன்னியரிருக்கின்றனர். ஆனால் தனக்குப் பசியாதியால் வந்த துக்கத்தை புசித்தலாதியால் எங்ஙனம் தானே யகற்ற வேண்டுமோ, மற்றவரால் கூடாதோ, தனக்கு வந்த வியாதியைத் தானே மருந்துண்டு பத்தியமிருந்து போக்கவேண்டுமன்றி மற்றோ ரனுஷ்டிக்கும் கர்மங்களால் நீங்காதோ, அங்ஙனமே தன்னஞ்ஞானத்தால் வந்த பந்தத்தைத் தன் முயற்சியால் நீக்கவேண்டு மன்றி அனேக கோடி கற்பங்களாயினும் அவித்யா காம கர்மாதி ரூபமான பாசபந்தத்தைத் தவிர்க்க எவரால்தான் சாத்தியமாகும்? தனது ஸ்பஷ்டமான (பிரதி

பந்தமின்றிய) ஞான நேத்திரத்தால் பிரஹ்மத்தை யறியலா மல்லாமல் மற்றொரு பண்டிதனாலு மறியக்கூடாது. சந் திரனை சுத்தமான தன் நேத்திரத்தா லன்றி அன்னியர் பார்த்தலால் தான் பார்க்கக்கூடுமா? பிரஹ்மாத்மைக்கிய ஞானத்தா லன்றி சாங்கியம், யோகம், கர்மம், வித்வத்வம் முதலெதனாலும் மோக்ஷங் கிடைக்காது. வீணையினது ரூப சௌந்தரியமும், தந்தியால் மதுரமாகக் கானஞ் செய்தலும் எப்படி ஜனங்களுக்கு சந்தோஷமாத்திர முண்டாக்குகிறதன்றி சாம்ராஜ்யாதிபத்யந் தருவதில்லை யோ, அப்படியே மதுரமான வாக்கோடு சாதுர்யமான வசனம், சாஸ்திர வியாக்யான சாமர்த்தியம் முதலிய வித் வான்களது சிரேஷ்டமான வித்வத்வம் போகத்தைக் கொடுக்குமன்றி மோக்ஷத்தைக் கொடாது. பரதத்து வத்தை யறியாவிட்டால் சாஸ்திரங்கள் படித்தல் பலங் கொடாமையின் நிஷ்பலம்; பரதத்வத்தை யறிந்த பின் னர் சாஸ்திரங்கள் படித்தல் வேறு பயனின்மையின் நிஷ் பலமே. ஆதலால், மனமயக்கத்திற் கேதுவான சாஸ்திர ஜால மகாரண்யத்தைக் கடந்து தத்துவஞானியாகிற குரு வால் ஆத்மதத்துவத்தை யனுபவமா யறியவேண்டும். அஞ் ஞான ஸர்ப்பத்தாற் கடியுண்டவர்க்கு ஆத்மஞான சஞ்சீ- வியை யன்றி வேதங்களாலும் சாஸ்திரங்களாலும் மந்திரங் களாலும் மற்ற மருந்துகளாலும் என்ன பிரயோசனம்? ஔஷதமுட்கொள்ளாது 'மருந்து' எனச் சொல்வதால் தன் ரோகம் போகாததுபோல, அபரோக்ஷ அனுபவ ஞான மில்லாமல் 'அஹம் பிரஹ்மாஸ்மி' என வாக்காற் கூறுவ தால் தன் பந்தம் நீங்காது. சத்துருக்களை நாசஞ்செய்யாம லும், அகில பூமண்டல சாம்ராஜ்யத்தை யடையாமலும்

'நான்ராஜா' என்று சொல்வதால் எப்படி அரசனாகமாட்டானோ, அப்படியே அனாத்ம திருசியத்தை நாசஞ் செய்யாமலும் ஆத்மதத்துவத்தை யனுபவமா யறியாமலும் 'பிரஹ்மைவாஹம்' என்னும் வாக்கு மாத்திரத்தால் பிரஹ்மமாத்திரமா யிருக்கும் முக்தியடைய மாட்டான். எங்ஙனம் பூமியிலுள்ள புதையலானது அறிந்த ஆப்தனாற் கேட்டு, பூமியைவெட்டி, அதன்மேல் மூடியுள்ள கல்லை நீக்கி, வெளியேயெடுத்தலா லடையப்படுமோ, சொன்மாத்ரத்தா லடையப்படாதோ, அங்ஙனமே பிரஹ்மத்தை யறிந்த குருவினிடத்தில் சொரூபலக்ஷணத்தை சிரவணஞ் செய்து, அதனை மனனம்பண்ணி, நிரந்தரந் தியானிப்பதா லுண்டாகும் அபரோக்ஷ அனுபவஞானத்தால் அடையலாகு மல்லாமல் மாயையால் மறைபட்டுள்ள ஸ்வஸ்வரூபத்தைக் குதர்க்க யுக்திகளா லடையக்கூடாது. ஆகையால் விவேகியானோர் ஸர்வ பிரயத்தனத்தாலும், பவபந்தம் நீங்கி மோக்ஷமடைதற்பொருட்டு, ரோகாதிகளை நீக்குதலிற்போலத் தாங்களே முயற்சி செய்ய வேண்டும்.

சிஷ்யனே! நீ கேட்ட கேள்வியானது உத்தமமாய், சாஸ்திர ஞானிகட்குச் சம்மதமாய், சூத்திர சமானமாய், சூக்ஷ்மார்த்த முள்ளதாய், மோக்ஷத்தை யபேக்ஷிப்பவனா லறியக்கூடியதா யிருக்கிறது. இதற்கு யான் கூறு முத்தரத்தை சாவதான சித்தனாய்க் கேள். அதனால் உடனே பந்த மகன்றுபோம். மோக்ஷ மடைதற்கு அநித்யவஸ்துக்களில் வைராக்யமடைதல் முந்தின ஹேது. பின்னர் சமம், தமம், திதிக்ஷை, ஸர்வகர்ம பரித்தியாகம் (உபரதி) எனுமிவை கிரமமாக ஹேது. அதன் பின், வேதாந்த சிரவணம், பின்ன ரதன் மனனம், அதன்பின்பு இடைவிடாமல் வெகு

காலஞ் செய்யும் பிரஹ்மத் தியானமும் ஹேது. அந்நிரந்தரத் தியானத்தா லுண்டாகும் நிர்விகற்ப சமாதியாற் பெறப் பட்ட அபரோக்ஷப் பிரஹ்ம சாக்ஷாத்கார ஞான பலத்தால் விவேகி இவ்விடத்திலேயே மோக்ஷானந்தத்தை யனுபவிக் கின்றான். இதுவே மோக்ஷ சாதனக் கிரமம். நீ யறிய வேண் டிய ஆத்மானாத்ம விவேகத்தை யிப்போது சொல்லுகிறேன். அதனை நன்றாய்க் கேட்டு மனதில் தரித்துக்கொள். இரண் டில் முன்னம் அனாத்மாவைக் கேள்.

மஜ்ஜை (மூளை), அஸ்தி, மேதஸ் (கொழுப்பு), மாம்சம், ரதம், சர்மம், சுக்கிலம் என்னும் சப்த தாதுக்களுற்று, பாதம், துடை, மார்பு, புஜம், முதுகு, சிரசு முதலிய அங்க உபாங்கங்களோடு கூடியதாய், நான் எனது எனவே யாவ ராலு மறியப்பட்டு, மோகத்திற்கு முக்கிய ஸ்தானமாய், பிரத்தியக்ஷமா யிருக்கு மிதுவே ஸ்தூலதேக மென் றறிஞர் கூறுகின்றனர். இந்த ஸ்தூலதேகம் ஆகாசம், வாயு, அக் கினி, அப்பு, பிருதிவி என்னும் சூக்ஷ்ம பூதங்கள் (தன் மாத்திரைகள்) தத்தம் அம்சங்களில் அன்யோன்யம் கலந்து பஞ்சீகரித்ததா லுண்டான ஸ்தூல பூதங்க ளைந்தா லானது. அவ் வைந்து தன்மாத்திரைகளுமே சப்தாதி பஞ்ச விஷயங் களா யிருந்து விஷய போக்தாக்களான ஜீவர்க்கு சுகசாத னம் போலத் தோன்றும். அஞ்ஞராகின்ற எந்த மூடர் ராகம் (ஆசை) ஆகின்ற பாசத்தால் இவ்விஷயங்களிற் கட் டப்படுகின்றாரோ உடனே யவர் தங்கள் கர்ம மென்னுந் தூதனா லிழுக்கப்பட்டவராய், அக்கர்மானுசாரமாக மேலுங் கீழும் போக்குவரத் துடையவராய் மிகவு மலைந்து துக்கிப் பர். இச்சப்தாதி பஞ்சவிஷயங்களில், சப்தத்தால் ஸர்ப்பம் அல்லது மானும், ஸ்பரிசத்தால் யானையும், ரூபத்தாற் பதங்க

மும், ரசத்தால் மீனும், கந்தத்தால் வண்டும் ஒவ்வொன்றி லாசை வைத்தே உயிர் துறக்குமாயின் இவ்வைந்திலும் ஆசை யுள்ள மனுஷ்யனது கதி என்ன வாகும்? விஷயமா னது தன் தோஷத்தால் கிருஷ்ணசர்ப்ப (கருநாக) விஷத்தி னுங் கொடியது. ஏனெனின், விஷமானது உட்கொண்டவனை மாத்திரங் கொல்லும்; விஷயமோ கண்ணுற் கண்டவனையும் மனத்தால் நினைத்தவனையுங்கூட நசிக்கச் செய்கின்றது. எவ னொருவன் நீக்கற்கரிய விஷயாசை யென்னும் மகாபாசத் தைத் திடவிராகத்தா லறுத்து அதினின்றும் விடுபடு கிறானோ அவனே மோக்ஷமடைவ னன்றி, அன்னியன் ஷட் சாஸ்திர பண்டித னாயினும் முக்தி பெறமாட்டான். திட வைராக்கிய மின்றிப் பவசாகரத்தைக் கடந்து மோக்ஷதீரஞ் சார யத்தனிக்கும் முமுக்ஷுவின் கழுத்தை ஆசையாம் முதலை பிடித்து அதிவேகமா யிழுத்துப்போய் க்ஷணத்தில் அச் சம்சாரசமுத்திர மத்தியி லமிழ்த்திவிடு மாதலால், எந்த முமுக்ஷு விஷயாசை யென்னும் முதலையைத் திடவி ராகமென்னும் வாளினுற் கொல்வனோ அவனே பவக்கட லின் முக்தி தீரத்தைத் தடையாதுமின்றி யடைவன். நல்ல புத்தி யில்லாதவனாய் மாறிமாறித் தோன்றும் விஷய மார்க் கத்திற் பிரவேசிப்பவன், மேன்மேலும் துக்கமனுபவித்துக் கெட்டே போவான். சுபுத்தி யுள்ளவன் தன் யுக்தியால் குருபதேச மார்க்கமே சென்று நற்கதியே பெறுவன். இது சத்தியம். ஆதலின், உனக்கு மோக்ஷமுற விருப்ப மிருக்கும் பக்ஷத்தில், விஷயங்களை விஷம்போலு மதிதூரத்திற் றள்ளி விட்டு, சந்தோஷம், தயை, க்ஷமை, ஆர்ஜவம் (ருஜுமார்க்கம்) சாந்தி, தாந்தி, முதலாய ஸத்குணங்களை அமிருதம்போ லெப்போதுங் கைக்கொண்டு, தேகாபிமானத்தாற் செய்யும்

சகல காரியங்களையும் விட்டு, அவித்தையாற் செய்யப்பட்ட பந்தமோக்ஷ (நீக்க)த்திற்கே சர்வகாலமும் எத்தனஞ்செய். இத்தேகமோ பரார்த்தமாய் (மண், தீ, மிருக, பக்ஷியாதிகட்கிரையாய்) இருக்கின்றது. எவன் தன்னை மறந்து தேகத்தைத் தானாக வபிமானித்துப் போஷிக்க எண்ணுகிறானோ அவன் ஆத்மஹநதா ஆகிறான். சரீரபோஷணையிற் புத்தியுள்ளவனாய் எவன் ஆத்மாவை யறிய இச்சிக்கின்றானோ, அவன் முதலையைக் கட்டையெனப் பிடித்து அதனால் நதி தாண்டச் செல்பவனாவன். தேகாதிகளி லுள்ள மோகமே முமுக்ஷுவுக்குப் பெரிய மிருத்யு. எவனிந்த மோகத்தை வென்றானோ அவனே மோக்ஷபதம் பெறுவா னாதலால், எதனை வென்று முனீசுவரார்கள் அவ் விஷ்ணுவின் பரமபத (வியாபகப் பிரஹ்மபத) மடைந்தார்களோ, தேக தார சுதாதிகளிலுள்ள அம்மோகத்தை ஜயித்து நீயு மந்த மோக்ஷபதம் பெறுக. தோல், மாமிசம், நரம்பு, மேதஸ், மஜ்ஜை, அஸ்திகளோடுங் கூடியதாய், மூத்திர புரீஷ (மல)ங்களாற் பூர்ணமா யுள்ள இந்தத் தேகம் மிகவும் நிந்திக்கத் தக்கது. பூர்வ ஜன்மாந்தர கர்மானுசாரமாய், பஞ்சீகிருத ஸ்தூல பஞ்ச மகாபூதங்களா லுத்பன்னமான இந்த ஸ்தூல தேகம், கிருகஸ்தனுக்குக் கிருகம்போல விஷயபோகங்களை ஆத்மா இருந் தனுபவிக்க ஓர் போகாலயமாம். இத னவஸ்தை ஜாக்கிரம் எனப்படும். மாலை, சந்தன, ஸ்திரீயாதி நானாவிசித்திரரூப ஸ்தூல போக்கிய பதார்த்தங்களை பாஹ்யேந்திரியங்களால் ஆத்மா தானே இத்தேகத்துடன் அத்தியாசத்தாற் கூடி யனுபவிக்குங்காலம் ஜாக்ரம் எனப்படுதலால், இவ்வவஸ்தையிலேயே ஸ்தூலதேக மறியக்கூடியது. இத னாசிரயத்தாலேயே புருஷனுக்கு பாஹ்ய சம்சார மனைத்தும் வந்ததென் றறி. உத

பவம், பெருத்தல், ஜரை, மரணமாதி இத்தேகத்தின் தர்மங்கள். சைசவம், கௌமாரம், யௌவனம், வார்த்தக்கியமிவை இதன் அவஸ்தா பேதங்கள். வர்ண ஆசிரமமாதி நியமமாம். மானம், அவமானுதி இதன் விசேஷங்களாகும். இத்தூலமோ ரோகங்க ளனைத்திற்கும் ஆஸ்பத (இருப்பிட)மா யிருக்கின்றது.

சுரோத்திரம், துவக்கு, சக்ஷு, ஜிஹ்வை, கிராணம் இவை, சப்தாதி பஞ்ச விஷயங்களை அறிவதால் ஞானேந்திரியங்களாம். வாக்கு, பாணி, பாதம், பாயு, உபஸ்தம் இவை, வசனுதிக் கிரியைகள் செய்வதால் கர்மேந்திரியங்களாம். அந்தக்கரணம் ஒன்றே ஸங்கற்ப விகற்பாதி விருத்தி, வஸ்து நிச்சய விருத்தி, அபிமான விருத்தி, பதார்த்தானுசந்தான விருத்தி என்னும் தன் விருத்தி பேதத்தாற் கிரமமாய், மனம், புத்தி, அகங்காரம், சித்தம் என நான்கு பிரகாரமாகும். ஸ்வர்ணம் ஜலம் முதலியன விருத்தி பேதத்தால் நானுரூப மாவதுபோலப் பிராணன் ஒன்றே தன் விருத்தி பேதத்தால் பிராணன், அபானன், வியானன், உதானன், சமானன் என்று ஐந்துவிதமா யிருக்கும். ஆகாசாதி பூதபஞ்சகம், சுரோத்திராதி ஞானேந்திரிய பஞ்சகம், வாக்காதி கர்மேந்திரிய பஞ்சகம், பிராணுதி வாயு பஞ்சகம், மனுதி அந்தக்கரண சதுஷ்டயம், அவித்தை, காமம், கர்மம் இவ்வெட்டையும் புரியஷ்டகம் என்றும் சூக்ஷ்மதேக மென்றுங் கூறுவர். அபஞ்சீகிருத பஞ்ச சூக்ஷ்ம பூதங்களா லானதாய், வாசனையோடுங் கூடிக் கர்ம பலமான போகங்களை ஆத்மா அனுபவித்தற்கு சாதனமா யிருக்கும் இந்த லிங்கதேகம் அஞ்ஞானத்தா லுண்டான அநாதி யுபாதி. இதன் அவஸ்தை ஸ்வப்னம். இவ் வவஸ்தையில் மனமே நானுவித சாக்கிரத்

வாசனையால் கர்த்திரு முதலிய பாவங்களை யடைந்து விளங்கும். அப்பொழுது ஸ்வயம் பிரகாசித்துக்கொண் டிருக்கும் ஆத்மா, மனமாத்திரத்தை யுபாதியா யடைந்து அதனுற்செய்யப்படுங் கர்மங்களிற் பற்றின்றி அவைக்கெல்லாம் சாக்ஷி மாத்திரமா யிருக்கும். வாச்சி முதலியன தச்சனது தொழிலுக்குக் கரணமாதல் போல, ஞானரூப ஆத்மாவின் ஸர்வ வியாபாரங்கட்கு மிந்த லிங்கதேகம் கரணம். அக்கரணமும் ஆத்ம ஸந்நிதிமாத்ரத்தாலேயே ஸர்வகர்மங்களும்செய்வதால், அவ்வாத்மா எப்போதும் விகாரமின்றி யசங்கமாகவேயிருக்கும். சக்ஷுவின் குணதோஷவசத்தா லுண்டாகும் அந்த, மந்த, படுத்துவங்கள் (குருடு, மந்ததிருஷ்டி, நல்லதிருஷ்டி) அங்ஙனமே பதிர, மூகத்வங்கள் (செவிட்டு, ஊமைத்தன்மைகள்) முதலியன நேத்ர சுரோத்திராதி இந்திரிய தர்மங்களே யன்றி சுத்தமா யுள்ள ஆத்மாவின் தர்மங்க ளாகா. உச்வாச, நிச்வாசங்கள் (மேல் கீழ் போக்கு வரத்தா யுள்ள சுவாசம்), கொட்டாவி, தும்மலாதி பிராணுதிகளின் தர்மங்கள். பசி, தாகம் பிராணன் ஒன்றன் தர்மம். அந்தக்கரணமொன்றே சிதாபாசப் பிரகாசத்தோடு சக்ஷுராதி இந்திரியங்களிற் பொருந்தி திடமாக நான் என்று அபிமானிக்கும். அதுவே அகங்காரம். அவ்வகங்காரமே கர்த்தா, போக்தா அபிமானியாய், சத்வாதி முக்குணவசத்தால் வரும் அவஸ்தாத்திரயத்தையு மனுபவித்து, அனுகூல விஷயங்களிற் சுகத்தையும், பிரதிகூல விஷயங்களிற் றுக்கத்தையு மடையாநிற்கும். ஆதலால், சுகதுக்கங்கள் அகங்கார தர்மமன்றி ஸதானந்த ஆத்மாவினதன்று; விஷயங்களனைத்தும் ஆத்மாவின் பொருட்டுப்பிரியமாய்த் தோன்றுவதல்லாமல் சுயமே யுள்ளவாறு பிரியமாகா. உண்மையில் ஆத்மாவே யாவர்க்கும் அத்

தியந்தம் பிரியமாயிருப்பதால் அவ்வாத்மா ஸதானந்த சொரூபம். அதற்குத்துக்கம் ஒருசிறிது மில்லை. இந்நிர்விஷய ஆத்மானந்தம் சுழுப்தியில் அனைவர்க்கு மனுபவம். இதில் சுருதி, பிரத்தியக்ஷம், ஐதிகம், அனுமானம் இவை பிரமாணங்கள்.

அவ்வியக்தம், அவித்தை, மாயை முதலிய நாமங்களுற்றதாய், திரிகுணாத்மிகை (முக்குணரூபி)யாய், புத்திமான்களால் தன்காரியங்கொண் டனுமானிக்கப் பட்டதாய், ஸர்வ திருசியங்கட்கும் மேலானதாய், ஜகமெல்லா முண்டாக்குவதாய், சத்து, அசத்து, சதசத்து, பின்னம், அபின்னம், பின்னபின்னம், சாவயவம், நிரவயவம், சாவயவ நிரவயவம் என்னும் நவப்பிரகாரமு மல்லாமல் அநிர்வசனீய (இன்னதென் றுரைக்கக் கூடாத) சொரூபமாய், அநாதியாய், ரஜ்ஜு ஞானத்தால் ஸர்ப்பப்பிராந்தி நசிப்பதுபோல சுத்தாத்வைத பிரஹ்ம ஞானத்தால் நசிப்பதாய், மகா அற்புதமான ஓர் பரமேசுவர(பிரஹ்ம)சக்தி யுள்ளது. யாவருமறிவதாயுள்ள தங்காரியத்தாற் பிரஸித்தமான அச்சக்தியின் (1) சத்வம், (2) ரஜஸ், (3) தமஸ் என்னும் திரிகுணங்களில், (2) கிரியாரூபி யான ரஜோகுணசக்தி விக்ஷேபசக்தியெனப்பட்டு சர்வப் பிரவிருத்திகட்கு மேதுவா யிருக்கும். இதனாலேயே ராகாதி துக்காதிகளான மனோ விகாரங்களெல்லா முண்டாகின்றன. காமம், குரோதம், லோபம், டம்பம், அசூயை, அகங்காரம், ஈர்ஷை, மச்சரம் முதலான மனவிகாரங்க ளிதன்தர்மங்கள். இவ்விக்ஷேபசக்தி புருஷர்க்குப் பிரவிருத்தி யுண்டாக்குந தோஷத்தால் பந்த ஹேது. (3) தமோகுணசக்தி ஆவரணசக்தி யென்னப்படும். இதனாலேயே வஸ்து அந்நியதாவாய் (வேறாய்) விளங்குகின்றது.

விக்ஷேபசக்தியைப் பொருந்தின காரணததால் இதுவே புருஷனது சம்சாரத்திற் காதிகாரணம். இவ்வாவரண சக்தியா லாவிருத(மூடப்பட்டவ)ன், பிராஜ்ஞனுயினும், பண்டிதனுயினும், சதுரனுயினும், சூக்ஷ்மார்த்த மறிந்தவனுயினும், ஸர்வவல்லப னுயினும், குரு முதலானோர் ஆத்ம தத்துவத்தை நன்ருய் வெகுவிதமாய் போதித்தாலும் அம் மறைப்பா லதனை யறியாதவனுய், அஞ்ஞானப் பிராந்தியா லாரோபிதமான வஸ்துக்களை நல்லதா யெண்ணி அவற்றையே யடைகின்ருன். மகா சாமர்த்திய முள்ளதாய், எவரானும் நீக்கற் கரியதா யிருக்கும் இத்தமோகுண ஆவரண சக்தியுடன் கூடியவனே, அபாவனே (ஏதுமறியாமை), அசம்பாவனை (சொல்லினு மறியாதிருத்தல்), சம்சயபாவனை (சந்தேகம்), விபரீதபாவனை (மாருகவறிதல்) என்னுமிவை விட்டு நீங்குகிறதில்லை. அவனை விக்ஷேபசக்தியு மெப்போது மிழுத்தலைத்து வைக்கின்றது. அஞ்ஞானம், ஆலஸ்யம், ஜடத்துவம், நித்திரை, பிரமாதம் (செய்வன தவிர்தல்), மூடத்துவம் இவை தமோகுண விகாரங்கள். இவற்றை யடைந்தவன் ஒன்றுங் கிஞ்சித்து மறியாதவனுய், நித்திரைபுரிபவன் போலும், ஸ்தம்பம்போலும் மூடமாயிருக்கிருன். இனி (1) சத்துவகுணம் ஜலம்போல் அதிக பரிசுத்த மாயினும் ரஜஸ், தமோ குணங்களைச் சேர்ந்ததால் (க) மலினமாகி, பந்தஹேதுவாம். ஆத்மா, இதில் பிரதிபிம்பித்து ஜக மனைத்துஞ் சூரியன்போலப் பிரகாசிப்பிக்கும். அமானித்வ (மானமின்மை) முதலியன, யம நியமாதி, சிரத்தை, பக்தி, முமுக்ஷுத்வம், தெய்வ சம்பத்தி, அசத்துக்களி னீக்கம் இவை புருஷயத்தனத்தால் பூர்வம் போல் ரஜஸ், தம ஸதிக மின்றிய (உ) மிசிரசத்துவத்தின்

தர்மங்கள். (ந) விசுத்த சத்துவத்தின் மிகுந்த தெளிவி ஞல், ஸ்வாத்மானுபூதி, பரமசாந்தி, நித்யதிருப்தி, அதிக சந்தோஷம், சதா ஆனந்த மடைதற் கேதுவான பிரஹ்ம நிஷ்டை இவை ஸித்தியாம். திரிகுணங்களோடுங் கூடின இந்த அவ்வியக்த சக்தியே ஆத்மாவின் காரணதேகம். சர்வ இந்திரிய, மனவிருத்திகள் லீனமான சுழுப்தி இத னவஸ்தை. இவ்வவஸ்தையில் 'ஒன்று மறியாது சுகமாய்த் தூங்கினேம்' என்னும் உலகானுபவத்தால் எல்லாவித ஞானமும் சாந்தமாகி, மனம் காரணுத்மகமா யிருந்தே பிரஹ்மானந்தத்தை யனுபவிக்கின்றது. தேகம், இந்திரி யம், மனம், அகங்காரமாதி விகார மனைத்தும், விஷய சுகாதி களும், ஆகாசாதி பூதங்களும், மற்றும் அவ்யக்த பரி யந்த ஜக மனைத்துமான இதுவே அனுத்மா. மாயை, அதன் காரியமான மஹாதத்துவம் முதல் தேக முடிவாக வுள்ள இவ்வனுத்மா, கானல் ஜலம்போல அசத்தாகும் என நீ யறி.

சிஷ்யனே! எதனை யறிந்து புருஷன் சம்சார பந் தத்தினின்று விடுபட்டுக் கைவல்யத்தை யடைகின்றானே அந்தப் பரம ஆத்ம சொரூபத்தை யினி யுனக்குச் சொல்லு கிறேன். 'அஹம், அஹம்' (நான், நான்) என்று சுய மாய்த் தோற்று மனுபவத்தால் லக்ஷிதமான (குறிக்கப் பட்ட) அர்த்த சொரூபமாய், அவஸ்தாத்திரய சாக்ஷியாய், பஞ்சகோச விலக்ஷணமாய், ஜாக்கிர சொப்பனங்களில் மனவிருத்தியின் பாவத்தையும், சுழுப்தியில் அதன் அபா வத்தையும் அறிவதாயுள்ள அஹம் பதார்த்த ('நான்' எனும் சொற்பொருள்) சொரூபமே ஆத்மா. எது ஸர்வத்தையும் சுயமே பார்க்கின்றதோ அச்சர்வமும்

எதனைச் சிறிதும் பார்க்கிறதில்லையோ, எது புத்தியாதிக ளைப் பிரகாசிக்கச் செய்கிறதோ எதனை யவை பிரகாசிக்கச் செய்கிற தில்லையோ, எதனால் இஜ்ஜகமானது வியாபிக்கப் பட்டிருக்கிறதோ எதனை யிஜ்ஜகம் சிறிதும் வியாபிக்க வில்லையோ, யாதொன்றன் பிரகாசத்தால் ஜடமான விச் சகலமும் விளங்குகின்றனவோ, எதனது ஸந்நிதி மாத்திரத் தால் தேக, இந்திரிய, மன, புத்திகள் பிரேரேபிக்க(ஏவ)ப் பட்டவை போலத் தத்தங் காரியங்களிற் பிரவேசிக்கின் றனவோ, நித்திய ஞான சொரூபமான எதனால் அகங்கா ராதி தேகாந்தமா யுள்ளவையும், விஷயங்களும், சுகாதி களுங் கடத்தைப்போலத் திருசியமா யறியப் படுகின்ற னவோ, எதனால் உயிரும் வாக்கும் மற்றவையும் சரிக் (அசை) கின்றனவோ, அந்த அந்தராத்மா புராண புருஷ னாய், நிரந்தரமாய், அகண்ட பரிபூரணமாய், ஆனந்த சொரூபமாய், ஏகமாய், ஸத்ரூபமாய், பிரதி தேகத்திலும் சாக்ஷி (ஞான) மாத்திரமா யிருக்கிறது. இத்தேகத்தின் கண், ஹிருதய குகையில் அவ்வியாகிருத (சூக்ஷ்ம, வியா பகத்வத்தால் வெளிப்பட்டுத் தோற்றாத) ஆகாசத்தைப் போலப் பிரகாசிக்கின்ற பரிசுத்த ஆத்மா, ஆகாசத்தில் சூரியனைப்போலத் தன் தேஜஸால் இவ்வுலகைப் பிரகாசிப் பிக்கின்றது. மன அகங்காரங்களின் விகாரங்களையும், தேக இந்திரியப் பிராணாதிகளின் செயல்களையு மறிவ தாய், தப்தாயப்பிண்டத்தில் அக்கினிபோ லவைகளில் அனுஸ்யூதமா யிருப்பினும் இது ஒன்றைச் செய்கிறது மில்லை; ஒரு விகார மடைகிறது மில்லை. இவ்வாத்மா ஜநி யாது, மரியாது, பெருக்காது, இளைக்காது; வேறு விகா ரங்களு முறாது. கடம் நசிக்கினும் நசியாத கடாகாசம்

போல், இத்தேகம் மரிக்கினும் மரணமுறாத நித்திய ஸ்வரூபம். பிரகிருதி (காரணமாயை), விகிருதி (அதன் காரியம்)கட்கு விலக்ஷணமாய், சுத்த ஞான சொரூபமாய், சத்து அசத்துக்களைப் பிரகாசிப்பித்து நிர்விசேஷமாய், ஜாக்கிராதி அவஸ்தைகளில் புத்திக்கு சாக்ஷியா யிருந்து 'அஹம், அஹம்' எனவே நித்தியாபரோக்ஷமாய்ப் பிரகாசிக்கும் அப்பரமாத்மாவை ஏகாக்கிர சித்தத்தால் 'இந்த நான் பிரஹ்மம்' என்று அனுபவமா யறி. இங்ஙனம் புத்திப் பிரஸாதத்தால் உன்னாத்மாவை யுன்னிலேயே நீ யுணர்ந்த வதனால் ஜனனமரணத் தரங்கங்க ளுள்ள அபார சம்சார சாகரத்தைக் கடந்து கிருதார்த்தனாய்ப் பிரஹ்ம சொரூப மாத்திரமா யிருக்கக்கடவாய்.

அனாத்மாவில் (தானல்லாத் தேகாதிகளில்) அஹம் (நான்) எனும் புத்தியே சர்வானர்த்த ஹேதுவான பந்தம். இப்பந்தம் புருஷனுக்கு ஜனனமரணங் கொடுக்குங் காரணமாய் அஞ்ஞானத்தால் வந்தது. இந்த அஞ்ஞானத்தால் அசத்தியமான இத்தேகாதிகளை சத்தியமா யெண்ணி இதில் ஆத்மபுத்தி செய்து கோசகாரப்புழு (பட்டுப்பூச்சி) வாய்நூலாற் றன்னைக் காத்து நசிப்பதுபோல சப்தாதி விஷயங்களா லிதனைப் போஷித்து நாசமுறுகின்றனர். ஆவரணத்தால் மூடப்பட்டவர்க் கெல்லாம் விவேக மின்மையின், ஸர்ப்பத்தில் ரஜ்ஜுபுத்தி போல வஸ்துவல்லாததில் வஸ்து எனும் புத்தி தோற்றல் சுபாவ மாதலால், அகண்டமாய், நித்தியமாய், அத்வைதமாய், தன் நிர்மல ஞான தேஜஸால் சுயம் பிரகாசித்துக்கொண்டிருக்கும் அனந்த வைபவமுள்ள ஆத்மாவை, சூரியனை ராகு மறைத்தல்போலவே தமோமயமான இவ்வாவரணசக்தி மறைக்க

வும், புருஷன் தன் சொரூப ஞானத்தை மறந்து, மோகமா முதலையால் விழுங்கப்பட்டவனாய், அம்மோகத்தால் தானல்லாத சரீரத்தைத் தானாக எண்ணிக் காமக் குரோதாதிகளுடன் கூடி புத்திகெட்டு அப்புத்தியி னவஸ்தைகளனைத்தையும் தன்னதாக வபிமானித்து அதனால் விஷய விஷம் நிரம்பிய அபார சம்சார சமுத்திரத்தில் அமிழ்ந்தும் எழுந்தும் ஓர் கதியின்றிப் பிரமிக்கும்படி ரஜோகுண விக்ஷேபசக்தி மகத்தான துன்பஞ் செய்து வைக்கின்றது. சூரியனது கிரணத்தா லுண்டான மேக பங்திகள் அச்சூரியனை மறைத்துப் படர்ந்து விருத்தியாதல் போல, ஆத்மாவில் அஞ்ஞானத்தா லுண்டான அகங்கார பந்தம் அவ்வாத்மாவை மறைத்தது தானும் விருத்தி யாகின்றது. மழைக்காலத்தில் மேகங்களால் சூரியன் மறைபட்ட தினத்தில் பனியும் குளிர்காற்று மதிகமாய் ஜனங்கட்குத் துக்கந் தருவதுபோல, தமோகுண ஆவரணசக்தி ஆத்மாவை மறைக்கும்போது ரஜோகுண விக்ஷேபசக்தி அவ்வஞ்ஞானியை மோகத்தால் தானல்லாத் தேகந் தானாக மயங்கச் செய்து நானாவித துக்கங்களால் மிகவுந் துன்புறச் செய்வதால், இவ்விரண்டு சக்திகளாலுமே புருஷனுக்குப் பந்தம் வந்தடைந்ததாகும். இச்சம்சார விருக்ஷத்திற்குத் தமஸ் (ஆவரணம்) பீஜம்; தேகாத்மபுத்தி அங்குரம்; ராகம் தளிர்; கர்மம் ஜலம்; தேகம் அடிக்கட்டை; உயிர்கள் சாகைகள்; இந்திரியங்கள் அவற்றின் நுனிகள்; விஷயங்கள் புஷ்பங்கள்; நானா கர்மத்தாலுண்டாம் நானாவித துக்கம் பழம்; அம்மரத்திலுள்ள ஜீவன் இதனைப் பக்ஷிக்கும் பக்ஷி. அஞ்ஞானத்தா லுண்டாய் ஜீவர்க்கு ஜன்மமரண ஜராதுக்காதிகளை மேன்மே லுண்டாக்கும் இந்த அனாத்ம சம்சாரபந்தம்

உற்பத்தியின்றிய அனுதியே யாயினும், சுருதியைப் பிர மாணமெனநம்பி, அதனுற் கூறப்படும் ஸ்வதர்மங்களை நிஷ் காமமா யனுஷ்டிக்குமதனுல் உண்டாகு மந்தக்கரண சுத்தி யோடு நிரந்தரம் செய்யும் தியானத்தால் மாலின்யமின்றித் தீட்டப்பட்ட ஆத்மாபரோக்ஷ ஞானமென்னும் கூரானவாளி ஞல் சமூலம் நாசமாம். அதன்றி மற்ற அஸ்திர சஸ்திரங் களாலும், வாயு அக்கினிகளாலும், கோடி கர்மங்களாலும் அதனைச் சேதிக்க சக்கியமாகாது.

ஆத்மா, தன் அஞ்ஞானசக்தியின் காரியமான அன்ன மயாதி பஞ்ச கோசங்களான் மூடப்பட்டு, பாசிப் படலத் தான் மூடப்பட்ட வாபிஜலம் போல சுத்தமாய்த் தோற்ற வில்லை. ஜலத்தினின்றும் அப்பாசிக் கொத்தினைத் தள்ளும் போது பரிசுத்தமாய், தாக தாபங்களை நீக்கிப் புருஷனுக்குப் பரமசௌக்கிய முண்டாக்கும் அந்த ஜலம்போல, சூக்ஷ்ம புத்தியால் ஆத்மாவினின்றும் திருசியப் பஞ்சகோசங்களை நேதி, நேதி (இதல்ல) எனவே பிரித்துத் தள்ளும் அபவாதத் தால் முஞ்சம்புல்லின் மத்தியில் இஷீகை (தண்டு) போல அந் தத் தேகாதி திருசிய வர்க்கங்கட்கு விலக்ஷணமாய், பிரத் தியக்கா (ஆந்தரமா)ய், பரிசுத்தமாய், ஏகரஸமாய், அசங்க மாய், அக்கிரியமாய், சதானந்த சொரூபமாய், சுயம் பிரகா சித்துக்கொண்டிருக்கும் ஆத்மாவை யறிந்து, பின் ரஜ்ஜுவிற் கற்பித சர்ப்பம் ரஜ்ஜுவே யாதல்போல ஆத்மாவிற் கற்பித மான அத்திருசிய வர்க்கங்களும் ஆத்மாவேயெனப் பிரவிலா பித்து ஆத்மா மாத்திரமாய் எவனிருக்கின்றனோ அவனே முக்தன். ஆதலால் விவேகி, தன் பந்தமோக்ஷத்தின் பொருட்டு ஆத்மானாத்ம விவேசனம் செய்யவேண்டும். அத ஞல் சச்சிதானந்த சொரூபமான தன்னை யறிந்து ஆனந்த

மடைகின்றனன். அன்னமயம், பிராணமயம், மனோமயம், விஞ்ஞானமயம், ஆனந்தமயம் என்னும் பஞ்சகோசங்களுள் :—

அன்னத்தா லுண்டாய், அன்ன முண்பதால் விருத்தியாய், அன்னமின்றேல் நாசமுறு மிந்த ஸ்தூலதேகம் அன்னமயகோசம். தோல், ரத்தம், மாம்சம், மேதஸ், அஸ்தி, மலம், மூத்திரம், இவைகள் கூடி மிகவும் அசங்கியமாய், முன்னும் பின்னு மின்றி மத்தியத்தில் மாத்திரந் தோன்றி, க்ஷணத்துக்கு க்ஷணம் விகாரமுற்று, ஓர் நியமமுமில்லாமல் கடம்போல் திருசியமாய், ஜடமாய், நாசுவாய், நியம்யமாய் (ஏவப்படத்தக்கதாய்)இருக்குந் தேகம், சுபாவத்திலேயே இதற்கு விலக்ஷணமாய், ஏகமாய், அங்கங்கள் (பாணி, பாதாதி) நசிக்கினும் அவ்வச் சக்திகள் நாசமாகாது ஜீவித்திருப்பது போல, அஸ்த பாதாதி அவயவாகாரமான சரீரம் நசிக்கினும் நாசமுறாத நித்தியமாய், பரிசுத்தமாய், தேகம், ஷட்பாவ விகாரங்களான அதன் தர்மம், கர்மம், அவஸ்தை யிவற்றை சாக்ஷிமாத்திரமாயிருந்து சுய மறிந்து கொண்டு நியாமகமா (ஏவுகிறதா) யிருக்கும் ஆத்மாவாதல் எங்ஙனம்? ஒருபோது மாத்மாவாகாது. ஜடனான மூடன் துவக்கு, மாம்ச, அஸ்தி, மல, மூத்திர ராசியான தேகமே அகமென நினைப்பன். சிறிது விவேகமுள்ள கர்மஞானி தேகம், ஜீவன் இரண்டையுங் கூட்டி நான் என்றெண்ணுவன். விசாரசீலனாய்த் திருடமான விவேக ஞானமுள்ள மகாத்மா, இத்தேக விலக்ஷணமாய்த் தன்மயமாகவே யிருக்கும் பரமார்த்த பிரஹ்ம சொரூபமாகவே தன்னை எப்போது மறிவான். தேகாத்ம புத்தியே மனுஷ்யர்க்கு ஜன்மாதி துக்கபீஜ மாதலால், உன் சாயாசரீரம், பிரதிபிம்பதேகம்,

மனோராஜ்யவுடல், சொப்பனவுடம்பு இவைகளில் ஆத்ம புத்தி வைக்காததுபோல, தோல், மாம்ச, எலும்பாதி விகார மான இத்தூலதேகத்திலும் ஆத்மபுத்தி சிறிதும் வையாது, பிரயத்னத்தால் அதனை நீக்கி, சர்வாத்மக, சச்சிதானந்தகன, நிர்விகற்பப் பிரஹ்மத்தில் ஆத்மபுத்தி வைத்ததால் மனதை நாசஞ் செய்து பரம சாந்தி பெறுவாயாக. பின்னை யுனக் குப் பவமேயில்லை. வேதாந்தார்த்தங்களை நன்று யறிந்த வித்வானாயினும் பிரமையினால் அசத்தான தேகாதிகளில் அகம்புத்தியை எதுவரை விடமாட்டானோ அதுபரியந்த மவனுக்கு மோக்ஷம் என்னும் வார்த்தையுங்கூடி யில்லை.

கர்மேந்திரியங்களைந்துடன் பிராணன் சேர்ந்து பிராண மயகோசம். முற்கூறிய அன்னமயகோசம் இப்பிராணமயத் தாற் பூர்ணமாய் (நிரம்பி)த் தன் கிரியைகளிற் பிரவிருத்திக் கின்றது. வாயுவின் விகாரமாய், அதனைப்போலவே யுள் வெளியிற் போக்குவரத் துள்ளதாய், இஷ்டம் அநிஷ்டம், அநநியம் தனது என்றொன்றுங் கிஞ்சித்து மறியாது பரதந் திரமா யிருத்தலின் இப்பிராணமயகோசமும் ஆத்மா வாகாது.

ஞானேந்திரியங்களைந்துடன் கூடின மனமே மனோ மயகோசம். இது, என்னது, யான் என்று வஸ்து விகற்ப காரணமாய், நாமாதி நானா விருத்தி பேதத்தோடுங் கூடி மகாபல முள்ளதாய், முற்கூறிய பிராணமயகோசத்திற் பூர்ணமாய் அதனை முற்றும் பரவியிருக்கும். பஞ்சேந்திரி யங்க ளென்னும் பஞ்சஹோதாக் (ஹோமம் செய்வோர்) களால், சப்தாதி விஷயங்களாகிற நெய்யினாலும், வாசனைக ளாகிற சமித்துக்களினாலும் வளர்க்கப்பட்டு மிகவும் ஜ்வலிக் கின்ற மனோமய அக்கினி இந்தப் பிரபஞ்ச மெல்லாந்

தகிக்கின்றது(தாப முண்டாக்குகின்றது). மனத்தை யன்றி வேறு அவித்தை யில்லை. அதுவே பவபந்த ஹேதுவான அவித்தை. அம்மனம் பெருத்தால் அனைத்தும் விருத்தி யாய், அது நசிக்கி லனைத்தும் நாசமாம். முன்யாதொரு வஸ்துவுமின்றிய ஸ்வப்னுவஸ்தையில் மனமே தன் சாமர்த் தியத்தால் போக்தா முதலாய்த் தோற்றப்பட்ட ஸ்வப்ன ஜக மனைத்தையும் எங்ஙன முண்டாக்குகின்றதோ, அங்ஙன மே இந்த ஜாக்கிரத்திலும் மனதாலுண்டாய்க் காணப்பட்ட இவையாவும் அம்மனோ விலாசமே. சுழுப்தியில் மனம் லீன மாகுங்கால் ஒன்றுந் தோன்றுதது யாவர்க்கு மனுபவமாத லால், புருஷனுக் கிச்சம்சாரபந்தம் மனக்கற்பித மன்றி யுண்மையில் பவபந்த மில்லை. வாயுதானே ஆகாசத்தில் மேகங்களைச் சேர்த்துப் பின் விலக்கிவிடுதல் போலும், மனுஷ்யன் கயிற்றுற் பசுவைக் கட்டிப் பின் னவிழ்த்துவிடு தல் போலும், மனம் முக்குணங்களில் ரஜஸ்தமோகுணங் களைச் சேர்ந்ததால் மலினமாகி, தேகாதி ஸர்வ விஷயங்களி லும் புருஷனுக்கு ராகம் (ஆசை) உண்டாக்கி பந்தத்தை யும், ரஜஸ்தமஸின்றிய சுத்தஸத்வத்தை யனுசரித்ததால் வந்த அவ்விஷயங்களை விஷம்போ லகற்றும் விராகத்தாலும், விவேகத்தாலும் நிர்மலமாய் மோக்ஷத்தையுந் தருங் கார ணமா யிருத்தலால், புத்திமானை முமுக்ஷு அவ்விவேக வைராக்கிய மிரண்டையும் முன்னம் திடமாயடையவேண் டும். மனம் என்னும் நாமமுள்ள மகா வியாக்ரமொன்று (ஓர்புலி), விஷயமாகின்ற மகாரண்யப் பிரதேசத்தில் எப் போதும் சஞ்சரிக்கின்றதால் சாதுக்களான முமுக்ஷுக்கள் அம்மார்க்கமாய்ப் போகவே வேண்டாம். ஜீவனுக்கு ஸ்தூல சூக்ஷ்ம விஷயங்க ளனைத்தையும், சரீர வர்ண ஆசிரம ஜாதி

பேதங்களையும், குணம் கிரியை ஹேது பலன் இவைகளையும் மனமே யெப்போதுந் தோற்றுவிக்கின்றது. இவ்வற்ப மனம் அசங்க சித்ரூப வஸ்துவை மோகிப்பித்து, தேக இந்திரியப் பிராண குணங்களாற் பந்திப்பித்து, தன்னாற் செய்யப் பட்ட கர்மபல போகத்தில் நான், எனது எனவே சர்வதா பிரமிக்கச் செய்கிறது. அத்தியாச தோஷத்தால் மனமே புருஷனுக்கிப் பொய்யான சம்சார பந்தத்தைக் கற்பிக்கின் றது. ராஜஸ, தாமஸகுண தோஷங்களுடன் கூடின அவி வேகிகட் கிதுவே ஜனனமாதி துக்கங் கொடுக்கும் மூலகார ணம். வாயுவால் மேகமண்டலம் சுழல்வதுபோல மனதால் இஜ்ஜக மனைத்தும் பிரமைகொண்டு சுற்றுகின்ற தல்லவா! இதனாலேயே தத்துவவித்துக்களான பண்டிதர்கள் மனத் தையே அவித்தையென்பர். ஆகையால் முமுக்ஷு, தன் பிரயத்தனத்தால் இம்மனதைச் சோதிக்கவேண்டும். இது சோதனை செய்யப்பட்டு சுத்தமாம்போது மோக்ஷம் கர தலக் கனிபோலாகும். மோக்ஷமாத்திரத்திலுள்ள ஆசை யால் இதர விஷயாசையை நிர்மூல மாக்கி சர்வ கர்மங்களை யும் துறந்து சிரத்தையோடு நிரந்தரம் சிரவணாதி நிஷ்டனா யுள்ளவனே மனத்தின் சஞ்சல சுபாவத்தை நிவிருத்திப்பன். ஆதியந்த முள்ளதாய், பரிணாமியாய், துக்காத்மகமாய், திரு சிய விஷயமா யிருத்தலின் இம்மனோமயகோசமும், திரஷ்டா வாய்ப் பரமமா யுள்ள ஆத்மாவாகாது.

பஞ்ச ஞானேந்திரியங்களுடன் கூடிய புத்தியே விஞ் ஞானமயகோசம்; இது புருஷனுக்கு சம்சார காரணமாய், பிரகிருதி விகாரமாய், அனாதியாய், சித்பிரதிபிம்பத்தைச் சார்ந்து சகல விவகாரங்களையும் நிர்வகிக்கும் அகங்கார சுபாவனான ஜீவரூபமாய் விருத்தியோடு கூடிய கர்த்தாவாய்

ஞானக்கிரியைக ளுள்ளதாய், சர்வதா தேகேந்திரியாதிகளை நானென்றும் அவற்றின் ஆசிரம, தர்ம, கர்ம, குணங்களை என்னதென்றும் மிகவும் அபிமானித்து, பூர்வவாசனைக்குத் தக்கபடி புண்ய பாப கர்மங்களைச் செய்து, அக்கர்மானுசார மாய் ஊர்த்துவ அதோ லோகங்களிற் போவதும் வருவதுமா யலைந்து திரிந்து நானு விசித்திர யோனிகளிற்கூடி, ஜாக்ர ஸ்வப்னாதி யவஸ்தைக ளுற்று, சுகதுக்கங்களாகிற அக்கர்ம பல போகங்களைப் புஜிக்கின்றது. இவ்விஞ்ஞானமயாதி கோசங்கட்குள் ஹிருதயத்திற் கூடஸ்தனாய், சுயஞ்ஜோதி யாய் ஸ்புரித்து (விளங்கி)க் கொண்டிருக்கும் ஆத்மா, சுபாவ மாகவே ஏக சத்திய சர்வாத்மக பரிபூர்ண நிர்விகார பரமாத் மாவா யிருந்தும், தன் சந்நிதான சாமீப்ய விசேஷத்தால் மிகவும் பிரகாசித்து நெருங்கின உபாதியா யிருக்கும் இவ் விஞ்ஞானமயகோச புத்தியின் அத்தியாச தாதாத்மியத் தால் (பொய்க் கூட்டுறவால்) மித்யா பரிச்சேத மடைந்து, 'அக் கோசமே நான்' என்று, மண்ணின் வேறாகக் குடத் தைக் காண்பது போலத் தன்னைத் தனக் கன்யமாகவும், கர்த்தா போக்தா வாதியாக அயவிகாரமுற்ற நிர்விகார அக்கினி போல அவ் வுபாதியின் தர்மங்களைத் தானடைந்த தாகவும் மதித்து பிரமையினால் சம்சாரத்தை யடை கின்றது."

என்றுரைத்த குருவை நோக்கி, "குருமூர்த்தி! பர மாத்மாவுக்குப் பிராந்தியாலேனும், மற்ற எதனாலேனும் அனாதி ஜீவபாவம் தோன்றிற் றெனின் அவ்வனாதி யுபா திக்கு அந்தமு மில்லையாமே. இன்றெனின் ஜீவபாவமும் நித்தியமாய், சம்சார பந்தமும் நீங்காதே. அங்ஙனமாயின் இதன் மோக்ஷமுற லெங்ஙனம்? இதனை யருள்செய்ய

வேண்டும்" எனக் கேட்ட சிஷ்யனைப் பார்த்து, "வித்வா ஞன சிஷ்யா! நன்ருய்க் கேட்டனை. யான் கூறு முத்த ரத்தை சாவதானமாய்க் கேள். பிராந்தி மோகத்தாற் கற் பிதமான வஸ்துக்களை யெல்லாம் பிரமாணத்தால் நன்ருக விசாரிக்குங்கால், ரஜ்ஜுவில் பிராந்தி காலத்தில் தோன்றி அப் பிராந்தி நாசத்தில் நாசமுறும் சர்ப்பாதிகள் போல, பிராந்தி யுள்ளவரை தோற்றுமவை அப் பிராந்தி நீங்கவே யதார்த்தவஸ்து வாகாது அசத்தாய் நசித்தலால், அசங்க நிஷ்கிரிய நிர்க்குண நிர்விகார நிராகார சச்சிதானந்த பிரத்தியக் ஸாக்ஷி சொரூபமாய், ஆகாசத்தில் நீலாதி போலப் பிரமையா லன்றி யொருவஸ்து சம்பந்தமு முருத ஆத்மா வுக்கு பிராந்தி ஞானத்தால் வந்த புத்தியாகிற அஞ்ஞதி மித்யா வுபாதியின் தாதாத்மிய சம்பந்தத்தால் கானல்ஜலம் போற் கற்பிதமான அசத்ய ஜீவபாவம், அஞ்ஞதியே யாயினும் வஸ்து வாகாமையின், அழுக்கு ஜலத்தி னழுக்கை நீக்கவே நிர்மலமாய்த் தோன்றும் ஜலம் போல, ஆத்மா நாத்ம விவேகத்தால் ஆத்மாவினின்றும் அஞ்ஞதியவித்தை, அதன் காரிய அஹங்காராதி யசத்துபாதிகளை நேதிசெய்து நீக்கும்போது, நிர்மலமாய் சுயம் பிரகாசிக்கும் சுருதி சம்மத பிரஹ்மாத்மைக்கிய சத்திய ஞானத்தா லப் பிராந்தி நசிக் கவே, அஞ்ஞதி பிராகபாவம் அந்தமுறல் போலவும், ஜாக்கி ரத்தில் சொப்பனப்பிராந்தி நஷ்டமாதல் போலவும் சமூலம் (அஞ்ஞதி யவித்தையாதி யுபாதிகளோடு) நாசமடையும். ஆத் மாநாத்ம விவேகத்தா லுண்டான சத்திய ஞானத்தாலன்றி மற்றவையால் அசத்திய ஜீவபாவ பந்த மோக்ஷ முண்டா காததால், நீயும் விவேகித்து அகங்காராதி யசத்துக்களை யகற்று. இந்த விஞ்ஞானமயகோசமும் விகாரியாய்,

ஜடமாய், பரிச்சின்னமாய், திருசியமாய், வியபிசாரியாய் (ஒருபடித்தாயிராததாய்) இருத்தலின் சிரேஷ்டமான ஆத்மா வாகாது. அநித்யம் நித்திய மாகுமா?

பிரஹ்மானந்தப் பிரதிபிம்பத்துடன் கூடின அவித்யா விருத்தியே ஆனந்தமயகோசம். ஜாக்ர ஸ்வப்னங்களி லிஷ்ட முண்டாகும்போது தோன்றிப் பிரியம், மோதம், பிர மோதம் (விஷய தரிசன, லாப, அனுபவத்தால் முறையே யுண்டாகும் சந்தோஷம்) என்னும் பேதத்தால் சகல ஜீவர் களாலும் ஸ்வல்பமா யனுபவிக்கப்பட்டு, சுழுப்தியிற் பிரயத் தன மின்றியே ஆனந்தமயமா யனுதினம் சுகிப்பதால் விசே ஷமா யனுபவிக்கப்படுவதான இவ் வானந்தமய கோசத்தின் பூர்ணானுபவமே ஸாதுக்களாகிய விவேகிகள் சர்வதா அடை வதாம். ஸோபாதியாய், பிரகிருதி விகாரமாய், புண்ணிய காரியமாய், விகார சங்காதங்களி னுட்பட்டதா யிருத்தலின் இவ்வானந்தகோசமும் பரமமான ஆத்மா வாகாது.

இப்பஞ்சகோசங்களையும் ஆத்மா வன்றென நீக்குங் கால் அவ் வபவாததின் முடிவில், இவற்றின் விலக்ஷணமாய் அவஸ்தாத்திரய சாக்ஷியாய், சுயஞ்ஜோதியாய், நிர்விகார நிரஞ்ஜன நித்ய போதானந்த சொரூபமாய், திருசிய கடமு மாகாது அதன் தர்மமு முறாது அதனை யறிந்துகொண் டிருக்கும் தேவதத்தனைப் போல, திருசிய பஞ்சகோசங்களு மாகாது அவற்றின் தர்மமு மடையாது அவற்றை யறிந்து கொண்டு ஏகமாய் மிஞ்சித் தோன்றும் இவ் வாத்மாவையே 'அஹம்' என அறியவேண்டும்" என்றுரைத்த குருவைப் பார்த்து சிஷ்யன்,

"குருவே! இப் பஞ்சகோசங்களும் சுத்த மித்தை யென யூகத்தால் நேதிசெய்து நீக்கிய பின், சுத்த சூன்ய

மன்றி 'நான்' என்று ஒன்றுங் காணேமே. ஆதலால், 'அஹம்' என்றறியத்தக்க ஆத்மவஸ்து வேறேதிருக்கின்றது?" என்று வினவ, குரு, "வித்வானுன சிஷ்யா! நீ விசாரத்தில் ஸமர்த்தனுதலா லுண்மை சொன்னுய். "எது எதனை 'இது' என அறிகின்றதோ அது அதற்கு சாக்ஷி; அறியாதது சாக்ஷி யன்று" என்னும் நியாயத்தால், அஸ்திரமாய் நானு ரூப விகாரத்தோடு கூடிய அஹங்காராதி திருசிய வஸ்துக்களின் பாவத்தை (இருப்பை)யும், அவற்றின் அபாவரூபமான சூன்யத்தையும் இவற்றின் மேல் ஞான சொரூபமா யிருந்தறிவதால் அவற்றின் சாக்ஷியாய், மேல் தன்னை யறிதற் கொன்றின்றித் தன்னைத் தன் தேஜஸால் தான்றனே யறிவதால் தனக்கும் சாக்ஷியா யிருந்து, ஜாக்ர ஸ்வப்ந சுழுப்திகளில் ஏகமாய், பிரத்தியகாத்மாவாய், ஹிருதயத்தில் 'அஹம், அஹம்' என்று ஸதா தானுகவே ஜ்வலித்துக்கொண்டிருக்கும் நித்திய ஞானனந்த ஆத்மாவை அதி சூக்ஷ்ம புத்தியால் 'அஹம்' (நான்) என் றறிவாயாக. மூடன், கட ஜலத்தில் தோன்றும் சூரியப் பிரதிபிம்பத்தை சூரிய னென்பன்; விவேகி, கடம் ஜலம் பிரதிபிம்பம் இவற்றைவிட்டு, ஆகாசத்தில் ஏகமாய்த் தாக்கற்று இம் மூன்றையும் பிரகாசிப்பித்து சுயம் பிரகாசித்துக்கொண் டிருக்கும் சூரியனை யுள்ளபடி யறிவான். அதுபோல, அஞ்ஞனுகிய மூடன், பிராந்தியால் தேகத்தின் கண் புத்தியுபாதியில் தோற்றும் ஆத்மப் பிரதிபிம்ப ஜீவனை அஹமென் றெண்ணுவன்; விவேக ஞான வித்வான், தேகம் புத்தி சிதாபாச மிவற்றைவிட்டு, ஹிருதயாகாசத்தில் ஏகமாய், இவையாவு மறிந்துகொண்டு நித்தியமாய், சர்வத்திலும் நிறைந்து அச்சர்வத்தையும் பிரகாசிப்பித்து

சூக்ஷ்மமாய், வியாபகமாய், ஸத் அஸத்துக்கு விலக்ஷண மாய், உள்வெளியின்றிச் சுயம் பிரகாசித்துக்கொண் டிருக்கும் அகண்ட ஞான சொரூபமான தன் நிஜரூப ஆத்மாவை நன்ருய் விசாரித் தறிந்து, அதனுல் நிர்மலனுய், ஜனன மரணுதிகளற்று ஒன்ருனும் பயமின்றி துக்கரகிதனுய், நிச்சலானந்தகன சொரூப மாகின்ருன். ஸத்ய ஞான அனந்த ஆனந்த ஏகரஸ நித்திய நிரந்தர ஸ்வதஸித்த சுத்த பிரத்தியக் அபின்ன பிரஹ்மத்தை யுள்ளவாறு அகமென அனுபவமா யறிந்த ஞானி மீண்டும் இச்சம்சார மடைதலின்றி அவ்வத்வைதானந்தப் பிரஹ்மமே யாவதால், 'பிரஹ்மாஹம்' என்னும் பிரஹ்மாத்மைக்கிய ஞானமே சம்சார பந்தத்தினின்றும் முக்திபெற முக்கிய காரணம். இந்த பிரஹ்மாத்ம ஞானத்தையன்றி பவபந்தமோக்ஷத்தில் முமுக்ஷுவுக்கு வேறு வழி யில்லை யாதலால், நீயும் 'அஹம் பிரஹ்மம், பிரஹ்மாஹம், பிரஹ்மைவாஹம்' என்று உன்னை யனுபவமா யெப்போது மறி.

இந்தப் பிரஹ்மம், தன்னில் வேறு வஸ்து வின்மையின் பரமாத்வைதமாம். மிருத்காரிய கும்பத்திற்கு மண்ணுருவத்தை யன்றி வேறு ரூப மின்மையின், மண்ணை யன்றி யன்யமாய்க் கடத்தைக் காட்ட எவனும் சமர்த்த னுகாமையால், மோகத்தாற் கற்பிதமாய் நாமமாத்திரமா யிருக்கும் அசத்திய கும்பம் சத்திய மண்மாத்திரமா யதற் கற்பமும் பின்னமின்றி யிருத்தல் போலவும், அதிஷ்டானத்திற் கற்பிதமா யன்யம்போற் ருேற்றும் யாவும், பிராந்தியால் அதிஷ்டானமே யாரோபமெனத் தோன்றலால், ரஜ்ஜு ஸர்ப்பம்போ லுண்மையிலின்றி சுத்தப்பொய்யாகத் தோற்றுமவை, ஆரோப ரஜதம் தன் அதிஷ்டானசுக்திக் கன்ய

யின்றி யச்சுக்தியே யாதல்போ லவ்வதிஷ்டானத்திற் கன்யமின்றி யதிஷ்டானமே யாதல் போலவும், பிராந்த ஞன மூடனுக்கு, அஞ்ஞானப் பிரமையால் நாளுரூப இச் சர்வ ஜகயாய் எதுவெது திருசியமாய் சத்தியம்போற் ரோற்றுகின்றதோ, சாதுவே! யதார்த்த ஞான தசையில் பிரஹ்ம காரியமாய், அவ் வதிஷ்டானப் பிரஹ்மத்திற் கற் பிதமா யன்யமாய் சத்யம்போற் ரோற்றுமச் சர்வமும், பிராந்தியால் அதிஷ்டானப் பிரஹ்மமே யாரோப ஜகமெ னத் தோற்றலால், நாம மாத்ரமாய் அற்பமு மோர் பொரு ளாயிராது சுத்த மித்தையாய், அவ்வதிஷ்டானப் பிரஹ் மத்திற் கன்யமாகாது உதயாஸ்தமன ரஹித அச்சச்சிதா னந்தப் பிரஹ்மமாத்ரமாகவே யிருக்கின்றது. அன்றியும், பிரஹ்மத்திற் கன்யமாய் ஜகம் சத்தியமா யிருக்கிற தெனின், பிரஹ்மத்தின் பரிபூரணத்துவத்திற் கானியும், 'இப்பிர பஞ்ச மனைத்தும் பிரஹ்மமே' என்றுரமாய் அதர்வண சுருதியிற் கூறும் வேதத்திற்கு அப்பிரமாணத்வ ஸித்தி யும், 'சர்வ பூதங்களு மென்னி லில்லை; ஏகனும் யானு மவற்றி லில்லை' என்றுரைத்த சர்வஜ்ஞன ஈசுவரனுக்கு அசத்திய வாதித்வமும் வரும். இம்மூன்று தோஷங்களும் ஸாதுக் களான மகான்களுக்கு சம்மதமாகாது. அதுவுமன்றி சுழுப்தியிலும் ஜகம் சிறிதும் தோன்றுது, முற்கூறியபடி விசாரிக்கில் சொப்பன ஜகம்போல வெறும் பொய்யாய்ப் போதலின், அங்ஙனம் கூறும் மோகமுறு அம்மூடர் வசனம் தூங்குவோன்து பிதற்றல்போ லசத்தியமாம்; அதனுல் பிரஹ்மமே எங்கும் ஏகமாய்ப் பிரகாசிக்கின்றது. அத்விதீயமாய், அரூப அக்கிரிய அவ்யக்த அவ்வியய அப் பிரமேய ஆதியந்தரஹித சத்திய சாந்த பரிசுத்த ஆனந்த

ரஸ சொரூபமாய், மாயையாற் செய்யப்பட்ட சர்வ பேதங்களு மின்றி நித்ய நிரந்தர நிஷ்கள நிரஜ்ஞன நிர்நாம நிர்விகற்ப சுயஞ்ஜோதியாய், ஞாதிரு ஞான ஞேயமென்னுந் திரிபுடிசூன்ய கேவல அகண்ட சின்மாத்ரமாய் சதா பிரகாசிக்கு மிந்த பரப்பிரஹ்ம தத்துவத்தை ஞானிக ளறிகின்றார்கள்.

சிஷ்யனே! பற்றவும் விடவுங் கூடாததாய், மனவாக்கு கட் ககோசரமாய், அப்பிரமேயமாய், ஆதியந்தமற்ற அப்பரிபூர்ணப் பிரஹ்மமே நாமும், நீயும், மற்ற ஜீவர்களும். இவ்வாறு சோதிக்கப்பட்டுத் 'தத்' 'துவம்' பதங்களா லறியப்பட்ட பிரஹ்ம ஜீவர்க்கு, 'தத்துவமஸி' மகாவாக்கியமும், இன்னு மனேக மகாவாக்கியங்களும் முறையே, ஈசுவரனது மாயையாதியும், ஜீவனது பஞ்சகோசங்களு மென்னப்பட்ட கற்பித அசத்திய காரண காரிய வுபாதிகளால் சூரியனும் மின்மினியும், ராஜனும் சேவகனும், சமுத்திரமும் கிணறும், மேருவும் அணுவும் போன்று விரோத தர்மங்களுற்று ஏகத்துவ முறாத வாச்சியார்த்தத்தால் ஐக்கியங் கூறாமல், லக்ஷணைகளில் இங்கு பயனின்றிய ஜகதி, அஜகதி (விட்டது, விடாதது)களை விட்டு ஜகதஜகதி (விட்டுவிடாத) லக்ஷணையால், 'சோயந் தேவதத்த:' என்னும் வாக்கானது விரோத தர்மங்களை நீக்கி அவனது ஏகத்வ மறிவிப்பதுபோல, பிரஹ்மத்திற் கற்பித துவைதத்தை நிஷேதிக்கும் அச்சுருதிப் பிரமாணத்தாலும், தன் விவேக ஞானத்தாலும், ரஜ்ஜுசர்ப்பம், சொப்பனம் போலக் கற்பிதமாய், அசத்தியமான திருசிய விருத்த வுபாதிகளை யிரண்டிடத்தும் 'நேதி, நேதி' என யுக்தி கொண்டு நீக்கவே, முறையே ராஜ்பபார கேடயாதி ராஜசேவகாது உபாதிகளை யகற்றும்போது, ராஜ சேவக ரின்றி மனுஷ்யத்வத்தா லொன்றாவதுபோல,

மையா ஜீவரின்றிச் சின்மாத்ரமாய், அகண்டைகரசமாய் விருத்தமின்றிச் சேஷித்து (மிஞ்சி) நின்ற சுத்தமான லக்ஷ்யார்த்தத்தால் சுபாவ ஐக்கியத்தை நன்ருய்க் கூறுகின்றன. இந்தப் பிரஹ்மாத்மைக்கிய வகண்ட பாவத்தை மஹாத்துக்களான ஞானிகள் பரிசயிப்பதால், நீயும் தேகாதி யசத்துக்களை நானன்றென நன்ரு யபவாதித்து, சொதசித்தமாய் ஆகாசம்போ லதிசூக்ஷ்மமாய் எப்போதும் பிரகாசிக்கும் சத்தியஞானனந்த பரிபூர்ண பிரஹ்மமே நானென்று தெளிவான புத்தியா லுன்னை யறி.

மண்ணி லுண்டாய் மண்மயமாகவே யிருக்கும் கடாதி சகலமும் மண்மாத்ரமே யாதல்போல், சத்ரூபப் பிரஹ்மத்தி லுண்டாய் பிரஹ்மமயமாகவே யிருக்கும் இவ்வுலகனைத்தும் பிரஹ்மமாத்ரமாயும், சொப்பனத்தில் நித்திரையாற் கற்பிக்கப்பட்ட தேச கால விஷய ஞாதுரு முதலிய சர்வமும் மித்தையாதல்போல், இந்த ஜாக்கிரத்திலும் தன்னஞ்ஞானத்தாற் கற்பிக்கப்பட் டன்யம்போற் ருேன்றும் தேக கரண பிராண அகங்காராதி ஜகம் சுத்த மித்தையாயு மிருத்தலால், தன்னி லன்யமா யெதுவுமின்றி சத்தியமாய், ஆத்மாவா யிருக்கும் அதிசாந்த நிர்மல அத்வைதப் பிரஹ்ம மெதுவோ சத்தியமாக, 'அது நீ யாகிருய்' (தத்துவமசி). ஜன்மாதி ஷட்பாவ விகாரங்களும், ஜாதி நீதி, குலகோத்திர, நாம ரூப, குறி குண, குண (இல்ல) தோஷ, ஆதி வியாதிகளும், பசி, தாக சோக மோக ஜரா மரண மென்னும் ஷடூர்மிகளும், தேச கால விஷயாதிகளுமின்றி, சகல வாக்குகளாலு மறியப் படாது ஞானக்கண்ணு லறியப்படுவதாய், யோகிகளது ஹிருதயத்தாற் பாவிக்கப்பட்டு மற்றக் கரணங்களாற் பாவிக்கப் படாததாய், ஸ்தூலபுத்தி அறிதற் கரியதாய், பிராந்தி கற்பித

மித்யாஜகத்திற்கும் தனக்குந் தானே யாசிரயமானதாய், ஜகத் சிருஷ்டி ஸ்திதி நாச ஹேதுவாய், காரிய நாளுரூப சர்வ ஜகத்திற்கும், தனக்கு வேறு காரண மின்றிய பரம காரண மாயினும் காரண காரிய விலக்ஷணமாய், ஸத் அஸத் விலக்ஷணமாய், க்ஷர (மாயா கார்யம்) அக்ஷர (மாயை) விலக்ஷண பரமாக்ஷரமாய், பிரமையால் சுவர்ணம்போல் நாம ரூப குண விகார பேதமாய்த் தோற்றினும் நிர்நாம நிரூப நிர்க்குண நிர்விகார நிர்ப்பேதமாய், நிஸ்தரங்க சமுத்திரம் போல நிச்சலமாய், நித்ய நிஷ்கள நிரஞ்ஜன நிருபம நிர்விகற்ப நித்ய முக்த அவ்யய அநாதி பரிசுத்த பராத்பர பிரத்தியக் அகண்ட பரிபூர்ண சத்திய ஞானகன அனந்த ஆனந்த ஏக ரசமாயுள்ள பிரஹ்ம மெதுவோ சத்தியமாய் 'அது நீ யாகிறாய்' (தத்துவமஸி). இவ்வர்த்தத்தை யுக்தியோடு சூக்ஷ்ம புத்தியால் ஹிருதயத்தில் பின்னமின்றி நிச்சலமாய் எப்போதும் சிந்தைசெய். அதனுல் கரதல ஜலம்போற் சம்சய மின்றிய தத்துவஞான முண்டாகும். சேனுசமூக மத்தியில் அரசனைப்போல் தேகாதி சங்காதங்கட்குள் ஞானமாத்ரமா யிருக்கும் பிரஹ்ம ரூப ஆத்மாவை விவேசித்தறிந்து, அதற்கன்யம்போற் றோன்றும் திருசிய வர்க்கங்களை யவ்வஸ்து வாகவே பிரவிலாபித்து, அவ் வாத்மாவாகவே எப்போது மிருப்பதா லானந்தமுற் றுபசாந்தனுவாய்.

புத்தியாகின்ற குகையிலே ஸத் அஸத்துக்கு விலக்ஷணமான அத்விதீய சத்தியப் பிரஹ்மவஸ்து விருக்கின்றது. எவன் அவ்வஸ்துவாகவே எப்போதும் அந்த ஹிருதய குகையில் ஸ்திரமாய் வசிக்கின்றுனோ அவனுககுப் பின்னர் சரீரகுகையிற் பிரவேசமேயில்லை (பிறப்பில்லை).

இவ்வாறு வஸ்துவை யறிந்தாலும், சம்சார காரண மாய், நான் கர்த்தா, போக்தா என மிகவுங் கெட்டிப்பட்டு மகா பலமுள்ள அநாதி வாசனை அடிக்கடி தடையாகவரும். சுவாத்தும திருஷ்டியால் ஸ்திரமாகத் தன்னிலே நின்று சிறி தும் தவிராத தன் பிரயத்நத்தால் வரும் அவ்வாசனைகளை அப்போதே யடக்கிவிடு. வாசனாக்ஷயத்தைத்தான் வசிஷ் டாதி முனீசுவரர் முக்தி யென்பர். லோகவாசனை, தேக வாசனை, சாஸ்திரவாசனைகளால் ஆத்மஞானம் உள்ளபடி தோன்றாது. அன்றி 'சம்சார காராக்கிருகத்தி (சிறைச் சாலையி)னின்று மோக்ஷமுற (விடுபட) இச்சிப்பவர்க்கு இவ்வா சனாத் திரயமும் இருப்பு விலங்கு' என் றறிஞரு முரைப்ப தால், லோகப்பற்று சாஸ்திரப்பற்றுடன் தேகத்தைப் பிரா ரப்தம் போஷிக்குமென்னுந் திடநிச்சயத்தால் தேகப்பற்றை யும் விடுத்து, மகா தைரியவானாய்ச் சலிப்பின்றி மிக முயற் சித்து, சத்துவ ரஜோ குணங்களால் தமோ குணமும், மிசிர சத்துவத்தால் ரஜசும், சுத்தத்தால் மிசிரமும் போவதால் சுத்தசத்வத்தை யனுசரித்தவனாய், சாவதான சித்தத்தோடு 'தத்துவமஸி' முதலிய மகா வாக்கியங்களால் ஜீவப்பிரஹ்மா பேதங்கூறும் சுருதிப் பிரமாணத்தாலும், தன் யுக்தியாலும், ஸ்வானுபவத்தாலும், 'நான் ஜீவனன்று. புத்தி விருத்தி சாக்ஷியாய் அஹமென அனுபவமாகும் நானே அகண்ட பரி பூர்ணப் பிரஹ்மம்; அந்தப் பிரஹ்மமே நான்' என்னும் அகண்டப் பிரஹ்மாத்மைக்கிய விருத்தி ஞானத்தை, இத் தேகத்தில் அகம் புத்தி சேஷமில்லாது நாசமுறும் வரையி லும், சொப்பனம்போ லிஜ்ஜீவஜகத்தோற்றம் விளங்கும் பரியந்தமும், பிக்ஷையெடுத்தல் ஜலமலவிசர்ஜ்ஜன மன்றி தியானிக் கற்பமும் வேறுவேலையின்மையி னெல்லாக்காலத்

திலும், நித்திரை லோகவார்த்தை சப்தாதிவிஷயங்கள் இவற்றால் சுவாத்தும சிந்தனையை மறத்தலுக்குச் சிறிது மிடங்கொடாமல் நிரந்தரமாய் ஹிருதயத்தில் அனுசந்தானிக்கும் ஏகாத்தும நிஷ்டாபலத்தால், வாசனையற்று வஸ்துவில் திடபுத்தி யுண்டாதற்பொருட்டு, அவ்வாசனாவேகத்தால் ஒவ்வோர்கால முண்மைபோற் றோன்றிவரும் தேகேந்திரியாதிகளில் நான், எனது என்னும் எண்ணமாகின்ற அத்தியாச மலத்தையும் அடியோடு நீக்கிவிடு. ஜலாதி சம்பந்தத்தால் தோன்றும் துர்க்கந்தத்தால் மறைபட்டது போன்றிருக்கும் அகிற்கட்டையின் சுபாவ சுகந்தம், அக்கட்டையை அரைப்பதால் துர்க்கந்தம் நீங்கவே சுயமாய்ப் பிரகாசிப்பதுபோல, இந்நிரந்தர ஞானாப்பியாச மென்னும் அரைத்தலால், மனம் ஆத்மாவில் லயிக்கு மவ்வளவே வாசனையும் நீங்கலால், சந்ததம் ஆத்மாவில் நிஷ்டையால் யோகிகட்கு மனம் நாசமுற, அதனால் ஹிருதயத்துள்ள அநாத்ம பாஹ்ய வாசனைகள் நிச்சேஷமாய் நீங்கவே, அவ்வாசனா ஜாலத்தால் மறைபட்டதுபோன் றிருந்த பரம ஆத்மானுபூதியும் பிரதிபந்தமின்றி சந்தனகந்தம்போல நிர்மலமாய், சுயமே பிரகாசிக்கும்.

சர்வப்பிரகாரத்தாலும் திருசியமாய்த் தோன்றும் அகங்காராதி சர்வமும் பொய்யாய், விகாரியாய், க்ஷணிகமாய்க் காணப்படுவதால் சர்வத்தையு மறிதல் கூடாது ஜடமாயிருத்தலால், இவ்வகங்காராதிகளையும், மனோராஜ சொப்பன சுழுப்திகளில் அடிக்கடி யில்லாததாய்க் காணப்படுமவற்றின் விகாரங்களையும், சுழுப்தியிலும் நீங்காதிருந்தறிவதால் சுருதி சொல்லும்படி ஜன்மநாச மின்றிய நித்தியமாய், சாக்ஷியாய், நிர்விகாரமாய், சத்து அசத்து விலக்ஷணமா

யிருக்கும் 'அஹம்' பதார்த்தப் பிரத்தியகாத்மா வாகா. ஆதலால் மாதா பிதாக்களின் மலத்தாற் பிறந்த மல மாம்ஸ மய பிண்டமான இப்பிணதேகத்தைச் சண்டாளன்போ லதிதூரத்தில் நீக்கி, இத்தூலத்திலும், புத்திகற்பித இத னபிமானத்திலும், இதிலுள்ள நாம ரூப குல கோத்திர ஜாதி ஆசிரமாதிகளிலும், அங்ஙனமே லிங்கதேகத்திலும், கர்த்திருத்துவாதி யதன்தர்மங்களிலும் அகம்புத்தியை விடுத்து சத்தியஞானனந்த ஆத்மாவில் அகம்புத்தி வைத்து, எவ்வஸ்துவில் கண்ணாடியில் நகரப் பிரதிபிம் பம்போ லிஜ்ஜகமெல்லாம் சாயாமாத்திரமாய் விளங்கு கிறதோ அந்த சர்வாதிஷ்டான சுயம்பிரகாசப் பிரஹ்மத் தில் மகாகாசத்தில் கடாகாசத்தைப்போல ஆத்மாவைப் பிர விலாபித்து, 'அது நான்' என்று அபின்னமாய், அரூப அக் கிரிய அத்வைத அகண்ட சச்சிதானந்த சொரூபமான உன் நிஜ ரூபத்தை யனுபவமாயறிந்து, கூத்தாடி தன் நிஜரூப மடைந்து வேஷரூபத்தை நீக்கிவிடுதல்போ லிப்பொய் யுடம்பை விட்டு, இப் பிண்டாண்ட பிரஹ்மாண்டத்தை மல பாண்டம்போல் விசாரித்து அறிவாலகற்றி, அந்நிச்சல அகண்ட பாவத்தால் அகண்ட சுகரூப கேவல பிரஹ்மமாத்ர மாய் சதாகாலமும் சும்மாவிருந்து கிருதகிருத்தியனாய்ப் பரமசாந்தி யடை.

புருஷனுக்கு சம்சாரகாரணமான பிரதிபந்தங்களனேக மிருக்கினும் முதல்விகாரமாக முளைக்கும் அகங்காரமே அவையனைத்திற்கு மாதிகாரணம். அனந்த மகிமை யுள்ள அகண்ட ஏகரச நிர்விகார சத்தியஞானனந்த மூர்த்தியான வுனக்கு இவ்வகங்காரத்தோடு அத்தியாச தாதாத்மிய வசத்தாலேயே ஜன்ம மரண ஜரா துக்காதி சம்

சாரம் வந்தடைந்ததன்றி சுபாவமாகச் சிறிது மில்லாமை யாலும், தேகத்தில் விஷதோஷம் அற்பமிருக்கினும் ஆரோக்கிய மில்லாதது போல அற்பமேனும் அஹங்காரத் தோடு சம்பந்தமிருக்கும்வரை யார்க்கு மெவ்வளவும் மோக்ஷமென்னும் பேச்சு மில்லாததாலும், தமசால் மூடப் பட்ட மூட புத்தியால் முன்பு தோன்றிய அகங்காரமும், அதன் காரிய நாநா விகற்பமும் சேடமின்றி யத்தியந்தம் நசித்தலால் பிரஹ்மாத்மைக்கிய ஸ்திதி பிரதிபந்தமின்றி விளங்கலின், பிரத்தியகாத்ம தத்துவ விவேகத்தால் 'அது நான்' எனவே சுயம்பிரகாச பரிபூர்ண சதானந்த ஸ்வரூப தத்துவத்தை யடைந்து, ராகுவால் விடுபட்டு நிர்மலமாய்ப் பிரகாசிக்கும் பூர்ணசந்திரனைப் போல் அவ்வகங்காரமுக் தன் அதுவாகவே சதா பிரகாசிப்பதாலும், ஹிருதய மாகின்ற பூமியில் மகாபலமுள்ள அகங்காரமென்னு மதி பயங்கர சர்ப்பத்தாற் சுற்றப்பட்டு, அதன் குணத்திரய மென்னும் சிரத்திரயத்தால் எவருமடையாவண்ணம் ரக்ஷிக் கப்படுகின்ற பூர்ணானந்தங் கொடுக்கும் பிரஹ்மானந்த மஹா நிதியை, மகாதைரியத்தோடு சுருதிசம்மத அனுபவஞான மென்னும் பெரிய வாளினால் அதன் கோரமான தலைமூன் றையும் வெட்டி அவ்வகங்கார முத்தலைப்பாம்பை முற்றுந் தொலைத்தவனே அடைந்தனுபவிக்க சமர்த்தனாதலாலும், நீயும், கர்த்தாவாய் விகாரியாய் ஆத்மப்பிரதிபிம்ப முற்று அதனால் சத்துப்போலத் தோன்றும் அகங்காரத்தில் ஆத்ம புத்திவிட்டு, அவ்வகங்காராதிகளிற் சென்ற விருத்தியினை யந்தர்முகமாகத் திருப்பி புஜிப்பவன் தொண்டையி லடைத்த முட்போ லுனக்குத் தீங்குசெய்துவந்த உன் சத்துருவான அகங்காரத்தை ஞானவாளாற் கொன்று,

உன் பரமார்த்தசொரூப மடைந்ததால் இதராசையை விட்டவனும், ஸ்வஸ்வரூப சாம்ராஜ்ய சுகத்தை யிஷ்டப்படி நன்று யனுபவித்துப் பூர்ணாத்மாவாய், அநிர்விகற்பப் பிரஹ்மபதத்தில் எப்போதும் தூஷ்ணீம்பாவ (மௌன) முற்றிரு.

இவ்வாறு அகங்காரம் கொல்லப்பட்டாலும், பின்னர் க்ஷணமாத்திரமேனும் மனதாற் சிந்திக்கப்படின் மீண்டு முயிர்பெற்று, காற்று லலேயுங் கார்காலமேகம்போ லனந்த விக்ஷேபங்கள் செய்யு மாதலாலும், தேகாதி திருசிய விஷயங்களில் நான், எனது முதலிய சிந்தனையுள்ளவனே பாசபத்தனும் அஃதற்றவன் முக்தனு மாகலின், விஷயசிந்தனையே பேதபாவத்தால் பவபந்தஹேது வாகலானும் இவ்விஷயசிந்தனையால் அவ்வகங்கார சத்துருவுக்குக் கொஞ்சமு மிடங்கொடுக்க லாகாது. வாடிய எலுமிச்சமரத்திற்கு விடும் ஜலம்போ லிச்சிந்தனையே அகங்கார முயிர்பெற்றெழுங் காரணமாகும். காரிய விருத்தியால் காரண பீஜமும் விருத்தியாய்க் காரியநாசத்தால் பீஜமும் நசிப்பதைப் பார்த்தலால் முன்னம் காரியத் (சிந்தனத்)தை நீக்கு; காரியசிந்தனை வளர்ந்தாற் காரணஅகமாதி வாசனையும், அவ்வாசனை விருத்தியாற் சிந்தனையும் விருத்தியாகும். அச்சிந்தனையால் பாஹ்யக் கிரியை யுண்டாம். இவ்விரண்டாலும் அவ்வாசனை மிக வளர்ந்து புருஷரனைவர்க்கும் பலவித சம்சாரபந்த முண்டாக்கும். இப்பந்தத்தைச் சேதிக்க முன்சொன்ன மூன்றையும் நசிப்பிக்கவேண்டு மாதலாலும், அதற்கு சர்வதேச, சர்வகால, சர்வாவஸ்தையிலும், 'நானா ரூபமாய்த் தோன்றுமிச் சர்வமும் பிரஹ்மமாத்திரம்' என்னும் திருஷ்டியே மிகநல்ல

உபாயமானதாலும், இந்த பிரஹ்மபாவனையின் பலத்தால் முன்னம் கிரியை யொடுங்க, அதனுற் சிந்தனை (நினைவு)யிறக்க, அதனுல் வாசனை க்ஷயமாகும். அவ்வாசனுக்ஷயமே மோக்ஷ மாகும். இங்ஙனம் 'ஸர்வம் பிரஹ்மம்' என்னும் சத்வாஸனு முதிர்ச்சியால், அருணப் பிரபையால் இருள் போல அகமாதி மலினவாசனைகள் லயித்து, பின் சூரிய னுதிக்கவே இருட்டும், அதன் காரிய சர்வானர்த்தங்களும் சிறிதுமின்றி நசிப்பது போல, அத்வைதானந்தானுபவ முதிக்கவே பந்தமும், அதனுல் வந்த துக்கலேசமுமின்றி முற்றும் நசிப்பதால், நீயும் திருசியமாய்த் தோற்று மிவைகளைப் பிரஹ்மமாத்திர மாய்ப் பிரவிலாபித்து, 'அவ்வானந்தகனப் பிரஹ்மமாத்ரோஹம்' எனும் நிச்சலபாவனையால் பாஹ்யத்திலோ ஆந்தரத்திலோ சர்வகாலமும் சமாதிநிஷ்டனுய்க் கர்மபந்தமுள்ள வரை காலங்கழித்துவா.

இப்பிரஹ்மநிஷ்டையை எக்காலத்தும் கிஞ்சித்தும் விட (நிஷ்டையில் பிரமாதம் பண்ண)க் கூடாது. விடின், அப்பிரமாதமே (நிஷ்டை தவிர்தலே) மிருத்யுவாகு மென்று பிரஹ்மபுத்திரரான * ஸனத்சுஜாதபகவான் விசேஷித்துரைத்திருப்பதன்றி, ஸ்வஸ்வரூபத்தினின்று நழுவும் பிரமாதத்தால் மோகமும், அதனுல் அகம்பாவமும், அதனுல் பந்தமும், அதனுல் துன்பமு முண்டாவதால் ஞானிக்குப் பிரமாதத்தையன்றி வேறு அனர்த்தமில்லை. ஜலத்தினின்றும் விலக்கப்பட்ட பாசி சற்றும் நில்லாது மீண்டு மதனை மறைத்தல் போல, பஹிர்முகப்பட்ட புருஷன் பிராஞ்ஞனு (ஞானியா)யினும் மாயை ஆவரணஞ்செய்தலால், தன்னை மறந்த மறதி விஷய மார்க்கமாய்ச் செல்லு மந்த வித்வானுன

* கவியில் வசிஷ்ட ரெனப்பட்டிருக்கிறது.

பராமுகனையும், வியபிசாரிஸ்திரீ தன்னிடத்தில் மோக முள்ள ஜாரபுருஷனை யலைப்பதுபோல புத்திதோஷங்களாற் பலவாறு ஆட்டிவைக்கும். என்னை ? பிரமாதத்தினுற் சித்தம் சுவசுவரூபமாகின்ற லக்ஷ்யத்தினின்று அற்பம் நழுவு மாயின், கையினின்று நழுவிப் படிக்கட்டின்மேல் விழுந்த பந்தைப்போ லாங்காங்கு பாஹ்யவிஷயங்களிற் பாய்ந்து விழும். பின்னர் அவ்விஷயங்களை நல்லதெனை ஸங்கற்பிக்கும். அதனால் இது நமக்கு வேண்டும் என்னுங் காம முண்டாம். அக்காமத்தாற் புருஷனுக்கு அவ்விஷயானுபவத்திற்குள்ள பிரவிருத்தி யுண்டாகும். அப் பிரவிருத்தியால் ஸ்வரூபநிஷ்டை விட்டுப்போய் அதோகதியி லாழ்ந்து திரும்பி யேறி சொரூபத்தை யடைதலின்றி நாசமுறுவான். ஆதலால் பிரஹ்ம நிஷ்டையிற் செய்யும் பிரமாதத்தையன்றி பிரஹ்மநிஷ்ட விவேகிகட்கு வேறுமிருத்தியு வில்லை. அந் நிரந்தர நிஷ்டையுள்ளவனே சித்திபெறுவா னாதலால், சர்வானர்த்த ஹேதுவான பிரமாதத்தா லுண்டாகும் சங்கற்பத்தைத் தள்ளி சாவதானமாய் அச்சொரூபநிஷ்டனாகவே யிரு.

ஜீவித்திருக்கு மிப்போதே பிரஹ்மாகாரமாயிருக்கும் முக்தியுற்றவ (முக்த)னே, விதேகஸ்திதியிலும் அங்ஙனமே பிரகாசிப்பன். 'பேததிருஷ்டி யற்பமேனுமுள்ளவர்க்கு பீதி யுண்டாம்' என யஜுர்வேத முரைத்தலின், பிரமாதத்தா லெப்போதாவது பரிபூர்ணப் பிரஹ்மத்தில் அணுமாத்ர பேதம் பார்ப்பவன் அப்பின்னதிருஷ்டியாற் பயத்தை யடைவதுடன், நானாவித சுருதி ஸ்மிருதி நியாயங்களால் நிஷேதிக்கப்பட்ட அசத்தான தேகாதி திருசியத்தில் ஆத்ம புத்தி செய்பவன் நிஷித்தகர்மஞ்செய்யும் பாபியைப்போல

துக்கத்தின்மேல் துக்கத்தையே யடைவன். அன்றி சத்தி யானுசந்தானபரன் (மெய்யன்) துக்கவிமுக்தனாய் மகத் துவமடைவதையும், மித்யானுசந்தானபரன் (பொய்யன்) நாசமுறுவதையுங் * அசோர சோரர்களிடத்துப் பார்த்தலா லும், அசத்தாயுள்ள பாஹ்ய விஷய நிரோதத்தால் மனப் பிரசாதமு (தெளிவு)ம், அதனாற் பரமாத்ம தர்சன (ஞான) மும், அதனாற் சம்சார பந்த நாசமும் சித்திப்பதால் பாஹ்ய நிரோதமே மோக்ஷமார்க்க மாதலாலும், சத்தியாசத்திய விவேகியாய் சுருதிப்பிரமாணத்தாற் பரமாத்ம நிர்ணய மறிந்த புத்திமானான எந்த முமுக்ஷு, அசத்தானது தன் நாசஹேது வென்றறிந்தும் பாலன்போ லதனைப்பற்றுவன் ? எவனும் பற்றானாதலாலும், மேன்மேலும் துர்வாசனையையே விருத்தியாக்கிப் பந்தஹேதுவாயுள்ள அசத்திய பாஹ்யானு சந்தானத்தை விட்டு, விவேகியான யதி, 'சத்தியஞானா னந்த பரப்பிரஹ்மைவாஹம்' எனு மனுபூதியால் அவித்யா காரிய சர்வ துக்கங்களையும் நீக்கிப் பரமானந்தங் கொடுக்கும் பிரஹ்மநிஷ்டையில் தற்பரனாயிருக்கவேண்டும். விரோத லக்ஷணமுற்றிருத்தலின், ஜாக்கிரமுள்ளவனுக்குச் சுழுப்தி யும், சுழுப்தனுக்கு ஜாக்கிரமு மில்லாததுபோல, தேகாதி யபிமானமுள்ளவனுக்கு முக்தியும், சராசரங்களி னுள்வெளி யில் தன்னை யேகமாய் அவைகட்குச் சாக்ஷியாயும், அதிஷ் டானமாயும் சூக்ஷ்மமான தன்மனத்தாற் பார்க்கும் சர்வாத்ம பாவத்தினால் சர்வோபாதிகளையும் நீக்கி அகண்ட பரிபூரண மாயிருப்பவனே முக்தனாகலின் அம்முக்தனுக்குத் தேகாதி

* களவில் சம்சயமுள்ளவன் கைகளிற் காய்ந்த விரும்பைக் கொடுக்க, எடுத்தால் தகிக்க இன்றேல் சுகமுறுகின்றனன். (சாந்தோக்கியம்).

யபிமானமு மில்லை. இச்சர்வாத்மபாவத்தை யன்றி சர்வப் பிரகாரத்தாலும் பவபந்த மோக்ஷத்திற்கு வேறுவழி யெதுவு மின்று. சர்வாத்மபாவமோ சதாகாலமும் ஆத்மாவில் நிஷ்டையால் திருசியத்தைப் பற்று தகற்றுவதால் ஸித்தி யாகும். தேகாத்ம புத்தியோடு பாஹ்ய விஷயானுபவத் தில் ஆசையுள்ள மனமுடையவனாய் அதற்கான கிரியை களையே எப்போதுஞ் செய்துகொண்டிருப்பவனுக்கு எவ் வாறு திருசியத்தை யகற்றக் கூடும்? கூடாதாகலின், ஸர்வ தர்ம கர்ம விஷயங்களையுந் துறந்து, தத்வஜ்ஞனாய், நிரந்தர மாத்மநிஷ்டாபரனாய், சதானந்தத்தி லாசக்தியுள்ள மன துடையவனுக்கே பிரயத்தனத்தால் திருசியநீக்கங் கூடும். இவ்வாறு திருசியத்தை நீக்கி சந்ததமும் சர்வாத்மபாவம் சித்தித்தற்பொருட்டே 'சாந்தோதாந்த:' எனும் சுருதி, சாந்தராய யதிகட்கு சிரவணாதி கர்மஞ் செய்தபின் சர்வதா நிர்விகற்பசமாதியை விதிக்கின்றது. ஆதலால் அந் நிச்சல நிர்விகற்பசமாதி யடைந்தவனன்றி, அனந்தகோடி ஜன்மாந்தர வாசனையுள்ளவன் எவ்வித பண்டிதனாயினும் அகங்காராதி திருசியநாசஞ் செய்ய ஒருபோதும் சக்திய மாகாது.

ஆவரணசக்தியின் பலத்தினால் விக்ஷேபசக்தி அஞ்ஞ னும் புருஷனை மோககாரணமாம் இவ்வகங்காரத்தோடு கூட்டிவைத்து அதனது குணங்களால் விருதாவாய்ப் பேய் போ லாட்டிவைக்கின்றதாலும், இவ்வாவரணம் நசிக்கின் ஆத்மா சம்சயாதிப் பிரதிபந்த ரகிதமாய் சுயம்பிரகாசிக்கும்; விக்ஷேபமு மில்லாமற்போம்; இருக்கினும் சுத்தப்பொய் யாகவே தோற்றிக்கொண்டிருக்கு மாதலாலும், இவ்வாவர ணம் நசியாவிடின் விக்ஷேபமும் நசியா தாதலாலும், க்ஷீரஜல

விபாகம்போலத் திருக்கு திருசிய விபாகத்திலேயே அவ்வா வரணம் நசிக்கு மாதலாலும், ஸ்பஷ்டமான ஞானத்தாற் பிறந்த நல்ல விவேகமே திருக்கு (ஆத்மா) திருசியங் (அனாத்மாக்)களை நன்றாய்ப் பிரித்து அவித்யாகாரிய மோக ரூப பந்தத்தைக் கெடுக்கு மாதலாலும், விவேகியாயுள்ள புருஷன், 'அவித்தையா லுண்டான புத்தியே அய அக்கினி சம்பந்தம்போல சத்ரூப ஆத்மாவோடு மித்யாதாதாத் மியமுற்று ஞாதுரு ஞான ஞேயப் பிரபஞ்சாகாரமாய் விஜிரும்பித்தலின், சித்தப்பிரமண மனோரத சொப்பன மிவைகளிற் போலக் காணப்படுமவை அசத்ய மாவதோடு பிரகிருதி விகாரமான இவ்வகங்காராதி தேகாந்தமா யுள்ள வையும், மற்றுந் திருசியமாய சர்வவிஷயங்களும் க்ஷணத் தில் நானா விகாரமுறுவன; சத்திய ஆத்மா ஓர்காலும் விகாரமுறாது. சதசத்விலக்ஷணமாய், புத்தியாதிசாக்ஷி யாய், 'அகம்' பத லக்ஷ்யார்த்தமா யிருக்கும் இவ்வேக நித் யாத்வைத அகண்ட ஞான பிரத்தியகாத்மா, ஸதானந்தகன பரமாத்மாவே' என்றிவ்வாறு விவேகத்தால் சத்ய(ஆத்மா) அசத்தியங் (அனாத்மாக்)களைப் பகுத்து அதில் சத்திய ஆத் மாவை நிச்சயித்துத் தன் ஞானதிருஷ்டியால் 'இந்த நானே அகண்ட ஞான பரப்பிரஹ்ம சொரூபம்' என்றனுபவமாய்க் காணுந் தன் ஆத்மதரிசனத்தால், ஆவரணமும், மித்யா ஞானமும், விக்ஷேபத்தால் வந்த துக்கமனைத்தும் ரஜ்ஜுதரி சனத்தில் நிவிருத்தியாவதைப்போல நிவிருத்தியாகலின், இவற்றினின்றும் முக்தனாய்த் தானே பரம உபசாந்தி யடை கின்றான்; இங்ஙனம் நிர்விகற்பசமாதியால் அத்வைதாத் மாவை எப்போது தரிசிக்கின்றானோ அப்போதுதான் அஞ்ஞானமும், அதன துகாரிய ஹிருதயக்கிரந்தியும்

நிச்சேஷமாய் நசிக்கும். இவ்வாறு பரஜீவைக்ய ஞானக் கினியால் அவித்யாரண்யம் சேஷமின்றி நசித்தபின் அத்வைதாத்மரூப மடைந்துள்ள அம்முக்தனுக்குப் பவபீஜம் வேறேதிருக்கின்றது. இன்மையின் புனர்ஜன்மமரணரூப சம்சாரமின்று. ஆதலின் விவேகி, சம்சாரபந்த மோக்ஷத்தின் பொருட்டு அவசியம் ஆத்ம தத்வத்தை யறியவேண்டும்.

இந்நிர்விகற்ப பரமாத்வைதாத்மாவில் புத்தியின் தோஷத்தாலேயே தோன்றும் நீ, நான், இது முதலிய கற்பனாவிகற்பங்களனைத்தும் சமாதியில் பிரஹ்மானுபவத்தா லபாவமாம். அன்றி உபாதிபேதத்தாற் பின்னனாய்க் காணப்படுந் தானே உபாதியற்றால் ஏகனாய்ப் பிரகாசித்தலின், இவ்விகற்போபாதி லயித்தற்பொருட்டு சதா சமாதிநிஷ்டனாதல் வேண்டும். இவ்வேகநிஷ்டையால் பிரஹ்மத்தி லாசக்தியுள்ள புருஷன் அப்பிரஹ்மத்தை நிச்சலமா யெப்போதும் தியானிக்கும் பிரஹ்மானுசந்தானபலத்தால், புழு சர்வ காரியங்களையும் விட்டுக் குளவியை சதா தியானித்துக் குளவியே யாவதுபோல அப்பரமாத்ம சொரூபமே யாகிறான். இங்ஙனம் நிரந்தரம் செய்யும் பிரஹ்மாப்பியாச பலத்தால், புடம் வைத்தலாற் களங்கமற்று சுத்தமான தன் சுபாவகுண மடையும் சுவர்ணம் போல, சத்வ ரஜஸ் தமோ குணங்களாம் மலத்தை விட்டுத் தன் சுத்தமான சுபாவமுற் றிவ்வாறு பரிபக்குவமான மனம் எப்போது பிரஹ்மத்தில் லீனமா (அப்பிலுப்பென அம்மயமாய் லயிக்) கின்றதோ, அப்போதுதான் அத்வைதானந்த ரசானுபவத்திற் கேதுவான நிர்விகற்பசமாதி ஸித்தியாகும். அச்சமாதியால் ஸமஸ்த வாசனாக்கிரந்தியும் ஸர்வகர்மங்களும் நசிப்பதோடு தன் பிரயத்நமின்றியே உள்ளிலும்,

வெளியிலும், எவ்விடத்தும், எக்காலத்தும் சொரூபப்பிரகாசம் சுயமே யனுபவமாகும். இவ்வாறு சமாதியா லதிசூக்ஷ்மமான விருத்தியொன்றால் அவ்வதிசூக்ஷ்மப்ரஹ்மம், அதிசூக்ஷ்ம புத்திமான்களா லனுபவமா யறியப்படுமே யல்லாமல், ஸ்தூல திருஷ்டியால் அறிவதற் கெவராலும் சக்கியமாகாது. அங்ஙனமே சாந்தி, தாந்தி, உபரதி, திதிக்ஷை யோடுங் கூடின யதி, சதா சமாதிநிஷ்டையால் தன் சர்வாத்மபாவ மடைந்து அவித்யாந்தகாரத்தா லுண்டான ஸமஸ்தவிகற்பங்களையு மகற்றி நிஷ்கிரிய நிர்விகற்பனாய் பிரஹ்மாகாரமாகவே யெப்போதும் சுகிப்பன். இங்ஙனம் சப்தாதி பாஹ்யவிஷயங்கள், சுரோத்திராதி யிந்திரியங்கள் மன மிவற்றைத் தானாகிற ஞானாத்மாவிற் பிரவிலாபித்து நிர்விகற்பசமாதி யடைந்தவர் எவரோ, அவர்களே சம்சார பாசபந்தத்தினின்று முக்தராவரன்றிப் பரோக்ஷஞானம் பேசு மேனையோர் ஒருபோதும் முக்தராகார். இந் நிர்விகற்பசமாதி யொன்றால் நிச்சயமாக பிரஹ்ம சொரூபத்தைப் பிரதிபந்தமின்றி ஸ்பஷ்டமா யறியலாம். அஃதின்றேல் சதா மனவிருத்தி சஞ்சலிப்பதால் இதரவிருத்திகளைச் சாரும். ஆதலால், இந்திரியமனங்களை யடக்கி சந்ததமும் நின்னாத்மாவில் நிஷ்டையுடையவனாய், அவ்வேகாத்ம தரிசனத்தால் காரியஸஹித அவித்தியாந்தகாரத்தை யசேடம் நாசஞ்செய்து அவ்வாத்மாவாகவே எப்போது மிரு. சிரவணத்தில் மனனம் நூறு மடங்கும், அதில் நிதித்யாசனம் லக்ஷம் பங்கும் பலாதிக்ய முள்ளது. நிர்விகற்பசமாதியாற் பெறும் பலத்திற் கோரளவே யின்று.

இச்சமாதியோகத்திற்கு வாக்குமௌனம், அபரிக்கிரகம் (ஏதும் வாங்காமை), நிராசை, கிரியையின்மை, எப்

போதும் ஏகாந்தவாசம் என்னு மிவையெல்லாம் ஆரம்ப மார்க்கம். ஏகாந்தவாசத்தால் இந்திரிய மடங்க, அதனால் மனமடங்க, அம்மன நிரோதத்தால் அஹமாதி வாசனை யற்று சதா நிச்சலப் பிரஹ்மானந்த ரசானுபவ முறுவதால், யோகி யெப்போதும் தன் பிரயத்தனத்தாற் சித்தநிரோ தஞ் செய்யவேண்டும். முன்னம் வாக்கை மனதிலும், மனதை புத்தியிலும், அப் புத்தியை சாக்ஷியிலும் அடக்கி அச்சாக்ஷியைப் பரிபூர்ண நிர்விகற்ப பிரஹ்மமாக அறிவ தாற் பரமசாந்தி யடை. தேக இந்திரிய பிராண மனோ புத்தியாதிகளில் சித்தம் எவ்வுபாதியுடன் சேருமோ, தியானியும் அம்மயமேயாய் சுகமுறுன். ஆதலால் அச்சித்த நிவிருத்தியின்பொருட்டு அவையனைத்தையு மகற்றிப் பிரஹ்மத்தில் சாந்தியுறுவதே சதானந்தம்.

விரக்தியுற்றவனே மோக்ஷேச்சையால் பிரஹ்மநிஷ்டையை யடைந்து அகங்காராதிகளோடுள்ள அகப்பற்றை யும், பாஹ்யவிஷயங்களோடுள்ள புறப்பற்றையும் ஒழிக்க சமர்த்தனுகையால் அவனுக்கே அகத்துறவு, புறத்துறவு இரண்டும் ஸித்திக்கும். அன்றி அத்தியந்த வைராக்கிய முற்ற விரக்தனே சமாதியையும், சமாதியுற்றவன் திடஞா னத்தையும், அந்தத்தத்துவஞானி முக்தியையும், முக்தன் நித்தியானந்தத்தையும் அடைதலின், மோக்ஷகாந்தையைக் கூடி சுகமனுபவிக்க விரக்தியே முக்கிய மார்க்கம். இதனை யன்றி சுகமனுடைவிக்குங் காரணம் எங்குங் காணேம். இவ் வைராக்கியம் அதிசுத்த ஆத்மஞானத்தோடு சேர்ந்தால் அவசியம் மோக்ஷசாம்ராஜ்யசுக மளிக்கும். பக்ஷிக்குள்ள பக்ஷத்துவயம்போல மோக்ஷஉப்பரிகை (மாடி)யி லேறப் புருஷனுக்கு அத்தியாவசியகமான வைராக்கியம், ஞானம்

என்னுமிரண்டில் ஒன்றின்றேனும் முக்தி சித்தியாது. ஆத லின் நாசஹேதுவான விஷசம விஷயத்திலுள்ள ஆசையை யறுத்து, ஜாதிகுலஆசிரமத்தி லபிமானத்தையும், சர்வ கர்மங்களையுந் தூரத் தள்ளி, இவ்வஸத்திய தேகாதிகளில் அகம்புத்தி விட்டு, வாஸ்தவத்தில் நீ சாக்ஷியாய், நிர்மலாத் வைதப் பிரஹ்மமாகவே யிருக்கிற யாதலால் உன்னாத்மாவி லேயே சதா நாட்டம் வைத்திரு.

சர்வசாக்ஷியாய் சுயஞ்ஜோதியா யுள்ள இந்தப் பிர ஹ்மரூபாத்மா விஞ்ஞானமயகோசத்தில் 'அஹம், அஹம்' எனவே யனவரதம் பிரகாசித்தும் பஞ்சகோசவிலக்ஷண மாய், 'அகம்' அனுபவத்தால் லக்ஷிதமான நித்யா பரோக்ஷ ஆத்மசொரூபமாத்ரமாய் விளங்கும். இந்த லக்ஷியப்பிரஹ்மத்தில் இருதயத்தை ஸ்திரமாயிருத்தி பாஹ்யேந்திரியங்களை யதனதன் கோளக (ஸ்தான)த்திலே யே யமர்த்தி, சரீரத்தை யசையாமல் அதில் உதாஸீன புத்தியோடு, 'அஹம்பிரஹ்மாஸ்மி, பிரஹ்மைவாஹம்' என் னும் இதர (விஜாதீய)விருத்தியின்றிய பிரஹ்மாத்மைக்கிய அகண்டாகார தன்மயாவிச்சின்ன சஜாதீய விருத்திப்பழக் கத்தால் மனதை மெல்ல மெல்ல நிச்சலமாக்கி, ஆத்மபரைக் கிய பூர்ணானுபவத்தை நன்றாயறிந்தவனாய், அப்பிரஹ்மா னந்தரசத்தை சதா சந்தோஷமாய்ப் பானம்பண்ணு. துச்ச மான மற்ற தேகாதி யனாத்மப்பிரபஞ்ச சிந்தனையால் என்ன பிரயோஜனம்? ஆதலால், சர்வதுக்ககாரணமாய் ஹீனமான இவ்வனாத்மசிந்தனை விட்டு, தானாம் ஆனந்தாத் மாவை 'நான்' எனத் திடமாயறிந்து அகங்காராதிகளில் அஹம்புத்தி யகற்றி, கடபடாதிகளிற்போ லவற்றி லுதாசீன னாய் மோக்ஷஹேதுவான ஆத்மசிந்தனையே அனிசம் செய்.

க்டம், குசூலம் (குதிர்), ஊசி முதலான பின்னோபாதி யறின் ஆகாசம் ஒன்ருயிருத்தல் போலும், ஒன்றில் பிராந்தி யாற் கற்பிக்கப்பட்ட வஸ்து பிராந்தி நாசத்தில் ரஜ்ஜு ஸர்ப்பம்போல் அதில் வேருகாது அவ்வஸ்துவே யாதல் போலும், ஜலத்தில் பின்னமாய்த் தோன்றும், அலை, நுரை, குமிழி, சுழி முதலியன விசாரிக்கில் ஒரே ஜலமயமா யிருத்தல் போலும், கட கலச கும்பர்திகள் மண்ணினும் பின்ன மாகாது அம்மண்ணே யாதல்போலும், தன் அஞ்ஞானகற்பித தேக இந்திரிய பிராண மன அகங்காராதி பின்னவுபாதிக ளற்று மகாகாசம்போ லேகபூர்ணமாய் விளங்கும் சச்சிதானந்த பரிசுத்தப் பிரஹ்ம ரூபாத்மாவில், மாயாமத்யத்தைப் பானம் பண்ணி அம்மயக்கத்தால் மயங்கியுள்ள மூடர்கள் நான், நீ, அதுவெனப் பலவிதமாய்க் க்ண்டு பிதற்றும் பிராந்திகற்பித தேகாதி அகங்காராந்தமும் மற்றும் மனோவாக்கா லறியப்படும் சுத்தமித்தையான பிரஹ்மாதி ஸ்தம்பாந்தமாய்க் காணப்பட்ட ஜகமனைத்தும் அவ்வாத்மாவினும் பின்னமாகாது பிரகிருதி விலக்ஷண அச்சத்ரூப ஆத்மாவேயாதலால், அகண்டைகரச சித்ரூப பரமாத்மாவான தானே கிழக்கு மேற்கு தெற்கு வடக்கு உள் வெளி மேல் கீழ் எங்குமா யிருப்பதன்றி பிரஹ்மா விஷ்ணு சிவன் இந்திரன் தேவர் மனிதர் முதல் மற்றெல்லாம். மிகச் சொல்வானேன்? சுருதியே மித்யாத்யாசத்தை நீக்க, 'துவைதமே யில்லை' யென்றும், 'ஏகமேவாத்விதீயம் பிரஹ்மம்'. என்றும் சொல்வதால் ஈசுவரனும், ஜீவகளும், பரமாணு பரியந்த ஜகத்தும் பிரஹ்மமாத்ரம். ஆகாசம்போல நிர்மல மாய், பாஹ்யாந்தரமின்றி நிர்விகற்ப நிர்விகார நிச்சல நிரவதி (எல்லையற்ற) நிர்ப்பின்ன அத்வைதப் பிரஹ்மமே

தானும். இனி யறியவேண்டுவ தென்ன இருக்கிறது ? 'புருஷன் சவமயமான தேகத்தை நான் என்றறியும்வரை அசுத்தனாய், ஜனன மரண வியாதி முதலிய நானாவித துக்கங்கட்கே யிடமாவன்' என்றும், 'தன்னில் பிராந்தியாற் கற்பிக்கப்பட்டுத் தோற்றும் சர்வ வஸ்துக்களையும் நீக்கித் தன்னை யதிசுத்த அசல சிவமயமாய் அறியும்போது தானே நிஷ்கிரிய பூர்ணாத்வைத பரப்பிரஹ்மமாய் விமுக்தனாவன்' என்றும், சுருதி யுரைப்பதன்றி, இந்தப் 'பிரஹ்மைவாஹம்' என்னும் மகத்ஞானமுற்ற ஞானிகளும் பாஹ்யமுற்றும் விட்டு சச்சிதானந்த ஏகரசப்பிரஹ்மமாகவே பிரகாசிப்பதுண்மையாதலால், நீயும் மலமய ஸ்தூலதேகத்திலும், வாயுவைப்போற் சலிக்கும் லிங்கதேகத்திலும் நான் என்னும் ஆத்மாபிமானம் விட்டு வேதங்களால் ஸ்துதிக்கப்பட்ட 'நித்யானந்த சொரூபமே தான்' என்று சலிப்பின்றிப் பரிசயித்து அப்பிரஹ்மாகாரமாகவே எப்போது மிரு.

'துவைதம் மாயாமாத்ரம்; அத்வைதமே பரமார்த்தம்' என்று சுருதியே நேரா யுரைப்பதாலும், சித்தத்தாற் கற்பிக்கப்பட்ட பேத (விகற்ப)ங்கள் சித்தம் லயித்து சுகமயமாயுள்ள சுழுப்தியிலேயே யில்லாமை யனுபவமாதலாலும், சர்ப்பம், ஜலம் முதலிய கற்பித வஸ்துக்கள் காலத்திரயத்திலும் வேறின்றி அதிஷ்டான ரஜ்ஜு, மருபூமி முதலனவே யிருப்பதை விவேகிகள் காண்டலாலும், மனோவிருத்தி ஆத்மாகாரமாய் நிர்விகற்ப பரமாத்மாவில் சமாதியுற்றக்கால் விகற்ப மொன்றுமே காணாமையாலும், மனோபிராந்தியாற் பிரபஞ்சரூபமாய்க் காணப்பட்ட இவ்விகற்ப ஜாலங்கள், உண்மையுணருங்கால், சத்தியமின்றி அசத்தியமாய் பிரஹ்ம மாத்ரமே யிருப்பதால் ஞாதிரு ஞான ஞேய சூன்ய

மாய், தேஜசில் இருட்டுப்போல விகற்பப் பிராந்திக்கு மூல (காரண)மான அஞ்ஞானாந்தகாரம் லயிக்குமிடமாய், கற்பாந்த சமுத்திரம்போ லேகபரிபூர்ணமாய் நிறைந்துள்ள நிர்மல நிஷ்கிரிய நிர்விசேஷ நிர்விகார நிராகார அத்வைதப் பிரஹ்ம வஸ்துவில், பேதமென்னும் பேச்சுக்கே யிடமில்லாதபோது பேதம் எங்கிருக்கும்? அன்றி நித்திய ஞானானந்த நிருபம நிச்சங்க நிஷ்கள நிஷ்கிரிய நிர்விகற்ப நிர்க்குண நிர்விகார நிரூப நிர்நாமமாய், பந்தமில் நித்யமுக்தமாய், ஆகாசசமானமாய், சமானரஹிதமாய், பிரகிருதி (காரணம்) விகிருதி (காரியம்) அற்றதாய், பாவனாதீதமாய், வேதாந்தப் பிரமாணத்தால் ஸித்திப்பதாய், ஹிருதயத்திலாவிர்ப்பவிப்பதாய், சதா 'அகம்' என்னும் அனுபவ சொரூபமாய், ஜன்மஜராமரண சூன்யமாய், சாசுவதமாய், சாந்தமாய், சமரசமாய், எல்லையற்ற அபாரமாய், நிஸ்தரங்க சமுத்திரம்போல் நிறைந்துள்ள ஏகபரிபூர்ணப்பிரஹ்மத்தை ஞானியும் சமாதியின்கண் ஹிருதயத்தில் 'அகம்' எனவே யபரோக்ஷமா யனுபவிப்பதால், மீண்டும் சம்சார மார்க்கத்திற் செல்லாதிருத்தற்பொருட்டு ஹிருதயத்தில் தன்மயமாய்ப் பிரகாசிக்கும் சர்வோபாதிகளுமற்ற சச்சிதானந்தாத்வைதப் பிரஹ்மபாவனையால் நிர்விகற்பசமாதியுற்று, பிராந்திகாரணமான சித்தத்தை நாசமாக்கி, பவதுக்க ஆஸ்பத (இருப்பிட)மான ஹிருதய பந்தத்தைப் பேதித்து (பிளந்து), அகண்டானந்தவைபவ ஆத்மானுபவ முற்றவனாய், அதிதுர்லபமாய்க் கிடைத்த புருஷஜன்மத்தை சபலமாக்கு. பிராரப்த பலத்தாற் புருஷனது சாயையைப்போலத் தோற்றின்மாத்திரமாக விளங்கும் சரீரத்தைப் பிணம்போ லதிதூரத்தி லறிவாலகற்றி, அகண்டானந்த

ஆத்மாவைத் தானுகவறிந்து, அந்த சத்ரூப நிர்விகற்பப் பிரஹ்மாக்கினியில் தேகாதி பின்னுேபாதிகளை சமூலம் தகித்து, அவ்வானந்தப்பிரஹ்மத்தில் லயித்த சித்தனுய், நித்யஞானனந்தப் பிரஹ்மமாத்திரமா யிருக்கும் மகாத்மா வாய், தத்வ ஞானியாய், ஜீவன்முக்தனுயுள்ள யோகி அகம் புறமும் அவ்வகண்டானந்தரஸத்தை யனுபவிப்பதன்றி இத்தேகத்தைப் பின்னும் எதனையபேக்ஷித்து எதன் பொருட்டபிமானித்துப் போஷிக்கப்போகின்ருன். பிரா ரப்த பாசத்தாற் கட்டப்பட்ட இஃதிருந்தாலும் போனுலும் பசுவானது கழுத்திலுள்ள மாலையைப்போல லக்ஷியஞ் செய்யான். ஆதலால் நீயும், நித்திய சுத்த ஞானனந்த ஆத்மாவை யடைந்து, இஜ்ஜடமலோபாதியை தூரத்தள்ளி விடு. திரும்பி நினையாதே. வாந்திசெய்த வஸ்துவை யபே க்ஷிப்ப தஸங்கியமல்லவா ?

கானல்ஜல முதலியவற்றில் நிவிருத்தி, பிரவிருத்தியே ஞானுஞ்ஞானங்கட்குப் பலனுதல் போல, ஆத்மஞானத் திற்கு அசத்தியதுக்கநிவிருத்தி, நித்ய திருப்தி, சதா தானுகவே தோன்றும் சமானரகிதானந்தம் இவை பிரயோ ஜனமாயும், அசத்ய துக்கரூப விஷயப்பிரவிருத்தி அஞ் ஞானத்திற்குப் பயனுயும் இருத்தலால், ஞானுஸியால் அஞ் ஞான ஹிருதயக்கிரந்தியை சமூல மறுத்தெறிந்த விஷ யேச்சையின்றிய வித்வான், முன் பிராந்திகாலத்திற் செய்துவந்த நானுவித துச்ச கர்மங்களை எங்ஙனம் பின்னுஞ் செய்வான் ? பிரவிருத்திக்குக் காரணமான விஷயம் யாதிருக் கின்றது ?

வைராக்கியத்திற்கு ஞானமும், ஞானத்திற்கு உபரதி யும், உபரதிக்கு சுவானந்தானுபவத்தாலுண்டாகும் உப

சாந்தியும் பலனு யிருத்தலால், இவற்றில் மேன்மேலுள்ள சாதனங்கள் சித்தியாவிடின் பூர்வபூர்வ சாதனங்கள் நிஷ் பலம். போக்கிய விஷயவாசனை பின்னுண்டாகாமை வைராக்கியத்திற்கும், தேகாதிகளில் அகம்பாவம் என்று மெழும்பாமை ஞானத்திற்கும், நிரந்தராப்பியாசத்தால் பிரஹ்மத்தில் லீனமான மனோவிருத்தி யற்பமும் வெளிப் படாமை உபரதிக்கும் பரமாவதி யாகும்.

ஆத்மப்பிரஹ்மங்கட்கும், பிரபஞ்சப்பிரஹ்மங்கட்கும் உள்ள பேதபுத்தி யென்றுமின்றி, சுருதிபலத்தால் 'தானே பிரஹ்மம்' என்றறிந்து, சுத்தமான பிரஹ்மாத் மைக்கிய ஏகபாவமுற்று, நிர்விகற்ப சின்மாத்திரவிருத்தி யாகிய பிரஜ்ஞையை (சோரநாயகி, ஜாரபுருஷனிடத்திற் போல) பிரஹ்மத்தின்கண் திடமாய் வைத்து, அதிலேயே லீனசித்தனாய், எப்போதும் பிரஹ்மாகாரமாகவே யிருக்கு மதனால் பாஹ்யவிஷயங்கள் விடுபட்டு, சுழுப்த பாலர்களைப் போலப் போகபோக்கியங்க ளன்னியரா லறிபவனாய், நிஷ் கிரிய நிர்விகாரனாய், நிரந்தரானந்தானுபோகியாய், ஜகத்தை மறந்தவன்போல் மனம் லயித்திருப்பினும் எப்போதும் ஜாகரூக (விழிப்புள்ளவ)னும், ஜாக்கிரத்தர்மமில்லாதவனு மாய், சாயைபோற் றொடருந் தேகத்திலும், இந்திரியங்களி லும், இதர வஸ்துக்களிலும் அகமம பாவமில்லாது உதா சீனனாய், சம்சாரதோஷமும் விஷயவாசனையுமற்ற விவேகி யாய், சித்தமிருந்தும் நிச்சிந்தனாய், கலாசகிதனாயும் நிஷ்கள னாய், சென்ற, வரும்கால வஸ்துசிந்தனமின்றித் தற்கால மடைந்தவற்றிற் பிரியாப்பிரிய மில்லாதவனாய், பிரஹ்மா னந்தரசானுபவத்தில் ஆசக்தியுள்ள மனதினால் பாஹ்யாந் தர விஷயஞான மில்லாதவனாய், ஞானபலத்தால், அன்

யோன்ய விலக்ஷணமான குணதோஷங்கள், இஷ்டாநிஷ்டங்கள், சாதுக்கள் துஷ்டர்களாற் செய்யப்படும் பூஜாவமானங்கள் முதலிய துவந்துவங்களில் ஒருவிகாரமுமின்றி சமபாவனுய், நதிப்பிரவாகம் சமுத்திரத்திற் போலத் தன்னை யடைந்த விஷயங்கள் விகாரமுண்டாக்காது தன்மயமாகவே லயிக்கப்பெற்றவனுயுள்ள ஞானியான யதியே பவபந்தமற்ற ஸ்திதப்பிரஜ்ஞனுகிய ஜீவன்முக்தன். அவனே அபார புண்யத்தின் பலனை யனுபவிப்போனும், பூஜ்யனுமாவான். இந்த ஞானிக்கு வஸ்துவின் ஏகத்துவ ஞானத்தாலேயே சர்வ வாசனைகளும் நாசமடைந்ததால் பூர்வ வாசனுவேகத்தாற் பின்னும் சம்சாரமுண்டென் றுரைக்கக் கூடாது. அதிகாமுகனது மனதும் மாதாவிடத்திற் போவதில்லை. அதுபோலப் பூர்ணப் பிரஹ்மானந்தானுபவமுள்ள இவனுக்கும் பூர்வம்போலத் திருசிய சம்சார மில்லவேயில்லை. இருந்தால் பிரஹ்மத்தை யறிந்த ஞானியல்ல; பகிர்முகனே.

'பிரஹ்மைவாஹம்' என்னும் ஞானக்கினியால், ஸ்வப்னத்திற் செய்த புண்ணியபாபங்கள் விழித்தவர்க்கு ஸ்வர்க்க நரகப்பிராப்திக் கேதுவாகாது நசிப்பதுபோல் அனந்த கோடி கல்பங்களாய் ஆர்ஜ்ஜிக்கப்பட்ட சஞ்சிதகர்மங்களும், ஆகாசம்போல் அசங்க உதாஸீனப்பிரஹ்மமாகத் தன்னை யறிந்ததால், கடாதிகளின் சங்கத்தால் ஆகாசத்தில் அவற்றிலுள்ள மத்யாதி வாசனைகள் பற்றுததுபோல ஆகாமியகர்மங்களும், சேராது தகிக்கப்பட்டு நாசமாய்விடும். 'கர்மமுண்டேற் பலனுமுண்டு; இன்றேலில்லை' எனும் நியாயத்தால், கர்மஜன்ய சுகாதிபலானுபவ முள்ளவரை கர்மம் விடாததால், சதா சமாதிநிஷ்டனுன ஞானிக்குச்

சிலசமயம் பாஹ்யப்பிரவிருத்தியும் பலானுபவமும் காணப் படலால், வியாக்கிர (புலி) புத்தியால் விடப்பட்ட பாணம் பசுவென் றறியினும் நில்லாது லக்ஷ்யத்தைச் சேதித்துவிடு வதுபோல ஞானத்திற்குப் பூர்வமே யாரம்பித்த பிராரப்த கருமமும் தன் பலனைக் கொடாதுவிடாததால் ஞானிக்குப் பிராரப்தம் மாத்ர முண்டு; அது அனுபவத்தாலேயே நாச மாம்' என்று மித்யாபிராரப்தத்தை சுருதி சொல்லுகிறது. சொப்பனங் கண்டு விழித்தவன், அச்சொப்பனஜக மடை தலும், அதிலுள்ள மித்யாவிஷயானுபவத்தி லாசையும், அதிற்கண்ட தேகத்தையும், அதற்குபயோகமான பிரபஞ் சத்தையும் ஜாக்கிரத்தின்கண் நான், எனது, இதுவென அறிதலுமின்றி ஜாக்கிரத்திலேயே சுகமாயிருப்பன்; சொப் பனப்பற்றிருக்கின் நித்திரைவிட்டவ னன்று. அதுபோலப் பிரஹ்மாத்மைக்கியமடைந்து இதரத்தைப் பாராது, சொப் பனஸ்மரணம்போல போஜன விசர்ஜ்ஜனாதி செய்தும் உபாதிசங்க விஹீன கேவலப் பிரஹ்மாகாரமாகவே யென்று மிருக்கும் ஞானிகள் நிர்க்குணப்பிரஹ்மமே யாவதால் அவ ருக்குத் திரிவிதமாம்கர்ம மற்பமுமில்லையென்றால் பிராரப் தம் மாத்திர முண்டென்பதெப்படி? நனவுற்றவர்க்குக் கன வுண்டா? கர்மநிர்மிதமான தேகத்திற் கனுசரித்து ஞானிக் குப் பிராரப்த முண்டென்னில், தேகாத்மபுத்தி யிருக்கும் வரை சித்தியாமது, அப்புத்தியை அடியோடு விட்டு 'அஜன், நித்யன், சாச்வதன்' என சுருதி கூறும் கர்மஜன்ய மின்றி யனாதி நிர்மல ஆத்மாகாரமா யிருக்கும் ஞானிக்குப் பிராரப்தகற்பனை யெங்ஙனமிருக்கும்? பிராந்திகற்பித அசத்தியதேகத்திற்குப் பிராரப்தத்தைக் கற்பிப்பதும் பிராந்தியே. கற்பிதபதார்த்தம் எப்படி வஸ்துவாய்ப் பிறங்

திருந்திறக்கும்? இங்ஙனம் எதற்கும் பிராரப்தமின்றெனின் சுருதியே கூறுவானேன் எனின், ஞானத்தால் காரியசகித அஞ்ஞானம் நசித்தபின் ஞானிக்குத் தேகாதி எங்ஙனமிருக்கும்? என்றிவ்வாறு சங்கைசெய்யும் பிராந்தியரு மூடர்க்குச் சமாதானமாக சுருதியும் ஞானிக்கு மித்யாபிராரப்தத்தை பார்ஹ்யதிருஷ்டியால் ஏகதேசம் சொன்னதே யன்றி, ஞானிக்குத் தேகாதிகள் சத்தியமாயுளது என்றங்கீகரிக்கச் சொல்லவில்லை. அவனது திருஷ்டியில் ஆதியந்தரகித பரிபூர்ண நித்ய சத்ய ஞான ஆனந்தகன அக்கிரிய அவிகார அப்பிரமேய அனந்த பிரத்தியக் ஏகரசமாய், தள்ளவுங் கொள்ளவுங் கூடாததாய், அதிசூக்ஷ்மமாய், அகம்புறமெங்கும் நிறைந்து நிராதாரநிர்க்குண நிரஞ்சன நிஷ்கள நிர்விகற்ப சத்தாமாத்ரமாய், இப்படிப்பட்டதென்று மனதால் நிச்சயிக்கவும், வாக்காற் சொல்லவுங் கூடாத (வாங்மன அகோசரமாயுள்ள) ஸ்வதஸித்த சுத்தாத்விதீயப் பிரஹ்மமொன்றே பிரகாசிக்கின்றது. இங்கு நானுவாய்த் தோன்றும் பேதம் சொற்பம்போலும் இல்லவேயில்லை. இவ்வேக ஸ்வரூபத்தை போகத்தையும், போகேச்சையையும் நீக்கி, சாந்தி தாந்திகளோடுங்கூடின மகாத்மாக்களான யதிகள் ஆத்மயோகத்தால்ஹிருதயத்திலறிந்து, பரமானந்த முக்தி பெற்றனர். ஆதலால் புத்திரா! நீயும் தன்மயமான பரமானந்த பரமாத்மாவை, நிச்சலசமாதியாலுண்டாம் ஞானதிருஷ்டியால் சம்சயமின்றிக் கண்டறியின், பின் சிரவணார்த்தத்தில் விகற்பமேயுண்டாகாது. அதனால் மனோகற்பித பேதமோஹத்தை நீக்கி ஞானியாய், முக்தனாய், கிருதார்த்தனாய் ஆகக்கடவாய். சுருதிகளைப் போலவே ஆசாரியரும் சாதாரணமாய்ப் போதிப்பர். பந்தம், மோக்ஷம், பசி, திருப்தி, ரோகம், ஆரோக்

கியமிவற்றைத் தாங்களே யறிவர். மற்ருே ரனுமானிப்பர். அதுபோலப் பரமேசுவரானுக்கிரகத்தாற் கிடைக்கும் தன் னனுபவத்தாலேயே விவேகி பவசாகரத்தைக் கடக்கவேண் டும். இங்ஙனம் தன்னஞ்ஞான கற்பித பந்தத்தின் மோக்ஷ முற்றுச் சச்சிதானந்தாத்மாகாரமாதலில் சுருதி, யுக்தி, குரு வசனம், அகத்திலுள்ள தன்னனுபவம் இவை பிரமாணங் கள்.

[வேதாந்தசாஸ்திரங்களில் சாரமாய்க் கூறியுள்ள சுழுப்தி, ஸ்தாணுபோலுள்ள பிரஹ்மமாகிய என்னில் அன் யம்போலக் காணப்படு மனைத்தும் அணுவுமில்லை; இருப் பவன் நானே எனப் பார்க்கும் வாததிருஷ்டி 1; சொப்பனம், இந்திரஜாலம்போ லென்னி லன்யமாய்த் தோற்று மனைத் தும் மித்தை; நானே சத்தியன் எனக்காணும் மித்யா திருஷ்டி 2; சமுத்திரத்திற் பின்னம்போற்ருேற்றும் பேன, புத்புத, தரங்காதி (நுரை, குமிழி, அலை) யனைத்தும் சமுத் திரமே யாதல்போலும், சொப்பனத்திற் காணப்படு மனைத் தும் அதனைக்காணும் புருஷனே யாதல்போலும், ஸமுத் திரம், புருஷன் போன்ற ஏகசிதாகாசமான என்னில் அன் யம்போற் காணப்படுமனைத்தும் நானேயெனத் தன்மய மாய்ப் பார்க்கும் பிரவிலாபதிருஷ்டி 3; என்னும் இம்மூன் றில் மனதிற்கிசைந்த எதனுலாவது திருசியத்தைத் தள்ளி, திருக்குருவமான அகண்ட நிர்மலாத்வைதப்பிரஹ்மத்தைத் தாஞக அறிந்தவனே முக்தன். *இம்மூன்றும் ஞானசாத னமேயாயினும் தன்மயமாய்க்காணும் பிரவிலாபதிருஷ்டியே ஞானத்தில் சர்வோத்தமஹேது] அதனுல் அகண்டாத்மா

* இத்திருஷ்டித்திரயம் மூலத்திலில்லை; தமிழ்ப்புஸ்த கத்திலிருக்கின்றது.

வாகிய தன்னைத் தன்னனுபவத்தா லறிந்து தன்மயமாய் எப்போதும் நிர்விகற்பனு யிருத்தல் வேண்டும். அதிகம் சொல்வானேன். ஸகல ஜீவர்களும் பிரபஞ்சமும் பிரஹ்மமே. அகண்டாத்வைத அப்பிரஹ்மமாயிருத்தலே மோக்ஷம். சகல வேதாந்த சித்தாந்தத்தின் ரஹஸ்ய மிதுவே; அச்சுருதிகளே யிதிற் பிரமாணம்.''

என்றுரைத்த குருவசனத்தாலும், சுருதிப்பிரமாணத்தாலும், தன் யுக்தியாலும் ஆத்மதத்துவமறிந்து, இந்திரியங்களை யடக்கி, ஏகாக்கிர சித்தனுய், அப்பரமாத்மாவின்கண் நிச்சலசமாதிநிஷ்டனுய்க் கொஞ்சக்கால மிருந்து, பின்னெழுந்து குருவைப் பார்த்து, "குருவே! மகானுபாவா! அதிசாந்தமூர்த்தி! அசங்க நித்யாத்வைதானந்தரஸப் பிரஹ்மசொரூபா! அபார கிருபாசாகரா! நமஸ்காரம். (என்று நமஸ்கரித்துச் சீடன் தன்னனுபவங் கூறுகின்றான்.) தங்கள் கடாக்ஷமாகிற சந்திரிகையால் பவதாபத்தா லுண்டான சிரமந் தீர்ந்து க்ஷணத்தில் அத்வைதானந்தாத்மபதமடைந்தேன். பிரஹ்மாத்மைக்கிய மறிந்ததால் பேதபுத்தி கெட்டது; பிரவிருத்தி யாவும் விட்டது. இது என்றும் இதல்லவென்றும் ஒன்றுந் தெரியவில்லை. சமுத்திரத்திற் சேர்ந்த ஆலங்கட்டியைப் போல பிரஹ்மானந்த சமுத்திரத்தின் அம்சாம்ச லேசலேசத்திற் கலந்து என்புத்தி இன்னதென்றும் இவ்வளவென்றும் அறிதற்கசாத்தியமான அப் பிரஹ்மானந்தசாகரமே யாய்விட்டது. ஆ! ஆ! ஆனந்தாமிருதம் நிரம்பியுள்ள இப் பிரஹ்மானந்த சாகரத்தின் பெருமையை நினைப்பதெப்படி? சொல்வதெப்படி? இப்போது பார்த்த ஜகமனைத்தும் காணவே காணேமே! எங்குபோயிற்றோ? யாரால் நீங்கிற்றோ? எவ்விடத்தில் லயித்ததோ?

இதென்ன அதிசயம்! இவ்வகண்டானந்தம் பூர்ணமாயுள்ள பிரஹ்மானந்த மகாசமுத்திரத்தில் தள்ளவும், கொள்ளவும், பார்க்கவும், கேட்கவும், அறியவும் அன்யமான (விலக்ஷண)பதார்த்த மேதிருக்கின்றது? விலக்ஷணனந்தாத்மாவான நானே யிருக்கிறேன். நான் அசங்கன்; ஸ்தூலசூக்ஷ்மதேகமில்லாதவன்; நாசரஹிதன்; பரமசாந்தன்; அகர்த்தா; அபோக்தா; அவிகாரன்; அக்கிரியன்; திரஷ்டா, சுரோதா, வக்தா, கர்த்தா, போக்தாவல்லாதவன்; இது (அறிபடுபொருள்), அது (அறிபடாப்பொருள்) என்னும் பதார்த்தங்களாகாது அவ்விரண்டையும் பிரகாசிப்பிப்பவன்; பாஹ்யாந்தர சூன்யன்; சமானரஹிதன்; புராணபுருஷன்; அனுதி; நான், நீ, இது, அது என்னுங் கற்பனையற்றவன். ஸர்வபூதங்களிலு மிருப்பவனும், அவற்றி னுட்புறமும் ஞானகாசமாய் நிறைந்து அவற்றிற் கதிஷ்டானபூதனு யிருக்கின்றவனும் நானே. பிரஹ்மாவும், விஷ்ணுவும், ருத்திரனும், ஈசனும், சதாசிவனும் நானே. நான் நிரீசுவரனுய், நிர்மல நிரகங்கார சர்வசாக்ஷியாய், எல்லையற்ற நிரந்தர கேவல அகண்ட பரிபூர்ண சத்ய நித்ய சுத்த புத்த முக்த பரமானந்த ஏகரஸ அத்விதீயப் பிரஹ்மமாகவே யிருக்கிறேன். முன் வேறுய் 'இது' என்று போக்திருபோகபோக்கியங்களாய்க் காணப்பட்ட வனைத்தும் இப்போது நானேயானேன். அகண்டானந்தசாகரனுன என்னில் மாயையாம் வாயுவேகத்தால் நானுவித பிரபஞ்ச அலைகள் உதித்தொடுங்கினுலு மெனக்கென்ன? அனேக தோஷங்களால் தூஷிக்கப்பட்ட மூடர் தம் பிராந்தியாற் காணப்படும் தேகாதி பாவங்களை, ரூப பேத மற்ற காலத்தில் கல்ப வருஷ அயன ருதுவாதிகளைக் கற்பிப்பதுபோல,

நிஷ்கள நிர்விகற்பனுன என்னிடத்திற் கற்பிக்கின்றனர். அதனுல், கானல்ஜலப் பிரவாகத்தால் மருபூமி ஈரமாகாதது போல, அதிஷ்டானமாய், ஆகாசம்போ லெவற்றினும் பற்ருது, ஆதித்தன்போற் பிரகாசிக்கப்பட்டவைகளுக்கு விலக்ஷணனும், பர்வதம்போல் நிச்சலனும், சமுத்திரம் போல் அபாரனுமான எனக்கு ஒரு ஹானியுமில்லை. மேகசம்பந்தமுரு ஆகாசத்தைப்போல் எனக்குத் தேகசம்பந்தமே யில்லையெனில், ஜாக்ர சொப்பன சுழுப்திகளான அதன்தர்ம மெப்படியிருக்கும்? தேகாதி யுபாதிகளே வரும், போகும், கர்மஞ்செய்யும், அவற்றின் பலனை யனுபவிக்கும்; பிறந் திருந்து ஜீர்ணமாய் நசிக்கும். குலபர்வதம்போ லெப்போதும் நிச்சலனுய், நிர்ப்பின்னனுய், இந்திரியம், சித்தம், ரூபம், விகார மின்றி ஆகாசம்போல் நெருங்கி நிறைந்துள்ள பரிபூர்ணனுன நான் கர்மஞ்செய்வதெப்படி? எனக்குப் பிரவிருத்தி யேது? நிவிருத்தி யேது? அக்கர்மபலனுன புண்ய பாப மேது? நிழலைப் பற்றின சீதம் உஷ்ணம், நன்மை தீமை யிவை அதற்கன்யனுன புருஷனைச் சிறிதும் சேராததுபோல, எனக்கும் புண்ணிய பாப மில்லை. சுருதியு மிங்ஙனமே சொல்லுகிறது. கிருகதர்மம் அங்குள்ள தீபத்தை யடையாததுபோல திருசியதர்மங்களொன்றும், அத்திருசியவிலக்ஷணமாய், நிர்விகார உதாஸீன சாக்ஷியான என்னை யடையாது. நான் சூரியன் கர்ம சாக்ஷியா யிருப்பதுபோலத் திருசியப்பிரபஞ்சத்திற்கு சாக்ஷியும், அக்கினி இரும்பினைத் தகிப்பதுபோலப் பிரபஞ்சத்தி லனுஸ்யூதனுய் அதனை விளக்குவிப்பவனும், ரஜ்ஜுஸர்ப்பம்போலப் பொய்யாய்த் தோற்றுமதற் கதிஷ்டானனு மாகிறேன். சுயம்பிரகாசசொரூபனுகிய நான்

ஒன்றைச் செய்பவன், செய்விப்பவன், புஜிப்பவன், புஜிப்பிப்பவன், காண்பவன், காண்பிப்பவ னென்று. மூடர் உபாதிசலனத்தாற் சலிக்கும் சித்பிரதிபிம்பசலனத்தைச் சித்ரூப ஆத்மாவி லேற்றி, நான் கர்த்தா, போக்தா, கெட்டேன் என்பர். சூரியன்போல நிஷ்கிரியனாய், பிம்பபூத ஆத்மாவாமெனக்கு அச்சிதாபாசதர்மங்க ளொன்றுமில்லை. இத்தேகம் ஜலத்திலோ, ஸ்தலத்திலோ புரண்டு கிடக்கட்டும். கடதர்மங்கள் ஆகாசத்தைப்போல அதன்தர்மங்க ளென்னைப் பற்றா. கர்த்திருத்வ, போக்திருத்வ, கலத்வ, ஜடத்வ, மத்தத்வ, பத்தத்வ, முக்தத்வாதி புத்திதர்மங்கள் கேவலாத்வைதப் பிரஹ்மமாகும் எனக்கில்லை. மேகஜாலங்கள் ஆகாசத்தை ஸ்பரிசிக்காததுபோலப் பத்துநூறாயிரங்களா யுண்டாகும் பிரகிருதிதர்மங்களும் ஏகசிதாகாசமான என்னை ஸ்பரிசிக்கா. பிரகிருதிமுதல் ஸ்தூலபரியந்த இப்பிரபஞ்சம் சாயைபோலத் தோற்றமாத்திரமாய் எதில் விளங்குகின்றதோ, ஸர்வாதாரமாய், ஸர்வத்தையும் பிரகாசிப்பிப்பதாய், ஸர்வாத்மாவாய், ஸர்வாகாரமாய், ஸர்வ வியாபியாய், ஸர்வவிலக்ஷணமாய், ஸர்வசூன்யமாய், மாயாவிசேஷங்க ளொன்றுமின்றிப் பிரத்தியக்காய், ஸ்தூலபுத்திவிருத்தியாலறிதற்கரியதாய், ஆகாசதுல்யமாய், ஆதியந்தரஹிதமாய், அதிசூக்ஷ்மமாய், நிச்சல நிஷ்கள நிஷ்கிரிய நிர்விகற்பமாயுள்ளது எதுவோ, அந்த சுத்த கேவல அகண்ட நித்ய சத்ய ஞான அனந்த ஆனந்த அத்விதீயப் பிரஹ்மமே நானாயிருக்கிறேன்.

ஸ்வாமி! மாயையாற் செய்யப்பட்ட ஜன்ம ஜரா மரண சம்சார வன ஸ்வப்நத்திற் பிரமித்து, அதிலுள்ள தாப ஜாலங்களாற் கிலேசமுற்று அகங்காரப்புலியால் மிகவுந்

துன்பமடைந்த என்னைக் கிருபையா லெழுப்பிப் பரமானந் தந் தந்து ரக்ஷித்தீ ரல்லவா! மகானுபாவா! தங்கள் கிருபாப் பிரஸாத மகிமையால் ஸ்வஸ்வரூப ஸாம்ராஜ்யபாக்கியம் என்னுலு மடையப்பட்டதே. நானே தன்யன்; கிருதகிருத்தியன். பவபந்தத்தினின்றும் முக்தனாய், பரிபூரண நித்தியானந்த ஸ்வரூபமாய்ப் பிரகாசிக்கின்றேன். ஆ! ஆ! எல்லாம் தங்கள் கிருபாவைபவம். தேசிகேந்திரா! பிரபஞ்சமெல்லாமாய் பிரகாசிக்கும் ஏக சத்தியபோதாநந்தஸ்வரூபமான தங்கள் பாதாரவிந்தங்களுக்கு நமஸ்காரம். நமஸ்காரம். பின்னும்பின்னும் நமஸ்காரம். எப்போதும் நமஸ்காரம்.'' ஏகாத்ம தத்துவத்தை யறிந்து ஆத்மானந்தமுற்று இவ்வாறு தம்மை நமஸ்கரித்த ஸத் சிஷ்யனைப் பார்த்து மகாத்மாவான ஆசாரியேந்திரர் சந்தோஷ ஹிருதயத்தோடு பின்னும் மகத்தான இவ்வசனம் கூறுவாராயினர்.—“ நேத்திரமுள்ளவனுக்கு ரூபமன்றிப் பார்க்க வேறில்லாததுபோல பிரஹ்மவித்துக்கும் பிரஹ்மானுபவத்தையன்றி புத்திக்கு விஞேதம்வேறில்லாததாலும், ஸந்தோஷந்தரத்தக்கதாய்ப் பிரகாசிக்கும் பூர்ண சந்திரனைவிட்டுச் சித்திரசந்திரனை யெவனு மிச்சியாதது போல இந்தப் பரமானந்தரசானுபவத்தைவிட்டு அசத்திய விஷயத்தில் எந்த வித்வானும் ரமியாததலாலும், இவ்வசத்திய பதார்த்தானுபவத்தால் திருப்தி யற்பமுமின்று, துக்கமும் போகாததாலும், சர்வப் பிரகாரத்தாலும் தன்னிற்றோன்றும் ஜகமனைத்தும் தானேயாய் எங்குமேகமாய்ப் பிரகாசிக்கும் சத்தியாத்வைதப் பிரஹ்மமாகும் தன்னையே ஞான திருஷ்டியால் அதிசாந்த மனத்தோடு சதா பார்த்து, எப்போது மகத்திற் சிந்தித்து, சந்ததம் ஆத்மநிஷ்டனாய், தன் அகண்டானந்தரசானுபவத்திலேயே ரமிப்பவனாய், அதனை

லேயே திருப்தனுய், நிர்விகற்ப அகண்ட ஞானுத்மாவில் ஆகாசபட்டணம்போலத் தோன்றும் விகற்பஹேதுவான புத்தி, அந்தப் பிரஹ்மாகாரமாய்ச் சும்மாவிருக்கும் நிரந்தரானந்தஹேதுவாம் பரமசாந்தி யடைந்து எப்போதும் மௌனமுற்றவனுய் சுகமாய்க் காலந்தள்ளவேண்டும். வாசனுரகித இவ்வுத்தம மௌனத்தையன்றி, ஆத்மாவையறிந்தகண்டானந்த மனுபவிக்கும் பிரஹ்ம வித்துக்களான மகான்களுக்குச் சதானந்தானுபவஹேது வேறில்லை.

அப்பிரதிபந்தவிருத்தியோடுங்கூடி இவ்வாறு பிரஹ்மத்தையறிந்த முனி ஆத்மாவிலேயே சதா ரமிப்பவனுய்ப் போவன்; வருவன்; நிற்பன்; இருப்பன்; படுப்பன்; இன்னுமெத்தனைவிதங்களாகவோ இஷ்டப்பிரகாரம் நடப்பன். அவனுக்குத் தேசம், காலம், ஆசனம், திக்கு, யமாதி, லக்ஷ்ய திருஷ்டி முதலிய ஒன்றுந் தேவையில்லை. தன்னையறிதற்கு நியமங்களெதற்கு? 'தேவதத்தன் நான்' என்றறிவதற்கு இதராபேக்ஷை யில்லாததுபோல 'பிரஹ்மமே நான்' என்றறிவதற்கு ஒரு அபேக்ஷையுமில்லை. 'இது கடம்' என்றறிவதற்கு சுத்தமான நேத்திரத்தையன்றி வேறு நியமம் வேண்டாததைப்போல, நித்யஸித்தமான இவ்வாத்மா மனோவிருத்தி சுத்தமாயிருக்கும்போது தானே பிரகாசிக்கின்றது. தேச கால சுத்தியாதி யபேக்ஷையில்லை. சூரியப் பிரகாசத்தால் ஜகத்துப்போல யாதொன்றன் பிரகாசத்தால் சர்வஜகத்தும் பிரகாசிக்கின்றதோ, வேத சாஸ்திர புராண விவித பூதங்களையும் பிரகாசிப்பித்து அறிந்துகொண்டிருக்குமந்தப் பிரஹ்மத்தைத் துச்சமான எந்த அஸத்ய அநாத்மா பிரகாசிப்பிக்கும்? இந்தப்பரமாத்மா சுயம்பிரகாசமாய், அநந்தசக்திகளோடுங்கூடி எவராலுமறியப்படாது அனை

வரது 'அகம்' என்னும் அனுபவசொரூபமா யிருக்கும். இவ்வாத்மாவையே உத்தமோத்தமனாகிய பிரஹ்மவித் துணர்ந்து, பந்தத்தினின்றும் விமுக்தனாய், நிரந்தரானந்த ரசானுபவ திருப்தனாய், அறியக்கூடாத லக்ஷணமுள்ளவ னாய், அனுகூலப் பிரதிகூல பாஹ்யவிஷயங்களில் சந்தோ ஷம், விசனம், ஆசை, நிராசை யெதுவுமின்றிப் பரேச்சை யாற் பொருந்தும் விஷயங்களையெல்லாம் பாலர்போலனுப வித்து, பசி, தாகம், தேகபீடை யிவற்றைவிட்டுப் பாலன் கிரீடாதற்பரனாய் சுகிப்பதுபோல நிர்மம நிரகங்காரனாய் சதா தன்னிலேயே கிரீடித்துக்கொண்டும், தன்னிலேயே சுகித்துக்கொண்டு மிருப்பன். சரீரவிமானரூடனாய் அகண்ட சிதம்பரத்தி லிருக்குமவன், யாதொரு சிந்தனையும், தீனபாவமுமின்றி பிக்ஷையெடுத்துண்டு, நதியாதிஜலத் தைப் பானம்பண்ணி, தோய்த்துலர்த்தாத வஸ்திரம், வற் கலை (மரவுரி) தரித்து, அல்லது திகம்பரனாய், ஒருநியமமு மின்றி சுதந்திரனாய், பாலர், பித்தர், பேயர்போலப் பூமியிற் சரிக்கினும் வேதாந்தவீதியிற் சஞ்சரிப்பவனாய், பூ (பூமி) மெத்தையிற் படுத்து, நிர்ப்பயனாய்க் காடு சுடுகாடு முதலெங் காவது நித்திரைசெய்தும் சதா பிரஹ்மத்திலேயே கிரீடை யுள்ளவனாய், ஸர்வாத்மாவாயுள்ள தான் இஷ்டப்பிரகாரம் எத்தனையோ ரூபந்தரித்து எத்தனையோ அனுபவித்து, ஓரி டம் மூடன், ஓரிடம் வித்வான், ஓரிடம் பிராந்தன், ஓரிடம் சாந்தன், ஓரிடம் மகாராஜன், ஓரிடம் அஜகர (மலைப் பாம்பு) ஆசாரன், ஓரிடம் பூஜ்யன், ஓரிடம் நிந்தியன் என்ன ஒருவனே எங்கு மெவராலு மறியப்படாதவனாய் சஞ்சரிப்பன். அவன் நிர்த்தனனாயினும் சதானந்தி; அசகாய னாயினும் அதிபலவான்; புசியாவிடினும் நித்யதிருப்தன்;

விஷமங்களில் சமதிருஷ்டி யுள்ளவன்; ஒன்றைச்செய்தும் செய்யாதவன்; புஜித்தும் புஜியாதவன்; சரீரியேனும் அசரீரி; பரிச்சின்னனாயினும் பரிபூர்ணன். இந்தச் சரீர பந்தவிமுக்தப் பிரஹ்மவித்தினைத் தேகாபிமானிகட்குள்ள பிரியாப்பிரிய, சுகதுக்க, சுபாசுபங்களொன்றும் ஸ்பரிசிக்காது. சூரியன் ராகுவாற் பிடிபடாதிருக்கினும் பிடிபட்டதுபோலத் தோற்றலால் உண்மையறியா மூடர், தம் பிராந்தியால் 'சூரியன் பிடிபட்டான்' என்பதுபோல, தேகாதி பந்தமற்ற பிரஹ்மவித்தும் தேகிபோல் தோற்றலால் 'இவன் தேகி' என்று தம்மயக்கத்தாற் கூறுவர். அதனா லுண்மையா யிவனுக்கொன்று மில்லை. இத்தேகபந்தம் விட்டிருக்கும் முக்தனது தேகம் பாம்பின் சட்டையைப் போலப் பிராணவாயுவா லங்குமிங்குஞ் சரிக்கும். நதிப் பிரவாகத்தால் மேடுபள்ளத்தையடையும் தாருவைப்போல ஒவ்வோர்சமயம் பிராரப்தத்தால் முக்தன் தேகமும் போகத்திற் பொருந்தும். பிராரப்த கர்மவாசனைகளால் சம்சாரி தேகம் போலவே முக்தன் தேகமும் போகத்திற் பொருந்தினும், இவன் சாக்ஷிபோலவும் சக்கரமூலத்தைப்போலவும் சங்கற்பவிகற்பசூன்யனாய், உதாசீனனாய், மௌனமாகவே யிருப்பன். இந்திரியங்களை விஷயங்களிற் சேர்க்கான்; அதினின்றும் பிரிக்கான். அக்கர்மபலனையும், அகண்டானந்தரசபானத்தால் மத்தனான அவன் சிறிதுமடையமாட்டான். லக்ஷ்யாலக்ஷ்யங்களைவிட்டுக் கேவலாத்மாவாயிருக்கும் அந்த பிரஹ்மவித் சாக்ஷாத்பரமேசுவரனே; சம்சயமில்லை.

ஒருநடன் வேஷங்கொண்டபோதும், விட்டபோதும் புருஷனேயாவதுபோல, கிருதகிருத்தியனாய்த் தேகாதியுபாதிகளோடுங்கூடி ஜீவித்திருக்கும்போதே பிரஹ்மா

காரமாய் சதாமுக்தனான அந்தப் பிரஹ்மஞானி, உபாதி நாசத்திலும் பிரஹ்மாகாரமாய் பிரஹ்மத்தையே யடைகின்றான். மரத்தின் பழுத்தஇலை, நதி, வாய்க்கால், வீதி, சிவாலயம் முதலிய எங்கு விழுந்தாலும் சுபாசுபம் மரத்திற்கின்மைபோல, முன்னமே ஞானாக்கினியால் தகிக்கப்பட்ட ஞானியின் தேகம் எவ்விடத்தில் விழுந்தாலும் இவனுக்கானியில்லை. பத்திர புஷ்ப பலாதிகள்போலத் தேகேந்திரியப் பிராண புத்தியாதி யுபாதிகள் நசிக்குமேயன்றி, மரம்போலிருக்கும் சச்சிதானந்தாத்மா ஒருபோதும் நாசமுறாது. சுருதியும் 'உபாதி விகாரமுள்ளதற்கே நாசம்' என்றும், 'பிரஞ்ஞானகனஆத்மா ஸத்யன்; நாசரஹிதன்' என்றுங் கூறியிருக்கிறது. பூர்ணாத்வைதானந்தப்பிரஹ்மமாய் சத்ரூபப்பிரஹ்மத்தில் நிஷ்டனான முனிக்கு, தோல் மாம்ச மல பிண்டமான தேகத்தைவிடுக்கத் தேசகாலாதியபேக்ஷையில்லை. என்னை? தேகத்தின் மோக்ஷ (நீக்க) மும், தண்டகமண்டலங்களின் மோக்ஷமும் மோக்ஷமன்று; அஞ்ஞானஹிருதயக்கிரந்தியின் மோக்ஷமே யதிகளுக்குச் சம்மதமான மோக்ஷம்.

கல், மரம், திருணம், தான்யம், பாய், படம், கடம் முதலியன தகிக்கப்பட்டு மண்மயமேயாதல்போல, தேகாதிதிருசியோபாதிகளனைத்தும் ஞானாக்கினியால் தகிக்கப்பட்டு ஞானாகாரமாய், ஆதித்தப்பிரகாசத்தில் அந்தகாரம்போலப் பிரஹ்மத்தில் லயமாகிவிடும். தடமுடைந்தால் கடாகாசம் மகாகாசமாவதுபோல உபாதிநீங்கவே, பாலிற்பாலும் ஜலத்தில்ஜலமும் தைலத்தில் தைலமும்போல பிரஹ்மத்தின்கண் பிரஹ்மமாய்விளங்கும் ஜீவன்முக்தனாகிய ஞானியும் கலந்து எப்போதுமேகமாய்ப்பிரகாசிப்பன்.

இங்ஙனம் சன்மாத்திராகண்ட பிரஹ்மபாவ முற்றிருக்கும் விதேககைவல்யமடைந்த யதி மீண்டு ஜனிப்பதேயில்லை. ஆத்மபரஐக்கிய ஞானக்கினியால் அவித்தையாதி தேகோபாதிகள் தகிக்கப்பட்டுப் பிரஹ்மாகாரமாகவே யிருக்கும் யதிக்கு புனர்ஜன்மம் எங்ஙனமுண்டாம்? மித்யா ஸர்ப்பத்தின் தோற்றமும் நாசமும் ரஜ்ஜுவில் உண்மையில் இல்லாததுபோல, நாசரஹித நித்திய அசங்க அத்வைத கேவலஞானாத்ம வஸ்துவில், உண்டு இல்லை யெனப்பட்டதெல்லாம் புத்தியின் தர்மங்களன்றி உண்மையிலின்மையின் அப்புத்திகற்பிதமாய், மேகத்தால்வந்த தன் நேத்திராவரணத்தை அறியாதான் ஆதித்தனில் ஆரோபிப்பதுபோல மூடர்களால் விருதாவா யாரோபிக்கப்பட்ட மாயாகிருத பந்த மோக்ஷங்களு மிலவேயில்லை. பிரஹ்மத்தி லன்யமாயெதுவு மின்மையின், ஆவரணசக்தியால் பந்தமென்றும் ஆவரண நாசத்தால் மோக்ஷமென்றுஞ் சொல்லக்கூடாது. சொல்லின், அத்வைதஹானியும் துவைதப்பிரதீதியும் சித்தியாகும். இது வேதங்களுக்கு சம்மதமாகாது. நிஷ்கள நிர்மல நிஷ்கிரிய நிரஞ்ஜனமாய், ஆகாசம்போலப் பூர்ணமாயிருக்கும் அவ்வதிசாந்த அத்விதீயப் பிரஹ்மததில் கற்பனையெங்கிருக்கும்? 'உத்பத்தியில்லை; நாசமில்லை; பத்தனில்லை; சாதகனில்லை; முமுக்ஷுவில்லை; முக்தனுமில்லை. இதுவே பரமார்த்தம்' எனச் சுருதியும் கோஷிக்கின்றது. ஸகல வேதாந்தத்தின் சித்தாந்தமாய், ரகசியங்களி லதிரகசியமான இது, சிஷ்யனே! என்னாலுனக்குத் தெரிவிக்கப்பட்டது. கலிதோஷமற்று விரக்தனை முமுக்ஷுவைப் பலதரம்பரீக்ஷித்து நீயுமிதனை யுபதேசிப்பாயாக.''

என்றிவ்வாறுரைத்த குருவசனத்தைக் கேட்ட சிஷ்யன் அநேக நமஸ்காரங்கள்செய்து குருவி னுத்தரவுபெற்று

ஆனந்தமாய்ப்போயினன். ஆசாரியரும் பிரஹ்மானந்த சமுத்திரத்தில் மூழ்கினவராய், ஜகத்தைப் 'பவித்திரமாக் கும்பொருட் டெங்கும் சஞ்சரித்தனர்.

இவ்விதமாய் முமுக்ஷுக்களுக்கு சுலபமாய்ப் போதமாம் வண்ணம், குருசிஷ்ய ஸம்வாதமாய் ஆத்மலக்ஷண மறிவிக்கப் பட்டது. நிஷ்காம விஹிதகர்மத்தால் சமஸ்த சித்ததோஷங்களுமற்று சம்சாரசுகவிரக்தராய், சாந்தசித்தராய், சுருதியைநம்பின முமுக்ஷுக்களாயுள்ள உத்தமயதிகள் ஹிதமான இவ்வுபதேசத்தை யாதரிப்பார்களாக.

ஸம்சாரகோரவனத்தில் தாபத்திரயமாகும் கடோர வெய்யிலாலுண்டான தாகதுக்கத்தால் மிகக் கிலேசமுற்று ஜலாசையால் மருபூமியில் பிரமித்து அலைந்து கஷ்டப்படும் ஜீவர்கள் சுகமடையும்பொருட்டு, அதிசமீபத்திலுள்ள அத்வயப்பிரஹ்மானந்த அமிருதசாகரத்தைத் தெரிவிக்க ஸ்ரீமத் ஜகத்குரு சங்கரபகவத்பாதாசாரியா ளனுக்கிரகித்த சுககரமான இந்த 'விவேகசூடாமணி'க் கிரந்தம் அகத்தியம் சாசுவத மோக்ஷானந்தத்தைக் கொடுக்கும். சம்சயமே யில்லை. சுபம்.

ஸ்ரீ சங்கரபகவத்பாத குருவாழ்க.

விவேகசூடாமணி சமாப்தம்.

ஓம் தத் ஸத். பிரஹ்மார்ப்பணமஸ்து. ஹரி: ஓம்.

ஸ்ரீ
சங்கரபகவத்பாதரருளிய

# * திருக்குதிருசியவிவேகம்.

## அவதாரிகை.

'ஏகமேவாத்விதீயம் பிரஹ்மம்' அதாவது இரண்டற்ற பிரஹ்மம் ஒன்றேயுள்ளது என்னும் அத்வைத சித்தாந்தத்தில், பிரஹ்மம் ஒன்றேயாயின் அது விளங்காது பிரபஞ்சம் தோற்றுவானேன்? எனச் சங்கை நிகழும் உத்தமாதிகாரியின் பொருட்டு, அப்பிரஹ்மமாய தன் சொரூபத்தில் அந்நியமின்றி அநாதியேயுள்ள ஆவரண விக்ஷேபரூப அவித்தை என்னும் அற்புதசக்தி, (பிரகாசத்திலும் அந்தகாரத்திலும் தோற்றாது, இருட்டின் வழியாகத் தோற்றும் பொய்ப் பிரதிபலனப் பிரகாசத்திற் காணப்படும் படச்சாயாகாக்ஷி போல) அவ்விருளேயொத்த தன்வழியாய்த் தோற்றும் நினைவு ரூபமான ஆத்மப்பிரதிபலன மித்யாவிக்ஷேபப் பிரகாசத்தில் முதலிலுண்டான கர்த்ருரூபஅகங்கார ஜீவன், தன்கரணரூபமனம் பூர்வவாசனையாற் காட்டுந் திருசியச் சாயாகாக்ஷியை ஜாக்கிரசொப்பனுதிகளிற் சத்தியமாய்ப் பார்க்க, யதார்த்த சொரூபத்தை மறைத்துத் திருசியத்தோற்றத்திற்கு மூலகாரணமான ஆவரணம், திருசியம் தோற்றுங்காலும், அலையாதிகளுடன்கூடின சமுத்திரம்போல் ஏகமாயிருக்குந் தனக்கும் அத்தோற்றத்திற்கும் பேதந் தெரியவொட்டாதிருத்தலின், பூர்வசம்ஸ்காரத்தினுல் அத்தோற்றத்திலுள்ள திருஷ்டியை நீக்கித்

* இந்நூல் வித்யாரண்யரா லருளப்பெற்ற தென்பாருமுளர்.

தன்னையே பாஹ்யாந்தர திருஷ்டிபேதமின்றி எப்போதும் நாடும் சஹஜசமாதிப் பழக்கத்தால் அவ்வாவரணம் நீங் கவே, அத்விதீய பிரஹ்மாத்மசொரூபமாத்திரம் மிஞ்சிப் பிரகாசிக்கும் என ஆசாரியர் அத்வைதசித்தாந்த ரகசியதாத் பரியத்தை விரிவின்றிச் சுருக்கமாயறிவித்த இச்சிறுகிரந்த மொன்றுமே உத்தமாதிகாரிகளான முமுக்ஷுக்கட்குச் சாலும்.

வெண்பா

திருக்கு திருசிய விவேகந் தெரித்த
திருக்காமச் சங்கர தேவே—திருக்கு
திருசிய மென்னுந் திருக்கறவே நெஞ்சி
லொருசிவமா யோங்கு மொளி.

திருசியமா மிவையாவும் அநாத்மா. நிர்விகார திருக்கே ஆத்மா. இவ்வாத்மாநாத்மவிவேகமே கோடி கிரந்தங்க ளாலுங் கூறப்படுகின்றது.

நாம் பார்க்கும் இப்பிரபஞ்சவுருவம் கண்ணாற் காணப் படுவதால் திருசியம், காணுங்கண் திருக்கு; அக்கண் மனதாலறியப்படுவதால் திருசியம், மனம் திருக்கு; விருத்திகளுடன்கூடின அம்மனம் சாக்ஷியாகிய ஆத்மாவா லறியப்படுவதால் திருசியம், ஆத்மா திருக்கு; அது ஒன்றாலு மறியப்படாததால் திருசியமன்று. நீலபீதாதி வர்ணங்கள், ஸ்தூல சூக்ஷமம், நெட்டை குட்டை முதலிய நானாரூபங்களைக் கண் ஏகமாயும்; நேத்திரத்தின் அந்த மந்த படுத்துவாதி நானா தர்மங்களையும், அங்ஙனமே சுரோத் திராதிகளின் தர்மங்களையும் மனம் ஏகமாயும்; காமம், ஸங்கல் பம், சந்தேகம், சிரத்தை, அசிரத்தை, தைரியம், அதைரியம்,

பயம், லஜ்ஜை, நல்ல கெட்ட புத்தி முதலிய நானு மனோதர்மங்களை ஆத்மா ஏகமாயும் இருந்தறிகின்றது. இவ்வாத்மா உதிக்காது; ஒடுங்காது; பெருக்காது; சிறுக்காது. தன் பிரகாசத்தாலேயே சுயம் பிரகாசித்து, சாதனாந்தராபேக்ஷையின்றி யன்யத்தையும் பிரகாசிப்பிக்கின்றது.

புத்தியு (சமஷ்டிமனமு)ம் சிற்சாயையுடன்கூடி அகங்காரம், அந்தக்கரணம் (மனம்) என இருவிதம். சிற்சாயையோடு தப்தாயப்பிண்டம்போல் ஒன்றாயிருக்கும் அகங்காரச்சேர்க்கையாலேயே தூலதேகமும் சேதனம்போற்றோற்றுகிறது. இவ்வகங்காரத்தின் தாதாத்மியம் (சேர்க்கை) சிற்சாயையோடு சஹஜமாயும், தேகத்தோடு கர்மஜமாயும் ஆத்மாவில் பிராந்திஜமாயும் இங்ஙனம் மூன்று விதம். புத்தியுபாதி யுள்ளவரை ஸஹஜத்திற்கு நாசமில்லை; ஆனால் ஞானத்தாற் பொய்யாம். பிராந்திஜமும் கர்மஜமும் முறையே, ஸத்ரூப ஆத்மாவில் யாதொன்றன் சம்பந்தமு மில்லை எனக்காணும்ஞானத்தாலும், பிராரப்தகர்மக்ஷயத்தாலும் நசிக்கும். தேகம் ஜடமாயிருக்கும் சுழுப்தியில், அகங்காரம் முற்றும் லயித்திருக்கும். அது பாதிவிரிந்தது சொப்பனம்; முற்றும் விரிந்தது ஜாக்கிரம். மனவிருத்திதான் பூர்வவாசனையால், சொப்பனத்தில் ஆந்தரப்பிரபஞ்சத்தையும், ஜாக்கிரத்தில் பாஹ்யப்பிரபஞ்சத்தையும் கற்பிக்கின்றது. இம்மனஅகங்காரங்கட் குபாதான ஜடலிங்கதேகமே அவஸ்தாத்திரயத்தையும் ஜனனமரணாதிகளையு மடைகிறது.

காரணதேகமான மாயை, விக்ஷேபம், ஆவரணம் என்னும் இருசக்திகளுடனிருக்கும். அதில் விக்ஷேபசக்தியே லிங்கதேகாதி பிரஹ்மாண்டாந்தமான நாமரூபப்பிரபஞ்சமனைத்தையும் சமுத்திரத்தில் நுரையாதிகளைப்போல சச்சி

தானந்த வஸ்துவில் சிருஷ்டிக்கின்றது. மற்ற ஆவரணசக்தி அகத்தில் திருக்குதிருசியங்கட்கும், புறத்தில் பிரஹ்மப் பிரபஞ்சங்கட்கும் சிறிதும் பேதம் தெரியவொட்டாமல் மறைக்கின்றது. இதுவே சம்சாரகாரணம். ஆத்மசந்நிதியி லடுத்திருக்கும் லிங்கதேகத்தோடுகூடிய சிதாபாசனுகிய ஜீவனே வியாவகாரிகன். இந்த ஜீவத்வம் ஆரோபத்தால் சாக்ஷியிற் பிரகாசிக்கின்றது. ஆவரணம் நஷ்டமாயின் பேதம் தெரிகிறது; ஆரோபம் இல்லாமற் போகிறது. அங்ஙனமே, பிரஹ்மப்பிரபஞ்சபேதம் தெரியவொட்டாது மறைத்துள்ள ஆவரணவசத்தாலேயே பிரஹ்மம் நாமரூபமாய்ப் பிரகாசிக்கின்றது. ஆவரணம் நஷ்டமானுல் அவ்விரண்டிற்கும் பேதம் தெரிகிறது; பிரபஞ்சவிகாரங்களையும் பிரஹ்மத்தி லிருக்கிறதில்லை.

அஸ்தி, பாதி, பிரியம், நாமம், ரூபம் என்னும் ஐந்து அம்சங்களில் சச்சிதானந்தமான முந்தினமூன்றும் பிரஹ்மரூபம்; நாமரூபங்கள் பிரபஞ்சரூபம். சச்சிதானந்தங்கள் ஆகாசாதி பஞ்சபூதங்களிலும், தேவ, திரியக், மனுஷ்யர்களிலும் அபின்னமாயிருக்கின்றன; நாமரூபங்களோ பின்னமாயிருக்கின்றன. ஆதலால், நாமரூபங்களை யுபேக்ஷித்து ஸச்சிதானந்ததற்பரனுய், ஹிருதயத்திலோ வெளியிலோ எப்போதும் சமாதி செய்யவேண்டும்.

ஸவிகற்பம், நிர்விகற்பம் என ஹிருதயத்திற் செய்யும் சமாதி இரண்டுவிதம். ஸவிகற்பசமாதியும் திருசியானுவித்தம், சப்தானுவித்தம் எனப் பின்னுமிருவகை. காமாதி திருசியசித்தவிருத்திகட்குச் சாக்ஷியாய்த் தன்னைச் சிந்திப்பது ஆந்தரதிருசியானுவித்தஸவிகற்பசமாதி. ‘நான் அசங்கசொப்பிரகாச ஸச்சிதானந்த அத்வைதஸ்வரூபன்’ என்

றறிவது ஆந்தரசப்தானுவித்தஸவிகற்பசமாதி. இவற்று லுண்டாகும் சுவானுபவரசாவேசத்தால் திருசியம் சப்தம் இரண்டையும்விட்டு நிவாதஸ்தலதீபம்போல நிச்சலமா யிருப்பது ஆந்தரநிர்விகற்பசமாதி. ஹிருதயத்திற்போல வே வெளியிலும் திருசியவஸ்துக்களின் நாமரூபங்களை யுபேக்ஷித்து ஸத்ரூபத்தைப் பார்ப்பது பாஹ்யதிருசி யானுவித்தஸவிகற்பசமாதி. அச்சச்சிதானந்தவஸ்துவையே அகண்டேகரஸபிரஹ்மம் என விடாதறிவது பாஹ்யசப் தானுவித்தஸவிகற்பசமாதி. இவ்விரண்டனுபவத்தால் நிஸ்தரங்கசமுத்திரம்போல் அகண்டமாய் நிச்சலமாயிருப் பது பாஹ்யநிர்விகற்பசமாதி. இந்த ஷட்சமாதிகளாலும் நிரந்தரம் காலந்தள்ளவேண்டும். இவற்றால் தேகாபிமானம் நீங்கி ஸதா பரமாத்மாவிலேயே ஸ்திதிசெய்யும் மனம் எங் கெங்கு செல்லுமோ அங்கெல்லாம் சமாதியே. இந்நிரந்தர சமாதிப்பழக்கத்தால் அப்பராவரமான பரமாத்மாவை சாக்ஷாத்கரித்தமாத்திரத்தில் ஹிருதயக்கிரந்தி பேதிக்கப் படும். சகல சம்சயங்களும் நஷ்டமாம்; கர்மங்கள் நாசமுறும்.

அவச்சின்னன், சிதாபாசன் (வியாவகாரிகன்), ஸ்வப்ந கல்பிதன் என்னும் மூவிதஜீவரில் அவச்சின்னன் பாரமார்த் திகன். இவனும் கற்பிதனே; அவச்சேத்தியமான சொரூ பமே வாஸ்தவம். ஆரோபத்தால் இவனில் ஜீவத்வத்தைக் கற்பிப்பதன்றி இவன் ஸ்வபாவத்தில் பிரஹ்மமே. இந்தப் பாரமார்த்திகஜீவனுக்கே பூர்ணபிரஹ்மத்தோடு ஏகத்வம் 'தத்துவமஸி' யாதி மகாவாக்கியங்களாற் சொல்லப்படுகிற தன்றி இதரஜீவர்க்கல்ல. பிரஹ்மத்தில் அநாதிகற்பித மான ஆவரண விக்ஷேபாத்மிகையான மாயை அவ்வகண்ட பிரஹ்மத்தை மறைத்து ஜகத்து ஜீவர்களைக் கற்பிக்கின்றது. புத்தியிலிருக்கும் சிதாபாசனென கற்பிதஜீவனே கர்த்தா,

போக்தா. பூதபௌதிகப்பிரபஞ்சமனைத்தும் போக்கிய ரூபம். அநாதிமுதல் மோக்ஷம்வரை வியவகாரத்திருத்த லால், இந்தஜீவஜகமிரண்டும் வியாவகாரிகம். இவ்வியாவ காரிகனிலிருக்கும் ஆவரணவிக்ஷேபரூபநித்திராசக்தி இவனை மறைத்து, முன்பார்த்ததும் நூதனமுமான ஜீவஜகத்தை சொப்பனத்திற் கற்பிக்கின்றது. பிரதீதிகாலமாத்திரமிருத் தலால் சொப்பனத்தினின்றுமுணர்ந்தவர்க்குப் பின் சொப் பனமின்மையால் பிராதிபாஸிக ஜீவஜகமிரண்டும் பிராதிபா ஸிகமாம். பிராதிபாஸிகஸ்வப்நத்தைப் பிராதிபாஸிகன் சத்தி யமாயும் வியாவகாரிகன் அசத்தியமாயும், வியாவகாரிக ஜகத்தை வியாவகாரிகன் மெய்யாயும் பாரமார்த்திகன் பொய் யாயு மறிகிறான். பாரமார்த்திகனுக்குப்பிரஹ்மத்தோடுள்ள ஏகத்வம் பாரமார்த்திகமே. அவ்வேகத்வத்தையறிந்தோன் றையும் பார்ப்பதில்லை. பார்க்கின் மித்தையே.

ஜலதர்மமான மாதுர்யம், திரவத்துவம், சைத்தியம் இவை அலையிலும் அதிலுள்ள நுரையிலு மிருப்பதுபோல, ஆத்மாவின் சச்சிதானந்ததர்மங்கள் தன்னிற் கற்பிதசம்பந் தத்தால் வியாவகாரிகனிலும் அவன்மூலமாய்ப் பிராதி பாஸிகனிலும் கலந்திருக்கின்றன. நுரையும் சைத்தியாதி அதன்தர்மங்களும் அலையிலும், அலை யதன்திரவத்து வாதிதர்மங்கள் ஜலத்திலும் லயித்து முன்போல் சமுத் திரமாத்திரமே யிருப்பதுபோல, பிராதிபாஸிகன் அவ னதுதர்மங்கள் வியாவகாரிகனிலும், வியாவகாரிகன் அவ னது தர்மங்கள் பாரமார்த்திகனிலும் லயித்துப் பூர்வம் போல் சச்சிதானந்தபிரஹ்மமாத்திரமே பிரகாசிக்கின்றது.

திருக்குதிருசியவிவேகம் சம்பூர்ணம்

ஓம்தத்ஸத்பிரஹ்மார்ப்பணமஸ்து.

# அருண்மொழித் தொகுப்பு

# விசாரசங்கிரகம்

## மங்கலம்

எல்லாமு மாம்பரனை யேத்தலென்ப துண்டோவவ்
வல்லானாய் மன்னுதலின் மற்று.

## நூல்

1. ஸ்வாமி! எப்போதுந் துக்கமற்ற நித்யானந்த நிலை எய்துதற்குரிய வுபாயம் யாது?

*எங்கெங்கே சரீரமுள்ளதோ அங்கங்கே துக்கமு முள்ளதென வேதத்திற் கூறியுள்ளதன்றி, எல்லோர்க்கும் பொதுவான பிரத்யக்ஷஅநுபவமாக விருத்தலான், எப்போதும் சரீரமில்லாத* தனது எதார்த்தசோரூபம் *இன்னதென்று விசாரித்துணர்ந்து* உள்ளவாறிருத்தலே *அந்நிலையெய்துதற்குரிய வுபாயமாம்.*

2. தனது எதார்த்தசோரூபத்தை விசாரித்துணர்வதென்று லென்ன?

*எல்லோருக்கும் சுபாவமாக வுண்டாகும் "போனேன், வந்தேன், இருந்தேன், செய்தேன் என்பதாதிய அநுபவங்களிலிருந்தே அவ்வநுபவநிகழ்ச்சிக்குரிய வினைகளுக்கு முதலாக 'நான்' என்றதோர் போதம் தோற்றுகிறதல்லவா? அந்த போதத்தின் உண்மைவடிவை* (நானார் என்ற விசாரத்தால்) *விசாரித்துத்* தானாயிருப்பதே *தனது எதார்த்தசொரூபத்தை விசாரித்துணர்வ தென்பதாம்.*

3. நானென்று விசாரிப்ப தெப்படி ?

போதல் வருதலாதிய தொழில்கள் தேகத்தினவே யன்றி வேறன்மையால் தேகமே நானென்று சொல்வதாக வன்றோ தெரிகிறது ? தேகம் பிறத்தற்குமுன் னின்மையா னும், பஞ்சபூதாத்மகமாதலானும், சுழுத்தியி லபாவமாத லானும், பிணமாகப்போதலானும் அதை நானென்னும் போதமாகச் சொல்லுதல் கூடுமா ? கட்டையைப்போன்ற ஜடபதார்த்தமாகிய இச்சரீரம் 'நான், நான்' என்று ஸ்பு ரித்து வழங்கிவருமா ? இப்படி அவாந்தரமாகத் தேகத் தைக்குறித்துநானென்றெழும்போதமே தற்போதமென்றும், அகங்காரமென்றும், அவித்தை யென்றும், மாயை யென்றும், மலமென்றும், ஜீவனென்றும் பலவிதமாகச் சொல்லப்படு கிறது. இதைப்பற்றி விசாரியாதிருக்கலாமா ? விசாரித் துணர்ந்துய்தற்கன்றோ சகலசாஸ்திரங்களும் ஏற்பட்டு, அத் "தற்போதநாசமே முக்தி" யென்று கோஷிக்கின்றன. ஆகவே, பிணமான தேகத்தைப் பிணமெனவே யிருத்தி வாக்கினாலும் நானென்று சொல்லாமலிருந்து இப்போது நானென்றெழுவதேது என்று கூர்மையாய் விசாரித்தால், அப் போது ஹ்ருதயத்தில் 'நான், நான்' என்னும் சப்தமில்லா மல் ஓர்வித ஸ்புரிப்பு அதாவது கண்டமாகவும் நாநாவாகவு மிருந்த நினைவுகள் போய், அகண்டமாகவும் ஏகமாகவுமுள்ள ஞப்திமாத்திரம் தனக்குத்தானே தோற்றிக்கொண்டிருக் கும். அதனை விடாமல் சும்மாவிருந்தால் தேகம்நானென் னும் அகங்காரரூப ஜீவபோதத்தை முற்றிலும் நாசப் படுத்தி கற்பூரத்திற் பற்றிய நெருப்புப்போல் முடிவில் தானும் சாந்தமாய்விடும். இதுவே மோக்ஷமென்று பெரியோர்களா லும் சுருதிகளாலும் சொல்லப்படுகிறது.

4. அகம்வடிவ தற்போதத்தின் மூலத்தை விசாரிக்க அங்கு ஏதேதோ வெவ்வேறெண்ணங்கள் கணக்கற்றனவாய்த் தோற்றிக்கொண்டிருக்கின்றனவேயன்றி நானென்றதோர் தனி நினைவு தோன்றவில்லையே?

எழுவாயாகிய முதல்வேற்றுமை தோன்றினாலும் தோன்றாவிட்டாலும் மற்றவேற்றுமைகளில் வரும் வாக்கியங்களனைத்தும் முதல்வேற்றுமையை ஆச்ரயித்தே விளங்கல்போன்று ஹ்ருதயத்திற்றோன்றும் நினைவுகளனைத்தும் 'தேகோகம்' புத்திவடிவ நானென்னும் முதல்விருத்தியாகிய அகங்காரத்தை ஆச்ரயித்தே விளங்கலானும், அகங்காரத்தினெழுச்சியே மற்றெல்லாநினைவுகளினெழுச்சிக்கும் காரணமாகவும் மூலமாகவுமிருத்தலானும், சம்சாரமென்னும் மாயாவிருக்ஷத்தின்வேராகிய அகங்காரரூப தற்போதத்தை நாசமாக்கின் மற்றெல்லாநினைவுகளும் வேரற்றவிருக்ஷம்போல் அடியோடு நாசமாகும். தான் செய்யும் நிஷ்டைக்குப் பிரதிபந்தமாக எத்தனை நினைவுகள் தோன்றினாலும் மனதை அவ்வழியே செல்லவொட்டாமல் ஆன்மசொரூபமாகிய தன்னிடத்திலேயேயிருத்தி நம்முன்னே என்னென்ன விசித்திரங்கள் நடக்கின்றன? நடப்பன நடக்கட்டும் பார்க்கலாம் என்று சாக்ஷியைப்போல் விலக்ஷணமாயிருந்து பார்த்துக்கொண்டிருக்கப் பழகுவதே அதாவது தோற்றங்கள் மயமாகாது எப்போதும் தன்னைவிடாமலிருப்பதே முற்கூறிய பிரதிபந்தங்களுக்கெல்லாம் மூலமான தேகாத்மபுத்திரூப மனோநாசத்திற்கான தக்கவுபாயமாம். அகங்காரத்தை இலகுவாய்க் கெடுக்கத்தகும் இம்மார்க்கமே பக்தியென்றும், தியானமென்றும், யோகமென்றும், ஞானமென்றும் கூறத்தகும். ஹ்ருதயத்திலுள்ள அஹம் சொரூபமான ஆத்மா

காரமாகவே கடவுளிருப்பதாலும், நினைப்புமாத்திரமே பந்தமென்று சுருதிகள் முறையிடுவதாலும் எப்படியேனும் நானென்னும் நினைவுரூபமானமனதை அவரிடத்திலேயேயிருத்திவிட்டு எப்போதும் அவரை மறவாது சும்மாவிருத்தலே சிரேஷ்டமான சாதனம். இதுவே சுருதிகளின் முடிவான சித்தாந்தம்.

5. விசாரம் ஸ்தூலதேகத்திலுள்ள ஆன்மபாவத்தை மாத்திரம் நீக்குதற்குச்சாதனமா? சூக்கும, காரண தேகங்களிலுள்ள ஆன்மபாவங்களை நீக்குதற்கும் சாதனமா?

ஸ்தூலதேகத்தைப்பற்றியே மற்றதேகங்கள் ஜீவித்திருப்பதானும், தேகம்நான் என்பதில் பஞ்சகோசரூபமான முத்தேகங்களுமே அடங்கிவிட்டதானும், ஸ்தூலதேகத்திலுள்ள ஆன்மபாவத்தினழிவே மற்றதேகங்களிலுள்ள ஆன்மபாவங்களினழிவாகலானும் விசாரம் மும்மைத்தேகங்களிலுமுள்ள ஆன்மபாவங்களைப் போக்கற்கே சாதனமாகிறது.

6. விருத்திபேதங்கள் மனம், புத்தி, சித்தம், அகங்காரமெனப் பலவிதங்களாயிருக்க மனோநாசமாத்திரமே முக்தியென்பதேப்படி?

மனத்தின் தத்துவத்தைக் கூறும் சாஸ்திரங்களில் "நாம் புஜிக்கும் அன்னத்தின் சூக்ஷ்மபாகத்தாற் கெட்டிப்பட்டு, இராகத்வேஷகாமக்ரோதாதிகளால்விருத்தியடைந்து, மனம், புத்தி, சித்தம், அகங்காரமென்னும் இவற்றின் சமுதாயமாய், மனமென்னும் பன்மையொருமைப் பெயரையே பெற்றதாய், நினைத்தல் நிச்சயித்தலாதிய தருமங்களையுடையதாய், ஞானத்தாலறியப்பட்ட திருசியமாய், ஜடமாய்,

ஜடமாயினும் ஞானத்தின் சேர்க்கையால் (தப்தாயப்பிண்டம் போன்று) சேதனம் போலவே தோற்றுவதாய், பரிச்சின்னமாய், அநித்தியமாய், அவயுவாகாரமாய், அரக்கு சுவர்ண மெழுகாதிகள் போன்று பரிணாம முறுவதாய், சர்வதத்வாத்மகமாய், சக்ஷுரிந்திரியாதிகளுக்கு நேத்திராதிபோல ஹ்ருதய கமலத்தை ஸ்தானமாகவுடையதாய், ஜீவனுக்கு உபாதியாய், தானொருபொருளை நினைத்து விருத்தி ரூபமாய் மூளையிலுள்ள அறிவோடுங்கூடி பஞ்சேந்திரியங்களின் வழியாக அவ்விஷயங்களை (அறிவோடுங் கூடியுள்ள) மூளையாற் கூட்டிக்கொடுக்கப்பெற்று அவ்விஷயங்களை யறிந்தநுபவித்து திருப்தியடைவதாய் விளங்கும் பதார்த்தமெதுவோ அதுவே மனம்" என்று மனத்தின் சொரூபத்தைக் கூறியிருத்தலால், ஒருவனுக்கே வெவ்வேறு வேலையில் வெவ்வேறு நாமம் வருவது போன்று மனமொன்றே விருத்தி பேதங்களை முன்னிட்டு மனம், புத்தி, சித்தம், அகங்காரமென்ற நாமங்களால் வழங்கப்படுகிறதே யன்றி வேறில்லை. இம்மனமே சர்வதத்வாத்மக ஜீவேச்வரஜகத்சொரூபமா யிருத்தலான் இது எப்போது *ஞானத்தால் ஆன்மாகாரமாகுமோ அப்போதே எல்லாம் ப்ரஹ்மசொரூபமாகிற கைவல்யமாகு மென்று சொல்லப்படுகிறது.

**7.** மனம், புத்தி, சித்தம், அகங்காரமாகிய இந்நான்கும் ஒருபொருளே யென்றால் இவைகளுக்குத் தனித்தனிஸ்தானங்கள் கூறப்படுவதேன்?

மனதிற்கு ஸ்தானம் கண்டமென்றும், புத்திக்கு முகம் அல்லது ஹ்ருதயமென்றும், சித்தத்திற்கு நாபியென்றும், அகங்காரத்திற்கு ஹிருதயம் அல்லது சர்வாங்கமென்றும்

பலவிதங்களாகக் கூறியிருந்தாலும், இவற்றின் சமஷ்டியாகிற ஒரே மனமென்னும் அந்தக்கரணத்திற்கு ஹ்ருதயமே ஸ்தானமென்று சுருதிகளில் முடிவாகக் கூறியிருக்கிறது.

8. அகக்கரணமாகவுள்ள மனமே ஜீவேச்வரஜகத்ரூப சர்வதத்வாத்மகமாக விளங்குகிறதென்பதெவ்வாறு ?

விஷயங்களையறிதற்கு சாதனமாய் இந்திரியங்கள் வெளியிலிருத்தலாற் புறக்கரணமென்றும் மனம் உள்ளிருத்தலால் அகக்கரணமென்றும் கூறப்பட்டாலும், தேகத்தைக்குறித்தே அகம்புறமென்று சொல்லப்படுகிறதேயன்றி உண்மையில் உள் வெளி யென்பதேயில்லை. ஆகாசத்தைப் போன்று ஸ்வச்சமாயிருத்தலே மனத்தின் சொரூபம். ஹ்ருதயமென்றும் மனமென்றும் சொல்லப்படுவது அந்தர்பஹிராய்த் தோன்றும் தத்துவங்களின் சேர்க்கையேயாம். ஆகவே, சர்வ நாமரூபக் காட்சிகளும் மனோரூபமே யென்பதிற் சம்சயமில்லை. வெளியிற்றோன்றும் சகலமும் உள்ளேயே யிருக்கிறதன்றி வெளியிலில்லை யென்பதை அறிவித்தற்கே வேதங்களிலும் எல்லாம் ஹ்ருதயாகாரமாகவே வர்ணிக்கப்பட்டிருக்கிறது. ஹ்ருதயமென்பது ப்ரஹ்மத்தையன்றி யில்லை.

9. ஹ்ருதயம் ப்ரஹ்மத்தை யன்றி யில்லையென்பதெப்படி.

ஆன்மா ஜாக்கிர சொப்பன சுழுப்திகளில் நேத்திரம், கண்டம், ஹ்ருதயமென்னும் ஸ்தான முன்னிலையாகப் போகங்களைப் புஜிக்கினும் அது தன்னுடைய முக்கிய ஸ்தானமாகிய ஹ்ருதயத்தை விட்டு எப்போதும் நீங்குகிறதில்லை. ஸர்வாத்மகமான ஹிருதயகமல மத்தியில் அதாவது மனோகாசத்தில் நானென்னும் அவ்வாத்மஜோதி பிரகாசிக்கிறது. இப்படி

வ்வொரு தேகத்திலும் விளங்குவதால் இதையே சாக்ஷியென்றும் துரியமென்றும் சொல்லுவார்கள். இந்த நானென்னும் ஜோதியின் அந்தர்க்கதமாய் ஸர்வதேகங்களிலும் நானற்று விளங்கும் பரப்ரஹ்மமாகிற ஆத்மாகாசமே (ஞானாகாசமே) எதார்த்த வஸ்து. இதுவே துரியாதீதம். ஆகையால் ஹ்ருதயமென்பது ப்ரஹ்மத்தையன்றி யில்லையென்று சொல்லப்படுகிறது. மேலும் ப்ரஹ்மம் எல்லா ஜீவர்களினுடைய ஹ்ருதயங்களிலும் ஆன்ம சொரூபமாகப் பிரகாசிக்கிற காரணத்தாலேயே ப்ரஹ்மத்திற்கு * ஹ்ருதய மென்றதோர் பெயருமுண்டு. ஹ்ருதயம் என்பதன் பொருள், ஹ்ருத் + அயம் என்ற பிரிவால் ப்ரஹ்மமே யாகிறது. ஆன்ம சொரூபமாகப் பிரகாசிக்கும் ப்ரஹ்ம வஸ்துவானது எல்லா ஜீவர்களினுடைய ஹ்ருதய ஸ்தானத்தில் நிவஸிக்கிறதென்பதற்கு சர்வ ஜனங்களும், 'நான், நான்' என்று மார்பைத் தொட்டுக் காட்டுவதே போதுமான சாக்ஷி.

10. சர்வ ப்ரபஞ்சமும் மனதின் சொரூபமே யெனின் ப்ரபஞ்சம் பொய்யென்றல்லவோ ஏற்படுகிறது. அப்படியானால் ப்ரபஞ்சத்திற்கு வேதத்தில் ஸ்ருஷ்டி கூறப்பட்டிருப்பதேன் ?

ப்ரபஞ்சம் சுத்தப்பொய்யே யென்பதிற் சம்சயமில்லை. பொய்யான வுலகத்தைப் பொய்யாக்கி மெய்யான ப்ரஹ்மத்தை அறிவிப்பதிலேயே வேதத்தின் முக்கிய கருத்து. இதுபற்றியே வேதங்கள் உலகிற்கு ஸ்ருஷ்டியை அங்கீகரித்தனவேயன்றி வேறில்லை. மேலும் மந்தாதிகாரிகளுக்கு க்ரம

*" விதம்படுமு ளந்தொறும விசேடவறி வாயுற்
றிதம்படுத லாலிதய மென்பரிறை தன்னை."—பிரமகீதை.

ஸ்ருஷ்டியால் ப்ரஹ்மத்தில் ப்ரக்ருதி, மகதத்வம், தன்மாத்திரை, பூதம், உலகம், தேகமாகிய இவை க்ரமமாக வுண்டாயின வென்றும், தீவிர அதிகாரிகளுக்கு யுகபத்ஸ்ருஷ்டியால் ஆன்மாவாகிய தன்னை யறியாத தோஷத்தினலுண்டான தனது நினைவுகளாலேயே சொப்பனம்போன்று இவ்வுலகுண்டாயிற்றென்றுங் கூறும். இங்ஙனம் உலகஸ்ருஷ்டியைப் பலவிதங்களாகக் கூறுவதிலிருந்தே, எப்படியேனும் ப்ரபஞ்சத்தைப் பொய்யென்று சாதித்து ப்ரஹ்மத்தை அறிவிப்பதிலேயே வேதத்தின் தாத்பரியமென்பது பெறப்படும். ஜகம் மித்தை யென்பதை சொரூபாநந்தவநுபவரூப அநுபூதி நிலையில் எல்லோரும் பிரத்தியக்ஷமாகவே அறியலாம்.

11. சதா சலனத்தையே வடிவாகவுடைய மனதிற்குச் சொரூபாநுபவங் கூடுமோ?

மனதிற்குச் சத்துவகுணமே ஸ்வபாவமாகலானும், அது ஆகாசத்தைப் போன்று ஸ்வச்சமாயும், நிர்மலமாயுமிருத்தலானும் மனமென்பது உண்மையில் ஞான சொரூபமே. அத்தகைய ஸ்வபாவ நிலையில் அதற்கு மனமென்னும் பெயருமில்லை. ஒன்றை யொன்ருக அறியும் விபரீதஞானமே மனமெனப்படுகிறது. ஞானமாத்திரமாக விருந்த சுத்தசத்துவமனதானது தன் ஞானசொரூபத்தை மறந்த அவித்தையால் தானே தமோகுணவசத்தாய் உலகரூபமாகப் பரிணமித்து, ரஜோகுணவசத்தாய் தேகாதிகள் நானென்றும் உலகம்சத்தியமென்றும் பாவித்து, இதன்மூலமுண்டாகும் ராகத்வேஷாதிகளால் புண்ணியபாபகர்மங்களை சம்பாதித்து, அவ்வாசனையால் ஜனனமரணங்களை யடையும். அநேக ஜன்மங்களிற் செய்துவந்த நிஷ்காமகர்மங்

களால் மலம் (பாபம்) நீங்கின மனமானது சற்குரு மூல மாய் சிரவணமனனங்களியற்றி நெடுங்காலம் ப்ரஹ்மத்யான மாகிற அதாவது அஹம் ப்ரஹ்மமென்னும் ஆத்மாகார மனோ விருத்தியின் சஹஜஸ்திதியைப் பெறுதற்கான நிதித்யா சனம் செய்யவே, மனதின் தமோகுணரூபமான உலகா காரபரிணாம மடைதலும் ரஜோகுணரூபமான அவற்றி லுள்ள சலனமும் நீங்கும். நீங்கவே மனம் சூக்ஷ்மமும் நிச்சலமுமாகும். ஸ்தூலமான (பெரிய) கட்டபாரையால் மெல்லிய பட்டு வஸ்திரத்தை இழையிடக் கூடாதது போல வும், காற்றினால் அதிக சலனமாகவுள்ள தீபத்தால் அதி சூக்ஷ்மமான வஸ்துக்களின் லக்ஷணங்களை நிர்ணயிக்கக் கூடா ததுபோலவும், ஸ்தூலமாகவும் சலனமாகவுமுள்ள ரஜோ தமோகுணவசத்தான அசுத்தமனத்தால் மாத்திரம் அதி சூக்ஷ்மமும் நிச்சலமுமான வஸ்துவை அனுபவித்தல் கூடாதே யொழிய, முற்கூறியபடி தியானத்தால் சூக்ஷ்ம மும் நிச்சலமுமான சுத்தமனத்தில் சொரூபாநந்தம் ஆவிர்ப்ப விக்கும் (தோன்றும்). மனமின்றி அநுபவங்கூடாதாகையால் அதிசூக்ஷ்மமான விருத்தியோடுங்கூடிய தெளிந்தமனத் தால் அம்மயமாகவேயிருந்து சொரூபாநந்தம் அநுபவித்தல் கூடும். அப்போது தான்ப்ரஹ்மசொரூபமாயிருப்பது நன் ருய் அநுபவமாகும்.

**12. பிராரப்தாநுசாரமான வ்யவகாரங்களைச் செய்ய வேண்டியிருக்கிற மனதிற்கு வ்யவகாரநிலையிலேயே முற்கூறிய சொரூபாநுபவம் வாய்க்குமா?**

ப்ராஹ்மணன் என்ன வேஷம் போட்டுக்கொண்டு ஆடி னாலும் அவன் மனதில் ப்ராஹ்மணனென்னும் பாவம் எப்

படியோ, அப்படியே எந்தவ்யவகாரங்களி லிருந்தாலும் தேகாதிகள் நானெனத் தோற்றுமல் ஆன்மாநா னென்னும் திடபாவம் வரவேண்டும். மனம் தன்நிலையை விட்டுப் பஹிர் முகப்படுமானல் உடனே ஓ! ஓ!! தேகாதிகள் நாமல்லவே நாமார்? என்னும் விசாரத்தால் மறுபடியும் தன்னிலையி லேயே யிருத்தவேண்டும். நானாரென்னும் விசாரம் சர்வ துக்க நிவிருத்திக்கும் பரமாநந்த ப்ராப்திக்குமான முக்கிய ஹேது. இப்படித் தன்னிலையில் மனம் அடங்க அடங்க, யாதொரு தடையுமின்மையால் சொரூபாநுபவம் தானு கவே வாய்க்கும். அப்பால் விஷய சுகதுக்கங்கள் மனதில் தாக்கா. எல்லாம் ஸ்வப்நம்போல் பற்றற்றுத் தோன்றும். எப்போதும் சர்வ பரிபூரணமாகவுள்ள ஸ்வாத்ம பாவனையை மறவாதிருத்தலே முடிவான பக்தியும் யோகமும் ஞானமும் மற்றுமுள்ள எல்லா தபசுகளுமா மென்று பெரியோர் கூறு கின்றனர்.

13. கருமங்களிற் பிரவிருத்திக்குங்கால் இக்கருமத் தைச் செய்யும் கர்த்தாவும் இக்கருமபலனை யநுபவிக்கும் போக்தாவும் நாமல்ல. இது திரிகரணங்களின் சேஷ்டை யாகும் என்ற பாவத்துடனிருக்கலாமா?

ஆத்மதேவதையாகிய தன்னிடத்தி லிருத்தியதும், எப்போதும் அதைவிட்டு நீங்காமல் வ்யவஹாரங்களில் உதாசீனபாவத்துட னிருக்கிறதுமான மனது மேற்கூறிய படி சங்கற்பித்தல் கூடுமா? இப்படிப்பட்ட சங்கற்பங்க ளன்றே பந்தம்? இவ்வித நினைவுகள் வாசனையால் வந்தாலும் மனதை நினைவின்வழி செல்லவிடாமல் தன்னிலையிலிருத்த முயல்வதோடு வ்யவஹாரங்களில் உதாசீன பாவத்தோடு

மிருத்தல் வேண்டும். மனதில் இது நல்லதா? அது நல்லதா? இந்தச் செய்யலாமா? அதைச் செய்யலாமா வென்பதாதிய நினைவுகளுக்கு மிடங்கொடாமல் அத்தகைய நினைவுகளே தோனுங் தோன்றுமுன்னரே ஜாக்ரதையாய்த் தெரிந்து அதைத் தன்னிலையி லிருத்திவிட வேண்டும். கொஞ்ச மிடங்கொடுத்தால் தனக்கு ஹிதமாயிருப்பவனைப் போலிருந்து கெடுதி செய்யும் ஹிதசத்துருவைப்போல நம்மைத் தலைகீழாய்த் தள்ளிவிடும். தன்னை மறப்பதாலன்றோ இவ்வித நினைவுகள் தோன்றி மேன்மேலும் அநர்த்த முண்டாக்குகின்றன? விவேகத்தால் நானொன்றும் செய்யவில்லை. எல்லாம் கரணங்களின் சேஷ்டைகளே என்று சங்கற்பித்தல் வாசனையாகிற நினைவின்வழி செல்லும் மனதைத் தடுத்தற்குரிய உபாயமே யென்றாலும், நினைவின்வழி சென்றாலன்றோ முற்கூறியபடி விவேகத்தால் தடுக்கவேண்டும்? தன்னிலையி லிருக்கிற மனது நானென்றும், எனக்கு வ்யவஹாரமிருக்கிறதென்றும் சங்கற்பிக்குமா? எவ்விதத்தினும் மெல்ல மெல்ல ஈச்வரனாகிற தன்னை மறவாதிருக்கவே முயற்சிக்க வேண்டும். அது ப்ராப்தியானால் எல்லாம் சித்தியாகும். மற்றெவ்விஷயங்களிலும் மனதைச் செலுத்தவேண்டாம். பித்தனைப் போல் கர்மத்தால் நேரிட்ட வ்யவஹாரங்களைச் செய்தாலும் நான் செய்கிறேனென்ற நினைவு வராமல் தன்னிலையிலேயே மனதை வைத்திருக்கவேண்டும். உதாசீன பாவத்துடன் எத்தனையோ பக்தர்கள் எவ்வளவோ வ்யவஹாரங்களைச் செய்திருக்கவில்லையா?

14. சந்நியாசத்தின் யதார்த்தமான தாத்பரியமென்ன?

சந்நியாசமென்பது நானென்னும் சங்கற்பத்யாகமேயன்றி வெளி விஷயங்களை விடுவதல்ல. இந்த சந்நியாசமுள்ள

வனுக்கு ஏகாந்தத்திலிருந்தாலும் அபாரசம்சாரத்திலிருந்தாலும் சமமாகவே தோன்றும். வேறு விஷயத்தில் மனதைச் செலுத்தியிருக்கும்போது பக்கத்திலுள்ளது தோன்றாததுபோல ஞானி எவ்வளவு வ்யவஹாரங்களைச் செய்யினும் நானென்ற போதம் வராமல் தன்னிடத்திலேயே மனதிருப்பதால் அவன் ஒன்றும் செய்யாதவனேயாம். தான் அசையாமற் படுத்திருந்தும் கனவில் தலை கீழாக விழுவதாய்க் காண்பதுபோல அஞ்ஞானி அதாவது நானென்பதறாதவன் ஏகாந்தனாய் சதா நிஷ்டையிலிருந்தாலும் சர்வ வ்யவஹாரங்களையும் செய்தவனேயாம் என்று பெரியோருங் கூறியிருக்கின்றனர்.

15. கரணேந்திரியாதிகள் அறியுந் தருமத்தையுடையனவாக விருந்தும் அவை திருசிய பதார்த்தங்களெனப் படுவேதென்னை ?

| { திருக்கு அல்லது அறிபொருள் } | { திருசியம் அல்லது அறிபடுபொருள் } |
|---|---|
| (1) பார்ப்பவன் | கடம் |

இனியும்,

| | |
|---|---|
| (2) கண் | தேககடாதிகள் |
| (3) கண்ணிந்திரியம் | கண் |
| (4) மனம் | கண்ணிந்திரியம் |
| (5) ஜீவன் | மனம் |
| (6) அறிவு | ஜீவன் |

* செய்மையுளஞ் சென்றுகதை கேட்பார்போல் வாதனைக
டேய்மனஞ்செய் தஞ்செய்யா தேயவைகள்—தோய்மனஞ்
தின்றேனுஞ் செய்ததே யிங்கசைவற் றுங்கனவிற் [செய்
குன்றேறி வீழ்வார் குழி.

மேற்கண்டபடி அறிவாகியநாமே எல்லாபதார்த்தங்களையும் அறிவதால் நாமே திருக்கெனப்படுவோம். கடாந்தமாயுள்ள பதார்த்தங்கள் யாவும் நம்மால் அறியப்படுவதால் திருசியங்களாம். மேற்காட்டியுள்ள அறிவறியாமை யடுக்குகளிற் கூறப்படும் திருக்கு திருசியங்களிலும் ஒன்று மற்றொன்றுக்குத் திருக்காக விருப்பினும் அது வேறொன்றுக்கு திருசியமாகலான் அவையாவும் உண்மையில் திருக்காகா. நாம் எல்லாவற்றையு மறிவதால் திருக்கென்றும் ஒன்றாலும் அறியப்படாததால் திருசியமன்றென்றும் சொல்லப்பட்டாலும், திருசியங்களைப்பற்றியே நாம் திருக்கென்று வழங்கப்படுகிறோமே யன்றி உண்மையில் திருசியமென்பது நமக்கன்னியமின்மையால் நாம் அவ்விரண்டிற்கும் அதீதமான பொருளாவோம். ஏனையவெல்லாம் திருக்கு திருசியங்களுக்கு உட்பட்டனவே.

16. அகங்காரம், ஜீவன், ஆன்மா, ப்ரஹ்மம் ஆகிய இவற்றிற்கு தாதான்மிய முண்டாவ தெவ்வாறு ?

| திருஷ்டாந்தம் | தாஷ்டாந்தம் |
|---|---|
| (1) அயப்பிண்டம் | அகங்காரம். |
| (2) தப்தாயப்பிண்டம் | ஆன்மஸ்வபாவத்தோடு அத்தியாசமாய்த் தோற்றுகிற ஜீவன். |
| (3) தப்தாயப்பிண்டத்திலுள்ள அக்னி | தேகந்தோறும் விளங்கும் ஜீவனிலுள்ள சிற்பிரகாசம் அதாவது கூடஸ்த ப்ரஹ்மம். |

| | |
|---|---|
| (4) ஏகமாயுள்ள அக்னி ஜ்வாலை | ஏகமாயுள்ள வ்யாபக ப்ரஹ்மம். |


மேற்காட்டியுள்ள திருஷ்டாந்தத்தால் அகங்கார, ஜீவ, சாக்ஷி, சர்வசாக்ஷிகளுடைய தாதான்மியம் விளங்கும்.

தட்டான் மெழுகுருண்டையில் கணக்கற்ற நானா லோகங்களின் அணுக்களடங்கி ஒரே மெழுகாகக் காணப்படுவது போன்று சுழுத்தியில் எல்லா ஜீவர்களுடைய ஸ்தூல சூக்கும தேகங்களும் ஒரேயிருட்டாகிய அவித்தை அதாவது சமஷ்டிமாயையில் அடங்கி ஆத்மாவில் லயித்து ஒன்றுபட்டிருத்தலால் எங்கும் ஒரே இருட்டைக் காண்கிறார்கள்; இந்த சுழுத்தியாகிய இருட்டிலிருந்து சூக்குமதேகம் அதாவது அகங்காரமும் அதிலிருந்து ஸ்தூலதேகமும் உண்டாகிறது. அகங்கார முண்டாகிற பொழுதே தப்தாயப் பிண்டம் போன்று ஆன்ம ஸ்வபாவத்தோடும் அத்யாசமாய்த் தோன்றுகிறது. இங்ஙனம் சிற்பிரகாசத்தோடு தாதான்மியமாகக் கூடியிருக்கும் மனமாகிய அகங்காரரூபனை ஜீவனையன்றி ஜீவசாக்ஷியாகிய ஆன்மாவும், ஆன்மாவையன்றி சர்வசாக்ஷியாகிய ப்ரஹ்மமும் இன்றாம். தப்தாயப் பிண்டமானது கொல்லனுலெவ்வாறடிபட்டு விகாரமுற்றாலும் எப்படி அதிலுள்ள அக்னிமாத்திரம் அவற்றால் யாதொரு சலனமும் அடைவதின்றோ அப்படியே, ஜீவன் எவ்வளவு வ்யவஹாரங்களிலுழன்று சுகதுக்கங்களை யனுபவித்தாலும் அதிலுள்ள ஆன்மஜோதி மாத்திரம் அவற்றால் யாதோரு சலனமுமின்றி ஆகாசம்போல் வ்யாபகமாயும், ஞான மாத்திரமாயும், ஏகமாயும் விளங்கும் ப்ரஹ்ம சொரூபமாகவே ஹ்ருதயத்தில் பிரகாசிக்கிறது.

17. ஹ்ருதயத்தில் ஆன்மாவே ப்ரஹ்மமாகப் பிரகாசிக்கிறதென்ற தெப்படி ?

*தீபஜ்வாலையினுள்ளேயுள்ள காலியிடத்தி லிருக்கும் பூதாகாசமானது அந்த ஜ்வாலையி னுள்ளும்புறம்பும் அபேதமாய் நிறைந்து எல்லையற்று விளங்குதல்போன்று ஹ்ருதயத்தில் ஆன்மஜோதியினுள்ளேயுள்ள ஞானகாசமும் அவ்வான்மஜோதியி னுள்ளும்புறம்பும் அபேதமாய் நிறைந்து* எல்லையற்று விளங்குகிறது. *இதுவே ப்ரஹ்மமென்பதாம்.*

18. எகமாயும் அகண்டமாயும் விளங்கும் சோப்பிரகாச வடிவ ஆன்மஜோதியின்கண் அவஸ்தாத்ரயம், தேகத்ரயமாதிய கற்பனைகள் தோற்றுவதும், தோற்றினும் ஆன்மா மாத்திரம் எப்போதும் அசலமாகவே யுள்ளதென்பது மெவ்வாறு?



| திருஷ்டாந்தம் | | தாஷ்டாந்தம் |
|---|---|---|
| (1) | தீபம் | ஆன்மா. |
| (2) | கபாடம் | நித்திரை. |
| (3) | வாயிற்படி | மஹதத்வம். |
| (4) | உட்சுவர் | அவித்தை அல்லது காரண தேகம். |
| (5) | கண்ணாடி | அகங்காரம். |
| (6) | ஜன்னல்கள் | ஞானேந்திரிய பஞ்சகம். |
| (7) | உள்மனை | காரணதேகம் விளங்கும் சுழுத்தி. |
| (8) | நடுமனை | சூக்ஷ்மதேகம் விளங்கும் சொப்பனம். |
| (9) | முற்றம் | ஸ்தூலதேகம் விளங்கும் ஜாக்ரம். |

ஆத்ம (1) தீபம் சுஷுப்தியில் அவித்தை (4) யுட்சுவரும் நித்திரைக்கதவுங் கூடின காரணதேக (7) வுள்மனையில் தானே விளங்க, காலகருமாதி பிராணனால் உறக்கக் (2) கதவைத் திறக்கவும் மஹதத்வ (3) வாயிற்படிக்கடுத்த அகங்காரக் (5) கண்ணாடி ஆத்மப் பிரதிபலனப் பிரகாசத்துடன் சொப்பன (8) நடுமனையையும் பஞ்சேந்திரியப் (6) பலகணிவழி ஜாக்ர (9) முற்றத்தையும் விளக்கி, காலகருமாதி வாயுவால் நித்ராகபாடம் மூடவே நனவு கனவுகளோடு நானற்றுத் தான் (ஆன்மா) மாத்திரம் என்றும் விளங்குவதால், ஆத்மாவின் அசலமான விருப்பும் அகங்காரத்திற்கும் அதற்குமுள்ள பேதமும் அவஸ்தாத்ரய தேகத்ரயமாதியன தோற்றுவதும் இத்திருஷ்டாந்தத்தால் நன்கு விளங்கும்.

19. விசாரலக்ஷணங்களை இவ்வளவு விஸ்தாரமாகக் கூறக்கேட்டும் என் மனம் சிறிதும் சாந்தி யடையவில்லையே! இதற்குக் காரண மென்ன?

*மனோபலம் அதாவது சித்தத்தின்ஒருமைப்பா டின்மையே அதற்குக் காரணம்.*

20. மனோபலமின்மைக்குக் காரணம் யாது?

*ஆன்ம விசாரத்துக்குத் தன்னை அதிகாரியாகச் செய்கிற சாதனங்களான தியான யோகமாதியவற்றில் முன்னரே வேண்டிய அளவு கிரமமாய்ப் பயின்று அதனால் இடையறாத சஜாதீய விருத்தியின் பிரவாகத்தை சஹஜமாகப் பெற்றிருக்கும் பரிபக்குவமுள்ள மனதாயிருந்தால் இவ்விசார சிரவணஞ் செய்தவுடனே தனது எதார்த்த சொரூபத்தை அபரோக்ஷமாகத் தெரிந்து எப்போதும் தன்னிலையினின்றும் நீங்காது பரமசாந்தியுடன் விளங்கும். இங்ஙனம் பரிபக்குவமடையாத மனதிற்கு விசாரசிரவணத்தால் உடனே அபரோக்ஷ ஞானமும் உபசாந்தமும் வாய்ப்பது துர்லபமே; என்றாலும், சிறிது காலம் மனவொடுக்கத்திற்குரிய சாதனங்களிற் பழகி வந்தால் காலக்கிரமத்தில் சித்தோபசாந்தம் சித்திக்கும்.*

21. மனவொடுக்கத்திற்குரிய சாதனங்களில் முதன்மையான தேது?

*ப்ராணவொடுக்கமே மனவொடுக்கத்திற்குச் சாதனமாம்.*

22. ப்ராணநிரோத முண்டாவதெப்படி?

*கேவலகும்பகத்தாலேனும் ப்ராணாயாமத்தாலேனும் ப்ராணநிரோத முண்டாகும்.*

23. கேவலகும்பக மென்று லென்ன ?

இரேசக பூரகங்களின்றியே ஹ்ருதயத்தில் ப்ராணனை ஸ்திரப்படுத்துவதாம். இது ப்ராணோபாசனை முதலியவற்றால் சித்திக்கத்தக்கது.

24. ப்ராணாயாம மென்று லென்ன ?

யோகசாஸ்திரங்களிற் கூறியுள்ள கணக்கின்படி இரேசக, பூரக, கும்பகங்கள் வாயிலாய் ப்ராணனை ஹ்ருதயத்தில் ஸ்திரப்படுத்துவதாம்.

25. ப்ராணநிக்ரகம் மனோநிக்ரகத்திற்குச் சாதனமாயிருப்பதெப்படி ?

ப்ராணனைப் போலவே மனமும் வாயுவின் அம்சமாகலானும் இவ்விரண்டுக்குமே சலிக்குந்தன்மை சுபாவமாகலானும் இவ்விரண்டின் பிறப்பிடம் ஒன்றே யாகலானும் இவ்விரண்டுள் ஒன்றி னொடுக்கமே மற்றதி னொடுக்கத்திற்குக் காரணமாகலானும் ப்ராணநிரோதம் மனோநிரோதத்திற்குச் சாதனமென்பதிற் சந்தேகமில்லை.

26. ப்ராணபந்தம் மனோலயத்திற்கு மாத்திரம் சாதனமாகிறதே யன்றி மனோநாசத்திற்குச் சாதன மாகாமையான், மனோநாசத்திலேயே தாற்பரியமுடைய விசாரத்திற்கு இது சாதனமாவ தெப்படி ?

ஆன்மசாக்ஷாத்காரம் சித்தித்தற்குரிய சாதனங்களை அஷ்டாங்கயோகம் அஷ்டாங்கஞானமென இரு பிரிவுகளாகச் சுருதிகளிற் கூறியுள்ளபடியால் அந்தயோகாஷ்டாங்கங்களி லொன்றாகிய ப்ராணாயாமத்தினாலாவது அல்லது கேவல கும்பகத்தினாலாவது பந்தப்பட்ட மனதை அதோடு விட்டு

விடாமல் மேற்சாதனங்களாகிய ப்ரத்தியாகார முதலியவற்றில் கிரமமாகப் பழக்கிவரின் முடிவில் விசாரபலரூப சொரூபசாக்ஷாத்காரம் பெறுதல் திண்ணம்.

27. யோகாஷ்டாங்கங்க ளேவை ?

இயமம், நியமம், ஆசனம், ப்ராணாயாமம், ப்ரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி யென்பனவாம். இவற்றில்—

* (1) இயமம் :—அஹிம்சை, சத்தியம், திருடாமை, பிரமசரியம், அபரிக்கிரகமாதிய ஒழுக்கமுடைமையாம்.

* (2) நியமம் :—சௌசம், சந்தோஷம், தவம், ஸ்வாத்யாயம், ஈச்வரப்ரணிதானமாதிய ஒழுக்கமுடைமையாம்.

(3) ஆசனம் :—ஆசன பேதங்களில் 84 முக்கியம். அவற்றில் சிம்ஹம், பத்ரம், பத்மம், சித்தம் ஆகிய விந்நான்குமே சிரேஷ்டமென்றும், இவற்றிலும் † சித்தாசனமே மிக சிரேஷ்டமென்றும் யோகசாஸ்திரங்கள் கூறுகின்றன.

(4) ப்ராணாயாமம் :—சுருதிகளிற் கூறியுள்ள மாத்திரைக் கணக்கின்படி ப்ராணனை வெளிவிடுவது இரேசகமென்றும், உட்கொள்ளுவது பூரகமென்றும், ஹிருதயத்தில்

---

* மோக்ஷாதிகாரிக்குரிய சர்வ சன்மார்க்கங்களின் ப்ராப்தியே இயம நியமங்களின் தாத்பரியமாம். இவைகளைப்பற்றி விரிவா யறியவேண்டின் யோகசூத்ரம் ஹடயோகதீபிகை முதலிய நூல்களிற் காண்க.

† சித்தாசனம் :—இடது குதிகாலை இலிங்கத்தின்மேல் வைத்து அதன்மேல் வலது குதிகாலை வைக்கவேண்டும். புருவங்களின் மத்தியில் த்ருஷ்டிவைத்து சரீரம் கட்டைபோல் நிமிர்ந்து நிச்சலமாக இருக்கவேண்டும்.

நிறுத்துவது கும்பகமென்றும் சொல்லப்படும். —மாத்திரையளவுகளைப்பற்றிச் சில சாஸ்திரங்களில் இரேசக பூரகங்களுக்குச் சமமும் கும்பகத்திற்கு இரண்டுபங்கும், சில சாஸ்திரங்களில் இரேசகத்தைப்போல் பூரகத்திற்கு இரண்டு பங்கும் கும்பகத்திற்கு நான்குபங்கு மெனச் சொல்லப்பட்டிருக்கிறது. மாத்திரை யென்பது காயத்ரி மந்திரத்தை ஒருமுறை யுச்சரிக்குங் காலமாகச் சொல்லப்படுகிறது. இவ்வித இரேசக, பூரக, கும்பகங்களடங்கிய ப்ராணாயாமத்தைத் தன்னாலியன்ற அளவு மிருதுவாகவும் க்ரமமாகவும் நாடோறு மப்யசித்துவரின் சரீரத்தில் ஓர்வித இளைப்புடன் சலனமற்று ஆனந்தமாயிருத்தற்கான இச்சை மனத்திற்குண்டாகும். இதன்பின் ப்ரத்தியாகாரம் செய்யவேண்டும்.

(5) **ப்ரத்தியாகாரம்** :—வெளியிலுள்ள நாமரூபங்களிற் செல்லவொட்டாமல் மனதை ஒருவழிப்படுத்தலாம். இது காறும் ஓடியுழன்ற மனது இப்போது ஒருவழிப்பட்டிருத்தலருமையாதலின் இதற்கு (1) **மனோமாத்திர ப்ரணவத்யானம்,** (2) **புருவமத்ய நாட்டம்,** (3) **நாசிகாக்ர த்ருஷ்டி,** (4) **நாதாநுசந்தானம்** ஆகியவை சகாயமாம். இப்படி யொருமைப்பட்ட மனம் ஓரிடமேயிருக்க யோக்கியமானதாகும். இதன்பின் தாரணை செய்யவேண்டும்.

(6) **தாரணை** :—மனதை தியான யோக்யமானதோர் ஸ்தானத்தி லிருத்துவதாம். **ஹ்ருதயமும் ப்ரஹ்மரந்திரமுமே** சிரேஷ்டமான தியான யோக்கிய ஸ்தானங்களாம். இவ்விரண்டிடங்களிலுமுள்ள * அஷ்டதள பத்மங்களின் மத்தி

*ப்ரஹ்மரந்திரத்திலுள்ளது சஹஸ்ர(1000)தளபத்ம மானாலும் அதுவும் 125 சிறுதளங்களுடைய அஷ்டதள பத்மமேயாம்.

யில் ஆத்மதேவதாரூப ப்ரஹ்ம சொரூபமே தீபஜ்வாலை போலும் ப்ரகாசித்துக்கொண்டிருப்பதாகப் பாவித்து மனதை அதில் ஸ்திரமாய் நிறுத்துவதாம். இதன்பின் தியானம் செய்யவேண்டும்.

(7) தியானம் :—முற்கூறிய அத்தேஜோமய சொரூபத்தினும் தான் வேறில்லையென்று ஸோஹம்பாவனையால் தியானிப்பதாம். இதிலும் "எங்குமுள்ள ப்ரஹ்ம சொரூபமே ஆன்மரூபமாய் ஹ்ருதயத்தில் புத்திசாக்ஷியாகப் பிரகாசித்துக் கொண்டிருக்கும்" என்னும் சுருதியின்படி அங்ஙனமாயிருக்கும் நானார் என்னும் விசாரத்தால் விசாரிக்கில் ஹ்ருதயகமலத்தில் ஆன்மதேவதை 'அஹம், அஹம்' எனத் தான்றானே ஜ்வலித்துக்கொண்டிருப்பது விளங்கும். இவ்வநுசந்தானரூப தியானமே சிரேஷ்டமாம்.

(8) சமாதி :—மேற்கூறிய தியானத்தின் பரிபாகத்தால் தான் இன்னானென்றும், இன்னது செய்கிறோமென்றும் தோன்றாமல் மனது தியேயத்திலேயே லயித்த அல்லது அஹம், அஹம் என்னும் ஸ்புரிப்பு அடங்கிய (சூக்ஷ்மமான) ஸ்திதியே சமாதி யென்பதாம். இதில் நித்திரை மாத்திரம் வராமல் பாதுகாத்துக்கொண்டு தினந்தோறும் விடாமல் கிரமமாக அநுசந்தித்து வந்தால் ஈச்வரன் கூடிய சீக்கிரத்தில் மனோவிசிராந்திரூப சிரேஷ்டமான கதியை அநுக்ரஹிப்பார்.

28. பிரத்தியாகாரத்தில் ப்ரணவத்தை மனோமாத்திரமாகத் தியானிக்கச் சொல்லியதின் தாற்பரியமென்ன?

ப்ரணவத்தியானம் செய்யச் சொல்லியதின் தாற்பரியமிதுவாம் :—ப்ரணவமென்பது அகார, உகார, மகார, அர்த்தமாத்திரை யென்னும் மூன்றரை மாத்திரைகள் கூடிய ஓங்கார

மாம். இவற்றில் அகாரமென்பது ஜாக்ர விச்வஜீவ ஸ்தூல தேகங்களென்றும், உகாரமென்பது ஸ்வப்ந தைஜஸஜீவ சூக்ஷ்மதேகங்களென்றும், மகார மென்பது சுழுப்தி பிராஜ்ஞ ஜீவ காரணதேகங்களென்றும், அர்த்தமாத்திரை யென்பது துரியம் அல்லது ஆன்மசொரூபம் அல்லது அஹம்சொரூப மென்றும், இதற்கப்பாற்பட்ட நிலை துரியாதீதமாகிய ஆநந்த மாத்திர சொரூபமென்றும் சொல்லப்படும். முன் தியானத்திற் கூறிய இந்நான்காவதான அஹம் சொரூபமே மற்ற அகார உகாரமகாரங்களென்னும் மூன்று மாத்திரைகளடங்கியுள்ள அமாத்திரை சொரூபமென்றும், மௌனாக்ஷர மென்றும், அஜபை யென்றும், ஜபியாமல் ஜபித்தலென்றும், பஞ்சாக்ஷராதி சர்வமந்திரங்களின் சாரமான அத்வைத மந்திர மென்றும் கூறப்படும். இவ்வேதார்த்த அர்த்தம் சித்தித்தற்பொருட்டே ப்ரணவத்தியானம் செய்யப்படுவதாம். இந்த ஆத்மாநுசந்தான பக்திரூப தியானத்தின் பரிபாக அவஸ்தையே சமாதி யெனப்பட்டு நிரதிசயாநந்த மோக்ஷகதியைக் கொடுக்கும். பெரியோர்களும் ஸ்வாத்மாநுசந்தானரூபபக்தி யொன்றினாலேயே மோக்ஷமடையவேண்டும் எனக் கூறியிருக்கின்றனர்.

29. தியானத்தில் தீபஜ்வாலைபோல் ப்ரகாசித்துக் கொண்டிருக்கும் தேஜோமய சொரூபத்தினும் தான் வேறில்லை யென்று ஸோஹம்பாவத்துடன் தியானிக்கக்கூறியதின் தாற்பரியமென்ன ?

(அ) தேஜோமயத்தினும் தான் வேறில்லையென்று பாவிக்கக் கூறியதன் தாற்பரிய மிதுவாம் :—சுருதிகளில் தியான லக்ஷணத்தைப்பற்றி "கைலாசம், வைகுண்டம்,

ப்ரமபத மென்பனவாகக் கூறப்படுகிற அஷ்டதளத்தோடுங் கூடிய ஸர்வாத்மகமான ஹ்ருதயகமல மத்தியில் அங்குஷ்ட மாத்ர பரிமாணமாய் மின்னலைப்போற் காந்தியுள்ளதாய் தீபஜ்வாலைபோலும் ப்ரகாசிக்கும் அவ்வஸ்துவைத் தியானித்து புருஷன் அமிர்தத்வத்தையடைகிறான்'' என்று கூறியிருத்தலால், இதிலிருந்து தான்வேறு அதுவேறு என்ற பேதபாவமும் பின்னத்யானமும் வஸ்துவில் பரிச்சின்னபுத்தியும் ஏகதேசபுத்தியுமாகிய தோஷங்கள் சம்பவியாதிருத்தற் பொருட்டாம்.

(ஆ) ஸோஹம் பாவத்துடன் தியானிக்கக் கூறியதன் தாற்பரியமிதுவாம் :—ஸ : + அஹம் - ஸோஹம். ஸ : - பரமாத்மா, அஹம் - நானென விளங்கும் ஆத்மா. பிரமபுரமென்னும் தேகமாகிய பட்டணத்தில் ஹ்ருதயகமலாசனத்தில் வசிக்கும் ஜீவனாகிய சிவலிங்கத்தை, அதாவது தன்னை, தேகாதிகளை நானென்று வெளிமுகத்திற் சஞ்சரிக்கும் அகங்காரரூப மனதை ஹ்ருதயத்திலடக்கி தேகாதிகளிலுள்ள அஹம்பாவம் நீங்கி தேகத்திலிருக்கும் நானார் என்ற விசாரத்தோடும் நிச்சலமாக இருந்தபடியிருந்து விசாரிக்குங்கால் அங்கு அஹம், அஹம் என்று சூக்ஷ்மமாக ஸ்புரித்துக்கொண்டிருக்கும் ஆத்மசொரூபமே எல்லாமா யல்லவுமாய் பாஹ்யாந்தர பேதமின்றி எங்கும் விளங்கும் பரமாத்ம சொரூபமாகலானும், அந்த ப்ரஹ்மமே நானென்பதன் பொருளாய் முற்கூறிய ஜ்வாலாகாரமாக விளங்கலானும் அதை தன்மயமாக பாவித்தலின்றி அன்னியமாக பாவிக்கின் அறியாமை நீங்காதாகலான் அங்ஙனம் பாவிக்கக் கூறியதாம்.

வெகுகாலம் இவ்வாத்மாநுசந்தானமாகிற ஸோஹம் பாவனையால் நிரந்தரம் வஸ்துவை நிச்சலமாய் த்யானித்து

வந்தால் ஹ்ருதயத்திலுள்ள அஞ்ஞான அந்தகாரமும், அஞ்ஞானதற்காரியங்களான ஸர்வப்ரதிபந்தங்களும் நீங்கி பரிபூரண ஞானம் லப்தமாகும்.*

இங்ஙனம் தேகமாகிய பட்டணத்தில் ஹ்ருதய குஹையி லிருக்கும் வஸ்துவை யறிதலே, ஸர்வபரிபூரணமாயிருக்கும் ஈச்சுவரனை அறிதலாம்.

† நவத்வாரங்களுடன் கூடிய தேகமாகிய புரியில் ஞானி சுகமாய் வசிப்பன்.

தேகமே ஆலயம்; ஜீவனே சிவன். அவனை ஸோஹம் பாவனையால் பூஜிக்கின் முக்தியுண்டாகும்.

பஞ்சகோசாத்மகதேகமே குஹை; அதில் வசிக்கும் பரமே குஹேசன் என்று சுருதிகளுங் கூறுகின்றன. ஆத்மாவே ஸர்வதேவாத்மக வஸ்துவாகலான் ஸர்வத்யானங்களினும் தானாகிய ஆத்மத்யானமே சர்வசிரேஷ்டமாம். மற்ற த்யானங்களனைத்தும் இதில் அந்தர்ப்பூதமாகலானும், இது சித்தித்தற்பொருட்டே மற்ற த்யானங்கள் சொல்லப்பட்டிருத்தலானும், இது ஸித்தியானால் மற்றவை தேவையில்லை. தன்னை அறிவதே கடவுளை அறிவதாகும். தியானிக்கும் தன்னை யறியாமல் இதரமாய் தெய்வமிருக்கிற தென்றெண்ணி த்யானிப்பது தனது நிழலைக் காலால் அளத்தற்

* "சிந்தனை புறஞ்செலாச் சிவோகம் பாவனை
சந்தத முளுற்றிடிற் சமாதி வந்துறும்".
—வள்ளலார்.

† "ஒன்பதுபொய் வாசல்மை யூரதனி னுள்ளே
யின்பவுரு வாயினிதி ருப்பனியல் பாலே."
—பகவத்கீதை.

குச் சமானம் என்றும், *கையிலிருக்கும் அத்யபூர்வமான கௌஸ்துபரத்நத்தைத் தூர எறிந்துவிட்டு மிக அற்பமான சங்குமணி தேடுதற்குச் சமான மென்றும் பெரியோர் கூறு கின்றனர்.

30. ஹ்ருதயமும் ப்ரஹ்மரந்திரமுமே தியானயோக் கிய ஸ்தானங்களேனினும் அவசியமாயின் ஆருதார தரிசனை களையுங் கொள்ளலாமா?

*தியான ஸ்தானங்களாகக் கொள்ளப்படும் ஆருதார முதலியவனைத்தும் கற்பனைகளேயாம். இவையாவும் ஆரம்ப யோகிகளுக்கே உரியன. ஆருதார தரிசனைகளைப்பற்றி, "நம்மை சிருஷ்டி, ஸ்திதி, சங்காரங்கள்செய்யும் அத்வைத பரிபூரண ஞானசொரூப ஆன்மாவாகிற கடவுளை கணபதி, ப்ரஹ்மா, விஷ்ணு, ருத்திரன், மஹேச்வரன், சதாசிவனு திய நாமரூபங்களாக பாவனையா லுண்டாக்கிக்கெடுப்பது மஹாபாவமே" என்று சிவயோகிகளும், "அவையனைத் தும் மனக்கற்பனைகளே" என்று வேதாந்திகளும் கூறு கின்றனர். ஆகவே எல்லாவற்றையும் அறியும் ஞான சொரூபமாகிற தன்னை யறிந்தால் எல்லாமறிந்ததாகும்.* யாதோன் றிருந்த படியறிய அறியா வெல்லா மறிந்தனவாம்

---

* "அகமகமென் றனைத்துயிரி னிடத்துமிருந் தனவரத
முரைப்ப தாகி
நிகழொளியா யாத்துமதத் துவமான சொரூபத்தை
நினைத்தல் செய்வாம்
திகழிதய குகையுறையுந் தேவதையை விட்டயலே
தெய்வந் தேடல்
மிகவரிய கவுத்துவத்தை யெறிந்துசிறு மணிதேடும்
வேட்கை போலாம்." —வாசிட்டம்.

என்று பெரியோருங் கூறியிருக்கின்றனர். நாநாபாவனை யோடுங் கூடியுள்ள நாம் கடவுளாகிய ஆன்மாவை பாவித்து வந்தால் அந்த ஏகபாவனையால் அநேக பாவனைகள் நீங்கி முன்னுள்ள ஏகபாவனையும் நசிக்கும். இதுவே தன்னை அல்லது கடவுளை யறிவதாம். இதுவே முக்தி.

31. ஆன்மாவை பாவிப்ப தெப்படி ?

ஆன்மா இருட்டும் ப்ரகாசமுமல்லாத சுயஞ்சோதியாய், தன்மயமாய்த் தனக்குத்தானே ப்ரகாசித்துக்கொண்டிருக் கும் வஸ்துவாகலான் அதை இப்படியென்றும் அப்படியென் றும் பாவித்தல் கூடாது. பாவிக்கும் நினைப்பே பந்தமாக முடியும். மனதை ஆன்மாகாரமாக்குவதே ஆன்மபாவத்தின் தாற்பரியமாம். ஹ்ருதயமென்னுங் குகையின் மத்தியில் கேவலப்ரஹ்மமே நான், நான் என்று ப்ரத்தியக்ஷமாய் ஆன்மரூபமாகப் பிரகாசித்துக்கொண்டிருத்தலை அறியாது ஆன்மாவைப் பலவிதங்களாகப் பாவிப்பதினும் அறியாமை வேறுண்டோ ?

32. ஹ்ருதயத்தில் 'நான், நான்' என்று ஆன்மரூப மாக ஸ்புரித்துக்கொண்டிருக்கிறது என்ற ப்ரஹ்மநிலையை எளிதிற் போதமாகுமாறு இன்னும் சற்று விளக்கமாக விஸ் தரித்துக் கூறுதல் கூடுமோ ?

சுழுத்தி மூர்ச்சையாதிய காலங்களில் எவ்வித ஞானமும் அதாவது தன்ஞானமோ அன்னியஞானமோ அற்பமு மின்றென்பது எவர்க்கு மநுபவ மன்றோ? பின்னர் தூக்கத்தி னின்றும் 'விழித்தேன்,' மயக்கத்தினின்றுந் 'தெளிந்தேன்' என்ற அநுபவம் முற்கூறிய நிர்விசேஷநிலையினின் றுதித்த தோர் விசேஷஞானத்தினது தோற்றமன்றோ ? இவ்

விசேஷஞானமே விஞ்ஞானமெனப்படுகிறது. இவ்விஞ் ஞானமானது ஆன்மாவையேனும் அநான்மாவையேனும் ஆச்ரயித்தே விளங்குமல்லாது தனியாகப் பிரகாசிக்காது. இது ஆன்மாவை யாச்ரயிக்கும்போது மெய்ஞ்ஞானம், ஆன் மாகார மனோவிருத்தி ஞானம், அகண்டாகாரஞானமென்றும், அநான்மாவை யாச்ரயிக்கும்போது அஞ்ஞானமென்றும் சொல்லப்படுகிறது. இவ்விஞ்ஞானம் ஆன்மாவை யாச்ர யித்து ஆன்மாகாரமாக விளங்கும் ஸ்திதியே அஹம் ஸ்புரிப்பு எனச் சொல்லப்படுகிறது. இந்த ஸ்புரிப்பு வஸ்துவை விட்டுத் தனியாக இராது. இந்த ஸ்புரிப்பே வஸ்துவை அபரோக்ஷப் படுத்தற்கான தக்க குறியாம். என்றாலும் இதுவே வஸ்து நிலையாகாது. இந்த ஸ்புரிப்பானது எதனை ஆச்ரயித்து விளங்குகிறதோ அந்த மூலமே வஸ்து அல்லது ப்ரஜ்ஞான மெனப்படும். வேதாந்தம் ப்ரஜ்ஞானம் ப்ரஹ்மம் என்றது இதுபற்றியேயாம்.

இதனை :—

*நிகழ்சுயஞ் சோதி யாகி நிகிலசாட் சியுமா மான்மா
புகலும்விஞ் ஞான கோசம் பொருந்தியே விளங்கு மென்றும்
இகழ்விலா விவ்வான் மாவை யிலக்கிய மாகப் பற்றி
அகமென வனுப விப்பா யகண்டமாம் விருத்தி யாலே

என்னும் சுருதியின் தாற்பரியத்தானுந் தெளிக.

33. ஆந்தரபூஜை அல்லது நிர்க்குணபூஜை யென்ப தென்ன?

நிர்க்குண பூஜையைப்பற்றி ரிபுகீதை முதலிய நூல் களில் விரிவாகக் கூறப்பட்டிருந்தாலும் சர்வ யஜ்ஞ, தான,

* விவேகசூடாமணி

தப, வ்ரத, ஜப, யோக, பூஜைகளும் அஹம்ப்ரஹ்மம் என்னும் த்யானமேயாகலான் சர்வப்ராகாரத்தாலும் அஹம் ப்ரஹ்ம பாவனையை எப்போதும் விடாதிருக்கவேண்டுமென்பதே நிர்க்குண பூஜையின் தாற்பரியம்.

34. ஞானஷ்டாங்கங்க ளேவை?

இயம நியமாதிகளாகிய முற்கூறிய அவ்வெட்டுமாம். இவற்றில்:—

1. இயமம்:—தேகாதி ப்ரபஞ்ச விஷயங்களிலுள்ள தோஷங்களைத் தெரிந்து இந்திரிய சமூகங்களை அடக்குதல்.

2. நியமம்:—சஜாதீய விருத்தியின் ப்ரவாகமும் விஜாதீய விருத்தியின் திரஸ்காரமுமாம். அதாவது பரமாத்மாவின்கண் இடையறு துண்டாகும் அன்பு.

3. ஆசனம்:—எதனிடத்து இடைவிடாத ப்ரஹ்ம சிந்தனம் சுகமாக வுண்டாகுமோ அஃதாசனம்.

4. ப்ராணயாமம்:—தேகாதி பிரபஞ்ச விஷயங்களின் நாமரூப மென்ற அசத்தான இரண்டம்சங்களையும் நீக்குதல் இரேசகமும், அவைகளில் அநுசூதமாயிருக்கும் ஸத், சித், ஆநந்த மென்ற சத்தான மூன்றம்சங்களையும் கிரகித்தல் பூரகமும், அங்ஙனம் கிரகித்த அம்சங்களை உள்ளிருத்தல் கும்பகமுமாம்.

5. ப்ரத்தியாகாரம்:—முன் நீக்கிய நாமரூபங்கள் மனதிற் கலவாது காத்தல்.

6. தாரணை:—அஸ்தி, பாதி, ப்ரியரூபமே தானாகிய ஆத்மசொரூப மென்று மனதை வெளிநாடாது ஹிருதயத்தில் நிறுத்தல்.

7. தியானம் :—'சின்மாத்ரவடிவேநான்' என்று சிந்தித்திருத்தல், அதாவது முற்கூறியபடி பஞ்சகோசாத்மகமான சரீரத்தை நானல்ல வென்று அப்படியே யிருந்தி நானுரென்று விசாரிக்க, அங்கு தான்ருனாய் ஸ்புரித்துக் கொண்டிருக்கும் அகம் சொரூபமாய் இடையருதிருத்தல்.

8. சமாதி :—முற்கூறிய அஹம் ஸ்புரிப்பும் அடங்கிய (சூக்ஷ்மமான) சாக்ஷாத்கார நிலையாம்.

இவ்வித ப்ராணுயாமாதிகளுக்கு, முன் யோகப்பிரிவிற் கூறிய ஆசனுதி நியமங்கள் வேண்டுவதின்று. எங்கிருந்தாலும் எப்போதும் செய்யலாம். யோகம், ஞானம் ஆகிய இவ்விரண்டில் தனக்குப் பிரியமாகத் தோற்றுவதையாவது அல்லது இரண்டையுமேயாவது சமயோசிதமா யநுஷ்டிக்கலாம். மறதியே சர்வ அநர்த்தங்களுக்கும் மூலமென்றும் *முமுக்ஷுக்களுக்குக் காலனென்றும் பெரியோர் கூறுவதால், எவ்விதத்திலேனும் ஆன்மசொரூபமாகிற தன்னிடத்தில் மனதை நிறுத்தி எப்போதும் தன்னை மறவாதிருக்க வேண்டுமென்பதே முக்கிய தாற்பரியம். மனமொன் றடங்கினுல் எல்லாங் கைவந்ததாகும். இந்த யோகஞான அஷ்டாங்கப் பிரிவுகளும் அவற்றின் விவரங்களும் சாஸ்திரங்களில் விஸ்தாரமாகக் கூறப்பட்டிருத்தலால் இங்கு வேண்டிய அளவு சுருக்கிக் கூறப்பட்டது.

35. யோகாங்கத்தின் ப்ராணுயாமத்தையும் ஞானங்கத்தின் ப்ராணுயாமத்தையும் ஏககாலத்தில் அநுஷ்டித்தல் கூடுமோ ?

---

* "சொரூபநிட் டையையோர் காலுஞ் சொற்பமுந் தவிர தரணியி லிந்த நிட்டை தவிர்தலே காலன்" [வொண்ணு —விவேகசூடாமணி.

எதுகால பரியந்தம் மனதானது கேவலகும்பகத்தாலோ விசாரத்தாலோ ஹ்ருதயத்தில் அடங்கவில்லையோ அதுகால பரியந்தம் இரேசக பூரகாதிகள் அவசியமாகலான் முன்னதை அப்பியாசகாலத்திலும் பின்னதை எப்போதுமாக இரண்டையுமே அநுஷ்டித்து வரலாம். ப்ராணயாமம் கேவலகும்பகம் சித்திக்கிறவரையில் செய்தால் போதும்.

36. சாதகர்கள் சந்தேகத்திற் கிடனுகை மோக்ஷமார்க்கம் இப்படிப் பலவிதங்களாகக் கூறப்படுவேதேன் ?

அதிகாரிகளின்பரிபாக நிலைக்குத் தக்கபடி வேதங்களில் அநேக மார்க்கங்கள் கூறப்பட்டிருந்தாலும் மனோநாசமே மோக்ஷமாகலான் சர்வமுயற்சிகளின் தாற்பரியமும் மனதை அடக்குவதிலேயேயாம். தியானமார்க்கங்கள் பேதமாகத் தோன்றினும் முடிவில் ஒன்றுகவே முடியும். அதைப்பற்றிச் சங்கிக்கத் தேவையில்லை. மனப்பரிபாகத்துக்குத் தக்க மார்க்கத்தை அநுஷ்டிக்கலாம்.

ப்ராணபந்தனம் அல்லது யோகம், மனோபந்தனம் அல்லது * ஞானம் ஆகிய இவ்விரண்டும் மனோநாசத்திற்குரிய முக்கிய சாதனங்கள். அவரவர் கர்மாநுசாரம் இரண்டிலொன்று சுகமாய்த் தோன்றும். என்றுலும், முரட்டு மாட்டுக்குப் புல்லைக்காட்டித் தடவிக்கொடுத்து வசப்படுத்திக் கட்டுவதுபோல் ஞானமும், அடித்துக் கட்டுவதுபோல யோகமுமென்றே அறிஞர் கூறுவர். முக்கிய அதிகாரிகள் வேதாந்த விசாரத்தால் வஸ்து நிர்ணயந்தெரிந்து தன்னையும் சகலத்தையும் வஸ்துமயமாகப் பார்த்தலாலும், மத்திம அதி

---

* ஏகமேவாத்வைதம்ப்ரஹ்மாஹம் என்ற சுருதியின்படி அனைத்தையும் வஸ்துமயமாய்ப் பார்த்தல்.

காரிகள் கேவலகும்பகத்தோடு மனதை ஹ்ருதயத்தில் நிறுத்தி நெடுநாள் வஸ்துவை தியானிப்பதாலும், மந்த அதிகாரிகள் ப்ராணாயாம மாதியவற்றால் கிரமமாக அந்நிலையை அடைவதாலும் மனதை ஆன்மாவில் ஸ்திரப்படுத்திக் கதி பெறுவார்கள்.

ஹ்ருதயத்திலுள்ள அஞ்ஞானரூப மனதாகிய நானெனென்னும் சங்கற்பம் நசிக்கிறவரையில் மனதானது ஹ்ருதயத்தில் தடுக்கப்படவேண்டும். இதுவே ஞானம்; இதுவே தியானமும். மற்றவையெல்லாம் வாக்கு விஸ்தாரமும் சாஸ்திர விஸ்தாரமுந்தான் என்று சுருதிகள் கூறுவதால் எப்படியேனும் மனதை தன்னிடத்திலேயே நிறுத்துந்தீரம் பெற்றுவிட்டால் மற்ற விஷயங்களைப்பற்றிக் கவலையேயில்லை.

*யோகிகளைக் காட்டிலும் பக்தனே சிரேஷ்டன் என்றும் †மோக்ஷகாரண ஸாமக்கிரியானது ஸ்வஸ்வரூபமான ஆத்மாநுசந்தானரூப பக்தியே என்றும் பெரியோருங் கூறியிருக்கின்றனர்.

இங்ஙனம் ப்ரஹ்மத்தை அறியும் மார்க்கமே தகரோபாசனை, தகரவித்தை, ப்ரஹ்மவித்தை, ஆன்மவித்தையா

---

* "* * * * * * * * * இயோகிகளெல் லார்களினு
மருவரிய மனத்தினையு மன்பையுமென் பால்வைக்கு
மொருவனுமே யானுவக்கப் படுகின்றான் * * *."
—பகவத்கீதை.

† "முத்தியி னேது வாக மொழியுபா யங்க ளுக்குட்
பத்தியே மிகவு மேலாய்ப் பகரலா மஃதே தென்னி
னித்தமுஞ் சுவசொ ரூப நிகழ்த்திய வனுசந் தானம்
பக்திதா னாகும்."
—விவேகசூடாமணி.

திய மற்றும் பலவிதங்களாகவும் சொல்லப்படுவதாம். இதைக்காட்டிலும் வேறென்ன சொல்லக்கூடும். ஊஹித்தறிந்துகொள்ளவேண்டும்.

சாஸ்திரங்கள் அநேகவிதங்களாகச் சொல்லும். அவற்றையெல்லாம் ஆராய்ந்தே சுருக்கமானதும் உண்மையானதுமான மார்க்கத்தைப் பெரியோர் இப்படிக் கூறுகின்றனர்.

37. மேற்கூறியுள்ள அநுஷ்டானங்களினால் ஒருவாறு மனதிலுள்ள அஞ்ஞான், சந்தேக, விபரீதமாதிய சர்வ ப்ரதிபந்தங்களும் நசிக்கப்பெற்று சித்தோபசாந்தம் வாய்க்கப்பெற்றாலும் ஓர் சந்தேக மாத்திரமுளது. அதாவது மனதை ஹ்ருதயத்தில் இருத்திவிட்ட பிறகு அறிவொன்று தான் பூர்ணமாகப் பிரகாசிக்கிறது. இங்ஙனம் மனமானது ஆன்மாகார மடைந்துவிட்ட பிறகு விசாரிக்கிறவன் யார்? தன்னைத்தானே பூஜிப்பதாக முடிவதால் இது ஆட்டைத் தோளில் போட்டுக்கொண்டு 'ஆடெங்கே, 'ஆடெங்கே' என்று தேடிய இடையன் கதையாகவன்றோ முடிகிறது?

ஜீவனே சிவன்; சிவனே ஜீவன். அந்த ஜீவன் சிவனே தான். உமியால் கட்டுப்பட்டிருக்கிற வரையில் நெல்லாயிருக்கிறது; உமி நீங்கினால் அரிசியாகிறது. அதைப்போல கர்மபாசத்தினால் கட்டுண்டிருக்கிற வரையில் ஜீவனாயிருக்கிறான்; அஞ்ஞான பாசம் நீங்கினால் சிவனாகிய தேவனாகிப் பிரகாசிக்கிறான் என்ற சுருதியின்படி மனோரூப ஜீவன் தான் கேவலம் ஆத்ம சொரூபமாகவே யிருப்பதை மறந்த மறப்பினாலேயே ஜீவனென்னும் நாமத்தோடு மனோரூபமாய் பந்தப்பட்

டிருத்தலால் எப்போதும் தானாகவே யிருக்கும் ஆத்மா வைத் தேடுவது இடையன் கதையாகவே யிருந்தாலும், தன்னை மறந்த ஜீவன் தன்னை ஆத்மாவென் றோர்கா லறிந்ததுகொண்டே ஆத்மாவாகிய தெய்வமாய் விடு வானா? பூர்வ ஜன்மாந்தரவாசனா ப்ரதிபந்தத்தால் அடிக் கடி தான் ஆத்மாவா யிருப்பதை மறந்து தேகாதிகள் நானென்று பிரமிப்பனன்றோ? ஒருவன் ஒரு பெரிய உத்தியோகஸ்தனைப் பார்த்ததுகொண்டே தானும் அவ் வுத்தியோகஸ்த னாய்விடுவானா? கிரமமாக அதற்கான முயற்சி செய்தாலன்றோ அவ்வுத்தியோகஸ்தனாதல் கூடும்? அங்ஙனமே தேகாதிகளை நானென்னும் மனோரூபமாகப் பந்தப்பட்டிருக்கும் ஜீவனும் கிரமப்படி ஆத்மாநுசந் தானமென்ற முயற்சியைச் செய்து மனோநாசம் வாய்க்கப் பெற்றாலன்றோ ஆன்மாவாதல் கூடும். *

தேகாதிகள் நானென்ற இந்த நெடுங்கால வாசனை யானது 'தேகாதிகள் நானல்ல. ஆன்மாவே நான்' (சிவோகம், சிவோகம்) என்ற நெடுங்கால அநுசந்தானத் தாலேயே நசிக்கப்பெற்று மனோபசமனரூப பரமசீதள சிவநிலையை அடைதல்கூடு மாகலான் மனமென்னும் அகங்காரரூப ஜீவனானவன் சர்வதேவாத்மகமாய்த் தானா யிருக்கும் ஆத்மதேவதையே தான் என்று பலகாலம் தன்னைத் தானே பூஜித்து வாசனைகளை ரூபமாகக் கொண்

---

* "தொந்தமாம் பவத்தைச் செய்யுந் துட்டமாம் பிரதி பந்த
மைந்தனே யனேக மேனு மருவிய வவற்றிற் கெல்லா
முந்திய விகார மாக முளைத்திடு மகங்கா ரந்தான்
சந்தத மூல மத்தைச் சருவதா வொழிக்க வேண்டும்."
—விவேகசூடாமணி.

டிருக்கிற மனமென்னும் பாசத்தை வென்று ஆன்ம சாக்ஷாத்காரமென்னும் பரம கைவல்யத்தைப் பெறுதல் வேண்டும்.

இங்ஙனம் இடைவிடாது செய்யப்படும் இவ்வாத்மாநுசந்தானம் மனோநாசம் செய்து முடிவில் பிணஞ்சுடு தடிபோலத் தானும் நீங்கிவிடும்; இதுவே மோக்ஷமாம்.

38. ஜீவன் சுபாவத்தில் ஆன்மாவாகவே யிருந்தும் அங்ஙனமாய தனது சுபாவ நிலையினை அறியவொட்டாமல் மறைப்பதேது?

தனது ஸ்வபாவ ஸ்திதியினை மறந்த மறதியே வடிவான ஆவரணசத்தியாம்.

39. ஜீவன் தன்னை மறந்ததுண்டானால் எல்லோருக்கும் நான் என்ற அநுபவந் தோன்றுதற் கேது வென்னை?

* ஆவரணம் ஜீவனை முற்றும் மறைத்துவிடுவதில்லை; நான் ஆன்மாவென்ற ஸ்வபாவத்தை மாத்திரம் மறைத்து தேகம் எனத் தோற்றுவிக்கிறதே யன்றி சத்தாகவும் நித்தியமாகவுமுள்ள 'நான்' என்ற தனது இருப்பையே தனக்குத் தெரியவொட்டாமல் மறைப்பதில்லை.

40. ஜீவன்முக்த, விதேகமுக்தர்களின் இலக்கணங்களேவை?

தேகம் நானல்ல; ஆன்மசொரூபமாக விளங்கும் ப்ரஹ்மமே நான். † பரிபூரண சொரூபியான என்னில் தேகாதி

---

* "அகமெனுஞ் சமானந் தன்னை யஞ்ஞான மறைத்திடாது
பகர்விசே டமதாஞ் சீவன் பரமெனு மதனை மூடும்"

† "பூரண மாகு மென்மேற் புவனங்க டோற்ற மென்று
தாரணை வந்த தாகிற் றரித்திடு மவித்தை யெங்கே"

—கைவல்யம்.

ப்ரபஞ்சங்கள் யாவும் ஆகாயநீலம்போன்று வெறுந் தோற்ற மாத்திரமேயாம் என்னும் திடநிச்சயமுள்ளவனே ஜீவன் முக்தனுனாலும் மனலய மில்லாதவரையில் ப்ராரப்தவசத் தால் தோற்றும் த்ருஷ்ட விஷயங்களில் ஏகதேசம் துக்கம் தோன்றவுங் கூடும். மனச்சலனம் நீங்காமையால் ஆநந்தா நுபவமிருக்காது. நெடுங்கால த்யானத்தால் சூக்ஷ்மமும் நிச்சலமுமான மனத்திற்கே ஆத்மாநுபவம் கூடும். இவ்வி தம் சூக்ஷ்மமனதோடு சொரூபாநுபவமு முள்ளவனே ஜீவன் முக்த னெனப்படுகிறுன். இந்த ஜீவன்முக்தி ஸ்திதியே நிர்க் குணப்ரஹ்மமென்றும் துரியமென்றும் சொல்லப்படுகிறது. இந்த சூக்ஷ்மமனதும் லயித்து சொரூபாநுபவமுமின்றி ஆநந் தக்கடலில் மூழ்கி ஒன்றுந் தோற்றுமல் அம்மயமாக விருப் பவனே விதேகமுக்தனெனப்படுகிறுன். இவ்விதேகமுக்தி ஸ்திதியே நிர்க்குணுதீதப்ரஹ்மமென்றும் துரியாதீதமென்றும் சொல்லப்படுகிறது. இதுவே முடிவு. துக்கசுகதாரதம்மிய பேதத்தால் பிரமவித்து, வரன், வரீயான், வரிஷ்டன் என நான்கு வகையாகக் கூறும் ஜீவன்முக்த, விதேகமுக்த பேதங் கள் பார்க்கும் பரதிருஷ்டியைப் பற்றியனவன்றி ஞானமுக்தி பேத முண்மையிலில்லை.

## வாழ்த்து

மாசிவன்று னேயாய் மனிதனுமாய் வாழ்ரமண
தேசிகன்றுள் வாழ்க தினம்.

ஓம்

சாந்தி: சாந்தி: சாந்தி:

சுபம்.

# நானார்?

சகல ஜீவர்களும் துக்கமென்பதின்றி எப்போதும் சுகமாயிருக்க விரும்புவதாலும், யாவருக்கும் தன்னிடத்திலேயே பரம பிரியமிருப்பதாலும், பிரியத்திற்கு சுகமே காரணமாதலாலும், மனமற்ற நித்திரையில் தினமனுபவிக்கும் தன் சுபாவமான அச்சுகத்தை யடையத் தன்னைத் தானறிதல் வேண்டும். அதற்கு நானார்? என்னும் ஞான விசாரமே முக்கிய சாதனம்.

நானார்? ஸப்த தாதுக்களாலாகிய ஸ்தூலதேகம் நானன்று. சப்த, ஸ்பரிச, ரூப, ரஸ, கந்தமென்னும் பஞ்ச விஷயங்களையும் தனித்தனியே அறிகின்ற சுரோத்திரம், துவக்கு, சக்ஷுஸ், ஜிஹ்வை, கிராணமென்கிற ஞானேந்திரியங்களைந்தும் நானன்று. வசனம், கமனம், தானம், மலவிசர்ஜனம், ஆனந்தித்தல் என்னும் ஐந்து தொழில்களையும் செய்கின்ற வாக்கு, பாதம், பாணி, பாயு, உபஸ்தம் என்னும் கன்மேந்திரியங்களைந்தும் நானன்று. சுவாஸாதி ஐந்தொழில்களையும் செய்கின்ற பிராணாதி பஞ்சவாயுக்களும் நானன்று. நினைக்கின்ற மனமும் நானன்று. சர்வ விஷயங்களும் சர்வ தொழில்களுமற்று, விஷய வாசனைகளுடன் மாத்திரம் பொருந்தியிருக்கும் அஞ்ஞானமும் நானன்று. மேற்சொல்லிய யாவும் நானல்ல, நானல்லவென்று நேதி செய்து தனித்து நிற்கும் அறிவே நான். அறிவின் சொரூபம் சச்சிதானந்தம்.

சர்வ அறிவிற்கும் சர்வ தொழிற்குங் காரணமாகிய மன மடங்கினால் ஜகதிருஷ்டி நீங்கும். கற்பித ஸர்ப்பஞானம்

போனாலொழிய அதிஷ்டான ரஜ்ஜு ஞானம் உண்டாகாதது போல, கற்பிதமான ஜகதிருஷ்டி நீங்கினாலொழிய அதிஷ்டான சொரூபதர்சன முண்டாகாது.

மனமென்பது ஆத்ம சொரூபத்திலுள்ள ஓர் அதிசய சக்தி. அது சகல நினைவுகளையும் தோற்றுவிக்கின்றது. நினைவுகளையெல்லாம் நீக்கிப் பார்க்கின்றபோது, தனியாய் மனமென்றோர் பொருளில்லை; ஆகையால் நினைவே மனதின் சொரூபம். நினைவுகளைத் தவிர்த்து ஜகமென்றோர் பொருள் அன்னியமாயில்லை. தூக்கத்தில் நினைவுகளில்லை, ஜகமு மில்லை; ஜாக்ர சொப்பனங்களில் நினைவுகளுள, ஜகமும் உண்டு. சிலந்திப்பூச்சி எப்படி தன்னிடமிருந்து வெளியில் நூலை நூற்று மறுபடியும் தன்னுள் இழுத்துக்கொள்ளு கிறதோ அப்படியே மனமும் தன்னிடத்திலிருந்து ஜகத்தைத் தோற்றுவித்து மறுபடியும் தன்னிடமே ஒடுக்கிக் கொள்ளுகிறது. மனம் ஆத்மசொரூபத்தினின்று வெளிப் படும்போது ஜகம் தோன்றும். ஆகையால் ஜகம் தோன்றும் போது சொரூபம் தோன்றாது; சொரூபம் தோன்றும் (பிர காசிக்கும்)போது ஜகம் தோன்றாது. மனதின் சொரூபத்தை விசாரித்துக்கொண்டே போனால் 'தானே' மனமாய் முடியும். 'தான்' என்பது ஆத்ம சொரூபமே. மனம் எப்போதும் ஒரு ஸ்தூலத்தை யனுசரித்தே நிற்கும்; தனியாய் நில்லாது. மனமே சூக்ஷ்மசரீரமென்றும் ஜீவனென்றும் சொல்லப் படுகிறது.

இந்தத் தேகத்தில் நான் என்று கிளம்புவதெதுவோ அஃதே மனமாம். நானென்கிற நினைவு தேகத்தில் முத லில் எந்தவிடத்திற் றோன்றுகின்றதென்று விசாரித்தால் ஹிருதயத்திலென்று தெரியவரும். அதுவே மனதின் பிறப்

பிடம். நான், நான் என்று கருதிக்கொண்டிருந்தாலுங்கூட அவ்விடத்திற் கொண்டுபோய் விட்டுவிடும். மனதில் தோன்றும் நினைவுகளெல்லாவற்றிற்கும் நானேன்னும் நினைவே முதல் நினைவு. இது எழுந்தபிறகே ஏனைய நினைவுகள் எழுகின்றன. தன்மை தோன்றிய பிறகே முன்னிலை படர்க்கைகள் தோன்றுகின்றன ; தன்மையின்றி முன்னிலை படர்க்கைகளிரா.

நாஞர் என்னும் விசாரணையிஞலேயே மனமடங்கும் ; நாஞர் என்னும் நினைவு மற்ற நினைவுகளையெல்லா மழித்துப் பிணஞ்சுடு தடிபோல் முடிவில் தானுமழியும். பிறவெண்ணங்களெழுந்தா லவற்றைப் பூர்த்திபண்ணுவதற்கு எத்தனியாமல் அவை யாருக்குண்டாயின ? என்று விசாரிக்கவேண்டும். எத்தனை எண்ணங்க ளெழினுமென்ன ? ஜாக்கிரதையாய் ஒவ்வோரெண்ணமும் கிளம்பும்போதே இது யாருக்குண்டாயிற்று ? என்று விசாரித்தால் எனக்கென்று தோன்றும். நாஞர் ? என்று விசாரித்தால் மனம் தன் பிறப்பிடத்திற்குத் திரும்பிவிடும் ; எழுந்தவெண்ணமு மடங்கிவிடும். இப்படிப் பழகப் பழக மனதிற்குத் தன் பிறப்பிடத்திற் றங்கிநிற்கும் சக்தி அதிகரிக்கின்றது. சூக்ஷ்மமான மனம், மூளை இந்திரியங்கள் வாயிலாய் வெளிப்படும்போது ஸ்தூலமான நாமரூபங்கள் தோன்றுகின்றன ; ஹிருதயத்தில் தங்கும்போது நாமரூபங்கள் மறைகின்றன. மனத்தை வெளிவிடாமல் ஹ்ருதயத்தில் வைத்துக்கொண்டிருப்பதற்குத்தான் 'அகமுகம்' அல்லது 'அந்தர்முகம்' என்று பெயர். ஹ்ருதயத்திலிருந்து வெளிவிடுவதற்குத்தான் 'பகிர்முக' மென்று பெயர். இவ்விதமாக மனம் ஹ்ருதயத்திற் றங்கவே, எல்லா நினைவுகளுக்கும் மூலமான நான் என்பது போய்

எப்பொழுதுமுள்ள தான் மாத்திரம் விளங்கும். நான் என் னும் நினைவு கிஞ்சித்து மில்லாவிடமே சொரூபமாகும். அதுவே ‘மௌன’ மெனப்படும். இவ்வாறு சும்மா விருப்பதற்குத்தான் ‘ஞானதிருஷ்டி’ யென்று பெயர். சும்மா விருப்பதாவது மனத்தை ஆன்மசொரூபத்தில் லயிக்கச் செய்வதே. அன்றி, பிறர் கருத்தறிதல், முக்கால முணர்தல், தூரதேசத்தில் நடப்பன வறிதல் ஆகிய இவை ஞான திருஷ்டி யாகமாட்டா.

யதார்த்தமா யுள்ளது ஆத்மசொரூப மொன்றே. ஜக ஜீவ ஈச்வரர்கள் ‘சிப்பியில் வெள்ளி’போ லதிற் கற்பனை கள்; இவைமூன்றும் ஏககாலத்திற் றோன்றி ஏககாலத்தில் மறைகின்றன. சொரூபமே ஜகம்; சொரூபமே நான்; சொரூபமே ஈச்வரன்; எல்லாம் சிவசொரூபமாம்.

மனம் அடங்குவதற்கு விசாரணையைத் தவிர வேறு தகுந்த உபாயங்களில்லை. மற்ற உபாயங்களினு லடக்கினுல் மனம் அடங்கினுற்போ லிருந்து மறுபடியும் கிளம்பிவிடும். பிராணுயாமத்தாலும் மனமடங்கும்; ஆனுல் பிராண னடங்கியிருக்கும் வரையில் மனமு மடங்கியிருந்து, பிராணன் வெளிப்படும்போது தானும் வெளிப்பட்டு வாசனைவயத் தா யலையும். மனத்திற்கும் பிராணனுக்கும் பிறப்பிடமொன் றே. நினைவே மனத்தின் சொரூபம். நானென்னும் நினைவே மனத்தின் முதல் நினைவு; அதுவே யகங்காரம். அகங்கார மெங்கிருந்து உற்பத்தியோ, அங்கிருந்துதான் மூச்சும் கிளம்புகின்றது; ஆகையால் மனமடங்கும்போது பிராண னும், பிராணனடங்கும்போது மனமு மடங்கும். பிராணன் மனத்தின் ஸ்தூலரூப மெனப்படும். மரணகாலம் வரையில் மனம் பிராணனை உடலில் வைத்துக்கொண்டிருந்து, உடல்

மரிக்குங்காலத்தில் அதனைக் கவர்ந்துகொண்டு போகின்றது. ஆகையால் பிராணாயாமம் மனத்தை யடக்க சகாயமாகுமே யன்றி மனோநாசஞ் செய்யாது.

பிராணாயாமம் போலவே மூர்த்தித்தியானம், மந்திர ஜபம், ஆகாரநியம மென்பவைகளும் மனத்தை யடக்கும் சகாயங்களே. மூர்த்தித்தியானத்தாலும், மந்திரஜபத்தாலும் மனம் ஏகாக்கிரத்தை யடைகிறது. சதா சலித்துக் கொண்டிருக்கும் யானையின் துதிக்கையில் ஒரு சங்கிலியைக் கொடுத்தால் அவ்யானை எப்படி வேறொன்றையும் பற்றுமலதையே பற்றிக்கொண்டு செல்லுமோ, அப்படியே சதா சலித்துக்கொண்டிருக்கும் மனமும், அதனை ஏதோ ஒரு நாமம் அல்லது ரூபத்திற் பழக்கினால் அதையே பற்றிக் கொண்டிருக்கும். மனம் அளவிறந்த நினைவுகளாய் விரிகின்றபடியால் ஒவ்வொரு நினைவும் அதி பலவீனமாகப் போகின்றது. நினைவுக ளடங்க வடங்க ஏகாக்கிரத்தன்மை யடைந்து, அதனாற் பலத்தை யடைந்த மனத்திற்கு ஆத்மவிசாரம் சுலபமாய் சித்திக்கும். எல்லா நியமங்களிலுஞ் சிறந்த மித ஸாத்விக ஆகாரநியமத்தால் மனத்தின் ஸத்வகுணம் விருத்தியாகி, ஆத்மவிசாரத்திற்கு சகாய முண்டாகிறது.

தொன்றுதொட்டு வருகின்ற விஷயவாசனைகள் அளவற்றனவாய்க் கடலலைகள்போற் றோன்றினும் அவையாவும் சொரூபத்யானம் கிளம்பக் கிளம்ப அழிந்துவிடும். அத்தனை வாசனைகளு மொடுங்கி, சொரூப மாத்திரமா யிருக்கமுடியுமா வென்னும் சந்தேக நினைவுக்கு மிடங்கொடாமல், சொரூபத்யானத்தை விடாப்பிடியாய்ப் பிடிக்கவேண்டும். ஒருவன் எவ்வளவு பாபியா யிருந்தாலும், ‘நான் பாபியாயிருக்கின்றேனே! எப்படிக் கடைத்தேறப் போகிறே’னென்றேங்கி

யழுதுகொண் டிராமல், தான் பாபி என்னு மெண்ணத்தையு மறவே யொழித்து சொரூபத்யானத்தி லூக்க முள்ளவனாக விருந்தால் அவன் நிச்சயமா யுருப்படுவான்.

மனத்தின்கண் எதுவரையில் விஷயவாசனைக ளிருக்கின்றனவோ, அதுவரையில் நானாரென்னும் விசாரணையும் வேண்டும். நினைவுகள் தோன்றத்தோன்ற அப்போதைக்கப்போதே அவைகளையெல்லாம் உற்பத்திஸ்தானத்திலேயே விசாரணையால் நசிப்பிக்க வேண்டும். அன்னியத்தை நாடாதிருத்தல் வைராக்யம் அல்லது நிராசை; தன்னை விடாதிருத்தல் ஞானம். உண்மையி லிரண்டு மொன்றே. முத்துக்குளிப்போர் தம்மிடையிற் கல்லைக் கட்டிக்கொண்டு மூழ்கிக் கடலடியிற் கிடக்கும் முத்தை எப்படி யெடுக்கிறார்களோ, அப்படியே ஒவ்வொருவனும் வைராக்யத்துடன் தன்னுள் ளாழ்ந்து மூழ்கி ஆத்மமுத்தை யடையலாம். ஒருவன் தான் சொரூபத்தை யடையும் வரையில் நிரந்தர சொரூப ஸ்மரணையைக் கைப்பற்றுவானாயின் அதுவொன்றே போதும். கோட்டைக்குள் எதிரிக ளுள்ளவரையில் அதிலிருந்து வெளியே வந்துகொண்டே யிருப்பார்கள். வரவர அவர்களை யெல்லாம் வெட்டிக்கொண்டே யிருந்தால் கோட்டை கைவசப்படும்.

கடவுளும் குருவும் உண்மையில் வேறல்லர். புலிவாயிற் பட்டது எவ்வாறு திரும்பாதோ, அவ்வாறே குருவினருட்பார்வையிற் பட்டவர்கள் அவரால் ரக்ஷிக்கப் படுவரேயன்றி யொருக்காலும் கைவிடப்படார்; எனினும், குரு காட்டிய வழிப்படி தவறாது நடக்கவேண்டும்.

ஆன்ம சிந்தனையைத் தவிர வேறு சிந்தனை கிளம்புவதற்குச் சற்று மிடங்கொடாமல் ஆத்மநிஷ்டாபரனா யிருப்

பதே தன்னை ஈசனுக் களிப்பதாம். ஈசன் பேரில் எவ்வளவு பாரத்தைப் போட்டாலும், அவ்வளவையும் அவர் வகித்துக்கொள்ளுகிறார். சகலகாரியங்களையும் ஒரு பரமேச்வர சக்தி நடத்திக்கொண் டிருக்கிறபடியால், நாமு மதற் கடங்கியிராமல், 'இப்படிச் செய்யவேண்டும்; அப்படிச் செய்யவேண்டு'மென்று ஸதா சிந்திப்பதேன்? புகைவண்டி சகல பாரங்களையும் தாங்கிக்கொண்டு போவது தெரிந்திருந்தும், அதி லேறிக்கொண்டு போகும் நாம் நம்முடைய சிறிய மூட்டையையு மதிற் போட்டுவிட்டு சுகமா யிராமல், அதை நமது தலையிற் றாங்கிக்கொண்டு ஏன் கஷ்டப்படவேண்டும்?

சுகமென்பது ஆத்மாவின் சொரூபமே; சுகமும் ஆத்மசொரூபமும் வேறன்று. ஆத்மசுகம் ஒன்றே யுள்ளது; அதுவே ஸத்யம். ப்ரபஞ்சப்பொருள் ஒன்றிலாவது சுகமென்பது கிடையாது. அவைகளிலிருந்து சுகம் கிடைப்பதாக நாம் நமது அவிவேகத்தால் நினைக்கின்றோம். மனம் வெளியில் வரும்போது துக்கத்தை யனுபவிக்கிறது. உண்மையில் நமது எண்ணங்கள் பூர்த்தியாகும்போதெல்லாம் அது தன்னுடைய யதாஸ்தானத்திற்குத் திரும்பி ஆத்மசுகத்தையே யனுபவிக்கிறது. அப்படியே தூக்கம், சமாதி, மூர்ச்சை காலங்களிலும், இச்சித்த பொருள் கிடைக்கிற போதும், வெறுத்த பொருளுக்குக் கேடுண்டாகும் போதும் மனம் அந்தர்முகமாகி ஆத்மசுகத்தையே யனுபவிக்கிறது. இப்படி மனம் ஆத்மாவை விட்டு வெளியே போவதும், உள்ளே திரும்புவதுமாக ஓய்வின்றி யலைகிறது. மரத்தடியில் நிழல் சுகமாயிருக்கிறது. வெளியில் சூரியவெப்பம் கொடுமையா யிருக்கிறது.

வெளியி லலையு மொருவன் நிழலிற் சென்று குளிர்ச்சி யடை கிறான். சிறிது நேரத்திற்குப் பின் வெளிக்கிளம்பி வெப் பத்தின் கொடுமைக் காற்றாது, மறுபடியும் மரத்தடிக்கு வரு கின்றான். இவ்வாறு நிழலினின்று வெயிலிற் போவதும், வெயிலினின்று நிழலிற் செல்வதுமா யிருக்கிறான். இப்படிச் செய்கிறவன் அவிவேகி. ஆனால் விவேகியோ நிழலைவிட்டு நீங்கான். அப்படியே ஞானியின் மனமும் பிரஹ்மத்தை விட்டு நீங்குவதில்லை. ஆனால் அஞ்ஞானியின் மனமோ பிரபஞ்சத்தி லுழன்று துக்கப்படுவதும்,சிறிது நேரம் பிரஹ் மத்திற்குத் திரும்பி சுகமடைவதுமா யிருக்கிறது. ஜகமென் பது நினைவே. ஜகம் மறையும்போது அதாவது நினைவற்ற போது மனம் ஆனந்தத்தை யனுபவிக்கின்றது; ஜகம்தோன் றும்போது அது துக்கத்தை யனுபவிக்கின்றது.

இச்சா ஸங்கல்ப யத்நமின்றி யெழுந்த ஆதித்தன் சன் னிதி மாத்திரத்தில் காந்தக்கல் அக்கினியைக் கக்குவதும், தாமரை யலர்வதும், நீர் வற்றுவதும், உலகோர் தத்தங் காரியங்களிற் பிரவிருத்தித்து இயற்றி யடங்குவதும், காந் தத்தின்முன் ஊசி சேஷ்டிப்பதும் போல, ஸங்கல்ப ரகி தராயிருக்கும் ஈசன் சன்னிதான் விசேஷ மாத்திரத்தால் நடக்கும் முத்தொழில் அல்லது பஞ்சகிருத்தியங்கட் குட் பட்ட ஜீவர்கள் தத்தம் கர்மானுசாரம் சேஷ்டித் தடங்கு கின்றனர். அன்றி அவர் ஸங்கல்ப ஸஹித ரல்லர். ஒருகரு மமு மவரை யொட்டாது. அது லோககருமங்கள் சூரியனை யொட்டாததும், ஏனைய சதுர்பூதங்களின் குணகுணங்கள் வியாபகமான ஆகாயத்தை யொட்டாததும் போலும்.

எந்நூலிலும் முக்தி யடைவதற்கு மனத்தை யடக்க வேண்டுமென்று சொல்லப்பட் டுள்ளபடியால் மனோநிக்ர

கமே நூல்களின் முடிவான கருத்து என்றறிந்துகொண்ட பின்பு நூல்களை யளவின்றிப் படிப்பதாற் பயனில்லை. மனத்தை யடக்குவதற்குத் தன்னை யாரென்று விசாரிக்க வேண்டுமே யல்லாமல் எப்படி நூல்களில் விசாரிப்பது? தன்னைத் தன்னுடைய ஞானக்கண்ணாற் றானே யறியவேண்டும். ராமன் தன்னை ராமனென்றறியக் கண்ணாடி வேண்டுமா? 'தான்' பஞ்ச கோசங்களுக் குள்ளிருப்பது; நூல்களோ அவற்றிற்கு வெளியிலிருப்பவை. ஆகையால் பஞ்சகோசங்களையும் நீக்கி விசாரிக்கவேண்டிய தன்னை நூல்களில் விசாரிப்பது வீணே. பந்தத்திலிருக்கும் தான் யாரென்று விசாரித்து தன் யதார்த்த சொரூபத்தைத் தெரிந்துகொள்வதே முக்தி. சதாகாலமும் மனத்தை ஆத்மாவில் வைத்திருப்பதற்குத்தான் 'ஆத்மவிசார' மென்று பெயர்; தியானமோ தன்னை ஸச்சிதானந்த பிரஹ்மமாக பாவிப்பது. கற்றவை யனைத்தையும் ஒருகாலத்தில் மறக்கவேண்டி வரும்.

குப்பையைக் கூட்டித் தள்ளவேண்டிய ஒருவன் அதை யாராய்வதா லெப்படிப் பயனில்லையோ அப்படியே தன்னை யறியவேண்டிய ஒருவன் தன்னை மறைத்துக்கொண்டிருக்கும் தத்துவங்க ளனைத்தையும் சேர்த்துத் தள்ளிவிடாமல் அவை இத்தனையென்று கணக்கிடுவதாலும், அவற்றின் குணங்களை ஆராய்வதாலும் பயனில்லை. பிரபஞ்சத்தை ஒரு சொப்பனத்தைப்போ லெண்ணிக்கொள்ள வேண்டும்.

ஜாக்ரம் தீர்க்கம்; சொப்பனம் க்ஷணிகமென்பது தவிர வேறு பேதமில்லை. ஜாக்ரத்தில் நடக்கும் விவகாரங்களெல்லாம் எவ்வளவு உண்மையாகத் தோன்றுகின்றனவோ அவ்வளவு உண்மையாகவே சொப்பனத்தில் நடக்கும் விவகாரங்களும் அக்காலத்திற் றோன்றுகின்றன. சொப்பனத்

தில் மனம் வேறொரு தேகத்தை யெடுத்துக் கொள்ளுகிறது. ஜாக்ரம் சொப்பன மிரண்டிலும் நினைவுகளும் நாமரூபங் களும் ஏககாலத்தில் நிகழ்கின்றன.

நல்ல மனமென்றும் கெட்ட மனமென்று மிரண்டு மனங்களில்லை, மனமொன்றே. வாசனைகளே சுபமென்றும் அசுபமென்று மிரண்டுவிதம். மனம் சுபவாசனைவயத்ததாய் நிற்கும்போது நல்லமனமென்றும், அசுபவாசனை வயத்த தாய் நிற்கும்போது கெட்டமனமென்றும் சொல்லப்படும். பிறர் எவ்வளவு கெட்டவர்களாய்த் தோன்றினும் அவர்களை வெறுத்தலாகாது. விருப்புவெறுப்புக ளிரண்டும் வெறுக் கத்தக்கன. பிரபஞ்சவிஷயங்களி லதிகமாய் மனத்தை விடக்கூடாது. சாத்தியமானவரையில், அன்னியர் காரியத் திற் பிரவேசிக்கக் கூடாது. பிறருக்கொருவன் கொடுப்ப தெல்லாம் தனக்கே கொடுத்துக்கொள்ளுகிறான். இவ் வுண்மையை யறிந்தால் எவன்தான் கொடாதொழிவான்?

தானெழுந்தால் சகலமுமெழும்; தானடங்கினால் சக லமுமடங்கும். எவ்வளவுக்கெவ்வளவு தாழ்ந்து நடக்கிறோ மோ அவ்வளவுக்கவ்வளவு நன்மையுண்டு. மனத்தை யடக் கிக் கொண்டிருந்தால் எங்கேயிருந்தாலு மிருக்கலாம்.

முற்றிற்று.

# பிழைதிருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 21 | 11 | ளிடு | ணிடு |
| 37 | 2 | பறறி | பற்றி |
| 74 | 10 | மலல | மல்ல |
| ,, | 22 | முமெ | முமே |
| ,, | 23 | சங்கத் | சங்கந் |
| 88 | 4 | மறிவி | யறிவி |
| 89 | 16 | சித்த க | சுத்த க |
| 90 | 11 | ஸதிரீ | ஸ்திரீ |
| 100 | 19 | மறு | மரு |
| 145 | 25 | ஜீவ | ஜீவர் |
| 194 | 19 | மோக்ஷ் | மோக்ஷ |
| 196 | 7 | ஈச்சு | ஈச் |

## திருவண்ணாமலை

# ஸ்ரீ ரமணாச்ரம புஸ்தகாலயம்

---

## தமிழ்

### பகவான் ஸ்ரீ ரமண மஹர்ஷிகளருளியவை.

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| ஸ்ரீ அருணாசலஸ்துதி பஞ்சகம் ... | 0 | 2 | 0 |
| உபதேச நூன்மாலை (உபதேசவுந்தியார், உள்ளது நாற்பது, அநுபந்தம், அப்பளப்பாட்டு, ஆன்ம வித்தை அடங்கியது) ... | 0 | 2 | 0 |
| அநுவாத நூன்மாலை (செய்யுள்) (தேவிகாலோத்தரம் - ஞானாசாரவிசாரபடலம், ஸர்வஞானோத்தரம் - ஆத்மசாட்சாத்காரப் பிரகரணம், தக்ஷிணாமூர்த்திதோத்திரம், அத்தாமலகம், குருஸ்துதி சேர்ந்தது) ... | 0 | 2 | 0 |
| ஷை அநுவாத நூன்மாலை (வசனம்) (விவேகசூடாமணி, திருக்குதிருசிய விவேகம் சேர்ந்தது) ... | 0 | 6 | 0 |
| அருண்மொழித்தொகுப்பு (விசாரசங்கிரகம், நானார் அடங்கியது) ... | 0 | 2 | 0 |
| ஸ்ரீ ரமண நூற்றிரட்டு (ஷை ஐந்தும் அடங்கியது) ... | 1 | 0 | 0 |
| உபதேசவுந்தியார் ... ... ... | 0 | 0 | 6 |
| உபதேசஸாரம் (நாகரஸ்லோகமும் பாஷ்யத் தமிழ் மொழிபெயர்ப்பும்) ... ... | 0 | 1 | 0 |
| நான் யார்? ... ... ... | 0 | 0 | 6 |

### மஹர்ஷிகளது பக்தர்கள் செய்தவை.

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| ஸ்ரீ ரமணவிஜயம் (ஜீவிய சரித்திரமும் உபதேச மொழிகளும்) இரண்டாம் பதிப்பு. ... | 2 | 0 | 0 |
| ஸத்தர்சனம் (நாகர ஸ்லோகமும் பாஷ்யத் தமிழ் மொழிபெயர்ப்பும்) Board ... ... | 0 | 8 | 0 |
| ,, ,, Wrapper ... ... | 0 | 6 | 0 |
| ஸ்ரீ ரமணவருள் ... ... ... | 0 | 0 | 3 |
| ஸ்ரீ ரமண சரித அகவல் ... ... | 0 | 3 | 0 |
| பகவான் ஸ்ரீ ரமண மஹர்ஷிகள் சரித்திரமும் உபதேச மொழிகளும் ... | 0 | 6 | 0 |

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| ஸ்ரீ ரமண மஹர்ஷிகள் ('Sunday Times' Edition) | 0 | 1 | 0 |
| *உபதேச மஞ்சரி ... ... ... | 0 | 1 | 0 |
| திருவிளக்கைப் பாருங்கள் ... | 0 | 1 | 0 |
| ஸ்ரீ ரமண அந்தாதி ... ... ... | 0 | 1 | 0 |
| ஸ்ரீ ரமண ஸ்தோத்ர ஷோடசம் ... ... | 0 | 1 | 0 |
| ஸ்ரீ ரமண ஸ்தோத்திரம் ... ... | 0 | 0 | 6 |
| ஸ்ரீ ரமணஸ்துதி பஞ்சகம் ... ... | 0 | 0 | 6 |
| ஸ்ரீ ரமணானந்த ஸ்தோத்திர பஞ்சகம் ... | 0 | 1 | 0 |
| மஹாபாரத வசனம் (முதற்பாதி) ... ... | 0 | 8 | 0 |
| ஈச்வர லீலை ... ... ... | 0 | 6 | 0 |
| துரியவெளி ... ... ... | 0 | 6 | 0 |
| ரிபுகீதை ... ... ... | 2 | 0 | 0 |
| பகவத்கீதை (டி. வி. கிருஷ்ணஸாமி அய்யர் எழுதியது) ... ... ... | 0 | 8 | 0 |
| இந்திய ஸ்தல யாத்திரை மான்மியம் (தாஸ்ராவ் எழுதியது) முதல் பாகம் ... ... | 1 | 4 | 0 |
| ,, இரண்டாம் பாகம் ... | 1 | 4 | 0 |
| ஸூதஸம்ஹிதாஸாரம் (ஸதாசிவபிரம்மம் திரட்டிய கிரந்த மூலமும், தமிழ் வியாக்கியானமும்) முதற் பாகம் ... ... ... | 0 | 4 | 0 |

## மலையாளம்

| | | | |
|---|---|---|---|
| ரமண மஹர்ஷி (சரித்திரமும் உபதேசமும்) ... | 0 | 4 | 0 |
| உபதேச ஸாரம், ஸ்ரீ ரமண மஹர்ஷிகள் அருளியது | 0 | 1 | 0 |

"தவிர தெலுங்கு, மலையாள, ஸம்ஸ்கிருத, கிரந்த, ஆங்கில புத்தகங்களும், ஸ்ரீ பகவானின் போட்டோ படங்களும், ப்ளாக்கு படங்களும் கிடைக்கும். விபரம் தனி விலைப்பட்டியைப் பார்க்கவும். எழுதினால் விலைப்பட்டி அனுப்பப்படும்."

நிரஞ்ஜனானந்த ஸ்வாமி,
ஸர்வாதிகாரி,
ஸ்ரீ ரமணாச்ரமம், திருவண்ணாமலை.

*இது பகவான் மஹர்ஷிகளது உபதேசத் தொகுப்பு.

Kesari Printing Works, Madras.